2954

T.N.L.A Debates

Official Report

Vol XXXI 20192

21, 24, November 1986

V211,31 N86
N86·31·1 f2
136499

வெளியீடு 25-7-1987] [Issued 25-7-1987

1079/87
2954

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, நவம்பர் 21, 1986—தொகுதி XXXI எண் 1
Friday the 21st November 1986—Volume XXXI No. 1

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009,
Legislative Assembly Department, Fort St. George
Madras-600009.

விலை ரூ. 3 (Price Rs. 3/-

136479
சென்னை-600 008.

# உள்ளடக்கம்.

21—11—1986.

| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—ii |
| (ii) Personnel of the Government of Tamil Nadu .. | iv—v |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | vi—vii |
| (iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி). | viii—xv |
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 1—41 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம். | 42 |
| (ஆ) செங்கற்பட்டு மாவட்டத்தில் பூச்சிகளால் பயிர்கள் பாதிப்பு. | 42 |
| (இ) ஆழ்வார்திருநகர் பகுதியில் பெட்ரோல் ஊற்று இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. | 42—43 |
| (ஈ) அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படுவது. | 43, 46 |
| (உ) தாய்த் தமிழகத்துடன் இணைய போராடிய தியாகிகளுக்கு பென்ஷன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது குறித்து. | 46—47 |
| 3. உறுப்பினர்கள் அரசியலமைப்புச் சட்டப் பிரதியை எரித்தது. | 44—46 |
| 4. அமைச்சரின் அறிக்கை | |
| விதி 111-ன் கீழ் | |
| ஆதி திராவிட, பிற்பட்டோர் நலத்துறை விடுதி மாணவர்களுக்கான உதவித் தொகை அதிகரிப்பு பற்றிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் அறிக்கை. | 47—50 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. கவன ஈர்ப்புகள் | |
| (அ) ஓமலூர் டாகல் சொராமிக் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட வேண்டியது குறித்து. | 50—52 |
| (ஆ) கொடைக்கானல் தொழில் நுட்பக் கல்லூரியில் ஏற்பட்ட தீ விபத்து. | 52—54 |
| 6. அறிக்கை அளித்தல். | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 54—55 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 55 |
| (இ) அரசு உறுதிமொழிக் குழு | 55—56 |
| 7. அரசினர் சட்ட முன்வடிவுகள். | |
| (அ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள்) நியமனத் திருத்தச் சட்ட முன்வடிவு 1986. | 56—58 |
| (ஆ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு, 1986 | 117—118 |
| (இ) நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவு, 1986 | 119—120 |
| 8. அறிவிப்புகள்— | |
| (அ) மூதல் துணை நிதிநிலை அறிக்கை, 1986–87. | 58 |
| (ஆ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட மூன்வடிவு 1986. | 117 |
| (இ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1980–81. | 118 |
| (ஈ) நிதி ஒதுக்க (எண் 6.) சட்ட மூன்வடிவு 1986. | 119 |
| 9. மூதல் துணை நிதிநிலை அறிக்கை 1986-87, விவாதமும் வாக்கெடுப்பும். | 58—115 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். | 59 |
| திரு. எஸ். டேனியல்ராஜ். | 59—62 |
| திரு. என். சண்முகம். | 62—66 |
| திரு. அ. ரகுமான்கான். | 66—77 |
| திரு. மு. மாரிமுத்து. | 77—81 |
| திரு. கோ. வீரய்யன். | 81—85 |
| திரு. ஆ. கா. அ. அப்துல் சமத். | 85—90 |
| திரு. எப். எம். இராசரத்தினம். | 90—92 |
| திரு. பொ. உத்திராபதி. | 92—101 |
| திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம். | 101—107 |
| திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர். | 107—109 |
| 10. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1980–81, வாக்கெடுப்பு | 118—119 |
| 11. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள். | 120—121 |




## (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

ஆளுநர் திரு. சுந்தர்லால் குரானா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்,

| | |
|---|---|
| 1 முதலமைச்சர் | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன். |
| 2 நிதி அமைச்சர் | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். |
| 3 உணவு அமைச்சர் | மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். |
| 4 உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. |
| 5 தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. க. இராசாராம். |
| 6 மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம். |
| 7 கல்வி மற்றும் சட்ட அமைச்சர். | மாண்புமிகு திரு. சி. பொன்னையன். |
| 8 போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. |
| 9 வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. |
| 0 சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். |
| 1 மதிய உணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன். |

அமைச்சரவையின் உறுப்பினர்கள்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 12 | ஊரகத் தொழில் அமைச்சர். | மாண்புமிகு திரு. ஆனூர். பு. கோ. ஜகதீசன். |
| 13 | வணிக வரித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. த. இராமசாமி. |
| 14 | ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எ. அருணாசலம். |
| 15 | பொதுப் பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன். |



## (ii) PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor*—Thiru SUNDAR LAL KHURANA

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | The Chief Minister .. | Hon. Dr. M. G. Ramachandran |
| 2. | The Minister for Finance .. | Hon. Dr. V. R. Nedunchezhian |
| 3. | The Minister for Food .. | Hon. Thiru S. Ramachandran |
| 4. | The Minister for Local Administration and Labour | Hon. Thiru K. A. Krishnasamy |
| 5. | The Minister for Industries and Agriculture | Hon. Thiru K. Rajaram |
| 6. | The Minister for Health .. | Hon. Thiru P. U. Shanmugam |
| 7. | The Minister for Education and Law | Hon. Thiru C. Ponnaiyan |
| 8. | The Minister for Transport .. | Hon. Thiru S. Muthusamy |
| 9. | The Minister for Housing and Handlooms | Hon. Thiru S. Thirunavukkarasu |
| 10. | The Minister for Tourism, Prohibition and Electricity | Hon. Thiru V. V. Swaminathan |
| 11. | The Minister for Noon Meal, Social Welfare and Khadi | Hon. Thiru R. Soundararajan |
| 12. | The Minister for Rural Industries | Hon. Thiru Anoor P. G. Jagadeesan |
| 13. | The Minister for Commercial Taxes | Hon. Thiru T. Ramasamy |
| 14. | The Minister for Adi-Dravidar Welfare | Hon. Thiru A. Arunachalam |
| 15. | The Minister for Public Works | Hon. Thiru K.K.S.S.R. Ramachandra |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. சின்னராசு.

திரு. செ. செம்மலை.

திரு. சைதை சா. துரைசாமி.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்.

திரு. பொன் முத்துராமலிங்கம்.

### செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.

### (iii) தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்—தொடர்ச்சி. (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ. பி.ஏ., பி.எல்., | கூடுதல் செயலாளர். |
| பத்மநாப நம்பியார், திரு. பி. எம்., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர். |
| சீதாராமன், திரு. வெ. பி.காம்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்.சி., பி.எல். | துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| இராமச்சந்திரன், திரு. வை., எம்.ஏ., எல்.எல்.பி., | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| கோதண்டராமன், திரு. நா., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. கு. அ., பி.ஏ., .. | குழு அலுவலர். |
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்.சி., .. | குழு அலுவலர். |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ.,பி.எல். | சார்புச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| தேசவராம், திரு. பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ். சி., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| பாலகிருஷ்ணன், திரு. ப., பி.காம்., | சார்புச் செயலாளர். |

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்—தொடர்ச்சி.
(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ. சா., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர். திரு. டி., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ., .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ., .. | தலைமை நிருபர் (குழுக்கள்). |
| தம்பி ஐயங்கார், திரு. எஸ்., .. | தலைமை நிருபர் (பேரவை). |

## (iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்களின் பட்டியல் (அகரவரிசைப்படி)

| தொடர் எண்ணும், உறுப்பினர் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | அ | |
| 1 | அண்ணாதாசன், திரு. எம். .. | திருவரம்பூர் |
| 2 | அப்துல் சமத், திரு ஆ.கா.அ. .. | திருவல்லிக்கேணி |
| 3 | அப்துல் மஜீத், திரு எச். .. | வாணியம்பாடி |
| 4 | அரங்கநாயகம், திரு செ. .. | தொண்டாமுத்தூர் |
| 5 | அரிக்குமார், திரு இரா. .. | பெரணமல்லூர் |
| 6 | அருணாசலம், திரு இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 7 | அருணாசலம், திரு எ. .. .. | வரகூர் (செ.வ.) |
| 8 | அன்பழகன், திரு க. .. .. | பார்க் டவுன் |
| 9 | அன்பழகன், திரு கே. .. .. | ஓமலூர் |
| 10 | அன்பழகன், திரு தி. .. .. | நாட்ராம்பள்ளி |
| 11 | அன்பழகன், திரு பொ. .. .. | இளையான்குடி |
| | ஆ | |
| 12 | ஆண்டி அம்பலம் திரு மெ. .. | நத்தம் |
| 13 | ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி திரு. | ஆண்டிமடம் |
| 14 | ஆபிரகாம், திரு ம. .. .. | ஆலந்தூர் |
| 15 | ஆறுமுகம், திரு அ. .. .. | வந்தவாசி |
| 16 | ஆறுமுகம், திரு எச். ஜி. .. | பெண்ணாகரம் |
| 17 | ஆறுமுகம், திரு ஆர். எஸ். .. | ஒட்டபிடாரம் (செ.வ.) |
| 18 | ஆறுமுகம், திரு எ. எஸ். ஏ. .. | விருதுநகர் |
| 19 | ஆறுமுகம், திரு செ. .. .. | மதுராந்தகம் |
| 20 | ஆறுமுகம், திரு மு. .. .. | சேலம்-2 |
| 21 | ஆனந்த கிருஷ்ணா, திரு ஜி. .. | பூந்தமல்லி |
| 22 | ஆனந்தன், திரு மு. .. .. | உளுந்தூர்பேட்டை |
| | இ | |
| 23 | இரகுபதி, திரு கோ. .. .. | காட்பாடி |
| 24 | இரத்தினம், திரு எம். வி. .. | பொள்ளாச்சி |
| 25 | இரத்தினவேலு, திரு செ. .. | முசிறி |
| 26 | இராசமாணிக்கம், திரு ஆர். .. | அரூர் (செ.வ.) |
| 27 | இராசமாணிக்கம், திரு எல்ல. .. | தாம்பரம் |
| 28 | இராசரத்தினம், திரு எப். எம். | கொளச்சல் |
| 29 | இராசரத்தினம், திரு எம். .. | விழுப்புரம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | **இ—தொடர்ச்சி.** | |
| 30 | இராசாங்கம் திரு மு. | திருவிடைமருதூர் |
| 31 | இராசாம்பாள் திருமதி த. | தலைவாசல் (செ.வ.) |
| 32 | இராசாராம் திரு க. | பனமரத்துப்பட்டி |
| 33 | இராசாராமன் திரு எஸ். | பாபநாசம் |
| 34 | இராசு திரு வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 35 | இராசேந்திரன் திரு எஸ். என். | தூத்துக்குடி |
| 36 | இராமச்சந்திரன் டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37 | இராமச்சந்திரன் திரு கே. எஸ்.எம் | போடிநாயக்கனூர் |
| 38 | இராமச்சந்திரன் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39 | இராமச்சந்திரன் திரு ச. | பண்ருட்டி |
| 40 | இராமச்சந்திரன் திரு சோ. மா. | அண்ணாநகர் |
| 41 | இராமச்சந்திரன் திரு ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42 | இராமசாமி திரு எஸ். என். | சாத்தான்குளம் |
| 43 | இராமசாமி திரு த. | இராமநாதபுரம் |
| 44 | இராமநாதன் திரு மு. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 45 | இராமலிங்கம் டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46 | இளங்கோவன் திரு ஈ. வே. கி. ச. | சத்தியமங்கலம் |
| | **ஈ** | |
| 47 | ஈஸ்வரன் திரு ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| | **உ** | |
| 48 | உச்சி திரு கே. | கூடலூர் |
| 49 | உத்திராபதி திரு பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| | **எ** | |
| 50 | எத்திராசன் திரு கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| | **க** | |
| 51 | கணபதி திரு கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கதிர்வேலு திரு மா. | ராணிப்பேட்டை |
| 53 | கந்தசாமி திரு கா. வே. | கிணத்துக்கடவு |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | தொகுதின் பெயர். |
|---|---|---|
| | **க—தொடர்ச்சி** | |
| 54 | கந்தசாமி திரு பி. | பொங்கலூர் |
| 55 | கல்லன் திரு கே. | உதகமண்டலம் |
| 56 | கலிதீர்த்தான் திரு சோ. | சங்கராபுரம் |
| 57 | காளிமுத்து டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 58 | கிருஷ்ணசாமி திரு கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 59 | கிருஷ்ணசாமி திரு வி. இரா. | அணைக்கட்டு |
| 60 | கிருஷ்ணமூர்த்தி திரு கி. | கும்பகோணம் |
| 61 | கிருஷ்ணராஜ் திரு ஜி. | சேலம்-1 |
| 62 | குப்புசாமி திரு கே. | ஒட்டன்சத்திரம் |
| 63 | குப்புசாமி திரு வே. | செய்யாறு |
| 64 | குமரகுருபர ராமநாதன் திரு ச. | விளாத்திகுளம் |
| 65 | குமரி அனந்தன் திரு | ராதாபுரம் |
| 66 | குமாரதாஸ் டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 67 | கோமதி சீனிவாசன் திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 68 | கோவிந்தசாமி திரு ஆர். | குடியாத்தம் |
| 69 | கோவிந்தசாமி திரு ச. | எடப்பாடி |
| 70 | கோவேந்தன் திரு எம். ஆர். | பேராவூரணி |
| | **ச** | |
| 71 | சங்கரலிங்கம் திரு ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.). |
| 72 | சண்முகம் திரு இரா. | திருத்தணி |
| 73 | சண்முகம் திரு என். | சோளிங்கர் |
| 74 | சண்முகம் திரு ப. உ. | மேல்மலையனூர் |
| 75 | சண்முகையா பாண்டியன் திரு. எம். | ஆலங்குளம் |
| 76 | சந்திரசேகரன் திரு ஆ. | சோழவந்தான் |
| 77 | சந்திரசேகர் திரு மு. | முகையூர் |
| 78 | சம்சுல் ஆலம் திரு வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 79 | சமரசம் டாக்டர் கே. | காவேரிப்பட்டினம் |
| 80 | சரோஜா திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா.). |
| | **சா** | |
| 81 | சாமிக்கண்ணு திரு தா. | செங்கம் (செ.வ.). |
| 82 | சித்தன் திரு என். எஸ். வி. | திருமங்கலம் |
| 83 | சிந்தன் திரு வி. பி. | வில்லிவாக்கம் |
| 84 | சிவக்குமார் திரு ஆர். | சமயநல்லூர் (செ.வ.) |
| 85 | சிவக்குமார் திரு எம். | கூனூர் (செ.வ.) |
| 86 | சிவஞானம் திரு ந. | திருவோணம் |
| 87 | சிவப்பிரகாசம் திரு சீ. | சேந்தமங் (ஆ.வா.). |
| 88 | சிவராமன் திரு எஸ். | சின்னசேலம் |
| 89 | சிவராஜ் திரு சு. | ரிஷிவந்தியம் |
| 90 | சின்னக்குழந்தை திரு மு. | ஆரணி |
| 91 | சின்னச்சாமி திரு ரா. | தர்மபுரி |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|

க—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 92 | சின்னசாமி திரு வே. கு. | பவானிசாகர் |
| 93 | சின்னராசு திரு க. இரா. | கிருஷ்ணகிரி |
| 94 | சின்னராசு திரு மா. | மேட்டுப்பாளையம் |
| 95 | சுந்தரதாஸ் திரு மா. | விளவன்கோடு |
| 96 | சுப்பராயன் திரு கு. | திருப்பூர் |
| 97 | சுப்பிரமணிய ஆதித்தன் திரு எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 98 | சுப்பிரமணியன் திரு உ. | சிவகங்கை |
| 99 | சுப்பிரமணியன் திரு வீ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 100 | சுப்புராயர் திரு சி. | கம்பம் |
| 101 | சுவாமிநாதன் திரு வி. வி. | புவனகிரி |
| 102 | செங்காளியப்பன் திரு ஆர். | சிங்காநல்லூர் |
| 103 | செங்கோட்டையன் திரு கு. அ. | கோபிசெட்டிப் பாளையம். |
| 104 | செங்கோட்டையன் திரு பெ. | கபிலர்மலை |
| 105 | செம்மலை திரு செ. | தாரமங்கலம் |
| 106 | செல்லமுத்து திரு எம். | திருவாரூர் (செ.வ.) |
| 107 | செல்லப்பா திரு வி. கோ. | கடலூர் |
| 108 | செல்வராசன் திரு அ. | துறைமுகம் |
| 109 | சேகர் திரு கே. பி. கே. | பொன்னேரி (செ.வ.) |
| 110 | சைதை துரைசாமி திரு சா. | சைதாப்பேட்டை |
| 111 | சொர்ணலிங்கம் திரு கா. | திருவாடானை |
| 112 | சோலைராசு திரு க. | மருங்காபுரி |
| 113 | சௌந்திரராஜன் திரு ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114 | சௌரிராஜன் டாக்டர் கே. | தியாகராயநகர் |

ஞ

| | | |
|---|---|---|
| 115 | ஞானசுந்தரம் திரு சா. | மன்னார்குடி |

ட

| | | |
|---|---|---|
| 116 | டேனியல்ராஜ் திரு எஸ். | ஸ்ரீவைகுண்டம் |

த

| | | |
|---|---|---|
| 117 | தங்கமணி திரு மு. | மாயூரம் |
| 118 | தங்கமணி திரு கே. எம். | திண்டிவனம் |
| 119 | தங்கராசு திரு ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120 | தங்கராசு திரு செ. | மங்களூர் (செ.வ.) |
| 121 | தங்கவேல்ராஜ் திரு பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 122 | தங்கவேலு திரு வி. | வால்பாறை (செ.வ.) |
| 123 | தமிழ்மணி திரு | திருப்போரூர் (செ.வ.) |
| 124 | தமிழரசன் திரு கு. | பேரணாம்பட்டு(செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|

த—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 125 | தனபால் திரு ப. | சங்கரி (செ.வ.) |
| 126 | தாமரைக்கனி திரு இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127 | தியாகராசன் திரு ஆர். | விருத்தாசலம் |
| 128 | திருஞானம் திரு பி. ஆர். | ஏற்காடு (ஆ.வா.) |
| 129 | திருநாவுக்கரசு திரு எஸ். | அறந்தாங்கி |
| 130 | திருமலைசாமிக் கவுண்டர் திரு க. | உடுமலைப்பேட்டை |
| 131 | தீர்த்தகிரி கவுண்டர் திரு டி. | மொரப்பூர் |
| 132 | தீர்த்தராமன் திரு ப. | பாலக்கோடு |
| 133 | துரை அன்பரசன் திரு | நெல்லிக்குப்பம் |
| 134 | துரை கிருஷ்ணமூர்த்தி திரு | தஞ்சாவூர் |
| 135 | துரை கோவிந்தராசன் திரு | திருவையாறு |
| 136 | துரைராசு திரு எஸ். பி. | காரைக்குடி |
| 137 | துரை ராமசாமி திரு | வெள்ளக்கோவில் |
| 138 | தெய்வநாயகம் திரு எ. | மதுரை சென்ட்ரல் |
| 139 | தேவராஜ் திரு வி. எம். | வேலூர் |

ந

| | | |
|---|---|---|
| 140 | நடராசன் திரு ஆ. | பேரூர் |
| 141 | நரசிம்ம பல்லவன் திரு க. | உத்திரமேரூர் |
| 142 | நரசிம்மன் திரு பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 143 | நல்லமுத்து டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144 | நல்லுசாமி திரு என். | திருச்சிராப்பள்ளி-2 |
| 145 | நாச்சிமுத்து திரு கே. பி. | மேட்டூர் |
| 146 | நாராயணன் திரு பு. கோ. | பவானி |
| 147 | நெடுஞ்செழியன் டாக்டர் இரா. | ஆத்தூர் |

ப

| | | |
|---|---|---|
| 148 | பஞ்சவர்ணம் திரு வி. எஸ். | அருப்புக்கோட்டை |
| 149 | பட்டாபிராமன் திரு செ. | திருவள்ளூர் |
| 150 | பரமசிவம் திரு பா. ந. | பல்லடம் |
| 151 | பரிதி இளம்வழுதி திரு | பெரம்பூர் |
| 152 | பழனி திரு த. | ஆற்காடு |
| 153 | பழனிச்சாமி திரு கா. செ. | காங்கேயம் |
| 154 | பழனிமுத்து திரு சி. | ஆத்தூர் |
| 155 | பாண்டியன் திரு பி. எச். | சேரன்மாதேவி |
| 156 | பாண்டுரங்கன் திரு மு. | கலசப்பாக்கம் |
| 157 | பாப்பா சுப்பிரமணியன் திரு | குத்தாலம் |
| 158 | பாரதி திரு ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | | தொகுதியின் பெயர். |
|---|---|---|---|

ப—தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| 159 | பாரமலை திரு க. .. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 160 | பாலகிருஷ்ணன் திரு ச. | .. | மொடக்குறிச்சி |
| 161 | பாலகிருஷ்ணன் திரு வி. | .. | சிவகாசி |
| 162 | பாலச்சந்திரன் திரு வை. | .. | பத்மநாபபுரம் |
| 163 | பாலசுப்பிரமணியன் திரு க. | .. | சீர்காழி (செ.வ.) |
| 164 | பாலசுப்பிரமணியன் திரு எஸ். | .. | அம்பாசமுத்திரம் |
| 165 | பாலசுப்பிரமணியன் திரு வேடசந்தூர் வி. பி. | | வேடசந்தூர் |
| 166 | பாலன் திரு சு. .. | .. | எழும்பூர் |
| 167 | பாலாஜி திரு கே. .. | .. | காஞ்சிபுரம் |
| 168 | பாலுச்சாமி திரு ஏ. .. | .. | பரமக்குடி (செ.வ.) |
| 169 | பாலுசாமி திரு அ. .. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 170 | பிரணவநாதன் திரு அ. | .. | கடலாடி |
| 171 | பிரேம்குமார் திரு ஆ. .. | .. | திண்டுக்கல் |
| 172 | புருசோத்தமன் திரு எஸ். | .. | அரியலூர் |
| 173 | புஷ்பராஜ் திரு த. .. | .. | திருமயம் |
| 174 | பெரியசாமி திரு அ. .. | .. | தாராபுரம் (செ.வ.) |
| 175 | பெரியசாமி திரு ரா. .. | .. | தொட்டியம் |
| 176 | பெருமாள் திரு தெ. | .. | கடையநல்லூர் |
| 177 | பெருமாள் பிள்ளை திரு கோ. | | கன்னியாகுமரி |
| 178 | பொன் முத்துராமலிங்கம் திரு | | மதுரை (மேற்கு) |
| 179 | பொன்னம்மாள் திருமதி ஏ. எஸ். | | பழனி (செ.வ.) |
| 180 | பொன்னுசாமி டாக்டர் அ. | .. | பெருந்துறை |
| 181 | பொன்னுலிங்கம் திரு ப. | .. | ராயபுரம் |
| 182 | பொன்னையன் திரு சி. | .. | திருச்செங்கோடு |

ம

| | | | |
|---|---|---|---|
| 183 | மணவாளன் திரு எஸ். பி. | .. | திருப்பத்தூர் |
| 184 | மணிமாறன் திரு மா. .. | .. | நன்னிலம் (செ.வ.) |
| 185 | மலர்மன்னன் திரு அ. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 186 | மனோகரன் திரு கி. .. | .. | புரசைவாக்கம் |
| 187 | மனோகரன் திரு தி. நா. கோ. அ. | | திருநாவலூர் |
| 188 | மாசிலாமணி டாக்டர் ந. | .. | ஜெயங்கொண்டான் |
| 189 | மாதவன் திரு செ. .. | .. | திருப்பத்தூர் |
| 190 | மாதையன் திரு யு. பி. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 191 | மாரிமுத்து திரு த. .. | .. | குளத்தூர் (செ.வ.) |
| 192 | மாரிமுத்து திரு மு. .. | .. | திருப்பரங்குன்றம் |
| 193 | மீனாட்சிசுந்தரம் திரு மா. | .. | வேதாரண்யம் |
| 194 | முகம்மது கனி திரு ஜே. | .. | புதுக்கோட்டை |
| 195 | முகம்மது சலீம் டாக்டர் த. | .. | பெரியகுளம் |
| 196 | முசிறிபுத்தன் திரு பி. .. | .. | குளித்தலை |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | | தொகுதியின் பெயர் |
|---|---|---|---|

ம—தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| 197 | முத்துசாமி திரு சு. .. | .. | ஈரோடு |
| 198 | முத்துராமலிங்கம் திரு பி. கே. எம். | | உசிலம்பட்டி |
| 199 | முத்துவேல் திரு கே. .. | .. | முதுகுளத்தூர் |
| 200 | முத்தையா திரு இரா. .. | .. | சேடப்பட்டி |
| 201 | முருகானந்தம் திரு டி. என். | .. | செஞ்சி |
| 202 | முனிரத்தினம் திரு இரா. சா. | | கும்மிடிப்பூண்டி |

ய

| | | | |
|---|---|---|---|
| 203 | யசோதா திருமதி டி. .. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |

ர

| | | | |
|---|---|---|---|
| 204 | ரகுமான்கான் திரு அ. .. | .. | சேப்பாக்கம் |
| 205 | ரமணி திரு கு. .. | .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 206 | ரவீந்திரன் திரு ஏ. எஸ். | .. | திருவண்ணாமலை |
| 207 | ராமஜெயம் திரு ம. நா. | .. | வானூர் (செ.வ.) |
| 208 | ராமன் திரு கி. .. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 209 | ராஜாபாபு திரு ஜெ. .. | .. | போளூர் |
| 210 | ரெங்கசாமி திரு ஆர். .. | .. | கோவில்பட்டி |
| 211 | ரெத்தினராஜ் திரு எஸ். | .. | நாகர்கோவில் |

ல

| | | | |
|---|---|---|---|
| 212 | லட்சுமி திருமதி பி. .. | .. | அவினாசி (செ.வ.) |

வ

| | | | |
|---|---|---|---|
| 213 | வடிவேல் திரு கு. .. | .. | கரூர் |
| 214 | வளர்மதி திருமதி பா. | .. | மயிலாப்பூர் |
| 215 | விஜயபாலன் திரு என். | .. | பூம்புகார் |
| 216 | விஜயலட்சுமி பழனிச்சாமி திருமதி | | வீரபாண்டி |
| 217 | வீரானம்பலம் திரு க. வெ. | .. | மேலூர் |
| 218 | வீரய்யன் திரு கோ. .. | .. | நாகப்பட்டினம் |
| 219 | வீரப்பன் திரு ஆர். எம். | .. | திருநெல்வேலி |
| 220 | வீராசாமி திரு தா. .. | .. | ஒரத்தநாடு |
| 221 | வெங்கடரெட்டி திரு டி. | .. | ஒசூர் |
| 222 | வெங்கடாசலம் திரு அ. | .. | ஆலங்குடி |
| 223 | வெங்கடாசலம் திரு கி. | .. | லால்குடி |
| 224 | வெங்கடாசலம் திரு டி. எம். | .. | பரகூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | **வ—தொடர்ச்சி.** | |
| 225 வேங்கடரமணன் திரு டி. ஆர். | | தென்காசி |
| 226 வேணுகோபால் திரு எஸ். | .. | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 227 வேணுகோபால் திரு கே. வி. | .. | தல்லி |
| 228 வேலு திரு கூடலூர் இ. வி. | .. | தண்டராம்பட்டு |
| | **ஜ** | |
| 229 ஜகதீசன் திரு ஆனூர் பு. கோ. | | செங்கல்பட்டு |
| 230 ஜான் வின்சென்ட் திரு மு. | .. | நாங்குநேரி |
| 231 ஜெகதீசன் திரு. சு. .. | .. | அரவக்குறிச்சி |
| 232 ஜெயச்சந்திரன் திரு சா. | .. | காட்டுமன்னார் கோவில் (செ.வ,) |
| 233 ஜெயராமன் திரு வே. இரா. | .. | தேனி |
| | **ஹ** | |
| 234 ஹேமச்சந்திரன் திரு ஜே. | .. | திருவட்டாறு |
| 235 பிரான்சிஸ் திரு ஜி. கே. | .. | நியமன உறுப்பினர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.**

| | | |
|---|---|---|
| திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | .. | தலைமை வழக்கறிஞர். |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1986, நவம்பர் 21, வெள்ளிக்கிழமை.**

**கார்த்திகை 6, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

கருத்துக்களை ஒழுங்காகக் கோத்து இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், உலகம் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**அரசு புறம்போக்கில் அமைந்த கோவில்களுக்கு பட்டா வழங்கல்.**

119.—(வினா எண். 525) **திரு. க. சோலைராசு :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு புறம்போக்கில் அமைந்த கோவில்களுக்கு, கோவில் பெயரில் பட்டா கொடுக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசு புறம்போக்கு நிலத்திலே தனியார் எவ்வளவு பேர்கள் ஆக்கிரமித்து கொண்டிருக்கிறார்கள் ? ஆன்மீகத்திற்கு உதவுகின்ற வகையிலே அரசுக்குச் சொந்தமான, அறநிலையத் துறையால் எடுத்துக் கொண்டுள்ள கோயில்கள் புறம்போக்கிலே அமைந்திருந்தால் அதற்கு பட்டா கொடுப்பதற்கு துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 21

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு தனது ஆணை எண். 679, வருவாய்த்துறை, 7-3-1953-ல் மதசம் பந்தமான காரியங்களுக்கு நில உரிமை மாற்றம் செய்யக் கூடாது என்றும் கோயில்கள் கட்டுவதற்கு நிலம் கொடுத்தாலும், அந்நிலத்தையும் அதில் உள்ள கட்டிடங்களையும் காரணம் தெரிவிக்காமலும் நஷ்ட ஈடு ஏதுமின்றி திரும்பப் பெறும் உரிமை அரசிடம் இருத்தல் வேண்டும் என்றும், அறிவுரை வழங்கியுள்ளது. மேலும் அரசு தனது ஆணை எண். பல்வகை 133, வருவாய்த்துறை, 21-1-1977-ல் அரசு நிலத்தை மதச் சார்புள்ள நிறுவனங்களுக்கு பட்டா செய்து கொடுக்கக்கூடாது என்றும், அவைகளுக்கு பட்டா கொடுத்தால் அரசுக்குள்ள முழு உரிமையும் போய்விடுகிறது என்றும் அதனால் அரசு சொத்தாக கருத இயலாது என்றும், மதச் சார்புள்ள நிறுவனங்களுக்கு பட்டா கொடுப்பதால் கோவில் பெயரைச் சொல்லிக்கொண்டு பொய்யான நபர்கள் அரசாங்க நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்ய வாய்ப்பு உண்டாகும் என்றும் பட்டா கொடுத்தால் அந்நிலத்தை மீண்டும் அரசு வசம் எடுப்பதில் சிரமம் ஏற்படுகிறது என்பதையும் கருதி மதச் சார்புள்ள நிறுவனங்களுக்கு பட்டா கொடுக்கக்கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே அரசு புறம் போக்கில் அமைந்த கோவில்களுக்கு கோவில் பெயரில் பட்டா கொடுக்கும் உத்தேசம் இல்லை.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு பகுதிகளிலே உதாரணமாக மணப்பாறை கோவிலிலே கூட இடது புறம் உள்ள பகுதியில் தனியார்கள் ஆக்கிரமித்த ஒரு கடை இன்றைக்கு 5,000 ரூபாய் மாத வாடகை வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. வலது புறத்திலே அறநிலையத்துறைக்கு சொந்தமான இடத்தில் அதிலிருந்து வரக்கூடிய ஒவ்வொரு பைசாவும் அரசுக்குச் சொந்தமாகக் கூடிய இடத்தில் பட்டா இல்லாததினால் தனியார் அனுபவிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இது போன்ற அரசுக்கு வருமானம் வரக்கூடிய, அரசு கட்டுப் பாட்டில் இருக்கக்கூடிய, அறநிலையத்திற்குச் சொந்தமான பகுதிகளுக்கு இனிமேலும் பட்டா கொடுப்பதற்கு பரிசீலிக் கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அரசு சார்பாக இருக்கின்ற புறம்போக்கு நிலத்தை பட்டா செய்வதற் கில்லை என்று முதலிலேயே குறிப்பிட்டேன். சாதாரணமாக யார் ஆக்கிரமிப்பு செய்தாலும், ஆக்கிரமிப்பை அகற்று வதற்கு அரசுக்கு உரிமை இருக்கிறது. ஆக, ஆக்கிரமிப்பு பொது காரியங்களுக்கோ, பள்ளிக்கூடங்களுக்கோ பொது மருத்துவமனைகளுக்கோ. அரசு அலுவலகங்களுக்கோ



1986 நவம்பர் 21]

தேவைப்படுகின்ற சூழ்நிலை ஏற்படும்போது ஆக்கிரமிப்பை
அகற்றவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சிலபல, புறம்
போக்குகளை மறுபடியும் அது தேவையற்றது என்ற நிலை
வருகின்றபோது அசைன்மென்ட் மூலமாக ஏழை எளியவர்
களுக்கு ஒதுக்கீடு செய்வதன் மூலமாகத்தான் அதைத்தர
இயலும். ஆனால் இந்த வகையில் பொது என்று சொல்லி
விட்டு, கோவில் என்று சொல்லிவிட்டு அங்கே பலபேர் ஆக்கிர
மிக்கின்ற சூழ்நிலை வருகின்றபோது, ஒவ்வொரு புறம்
போக்கிலும் திடீரென்று கோவில்களும் வந்துவிடும். பிறகு
அவர்களே தர்மகர்த்தாக்களாக ஆகி, அவர்களே எல்லா
வற்றையும் அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.
ஆகையினால் 1953-லேயே இந்த ஆணை வந்து பிறகு
தொடர்ந்து அதற்கு ஏற்றபடியே ஆணைகள் கொண்டுவரப்
பட்டு, அதுவே தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகி
றதே தவிர இது புதிதாக இருந்துவருகின்ற ஒரு ஆணை அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத்
திரு. ஃ.ள. பாலச்சந்திரன் : அரசு புறம்போக்கில் அமைந்துள்ள கோயில்
தலைவர் அவர்களே, வழங்குவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர்
களுக்கு பட்டா தெரிவித்தார்கள். ஆனால் அரசுப் புறம்போக்கில்
அவர்கள் இருக்கின்ற கோயில்களை நிர்வாகம் செய்கிறவர்களை ஒரு
கமிட்டியாக, ' டெம்பிள் கமிட்டியாக ' சேர்த்து, 145
சி.ஆர்.பி.சி. யின்படி, அவர்களுடைய பொசஷன் டிக்ளேர் செய்
வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு
**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசுப் புறம்
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்ற வர
போக்கில் அந்தக் கோயில் எப்படி வந்தது அந்தக்
லாற்றை நாம் பார்க்க வேண்டும். உள்ளபடியே நிலத்தை
கோயில் கட்டவேண்டும் என்று இருந்தால் அந்த தர்ம
அந்தக் கோயிலுக்கு சொந்தமாக ஆக்கி அதற்கு அதிலே
கர்த்தாக்கள் அமைத்து நன்கொடை வசூலித்து வேண்டும்.
கோயில்களை எழுப்புவதற்கு முயற்சி செய்ய அமைக்கக்
தனியார் ஆக்கிரமிக்கிற மாதிரி கோயில்களை இடம்
கூடாது. அப்படி ஆக்கிரமிக்கிற சூழ்நிலைக்கு வழி
கொடுத்தால் பல்வேறு தவறுகள் ஏற்படுவதற்கு முக்கியமான
இருக்கிறது. கோயில்களின் சார்பில் சில கட்ட
திருமண மண்டபங்கள் கட்ட, மருத்துவமனை அதனை
அல்லது அதற்கான இடங்கள் என்று வருகிறபோது, ' அசைன் '
யொட்டி சில பல இடங்கள் குத்தகைக்கு விடவோ, வேண்டுமானால்
பண்ணவோ, அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு காரணத்
செய்யலாமே தவிர, ஆக்கிரமிப்பு செய்துவிட்ட செய்யவேண்டும்
தாலேயே அவர்களுக்கு அதற்கு பட்டா ஆனால்,
என்ற நிலைக்கு அரசு ஒத்துக் கொள்ளவில்லை. முன்வரும்போது,
பொதுக் காரியங்களுக்காகப் பயன்படுத்த வருகின்றபோது
ஒரு டிரஸ்டுக்கோ, ஒரு கோயிலுக்கோ
அதைத் தனியாக அரசு பரிசீலிக்கும்.

[1986 நவம்பர் 21

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் புறம்போக்கில் திடீர், திடீர் என்று தோன்றுகின்ற கோயில்களைத் தடுத்து நிறுத்த ரெவின்யூ துறை மூலமாக ஆர். ஐ., தாசில்தார், வி.ஏ.ஓ. ஆகியவர்களுக்கு உத்தரவு வழங்கியதைத் தடுக்கின்ற நிலை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி வழங்கிய உத்தரவை தடுக்கின்ற நிலை ஒன்றும் இல்லை.

**திரு. ச. வே. இ. ச. இளங்கோவன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற பல கோயில்களுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சொந்தமாக இருக்கின்றன. அவற்றை எல்லாம் பூசாரிகளும், சாமியார்களுமே அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, அத்தகைய கோயில் நிலங்களை ஏழை மக்களுக்கு பட்டாவாக செய்து வழங்கும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது அறநிலையத் துறை பாதுகாப்பின்கீழ் வருகிறது. அந்த நிலங்களை எல்லாம் குறிப்பிட்ட நோக்கத்திற்காக எழுதி வைத்திருக்கிறார்கள். அதை அவ்வளவு சுலபத்திலே எடுத்து விடமுடியாது. அரசமைப்புச் சட்டத்திலே சில பல விதிமுறைகள் வகுத்துத் தந்திருக்கிறார்கள். எந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அந்த நோக்கம் நிறைவேறுகிறதா அந்த நோக்கத்தினுடைய அடிப்படையில் பொது மக்களுடைய நன்மையைக் கருதிச் செய்யப்படுகிறதா, என்பதைக் கண்காணிக்கத் தான் அறநிலையப் பாதுகாப்புத் துறை இருக்கிறது. அந்த நிலத்தை எல்லாம் அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால், நிலத்திற்குரிய கிரயத்தை, அந்தக் கோயிலுக்கு தந்துவிட்டு அந்த நிலத்தை எடுத்து ஏழை எளியவர்களுக்கு பங்கீடு செய்யலாமா என்று ஒரு யோசனை இருக்கிறது. அதுபற்றித் தான் அறநிலையத் துறை, வருவாய்த் துறை, மற்றும் பிற துறைகள் ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள். அதுபற்றிய செயற்குறிப்பு வந்தபிறகு, அதற்கு காம்பன்சேஷன் கொடுத்து, அந்த இடத்தை எடுத்து உழுபவர்களுக்கோ குத்தகை எடுப்பவர்களுக்கோ மற்றவர்களுக்கோ தருவதைப் பற்றி யோசிக்க வேண்டும். ஆனால், அதற்குரிய உரிமை அதற்குரிய நிலக் கிரயத்தை அந்தக் கோயில்களுக்குத் தந்துவிட்டுச் செய்கின்ற ஒரு சட்டம் வருமேயானால்தான் நிலைத்து நிற்கும். அதுபற்றி தனியாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்



1986 நவம்பர் 21]

**திரு. இரா. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில் அமைந்திருக்கும் இடத்தின் அருகில் கோயில்களுக்குச் சொந்தமான பட்டாக்கள் இருந்து, அந்தப் பகுதியிலேயே புறம்போக்கு அமைந்து இருக்குமானால், அது அந்தக் கோயிலுக்கே மீண்டும் பட்டா செய்து கொடுப்பது வசதியாக இருக்கும். அப்படி இல்லையெனில், தனியார் ஆக்கிரமிப்புகளுக்கு ஆளாக்கப்பட்டு, அந்தக் கோயிலினுடைய புனிதத் தன்மை கெடுகிற வகையில் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட நிலங்களுக்காவது அரசு பட்டா செய்து கொடுக்க வழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமாக இருக்கிற அந்தப் புறம்போக்கு நிலத்தை கோயிலுக்குப் பட்டா செய்வதன் காரணமாக, அந்தப் புனிதத் தன்மை கெடாது என்பதற்கு என்ன உத்தரவாதம் ? கோயில்களைச் சுற்றி இருக்கிற பல இடங்களிலே சுகாதார நிலைமை கெட்ட நிலைமையிலே இருக்கின்றது. அதை எந்த அளவுக்கு கெடுப்பது என்று ஆரம்பித்து விடுவார்களேயானால், அது தனியார் நிலமாக இருந்தாலும் சரி, அரசு நிலமாக இருந்தாலும் சரி அல்லது கோயில் நிலமாக இருந்தாலும் சரி, கெடுத்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். ஆனால், எதற்கு பயன்படுத்தப்படுகிறது என்பதுதான் முக்கியம். அதன் மூலம் பொது மக்களுக்கு பொது நன்மைக்கு பயன்படுத்தப்படுகிறதா என்ற நோக்கம் வருமேயானால், டிரஸ்டிடோ, தனியார்களோ, ஊர் நன்மையைக் கருதி, ஊர் மக்களுக்காக ஒரு ஆஸ்பத்திரி கட்ட, ஊர் மக்களுக்காக ஒரு கல்லூரி கட்ட, ஊர் மக்களுக்காக ஒரு பொதுத் திருமண மண்டபம் கட்ட, அப்படிப்பட்டவர்களுக்கு வருகின்றபோது வேண்டுமென்றால் தனியாக யோசித்து அது பற்றி தனி முடிவு எடுக்கும்.

**திரு. த. பழனி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஆக்கிரம நிலத்தை அகற்றுவதற்கு முயற்சி செய்கிறது. பட்டா கொடுக்க முடியாது என்கிற உத்தேசத்தில் தன்னுடைய பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறபோது, பல்வேறு இடங்களில் பொதுப் பணித் துறையைச் சார்ந்திருக்கிற ஏரிகளாக இருக்கட்டும், மற்ற ஏரிகளாக இருக்கட்டும், அதனுடைய வரத்துக் கால்வாய்களை எல்லாம் தனியார் ஆக்கிரமிப்புகள் செய்து இருக்கிறார்கள். அதை அரசு அப்புறப்படுத்துவதற்கு பல மனுக்கள் கொடுத்தும், இதுவரை நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. எனவே, அதை அப்புறப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 21

(முற்பகல் 9.10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும் கூட, உள்ளபடியே அரசினுடைய நிலத்தை யார் ஆக்கிரமிப்புச் செய்தாலும், அத்தகைய ஆக்கிரமிப்புகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டியவைகள் தாம். பொது மக்களுக்குப் பயன்படும் அளவில் இருக்கின்ற நிலங்களை, தனிப்பட்டவர்கள் தங்களுடைய சுயநலத்திற்காக ஆக்கிரமித்துப் பயன்படுத்துகிற சூழ்நிலை ஏற்படும் போது அதைக் கட்டாயமாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதுதான் அரசின் உத்தரவாகும். அப்படி எங்காவது ஆக்கிரமிப்பு இருப்பதாகக் குறிப்பிட்ட இடங்கள் சுட்டிக் காட்டப்பட்டால் அவற்றை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கும். பல இடங்களில், ஏரிகள், குளங்கள், ஆற்றுப் படுகைகள் ஆகியவற்றில் கூட தனிப்பட்டவர்கள் தங்களுடைய ஆதிக்கம் காரணமாக நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, ஏரிகள் போன்றவற்றையே ஒழித்து விடுகிற அளவுக்கு வருகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் இருக்கிற ஆக்கிரமிப்புகளைக் கட்டாயமாக அகற்ற வேண்டும் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. எங்காவது அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களையும், கோயில் குளங்களையும் புறம்போக்கு நிலங்களாக, அரசு புறம்போக்கு இடங்களாக செட்டில்மெண்ட் புரொசீடிங்கில் அறிவித்திருக்கிறார்கள். இப்படி கோயில் நிலங்களைப் புறம்போக்கு நிலங்களாக அறிவித்திருப்பதால் பலர் ஆக்கிரமிப்பு செய்து அங்கெல்லாம் குடிசைகளைப் போட்டு வசித்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் அரசின் வருவாய்த் துறையிலிருந்து பி.மெமோ கொடுக்கப்படுகிறது. எனவே இவ்வாறு கோயில் நிலங்களாக இருந்தும் அவற்றை அரசு புறம்போக்கு நிலங்களாக அறிவித்திருப்பதால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. இதைப் போக்க புறம்போக்கு நிலங்கள் என்று அறிவிக்கப்பட்ட கோயில் நிலங்களை, கோயில்களுக்கே பட்டாவாக்கித் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு புறம்போக்கா அல்லது கோயில் புறம்போக்கா என்றும், அத்தகைய நிலத்திற்கு யார் உரிமை உள்ளவர்கள் என்றும் நிர்ணயிப்பதில் பல சிக்கல்கள் வருவதால் அந்த நிலங்கள் யாருக்குச் சொந்தம் என்று வழக்கு மன்றம் தான் தீர்ப்பு அளிக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு வழக்குமன்றம் கோயிலுக்குத்தான் சொந்தம், கோயிலுக்குத்தான் உரியது என்று தீர்ப்பளித்தால் அத்தகைய இடங்



1986 நவம்பர் 21]

களில் யார் ஆக்கிரமிப்பு செய்தாலும் கிரிமினல் வழக்குத் தொடர்
வதன் மூலமாக ஆக்கிரமிப்புகளை அகற்றவும், கோயிலுக்கே
ஜாரி செய்வதற்குமான நடவடிக்கைகளை நடைமுறைப்படி
மேற்கொள்ளலாம். அரசு புறம்போக்காக இருந்து அத்த
கைய நிலங்கள் பொது மக்களுடைய நன்மைக்காகப் பயன்
படுகிற சூழ்நிலை ஏற்படுமானால் அப்போதும் அங்குள்ள ஆக்கிர
மிப்பாளர்களை அகற்றி—அவர்கள் ஏழை எளிய மக்களாக
இருந்தால் அவர்களுக்கு வேறு இடம் கொடுத்து—அந்த இடத்
தைப் பொது மக்களே பயன்படுத்துகிற நிலையை உருவாக்க
லாம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் எந்தெந்த மதங்களைச் சார்ந்தவர்கள், எந்தெந்த இடங்களில், எத்தனை இடங்களை ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறதா? அவ்வாறு இதுவரை கணக்கிடப்படவில்லை என்றால் இனிமேலாவது அப்படி ஒரு கணக்கை எடுக்க அரசு முன் வருமா? அதோடு சாலையோரங்களில் இருக்கிற கோயில்களையும் அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். (விடை இல்லை).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி பட்டா வழங்குவது சமபந்தமானது.

**திரு. மு. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னோர்கள் கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் என்று அன்றைக்குச் சொல்லி விட்டுப் போய் விட்டார்கள். அதன் அடிப்படையில்தான் ஊர்ப் பொது மக்கள் ஒன்று கூடி அரசு புறம்போக்கு நிலத்தில் கோயில்களை உருவாக்கியிருக்கிறார்கள். அப்படி அரசு புறம்போக்கு நிலங்களில் உருவாக்கப்பட்டுள்ள கோயில்களுக்கு—அவைகள் எந்த மதத்தினராலே கட்டப்பட்டிருந்தாலும், அந்த இடங்களையெல்லாம் கோயில் பெயருக்கே பட்டா வழங்குகிற முடிவை அரசு மேற் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். (விடை இல்லை).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பதில் சொன்னதையே பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரும்பவும் கேட்கிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற மதத்தினர் இருக்கிற இடங்களுக்கு அருகாமையிலேயே, அரசு புறம்போக்கு நிலங்களில் கோயில்களை அமைத்து—அதற்காகச் சில அதிகாரிகளையும் இன்புளுவென்ஸ் செய்து—அந்த இடங்

களுக்கெல்லாம் கூட பட்டா வாங்கும் நடவடிக்கையை சிலர் மேற்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக மத மோதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட நடவடிக்கைகளைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே ஏற்படுகிற சூழ்நிலையைப் பொறுத்தும் உரிமையைப் பொறுத்தும் அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

### ஊரப்பட்டி கிராமத்தில் பால்வாடி கட்டிடம் அமைத்தல்.

120—(வினா எண் 3416) **திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, ஊரப்பட்டி கிராமத்தில் பால்வாடி கட்டிடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே (அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

### ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விஸ்தரிப்பு அலுவலர் பதவிகள்.

121—(*வினா எண் 7708) **திரு. கோ. இரகுபதி :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள கால்நடை விஸ்தரிப்பு அலுவலர்கள் பதவிகளில் கால்நடை ஆய்வாளர்களை நியமித்திட அரசு நடவடிக்கை எடுக்குமா ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கால்நடை ஆய்வாளர்களை விரிவாக்க அலுவலர்களாக ஊராட்சி ஒன்றியங்களில் நியமித்திட உத்தேசம் ஏதும் இல்லை.

**திரு. கோ. இரகுபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து யூனியனில் கால்நடை அலுவலர், பிளாக் டெவலெப்மெண்ட் ஆஃபீஸ் ஆரம்பிக்கும் போது அங்கே பி.வி.எஸ்.ஸீ. படித்த டாக்டர்கள் இல்லாத காரணத்தால் கால்நடை ஆய்வாளர்கள் ஈ.ஓ. (ஏ.எச்)—ஆக பணியாற்றி விஸ்தரிப்புப் பணிகளைச் செய்து கொண்டு வந்தார்கள். சமீபத்திலே அரசு எடுத்த கொள்கை முடிவின்படி அங்கே பி.வி.எஸ்.ஸீ. படித்த டாக்டர்களை நியமிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டதால் அங்கே காலியாகவுள்ள ஈ.ஓ. (ஏ.எச்) பதவிகளில் தற்காலிகமாக கால்நடை ஆய்வாளர்களை நியமித்து முன்னேற்றப் பாதையை வகுத்துத்தர அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கே. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புப் பதவிகளில் கால்நடை உதவி மருத்துவர்களைத்தான் நியமனம் செய்ய வேண்டும் என்று அரசு கொள்கையளவில் முடிவு செய்திருக்கிறது. அதைத்தான் பின்பற்றிச் செய்ய முடியும்.

**திரு. கோ. இரகுபதி :** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற ஈ.ஓ. (ஏ.எச்.) என்ற பணியில் ஏறக்குறைய 180 இடங்கள் கடந்த மூன்று வருஷங்களாக காலியாக இருக்கின்றன. அதனால் ஐ. ஆர். டி. பி. போன்ற முன்னேற்றத் திட்டங்களும், விஸ்தரிப்புப் பணிகளும் தடைப்படுகிற நிலைமை அரசுக்குத் தெரியுமென்று நான் நினைக்கிறேன். அந்தப் பணிகள் சிறப்படைவதற்காக, முன்னேற்றப் பாதையில் உள்ள விஸ்தரிப்புப் பணிகள் நல்லவிதத்தில் செயல்பட தற்காலிகமாக கால்நடை ஆய்வாளர்களை மீண்டும் நியமிக்கும் நிலையை அரசு உருவாக்கித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு தற்போது இல்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருத்துவமனைகள் அமைக்கிறபோது, சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு மூன்று, நான்கு என்றும் சில பகுதிகளில் அதிகமான கால்நடைகள் இருந்தும்கூட ஒரு கால்நடை மருத்துவமனை என்றும் அமைக்கிற நிலை இருக்கிறது. குறிப்பாக கிள்ளியூரில் அதிகமான கால்நடைகள் இருந்தும் போதுமான

வசதிகள் குறைவாக இருப்பதால் அங்கே புதியதாக கால் நடை மருத்துவமனையைத் தொடங்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவரமாக அது பற்றி அரசுக்கு எழுதினால் அது பற்றி ஆய்ந்து முடிவு எடுக்கப்படும்.

**சென்னை மாநகராட்சி ஆணையர்.**

*122*—(*வினா எண். 7725) **திரு. சு. பாலன் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போதுள்ள சென்னை மாநகராட்சி ஆணையர் அரசு சார்பாக மேலை நாடுகளில் மாநகராட்சிகளின் செயல் பாடுகளைப் பற்றி அறிந்துகொள்ள அனுப்பப்பட்டார்களா?

(ஆ) ஆம் எனில், மாநகராட்சி அபிவிருத்தித் திட்டம் ஏதாவதும் அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தற்போதைய சென்னை மாநகராட்சி ஆணையாளர் திருமதி சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் 1985 ஆம் ஆண்டு ஜூலை வரை, அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலை கழகத்தில் பொது மற்றும் அகில உலக விஷயங்களுக்கான உட்ரோ வில்சன் பள்ளியில், யார்வின் பெலோஷிப்-க்காக அனுப்பி வைக்கப்பட்டார். மாநகராட்சிகளின் நிர்வாகங்களைப் பற்றி படிப்பதற்காக அவர் அனுப்பப்படவில்லை. மேற்கூறிய படிப்பு காலம் முடிவடைந்தபின், சென்னை மாநகராட்சியின் மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம் ஏதும் ஆணையாளரால் சமர்பிக்கப்படவில்லை.

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.**

*123*—(*வினா எண். 8104) **திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூன்று ஆண்டு பதவிக்காலம் 1984 ஆகஸ்டு திங்களுடன் முடிந்துவிட்டது என்பதும் சட்டப்படி 1984 செப்டம்பர் முதல் அந்த வாரியம் திருத்தி அமைக்கப்பட உத்தரவு வரவேண்டியது இன்னமும் வரவில்லை என்பதும் உண்மையா ?





(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தமிழ் நாடு தொழிலாளர் நல வாரியம் 11–4–1986 அன்று திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9–20)

**திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓராண்டுக்குப் பிறகு இந்தக் கேள்வியை அனுமதித்ததற்காக சபாநாயகருக்கு என்னுடைய நன்றி.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் ஓராண்டுக்குப் பின்னால் அனுமதிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் இந்தக் குழு இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலேயே உருவாக்கப்பட்டு அதிலிருந்து செயல்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ எட்டு மாதங்களுக்கு முன்பே குழு வந்துவிட்டது. கேள்விக்கான விடை எட்டு மாதங்களுக்கு முன்பே வந்துவிட்டது. இருந்தாலும் தகவலுக்காக இப்போது சொல்லப்பட்டது.

**தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோயிலில்**
**ஆக்கிரமிப்புகளில் உள்ள குடியிருப்புகள், கடைகள்.**

*124*—(*வினா எண். 9122) **திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோவில் நகரத்தில் நகர எல்லைக்குட்பட்ட இடங்களில் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள குடியிருப்புகள், வியாபார கடைகள் முறையே எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) இவைகளை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோவில் நகரத்தில் நகர எல்லைக் குட்பட்ட பஞ்சாயத்து சாலைகளில் 3 குடியிருப்புகளும், 29 கடைகளும், 3 சார்பு கொட்டகைகளும் (ஆக 35) ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன.

(ஆ) மேற்படி காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி எல்லையில் வீதி ஓரங்களில் உள்ள காலியிடங்களில் ஆக்கிரமிப்பு செய்த ஆக்கிரமிப்புதாரர் 35 பேரை அகற்ற 3—4—1986, 4—4—1986 மற்றும் 18—4—1986 தேதிகளில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அவற்றில் தடையை மீறி சாலை ஓரம் ஆக்கிரமித்திருந்த 13 நபர்கள் காவல் துறையின் உதவியுடன் வெளியேற்றப்பட்டனர். தடையை மீறி ஆக்கிரமித்துள்ள நிலுவையில் உள்ள 22 ஆக்கிரமிப்பு தாரர்களை அகற்ற நிர்வாக அதிகாரி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்களை 15—5—1986-க்குள் அகற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி நிர்வாக அதிகாரிக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

### விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவித்தொகை.

125—(*வினா எண். 9541)—திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விவசாய தொழிலில் ஈடுபட்டு இருக்கும் விவசாயத் தொழிலாளர்கள் தொழில் செய்யும் காலத்தில் மரணம் அடைந்தால் கைத்தறி தொழிலாளர்களுக்கு அளிப்பது போல ரூ. 10,000 வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): நிலமற்ற உழவுத்தொழிலாளர்கள் சிறு மற்றும் சொற்ப நிலமுள்ள உழவர்கள் மற்றும் கிராமக் கைவினைஞர்கள் பணியில் ஈடுபட்டு இருக்கும்பொழுது மரணம்அடைந்தால் ரூபாய் 10,000-மும் விபத்திற்கு உட்பட்டால் ரூபாய் 5,000-மும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கும் திட்டம் 1984ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளில் இருந்து தமிழ்நாட்டில் அமுலில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தனியார் துறையில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும் எதிர்பாராவிதமாக தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது மரணமடைந்தால் ரூபாய் 10,000 வழங்கப்படும்.

திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை தொழிலாளர்களின் குடும்பங்கள் பயனடைந்துள்ளார்கள் என்பதைத் தெரிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடவும்.



திரு. ச. கோவிந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மற்ற தொழிலாளர்கள் போல், விவசாயத் தொழிலாளர்களுக்கு உடல் நலம் பாதிக்கப்படும் நேரங்களிலே உதவித் தொகை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், 2.5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவாக உள்ள சிறு அல்லது சொற்ப நிலமுள்ளவர்கள், கிராமக் கைவினைஞர்கள் பயன்பெறுவார்கள்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு பேரவை துணை சபாநாயகர் அவர்களே, விருத்தாசலம் தொகுதியில் மணவாள நல்லூர் என்ற ஊரில் மோட்டார் கொட்டகையில் படுத்திருந்த போது, குப்புசாமி என்ற விவசாயத் தொழிலாளி நல்ல பாம்பு கடித்து இறந்துவிட்டார். அது குறித்து போஸ்ட்மார்ட்டம் செய்து, பாம்பு கடித்து இறந்தார் என்று டாக்டர் சர்டிபிகேட் மருத்துவ மனையிலிருந்து வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை அந்த விதவைப் பெண்ணுக்கு உதவித் தொகை தரவில்லை. அந்த உதவித் தொகையை வழங்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்தை ஏற்று, அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியிலே கேட்கப்பட்டிருக்கிற விஷயம், தொழில் செய்யும் காலத்தில் மரணம் அடைந்தால் உதவித் தொகை அளிக்கப்படுமா என்று பொதுவான அம்சமாக உள்ளது. அந்த மரணம் என்பது, தொழில் செய்யும் போது வேலை நிமித்தமாக அடிபட்டோ அல்லது திடீரென்று ஹார்ட் பெயில்யூர் ஆவதாலே ஏற்படக்கூடும். இந்த இறப்புகளுக்குத் தான் இந்த உதவித் தொகையா அல்லது அந்த வேலையில் இருக்கும் காலத்தில் எப்படி இறந்தாலும் அந்தத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு உதவித் தொகை கிடைக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாக்குவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மேற்சொன்ன தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தினால் உயிரிழக்க நேரிட்டாலோ அல்லது ஊனமுற்றாலோ இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைவார்கள்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும்போது, பாம்பு கடித்து இறந்துவிட்டால், அது குறித்து டாக்டர் சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுத்து, ஓராண்டுக்கும் மேலாக அந்த விதவைப் பெண் அலைந்தால்தான் உதவித் தொகை கிடைக்கும் சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் உதவித் தொகை ரூபாய் 10,000 கொடுப்பதாகச் சொன்னார்கள். இதுவரையில், கிராமப்புறங்களில் வேலை செய்யும் காலத்தில் விவசாயத் தொழிலாளர்கள் விபத்தில் இறநதாலும் அல்லது வேறு எந்த வகையில் இறந்தாலும் அந்த உதவித் தொகையான 10,000 ரூபாய் கிடைக்கவில்லை. இனியாகிலும் அந்த உதவித் தொகையான ரூபாய் 10,000 விதவைப் பெண்ணுக்கு உறுதியாகக் கிடைக்க, சுலபமாக கிடைக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நட்டாலம் என்ற பகுதியில் ஒரு விவசாயத் தொழிலாளி வேலை செய்து கொண்டிருக்கும்போது 3 பேஸ் கரண்டு ஒயர் அறுந்து, அவர் மீது விழுந்து ஷாக் அடித்து, அதே இடத்தில் ஒரு எருமை மாடும், அவரும் இறந்து விட்டார்கள். அதற்கு மாறாக மனு கொடுத்த காலத்திலே எலக்டிரிசிடி போர்டைச் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்களிடம் கேட்டால் விபத்து நடந்தால் நஷ்ட ஈடு கொடுக்கக் கூடியவர்களிடம் கேளுங்கள் என்கிறார்கள். இப்படித் தட்டிக் கழித்து 3 ஆண்டு காலமாக அந்த ஏழை விவசாயி குடும்பத்திற்கு சலுகை கிடைக்கவில்லை. அவரது குடும்பத்திற்கு தக்க நஷ்ட ஈடு நிவாரணம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. விவசாயத் தொழிலாளி பணியில் ஈடுபட்டிருக்கும்போது, அவர் இறந்தால் ரூ. 10,000 என்றும், ஊனமடைந்தால் ரூ. 5,000 என்றும் அரசு 1984-லேயே உத்தரவிட்டிருப்பதாக அறிவித்தார்கள். அதிலே தொழிலிலே ஈடுபட்டிருக்கும்போது என்று சொல்லப்படுகிறது. தொழில் செய்து விட்டு, வீடும் திரும்பும்போது விபத்து ஏற்பட்டு உயிரிழந்தால், அந்த விவசாயத் தொழிலாளி குடும்பத்திற்கு நிதி





உதவி கிடைக்குமா? குறிப்பாக, ஒரு விவசாயத் தொழிலாளி வேலை செய்து விட்டு, வீடு திரும்பும்போது இடி விழுந்து இறந்திருக்கிறார். அவருடைய குடும்பத்திற்கு இந்தத் திட்டத்தின் கீழ் நிதி உதவி அரசாங்க உத்தரவின்படி கொடுக்க முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. அந்த உத்தரவை மாற்றி, உயிரிழந்த அந்த விவசாயத் தொழிலாளி குடும்பத்திற்கு இந்த திட்டத்தின் மூலம் நிதி உதவி கிடைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை மனிதாபிமான உணர்ச்சியை அடிப்படையாக வைத்து அதற்கு தக்கது செய்யப்படும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கேள்வி கேட்டபோது, 'During the course of employment or in the course of employment, என்று குறிப்பிட்டார்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் தியாகராஜன் அவர்கள், தூங்கிக் கொண்டிருக்கும்போது பாம்பு கடித்தால், அதனால் இறந்துவிட்டால் அவரது குடும்பத்திற்கு நிதி உதவி கொடுக்கப்படுமா என்று கேட்ட கேள்விக்கு, பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்றார். இது முன்னுக்குப்பின் முரணாக இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது முன்னுக்குப் பின்னல்ல; தொடர்ச்சியான பிரச்சினை. பிரச்சினை என்ன என்பதைப் பார்த்து, அதிலே சட்டப் பாதுகாப்பு இருந்தால், கொடுக்கப்படும் என்பது அதன் உட்பொருள்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூலி வேலை செய்யும் விவசாயி வேலை செய்கிறபோது பாம்பு கடித்தால் அல்லது திடீரென்று மரணமடைந்தால், அவர் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டு, போஸ்ட் மார்டம் சர்டிபிகேட்வேண்டும் என்றும், அதிலே பல சிக்கல்கள் இருப்பதாக விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையில் அவர்களுக்கு நஷ்ட ஈடு கிடைப்பதில்லை. அந்த கிராமத்திலே இருக்கின்ற வி. ஓ. மூலம் சர்டிபிகேட் கொடுத்தால், உடனடியாக அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், விவசாயத் தொழிலாளி டணியில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தில் இறந்து விட்டால், அவர்கள் குடும்பத்திற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். நடைமுறையில் ஏதாவது சிக்கல்கள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், அதைக் கவனித்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணங்கள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30).

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதியுதவி மாவட்ட வாரியாக எத்தனை பேர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது? எங்களுடைய குமரி மாவட்டத்திலே யாருக்கும் ஒரு காசு கூட கொடுத்ததாகத் தெரியவில்லை. இதை யார் மூலமாகக் கொடுக்கிறார்கள் என்று கூடத் தெரியவில்லை. அக்ரிகல்சர் டெபுடி டைரக்டரைக் கேட்டால் எனக்குத் தெரியவில்லை என்று சொல்கிறார். கமிஷனரைக் கேட்டால் எனக்குத் தெரியவில்லை என்று சொல்கிறார். எந்த அதிகாரி மூலம் கொடுக்கப்படுகிறது. எங்கள் மாவட்டத்தில் எத்தனை பேர்களுக்கு இந்த நிதி உதவி அளித்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த முழு விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் நிச்சயமாக அளிக்கப்படும்.

திரு. சி. சுப்புராயர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னை, பனை மரம் ஏறும் தொழிலாளர்கள் அகால மரணம் அடைந்து விட்டாலோ அல்லது தொழில் செய்து கொண்டு இருக்கும்போது கீழே விழுந்து மரணம் அடைந்து விட்டாலோ இந்தத் திட்டத்தோடு அதற்கும் சேர்த்து அவர்களுக்கும் அந்த உதவித் தொகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தில் அது இடம் பெறாது. அது ரெவின்யூத் துறை மூலமாக அளிக்கப்படுகிறது.





திரு. டி. எம். வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளிலும், அரசு அலுவலகங்களிலும் பணி செய்கிறவர்கள் தங்களுடைய வேலை நேரத்தில் விபத்தின் காரணமாக இறந்து விட்டால் அவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகையும் அவரின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுப்பதில் முன்னுரிமையும் வழங்கப்படுகிறதே அதைப்போல விவசாயத் தொழிலாளர்கள் விபத்திலே மரணம் அடைந்துவிட்டால் அந்தக் குடும்பத்திலே ஒருவருக்கு வேலை கொடுப்பதில் முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் துணைக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வி.

முள்ளுக்குறிச்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம்.

126 (*வினா எண். 225—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முள்ளுக்குறிச்சியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க என்ன என்ன விதிமுறைகள் இருக்கின்றன? அவைகளைக் கையாண்டு இந்த ஆண்டிலாவது அதை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைக் தலைவர் அவர்களே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வைப்பதற்கு 30 ஆயிரம் மக்கள் தொகை என்ற அடிப்படை வேண்டும். அந்தக் கிராம மக்களும் ஊராட்சி ஒன்றியமும் 5 ஏக்கர் நிலமும் பத்தாயிரம் ரூபாய் ரொக்கப் பணமும் தர வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. எங்கே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்று பணம் கட்டுகிறார்களோ அந்த இடத்தைச் சுற்றி 8 கிலோ மீட்டர் அளவுக்கு வேறு எந்த மருத்துவ வசதியும் இல்லாது இருக்க வேண்டும்.

இந்த விதிகளையொட்டி ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்படுகின்றன. இன்னும் துவக்கப்படாத இடங்கள் இருக்கின்றன. நிதியாதாரங்களை யொட்டி எது எதை எப்போது துவக்க வேண்டுமோ அப்போது அந்த நிலையங்கள் துவக்கப்படும்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முள்ளுக்குறிச்சி, கருப்பஞ்சோலை, பூனாந்தாங்கல், மூலக்குறிச்சி, கார் கூடல் பட்டி, நாவரைக் கிணறு ஆகிய கிராமங்களிலே மலைவாழ் மக்கள் வசிக்கிறார்கள். அங்கே 20 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல. அந்தப் பகுதியைச் சுற்றி 15 கிலோ மீட்டர் அளவுக்கு எந்தவித சுகாதார வசதியும் இல்லாத காரணத்தினாலே மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகவாவது நிதியைப் பெற்று அதை வருகிற ஆண்டிலாவது துவக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் என்ற காரணத்தினால் தனிச் சலுகை கொடுக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு. ப. ந. ராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராம மக்கள் நல்வாழ்வுக்கு அடிகோலுகிற வகையில் 100 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களை மத்திய அரசு தமிழகத்திலே ஏற்படுத்த இருப்பதாகவும் அதற்காக மத்திய அரசின் உதவி நாடப்படுவதாகவும் அதற்காக ஆங்காங்கே இருக்கின்ற மருந்தகங்களை மாற்றியமைக்க இருப்பதாகவும் செயற்குறிப்பு இருக்கிறதா? அப்படி இல்லையென்றாலும் மத்திய அரசை தமிழக அரசு அதற்காக வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருந்து ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள மருந்தகங்களை அப்கிரேட் பண்ணி அவைகளை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? எங்கெல்லாம் ஒரு ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறதோ அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்காக உள்ள சட்ட திட்டங்கள் பதிவு செய்யப்பட்டு பணம் நிலம் கொடுத்து இருந்தால் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா ?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986–87ஆம் ஆண்டிற்கு 196 அரசு மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கிறது. நான் தெரிவித்த விதிமுறைகள் உள்பட அவை நிறைவேற்றப்பட்டாலும் நிதியாதாரங்களை வைத்து நாம் அங்கங்கே ஆரம்பிக்கிறோம். ஆகவே, நிதியாதாரத்தைப் பொறுத்தது ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிப்பது.

திரு. வெ. சோ. பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிட வசதி இல்லாமல் நோயாளிகள் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எங்களுக்கு புதிதாக கட்டிடம் கட்டிக் கொடுக்க உத்தேசம் அரசுக்குள்ளதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எந்த ஊரில் அப்படி இருக்கின்றது என்று எழுதி அனுப்புவார்களானால் அதை அரசு பரிசீலிக்கும்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது நிதி வசதிகளைப் பொருத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு துணை சுகாதார நிலையங்கள் அமைக்க யோசிக்கும் என்று சொன்னார்கள். எங்கள் ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ60 ஊராட்சி மன்றங்களைப் பெற்றிருக்கின்ற ஒருஒன்றியமாக இருக்கின்றது. அங்கு ஒரு பப்ளிக் ஹெல்த் சென்டர் மட்டும்தான் இருக்கின்றது. அதை இரண்டாகப் பிரித்தால் அங்கே இருக்கின்றவர்களுக்கு மிகவும் வசதியாகவும் வாய்ப்பாகவும் இருக்கும். அந்த ஒன்றியத்தினுடைய நிலப்பரப்பு ஏறத்தாழ 60 கிலோ மீட்டர் அளவில் இருப்பதை மனதில் கொண்டு இரண்டாகப் பிரித்து மற்றொரு பப்ளிக் ஹெல்த் சென்டர் அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 30 ஆயிரம் மக்கள் ஜனத்தொகைக்கு ஒன்று என்று கணக்கெடுத்தால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் தொடங்கியிருக்க வேண்டும். இது வரையில் தொடங்கியிருப்பது 464 தான். மேலும் தொடங்குவது நிதி ஆதாரத்தைப் பொறுத்துத்தான் இருக்கின்றது என்று தொடக்கத்திலேயே சொன்னேன். நிதி ஆதாரத்தைப் பொறுத்து மேற்கொண்டு தொடங்குவது பற்றி அரசு யோசிக்கும்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார துணை நிலையம் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னால் எனது தொகுதியில் தூவாக்குடியில் அமைக்கப்பட்டது. அதற்கு அரசு கட்டிட நிதி ஒதுக்கீடு செய்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அங்கு அரசு இடம்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் 464 நிலையங்கள் தொடங்கியிருப்பதாக சொல்லியிருக்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட ஊரைப் பற்றி கேள்வி கேட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு ஊரிலேயும் உள்ள கட்டிட வசதி பற்றி இப்போது கேட்டால் அமைச்சர் அவர்கள் எப்படி தகவல் கொடுக்க முடியும்.

திரு. எம். அண்ணதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அது போன்று அரசு ஒதுக்கீடு செய்திருக்கின்ற பணத்தை இதுவரையிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பயன்படுத்தி துரித நடவடிக்கை எடுத்து கட்டடம் கட்ட தவறி இருக்கின்றார்கள். இதை அரசு கவனித்து உடனடியாக கட்டடம் கட்ட ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதைப் பற்றி உறுப்பினர் அவர்கள் அரசுக்கு எழுதிக் கொடுத்தால், அது எப்படி, ஏன் விடுபட்டிருக்கின்றது என்பதை ஆராய்ந்து அதன் மீது முடிவெடுக்கப்படும்.

திரு. வெ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரிய ஒன்றியங்களும் உள்ளன. உதாரணமாக சொன்னால், உத்திரமேரூர் ஒரு பெரிய ஒன்றியமாக இருக்கின்றது. அதுபோல அச்சரபாக்கம், மதுராந்தகம் எல்லாம் 60 பஞ்சாயத்துக்களை, ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றன. அவைகளை இரண்டாகப் பிரித்து எங்கெங்கு பெரிய ஒன்றியங்கள் இருக்கின்றனவோ, அவற்றை இரண்டிரண்டாகப் பிரித்து ஆங்காங்கு மக்களுக்கு வேண்டிய வைத்திய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும். அப்படி இரண்டாகப் பிரித்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 30 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட பகுதிக்கு ஒரு சுகாதார நிலையம் இருக்கவேண்டும் என்பதுதான் அரசினுடைய லட்சியம் என்று குறிப்பிட்டேன். தமிழ்நாட்டினுடைய மக்கள் தொகை கணக்குப்படி ஏறத்தாழ 1300 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆரம்பித்திருக்கவேண்டும். நாம் ஆரம்பித்திருப்பது 464 தான். இருக்கின்ற நிதி ஆதாரத்தைப் பொறுத்துத்தான் செய்ய முடியும் என்று சொன்னேன். நிதி ஆதாரம் இருக்குமானால் அதைப் பொறுத்து மேலும் அமைப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று நாட்டிலே கிராமப் புறங்களில் ஆங்காங்குள்ள சுகாதாரக் கேடுகள் காரணமாக மூளைக் காய்ச்சல் அதிகரித்திருப்பதாக சொல்கின்றார்கள். கிராமப்புறங்களில் இருப்பதாக நேற்றைய தினம் கூட தொலைக்காட்சியில் பேசுகின்றபோது அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதுபோல கிராமப்புறத்திலே அதிகமாக மூளைக் காய்ச்சல் வருவதால் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே, அதற்கு என்று அரசு ஏதாவது ஒரு திட்டத்தைத் தீட்ட முன்வருமா ?





(முற்பகல் 9–40.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூளைக் காய்ச்சல் நோய் பற்றி எத்தனையோ முறை இந்த மன்றத்திலே பேசி முடித்தாகிவிட்டது. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் இரண்டு, இரண்டு ஆரம்ப சுகாதார நிலையம் என்றல்ல, 30 ஆயிரம் மக்கள் தொகை இருக்க வேண்டுமென்று சொன்னேன். மேற்கொண்டு 5 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும், 10 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னேன். இவ்வளவையும் கொடுத்த பிறகு தான் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க முடியும்.

திண்டுக்கல் வட்டம் அம்பாத்துறையிலுள்ள கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்ப நல நிறுவனம்.

127—(*வினா எண். 3677) திரு. என். எஸ். வி. சித்தன் : மற்றும் திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் திண்டுக்கல் தாலுகா, அம்பாத்துறையில் அரசு முழுமானியம் பெற்று இயங்கும் ''கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்ப நல நிறுவனத்தை'' அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) ''கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்ப நல நிறுவனத்தை'' அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்பநல நிறுவனத்திற்கு'' மத்திய அரசு எவ்வளவு மானியம் கொடுக்கிறது ? மாநில அரசு எவ்வளவு மானியம் கொடுக்கிறது ?

[1986 நவம்பர் 21

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எவ்வளவு மானியம் என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் இரண்டு அரசுகளும் மானியம் கொடுக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்பநல நிறுவனம் முன்னாலே சொசைட்டி ஆக்ட்-ன் கீழ் இயங்கி வந்தது. பின்னாலே டிரஸ்ட் ஆக்ட்-ன் கீழ் அது மாற்றப் பட்டதினாலும், அங்கே பல்வேறு தவறுகள் நடைபெற்ற தாலும், அதனை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்பநல நிறுவனத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் ஒரு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லையென்று சொன்னார்கள். இதுவரை இப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசிடம் இல்லையென்றாலும் கூட இனிமேலாவது அதனை அரசு ஏற்று நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே கேட்ட கேள்விக்கு நான் அளித்த விடையை திருத்திக்கொள்கிறேன். மத்திய அரசு மானியம் மற்றும் தனியார் நிறுவனங்களின் மூலமாக அம்பாத்துறையில் கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்பநல நிறு வனம் நடத்தப்பட்டு வருகிறது என்று என்னுடைய விடையை திருத்திக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இனிமேலாவது அந்த நிறுவனத்தை அரசு ஏற்று நடத்துமா என்றுகேட்டார்கள். ஏற்கெனவே இந்த நிறுவனத்தை மத்திய அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத் திருக்கிறார்கள். மத்திய அரசு மாநில அரசிடம் இதுபற்றி விளக்கம் கேட்டிருக்கிறது. தமிழக அரசு விளக்கம் எழுதி அனுப்பியதற்குப் பிறகு, மாநில அரசுதான் இதனை ஏற்று நடத்த வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்தால் மாநில அரசே அதனை ஏற்று நடத்தும். ஆனால் அதற்கான முழு மானியத்தையும் மத்திய அரசே கொடுக்க வேண்டிவரும்.

### விளாத்திகுளம் அரசு மருத்துவ மனை.

128—(*வினா எண். 7852) திரு. ச. குமரகுருபர ராம நாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் அரசு மருத்துவமனைக்கு அதிக படுக்கை வசதி, மேலும் இரு மருத்துவர்கள், பெண் மருத்துவர் வசதி ஆகியவை செய்யப்படுமா ?





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் அரசு மருத்துவ மனையில் கூடுதல் படுக்கை வசதி, மேலும் உதவி அறுவை மருத்துவர்கள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

திரு. ச. குமரகுருபர ராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் என்பது தாலுக்கா தலைநகர். அது அதிக மக்கள் தொகை கொண்ட ஒரு பகுதி. அங்கு ஓரே ஒரு அரசு மருத்துவமனை உள்ளது, அதிலும் படுக்கை வசதிகள் இல்லை. அதுசம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுத்து படுக்கை வசதி அதிகரிக்கப்படுமா? அது போல அங்கே நீண்டகாலமாக மருத்துவர்கள் இல்லாத நிலை இருக்கிறதே, அந்நிலை உடனடியாக போக்கப்படுமா ? உடனடி யாக தேவையான மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் அரசு மருத்துவ மனை ஏற்கெனவே 50 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனை. 25 படுக்கைகள் ஆண்களுக்கும், 25 படுக்கைகள் பெண் களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. அங்கு டாக்டர்கள் இல்லை யென்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அதைப்பற்றி அரசு நிச்சயமாக விரைவில் பரிசீலித்து ஆணை பிறப்பிக்கும்.

### சிவகாசி அரசு மருத்துவ மனையில் பீடியாட்ரிக் வார்டு கட்டுதல்.

129—(*வினா எண். 7868) திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி நகர் அரசு மருத்துவமனையில் 'யூனிசெப்' திட்டத்தின்கீழ் பீடியாட்ரிக் வார்டு கட்ட (குழந்தைகள் நல மையம்) அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1986 நவம்பர் 21

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய குழந்தைகளுக்காக, தொழிலாளர்களுக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பல்வேறு நன்மைகளை செய்துகொண்டிருக்கிறது. அதை முன்னிட்டாவது யூனிசெப் உதவியுடன் இந்த ஆண்டிலேயே அங்கு பீடியாட்ரிக் வார்டு கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன், மருத்துவமனைகளில் வார்டுகளைக் கட்டுவது என்பது அரசின் நிதி ஆதாரத்தைப் பொறுத்து இருக்கிறது. அரசின் நிதி ஆதாரம் அதற்கு இடம் தந்தால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல தடவைகள் மருத்துவத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும், தொழிலாளர் நல அதிகாரிகளும் சிவகாசி நகர் அரசு மருத்துவமனையை வந்து நேரடியாகப் பார்வையிட்டார்கள். பீடியாட்ரிக் வார்டு கட்ட அரசிடம் நிதியாதாரம் இல்லையென்றாலும் யூனிசெப் திட்டத்தின்கீழ் பணம் தனியாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதைக் கொண்டாவது அங்கே பீடியாட்ரிக் வார்டு கட்டப்படுமா ? மேலும் அதுசம்பந்தப்பட்ட மதிப்பீடுகளை எல்லாம் சம்பந்தப்பட்ட இரண்டு துறை அதிகாரிகளும் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக யூனிசெப் உதவியுடன் இந்த வார்டு கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற விவரம் அரசினிடத்தில் இல்லை.

தாம்பரம் சானடோரியம் அரசு காசநோய் மருத்துவ மனை.

130—(*வினா எண். 9242) திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சானடோரியத்தில் அமைந்துள்ள அரசினர் காசநோய் மருந்துவம்மனையில் அமைக்கப்பட்டுள்ள படுக்கைகள் எத்தனை ?

(ஆ) மேலும் படுக்கைகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுமா ?



1986 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) 776.

(ஆ) இம்மருத்துவமனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது இருந்து வருகிற காசநோய் மருத்துவ மனைகள் தமிழ்நாட்டின் தேவைகளைப் பூர்த்தியாக்குவதாக இல்லை. எனவே, மாவட்டத்திற்கு ஒரு காசநோய் மருத்துவமனை அமைப்பதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, காசநோயைப்பற்றி உணர்ந்திருக்கிறது அரசு. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல மாவட்டத்திற்கு ஒன்றாகக் கூட துவக்கலாம். அந்த அளவிற்கு இருக்கிறது என்றாலும், காசைப் பொறுத்து இருக்கிறது காசநோயைப் போக்குவது. காசு இருக்குமேயானால் காசநோய்க்கான மருத்துவ வசதிகளை விரிவாக்கலாம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து தாலுக்கா மருத்துவமனைகளிலும் காச நோய் மருத்துவப் பிரிவை ஏற்படுத்திட அரசு முன்வருமா ? பீடித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளுக்கு முன்னுரிமை தந்து, அங்கே காசநோய் மருத்துவ மனை அமைக்க அரசு ஆராய்ச்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழிலாளர்கள் நிறைந்திருக்கிற இடங்களில் எல்லாம் காசநோய் மருத்துவப் பிரிவு ஒன்று அந்தந்த மாவட்டத் தலைமை நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டு இருப்பதாகத்தான் நான் அறிகிறேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டு, அந்த இடத்தில் இருக்கிறதா என்று கேள்வி கேட்பார்களேயானால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் அதிகமாக பீடித் தொழிலாளர்கள் இருக்கும் பகுதியில் குறிப்பாக இந்நோய் அதிகமாகப் பரவியிருக்கிறது. குறிப்பாக மேலப்பாளையம் பகுதியில் இயங்கிவரும் காசநோய் மருத்துவமனையில் சரியான பராமரிப்பும், மருந்துகளும் இல்லை. உடனடியாக அதை அமைச்சரவர்கள் கவனத்திற்கொண்டு, தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 21

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்த மில்லையென்றாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அரசு ஏற்று அதற்கு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் பகுதியில் இருபதாயிரம் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நலனை முன்னிட்டு திருப்பத்தூரில் ஒரு காசநோய் மருத்துவ மனை அமைக்க அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி ஒவ்வொரு ஊரிலும் தனித்தனி யாக காசநோய் மருத்துவமனை அமைக்க முடியாது. இருக் கின்ற மருத்துவமனையில் காச நோய்ப் பிரிவு ஒன்றை ஏற் படுத்துவதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, தாம்பரத்தில் இருக்கின்ற அந்தக் காசநோய் மருத்துவ மனை பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்றபொழுது காசு உள்ளவர்கள் பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். காசு உள்ளவர்கள் வசதியான இடத்தில் பார்த்துக் கொள்வார் கள். ஆனால் தாம்பரத்திலே உள்ள காசநோய் மருத்துவ மனையில் எவ்வளவு மோசமான நோயாளி சென்றாலும் மாத் திரை கொடுத்து வெளியே அனுப்பிவிடுகிறார்கள், இடமில்லை என்று சொல்லி. ஆகவே, இட வசதியைக் கருதி, ஏழைகள் அதைத்தான் பயன்படுத்தியாக வேண்டும், வேறு ஹாஸ்பிடல் இல்லை. அதை மனதில் வைத்து அதை விரிவுபடுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, காசநோய் காசினால்தான் போகும் என்று தாம்பரத்திற்கு நான் சொல்லவில்லை. மாண்பு மிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கேட்டதற்காக நான் பதில் சொன்னேன். 776 படுக்கை வசதி இப்பொழுது இருக்கிறது, தாம்பரம் காசநோய் மருத்துவமனையில். அதை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு தற்சமயம் அரசிடம் இல்லை என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையில் ஆஸ்டின்பட்டியில் காசநோய் மருத்துவமனை இயங்கி வருகிறது. அதை இன்னும் விரிவு படுத்தி அதிகமான படுக்கை வசதிகள்............



1986 நவம்பர் 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி தாம் பரத்தைப் பற்றியது. தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு சென்டராக கேட்டுக்கொண்டு இருப்பார்கள் என்றால்—தாம் பரத்தைப்பற்றி வேண்டுமானால் கேளுங்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றி கேட்க ஆரம்பித்தால் அமைச்சர் எப்படி பதில் சொல்ல முடியும்?

வினா எண்கள் 131 முதல் 136 முடிய மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

## கோவில்களில் வழிப்பாட்டுக்கு கட்டணம்.

137—(*வினா எண். 3024)—திரு. குமரி அனந்தன் : மாண்பு மிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில்களில் வழிபாட்டுக்கென்று கட்டணம் வசூலிப்பதை நிறுத்திவிடும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்கள் எதிலும் பொது வழியாகச் சென்று வழிபட கட்டணம் வசூலிக்கப்பட வில்லை. பிரத்தியேக அல்லது சிறப்பு வழியில் சென்று கோயி லில் வழிபடுவதற்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதை நிறுத்தும் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் சன்னிதானத்தின் முன்னால் உயர்வு தாழ்வு கற்பிக்கக் கூடாது என்கின்ற அடிப்படையிலும் ஆண்டவன் முன்னால் அனைவரும் சமம் என்ற வகையிலும் கட்டணமின்றி அனைவரும் போவதற்கு அந்த 'க்யூ' என்று சொல்கிறோமே அந்த வகையிலே போவதற்கு மட்டுமே ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்கள் திறந் திருக்கும் எல்லா நேரங்களிலும் தர்மதரிசனம் உண்டு; ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு செய்யப்படவில்லை.

திரு. குமரி அனந்தன் : துணைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே கட்டணங்களே இல்லாமல் எல்லோரும் ஒரே நேரத்தில் போய் வரிசையாக நின்று வழிபடுகிற வாய்ப்பைத் தமிழக அரசு நிலை நிறுத்தினால் மகிழ்ச்சி அடைவேன். அதைப் போல் வருகின்றவர்கள் அத்தனை பேரும் புரிந்து கொள்கின்ற அளவுக்குத் தமிழிலே வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 21

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, தமிழிலே வழிபாடு செய்ய வேண்டுமென்றால் அர்ச்சகர்கள் நிச்சயமாகத் தமிழிலே வழிபாடு செய்வதற்கு உதவுவார்கள்.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் சன்னிதானத்திற்குச் செல்வதற்குக் கட்டணம் வசூலிப்பதையே மாண்புமிகு உறுப்பினரும் மற்றவர்களும் எதிர்க்கும்போது, திருவண்ணாமலை நகராட்சி, திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திற்குச் செல்பவர்கள் தனியாக ஒரு வரியைக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதாக அறிகிறேன். ஜெசியா வரி என்று முகமதியர் காலத்திலே உள்ளதைப்போன்று அவரவர்கள் பகுதியிலே வரி வசூலிக்க ஆரம்பித்தால் அரசின் நிலை என்ன ஆகும், அரசின் கொள்கை என்ன ஆகும்? ஆகவே, அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வேண்டும்.

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி கோயில்களில் சில குறிப்பிட்ட திருவிழாக்களின் பொழுது விசேஷ பிரார்த்தனை செய்ய வரும் மக்களிடமிருந்து திருவண்ணாமலை நகராட்சி போன்ற சில உள்ளாட்சி அமைப்புகள் கட்டணம் வசூலிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று மக்களின் சார்பாக அறநிலையத்துறை உள்ளாட்சித் துறையை வலியுறுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியாக வினா போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

### விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்.

*138—(*வினா எண். 4856)—***திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் எத்தனை விவசாயிகளுக்கு எந்த அடிப்படையில் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது?*

*(ஆ) அதே அடிப்படையில் குத்தகை விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் உண்டா?*



1986 நவம்பர் 21]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, (அ) வேளாண்மை நிலங்களிலிருந்து வரும் வருவாயை மட்டும் ஆதாரமாகக் கொண்ட தகுதி பெற்ற 99,850 சிறு உழவர்களுக்கு இலவச மின்சாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம்.

**திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் குத்தகை விவசாயிகள் அதிகமாக இருக்கிற காரணத்தால், அவர்களுக்கும் அரசு இந்தச் சலுகை அடிப்படையில் மின்சாரம் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்திலே நீண்ட நாட்களுக்கு முன்னால் மின்சாரத்திற்கு மனு செய்தும் ஓராண்டுக்கு மேலாக மின் இணைப்பு கிடைக்காமல் தேங்கியிருக்கிறது. அதற்கும் உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர், குத்தகைதாரர் அல்லாதார் என்ற பாகுபாடு இல்லாமல், தகுதிபெற்ற சிறு உழவர்கள் அத்தனை பேருக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது.

**திரு. மு. இராசாங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குத்தகை விவசாயிகள் மின்சார வாரியத்திடம் மனு செய்யும்போது நிலச் சொந்தக்காரர்களுடைய அனுமதி இருந்தால்தான் மின் இணைப்பு கொடுக்க முடியும் என்று கூறுகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் குத்தகை விவசாயிகள் நிறைய பாக்கி வைத்திருக்கின்ற காரணத்தால், நிலச்சுவான்தார்கள் என்.ஓ.சி. கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, அந்தத் தடையை நீக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன். நேற்று, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க மின்சாரக் கட்டணம், ஒரு குதிரை சக்திக்கு ரூ. 75 என்று இருப்பதை, மீட்டர் ஓடியதைக் கணக்கிட்டு, எது குறைவாக இருக்கின்றதோ அதை வாங்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், எங்காவது அப்படிக் குறிப்பிட்ட குத்தகைதாரர் மின் இணைப்பு கேட்டு, இலவச மின் இணைப்பு கொடுக்க, நில உரிமைதாரருடைய அனுமதி வேண்டுமென்று சொல்வார்களானால் அது பற்றி விசாரித்து, அந்தத் தடையை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1986 நவம்பர் 21

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, இரண்டரை ஏக்கர் நஞ்சை நிலமும் ஐந்து ஏக்கர் புஞ்சை நிலமும் வைத்திருப்போர்களுக்கு இலவச மின்சாரம் என்று முதலிலே அறிவிக்கப்பட்டு, பின்னால் பசு மாடு வளர்த்தல், பீடி சுற்றுதல் போன்ற சிறு தொழிலிலே ஈடுபட்டிருந்தால் கூட அது மறுக்கப்படுகிறது. இதனை தவிர்ப்பதற்காக வேலையிலே ஈடுபட்டிருப்பவர்கள் கூட அங்கேயிருக்கிற அதிகாரிகளிடம் அவர்கள் வேலையில் இல்லை என்ற ஒரு நற்சான்றிதழை வாங்குகிறார்கள். அதிலே பல ஏமாற்றுகள் நடக்கின்ற காரணத்தாலே, ஐந்து ஏக்கர் புஞ்சையோ, இரண்டரை ஏக்கர் நஞ்சையோ இருந்தாலே இலவச மின்சாரம் என்று முதற்படியாக நாம் அறிவிக்க முடியாதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், மொத்தம் 2.38 இலட்சம் உழவர்கள் இருக்கிறார்கள். அதிலே சிறு உழவர்கள் மாத்திரம் சுமார் 1 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல், இந்த விதியைத் தளர்த்தி அவர்களுக்கு வேறு வருமானம் இருந்தாலும் கொடுக்கலாம் என்று சொல்வதற்கு இப்பொழுது கொள்கையில் இடம் இல்லை.

திரு. எஸ். ராசாராமன் : துணைத் தலைவரவர்களே, 1985 ஆம் ஆண்டு மனு செய்தும் கூட இதுவரையில் மின்சாரம் சிறு விவசாயிகளாக இருந்தாலும் பெரு விவசாயிகளாக இருந்தாலும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அது மட்டுமல்லாமல், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மூன்று ஆதீனங்களுக்குச் சொந்தமான நிலம் அதிகமாக இருக்கிறது. அந்த நிலங்களுக்கு ஆதீனத்தார் என்.ஓ.சி. கொடுக்காத காரணத்தால் அங்கே இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு அறியுமா ? அப்படி என்றால் இந்தத் தடையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, தகுதி பெற்ற சிறு உழவர்களுக்கு விரைவில் மின் இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். பெரிய உழவர்களைப் பொறுத்த வரையில் முன்னுரிமைப் பிரகாரம் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கும் துரிதமாக மின் இணைப்பு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. மா. மணிமாறன் : துணைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடிய விவசாயிகள் பம்பு செட்டைப் பயன்படுத்துவது ஜூன் அல்லது ஜூலை மாதம் மட்டும் தான். மற்ற மாதங்களில் எல்லாம் அந்த பம்பு செட்டுகள் ஐடிலாக, பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன.



1986 நவம்பர் 21]

அரசாங்கத்தின் கொள்கை காரணமாக ஒரு ஹார்ஸ் பவர் மோட்டாருக்கு 75 ரூபாய் ஃபிளாட் ரேட் அடிப்படையில் கட்டணம் வாங்கப்படுகிறது. சிறு விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்தது போல தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யாவிட்டாலும் மீட்டர் அளவுப்படி கட்டணம் வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே எடுக்கப்பட்ட கொள்கை முடிவின் அடிப்படையில் ஃபிளாட் ரேட் 75 ரூபாய் வசூல் செய்யப்படுகிறது. அப்படி இல்லாமல் பயன்படுத்துகின்ற மின்சாரத்தைப் பொறுத்து, மீட்டர் அளவைப் பார்த்து, அதற்கு ஏற்றபடி கட்டணம் வசூல் செய்வது அரசாங்கத்தின் கொள்கை முடிவாக வரவேண்டும். அது பற்றி அமைச்சரவை தான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. வே ரா. ஜெயராமன் : துணைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் குழாய்க் கிணறுகளுக்கு உடனடியாக மின்சார இணைப்பு கொடுக்கப்படுகிறது. அதைப் போன்று மற்ற மாவட்டங்களிலும் முன்னுரிமை அளித்து, குழாய்க் கிணறுகளுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த மாதிரி உத்தேசம் இல்லை.

திரு. த. பழனி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறு விவசாயிகளுக்கும் பெரு விவசாயிகளுக்கும் மின்சார இணைப்பு கொடுப்பது பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே விவசாயிகள் மின் இணைப்புப் பெற்றிருந்தாலும் 2.5 ஏக்கருக்குக் குறைவாக 75 சென்ட், 80 சென்ட் நிலம் வைத்திருக்கிற சிறிய விவசாயிகளுக்கும் 75 ரூபாய் கட்டணம் வசூல் செய்யப்படுவதால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்த சிறு விவசாயிகளுக்கு, அவர்கள் சிறு விவசாயிகள் என்று வட்டாட்சியர் சான்றிதழ் கொடுத்தும், மின் வாரியம் அவர்களுக்கு சிறு விவசாயிகளுக்குள்ள சலுகைகளை அளிக்க மறுப்பதாக குற்றச்சாட்டு இருக்கிறது. அதை அரசு போக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் சிறு உழவர் என்று சான்றிதழ் வழங்கிய பிற்பாடு மின்சாரத் துறையினர் பரிசோதனை செய்

கின்ற போது அவர் சிறு விவசாயி அல்ல, சிறு விவசாயிகளுக்குள்ள தகுதி பெற்றவர் அல்ல என்று கண்டுபிடித்த பின்னால், அவருக்கு அந்தச் சலுகைகள் வழங்கப்படாமல் இருந்திருக்கும். சான்றிதழ் பிரகாரம் தகுதி பெற்றிருந்தால் அவருக்கு அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கும்.

திரு. கோ. வீரய்யன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது வரையில் 98 ஆயிரத்திற்கு அதிகமான சிறு விவசாயிகளுக்கு இலவசமாக மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பட்டா இருக்கக் கூடிய சிறு விவசாயிகளுக்குத் தான் அப்படி கொடுக்கப்படுகிறது. நிலப் பட்டா இல்லாத குத்தகை விவசாயிகளுக்கு, ஏழை விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு என்.ஓ.சி. கொடுக்காவிட்டாலும் குத்தகைப் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு இருந்தால், அதை அடிப்படையாகக் கொண்டு, இலவச மின்சாரம் வழங்கப்படுமா ? மேலும் ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல் துணைக் கேள்விக்கே இதற்கான பதில் சொல்லப்பட்டு விட்டது. கேட்ட கேள்வியை மீண்டும் கேட்க வேண்டாம்.

திருப்பதியில் தமிழக அரசு கல்யாண மண்டபம்.

139—(*வினா எண். 8173)—திருமதி டி. யசோதா : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பதியில், தமிழ்நாடு அரசு சார்பில் கல்யாண மண்டபம், தங்கும் விடுதி கட்ட அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலிருந்து திருப்பதிக்கு ஏராளமான பயணிகள் செல்கிறார்கள். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு அங்கே திருமண மண்டபங்கள், ஓய்வு அறைகள் அந்தந்த மாநிலத்தின் சார்பில் கட்டப்பட்டிருக்கின்றன



கர்நாடக அரசு கூட அங்கே கட்டியிருக்கிறது. தமிழ்நாட்டிற்கு வடவேங்கடம் எல்லை என்ற முறையில் ஒரு காலத்தில் திருப்பதி தமிழ்நாட்டோடு இருந்தது. இப்போது ஆந்திர மாநிலத்தில் இணைந்திருந்தாலும் தமிழ்நாட்டின் சார்பாக எழிலான ஒரு கட்டிடத்தை அங்கே கட்ட அரசு ஏன் முன் வரக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குத் தேவையில்லை என்பதனால் தான் கட்ட முன் வரவில்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமலை-திருப்பதி தேவஸ்தானத்தைச் சார்ந்தவர்கள் என்னுடைய தொகுதியில் உள்ள குற்றாலத்திலே 10 இலட்ச ரூபாய் செலவிலே யாத்ரீகர்கள் விடுதி ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள். அதுபோல திருப்பதி செல்கிற யாத்ரீகர்களின் வசதிக்காக, தமிழக அரசின் சார்பாக ஒரு யாத்ரீகர்கள் விடுதி கட்ட அரசு முன் வருமா? அல்லது இதை என் வேண்டுகோளாகவே எடுத்துக் கொண்டு செயல்பட அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பதி தேவஸ்தானம் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களின் தொகுதியில் மாத்திரம் அல்ல, தமிழ் நாட்டில் வேறு எங்காவது கேட்டால் கூட திருப்பதி தேவஸ்தானம் கட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. அவர்களே நமது நாட்டில் கட்டிக் கொடுக்க தயாராக இருக்கிற போது, தேவையிருக்கிறது என்று உணர்ந்தால் அவர்கள் எங்கு வேண்டுமானாலும் கட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அங்கே எல்லாவிதமான வசதிகளையும் செய்து தருவதாக தேவஸ்தானமே கூறுகிறபோது, நாம் வேறு தனியாக கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

[1986 நவம்பர் 21

**நிலக்கரி விலை உயர்வினால் மின் உற்பத்தி செலவு அதிகரிப்பு.**

*140—(*வினா எண். 8414)*—**திரு. கு. ரமணி :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் மத்திய அரசு நிலக்கரி விலையை உயர்த்தி உள்ளதால் மின் வாரியத்திற்கு அனல் மின் நிலையங்களில் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உயர்த்தப்பட்ட நிலக்கரி விலையின் அடிப்படையில், 1985-86 ஆம் ஆண்டு, சனவரி 1986 முதல் மார்ச்சு 1986 முடிய தமிழ்நாடு மின் வாரியம் நிலக்கரி வாங்குவதற்கு அதிகமாகச் செலவிடும் தொகை ரூ. 243.27 இலட்சம் ஆகும்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கங்கள் பூராவும் தேசிய மயமாக்கப்பட்டவை. இங்கே நம்முடைய மின்சார வாரியத்தினால் உற்பத்தி பண்ணக்கூடிய மின்சாரமும் தேசியமயமாக்கப்பட்ட மின்சாரம் தான். ஒவ்வொரு தரமும் நிலக்கரியின் விலை உயரும் போது அதிகமாக செலவு ஏற்படுகிறது. இப்போது 243 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. (குறுக்கீடு) லட்சம் தானா சரி. 2 கோடியே 43 லட்சம் செலவழிக்கப்பட்டது. இப்படி நிலக்கரியின் விலை ஏறிக்கொண்டே போவது என்பது அப்பளு முழுவதும் ஜனங்கள் தலையில்தான் போய் விடியும். ஆகவே, தேசிய மயமாக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்திலிருந்து இன்னொரு தேசிய மயமாக்கப்பட்ட ஸ்தாபனத்திற்கு சப்ளை பண்ணும் பொருள்களுக்கு, பெருத்த லாபத்தை எதிர்பார்க்காமல், ஒரே நியாயமான விலையில் சப்ளை பண்ண வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய அரசாங்கம் வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு ஏற்ப எப்படி சிமெண்ட், ஸ்டீல், ஆயில் போன்ற பொருள்களுக்கு ஒரே விதமான விலை இந்தியா பூராவும் இருக்கின்றதோ அதே போன்று நிலக்கரிக்கும் இந்தியா பூராவும் இருக்க வேண்டும்.



1986 நவம்பர் 21]

அதுவும் குறிப்பாக தேசியமயமாக்கப்பட்ட, தமிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களுக்கு, நிலக்கரி வழங்குவதிலே, இந்தக் கொள்கையை கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலக்கரி, எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் அடிக்கடி உயர்வதன் காரணமாக, மாநில அரசுகள் தங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் நிதிப் பற்றாக்குறைக்கு ஆளாக்கப்படுகின்றன. ஆகவே அப்படி நிலக்கரி போன்ற இன்றியமையாத பொருள்களின் விலையை மாற்றும் போது, மைய அரசு மாநில அரசுகளை கலந்து தான் செய்ய வேண்டும் என்று நமது அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? அத்தோடு இப்படிப்பட்ட பாதிப்பு ஏற்படுகிறபோது, மைய அரசிடம் இருந்து மானியமோ அல்லது வேறு வகையில் சலுகையோ பெற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரம் போன்ற வற்றை உற்பத்தி செய்வதற்கு தேவையான இடு பொருள் அல்லது மூலப் பொருள்கள்—அதாவது நிலக்கரி போன்றவை— வழங்கப்படுவதற்கு சப்சிடி வழங்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களிலேயிருந்து நிலக்கரி கொண்டு வர டன் ஒன்றுக்கு 350 ரூபாய்க்கு மேல் போக்குவரத்துச் செலவே ஆகிறது என்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, எப்படி தமிழ்நாட்டில் சிமெண்டிற்கும் இரும்புக்கும் ஒரே விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ, அது போல வட மாநிலங்களிலிருந்து நிலக்கரியைக் கொண்டு வரும்போதும் அதற்கு ஒரே விலையை நிர்ணயித்துக் கொண்டு வர மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதற்கு ஏற்கனவே பதில் சொல்லியாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** ஏற்கனவே இதுபற்றி விடையளித்தாகிவிட்டது.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான விலையை, அதுவும் குறைந்த நியாயமான விலையில் ஏற்படுத்திக் கொண் டால் நல்லது என்ற கருத்தை வற்புறுத்தி [illegible]

அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அப்படி நாடு முழுவதிலும் ஒரே மாதிரியான விலை நிர்ணயித்தாலும் கூட, பீகார், மேற்கு வங்காளம் போன்ற இடங்களில் இருக்கும் படியான கரியை இங்கே கொண்டு வந்து சேர்ப்பதற்கு அதுவும் கன்னியாகுமரியின் கடைசி வரையில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு நிச்சயமாக பெரும் அளவுக்கு அதனுடைய செலவு இருக்கும். ஆகவே தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இந்த டிஸ்டன்ஸ் கருதி—நம்முடைய தவறில்லை, நாடு பெரியதாக இருப்பதால் வரக்கூடிய நிலை அது—கன்சஷன் ரேட்டில் நமக்கு நிலக்கரியைத் தரும்படி எந்தவிதத்திலாவது மத்திய அரசை மேலும் வற்புறுத்துவதற்கு மாநில அரசு முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதுபற்றி குறிப்பிட்டு தமிழ்நாடு நிலக்கரி உற்பத்தி செய்யப்படும் சுரங்கத்திலிருந்து அதிக தூரத்தில் இருக்கிறது என்பதால் 'பிரைட் சார்ஜிற்கு' கன்சஷன் கொடுக்க வேண்டுமென்று மாநில அரசு வலியுறுத்தி இருக்கிறது. மேலும் இதுபற்றி வலியுறுத்தும்.

திரு. ஏ. எல். ரவீந்திரன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையை அவைக்குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

மேட்டூர் அனல் மின் நிலையம்.

141—(*வினா எண். 8701)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அனல் மின் நிலையம் உற்பத்தியை எப்போது தொடங்கும் ?

(ஆ) அதன் உற்பத்தி அளவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நான்கு பிரிவுகளின் இயக்கம் முறையே டிசம்பர் 1986, ஜூன் 1987, டிசம்பர் 1988 டிசம்பர் 1989 ஆகிய காலங்களில் இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.





(ஆ) 210 மெ. வா. உற்பத்தித் திறன் கொண்ட ஒவ்வொரு பிரிவும், ஆண்டுக்கு 1,100 மில்லியன் யூனிட் வீதம் மொத்தம் 4,400 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யும்.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முடிவுறும்போது இந்தத் திட்டத்தினுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவாக இருக்குமென்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல இயலும்.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு சென்னூரிலிருந்துதான் நிலக்கரி வர வேண்டும். ஆனால் அந்தச் சுரங்கம் இன்னும் தன்னுடைய உற்பத்தியைத் தொடங்காத நிலையில் சிங்கரேணியிலிருந்து எண்ணூர் மின் நிலையத்திற்கு வருகிற நிலக்கரி இப்போது மேட்டூருக்குத் திருப்பியனுப்பப்படுகிறது. எனவே, சென்னூரிலிருந்து எப்போது நிலக்கரி வரவிருக்கிறது என்ற விவரத்தையும், அப்படி வருகிற போது, அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த முழு திறனையும் இந்த அனல் மின் நிலையம் எந்த ஆண்டில் அடையும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் ; துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சென்னூர் என்ற சுரங்கத்திலிருந்து நிலக்கரி இந்த வருடம் டிசம்பர் மாதம் துவக்கவிருக்கிற மேட்டூர் அனல் மின் நிலையம் முதல் யூனிட்டுக்கு வழங்கப்படும் என்று மத்திய அரசில் அறிவித்தார்கள். ஆனால் இதுவரையில் அந்த சென்னூர் சுரங்கமே அபிவிருத்தி செய்யப்படவில்லை. தமிழ் நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான மொத்த நிலக்கரி அல்லது வேறு மாநிலங்களுக்குத் தேவையான நிலக்கரி ஆகியவற்றையும், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிற நிலக்கரியின் அளவையும் பார்த்தால் மிகப் பெரிய அளவிற்கு இடைவெளி இருக்கிறது. 'கோல் இந்தியா' இது சம்பந்தமாக ஒரு நல்ல திறனுடைய திட்டம் தீட்டினால் ஒழிய அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை இந்தியாவில் 'கோல் இந்தியா' வழங்க முடியாது. ஒரே ஒரு வாய்ப்பு, இந்திய சர்க்கார் இந்தியாவின் தென் பகுதியில் இருக்கும் தமிழ் நாட்டிற்கு ஆஸ்திரேலியா போன்ற இடங்களிலிருந்து வரக்கூடிய உயர்தர ஸ்டீமிங் கோலை தருவிப்பதற்கு அனுமதி வழங்குவதுதான்.

**வேலையற்ற படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடனுதவி.**

142—(*வினா எண் 7494)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 25,000 கடன் உதவி எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) இதில் எஸ்.எஸ்.எல்.சி. தவறியவர்களையும் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் 1983—84-ஆம் ஆண்டில் 22,162 நபர்களுக்கும், 1984—85 ஆண்டில் 22,500 நபர்களுக்கும் கடன்கள் வழங்கப் பட்டுள்ளன. 1985—86-ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்தின் கீழ் 18,100 நபர்களுக்கு கடன்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டு, இந்த இலக்கு மிஞ்சப்பட்டு 18,722 நபர்களுக்கு கடன் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

(ஆ) பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டம் மத்திய அரசினால் தயாரிக்கப்பட்டதாகும். இத்திட்டம் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்குமான ஒரு பொதுத் திட்டம், இத்திட்டத்தின்படி உதவிபெற குறைந்த பட்சம் எஸ்.எஸ்.எல்.சி. தேறியிருக்க வேண்டும் என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. எஸ். எஸ். எல். சி. தவறியவர்களையும் இத்திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ள மத்திய அரசு ஆணை ஏதும் வழங்கவில்லை.

(முற்பகல் 10—10)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தை இந்தியத் திருநாட்டுக்கே மத்திய அரசு வழங்கியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் சென்னை மாநகரத்திலே இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட வில்லை. இப்படி ஒதுக்கப்பட்ட நிலைக்கு என்ன காரணம்? சென்னை மாநகரத்திற்கு இந்த சுய வேலை வாய்ப்பின் கீழ் கடன் வழங்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசின் இந்தத் திட்டம் அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான ஒன்று என்ற காரணத்தால் 1981—ஆம் ஆண்டு மக்கள் கணக்குப்படி 10 இலட்சம் பேர்களுக்கு மேல் உள்ள நகரங்களுக்கு இது பொருந்தாது என மைய அரசு ஆணையிட்டுள்ளது. ஆகவே சென்னை, அந்த வகையில் பொருந்தவில்லை.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுய வேலை வாய்ப்பின் கீழ் வழங்க படும் தொகையை அதிகரிக்கச் செய்யவும், எஸ்.எஸ்.எல்.சி. தவறியவர்களுக்கும் இந்தக் கடன் உதவி கிடைக்கின்ற வகையில் மைய அரசுக்கு, மாநில அரசு பரிந்துரை செய்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கும்.

**ஆற்காடு வட்டம், திமிரி ஒன்றியம், வேம்பி கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு ஆரம்பப் பாடசாலை.**

143—(*வினா எண் 9342)—திரு. த. பழனி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டம், திமிரி ஒன்றியம், வேம்பி கிராமத்தில் ஆதி திராவிட ஆரம்பப் பாடசாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு வட்டம், திமிரி ஒன்றியம், வேம்பி கிராமத்தில் ஆதி திராவிடர் நலத்துறையினால் ஆதி திராவிடர் ஆரம்பப் பாடசாலை ஏற்படுத்துவது அரசின் செயற் குறிப்பில் இல்லை.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் ஆதி திராவிடத் துறையால் நடத்தப்படுகின்ற ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை இருக்கின்றன? அதற்காக அரசு செலவிடுகின்ற தொகை எவ்வளவு? அதிலே எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள்? எத்தனை மாணவர் விடுதிகள் நடத்தப்படுகின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 21

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட பழங்குடி மக்களின் நலத் திற்காக நடத்தப்படுகின்ற பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் 994, நடுநிலை பள்ளிகள் 70, உயர்நிலைப் பள்ளிகள் 50, மேல்நிலைப் பள்ளிகள் 17, ஆக மொத்தம் 1,131 பள்ளிகள் நடத்தப்படு கின்றன. அதற்காக ஆண்டுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் செலவழிக்கின்ற தொகை, எந்த ஆண்டும் இல்லாமல் இந்த ஆண்டு கல்விக்காக 28 கோடியே 9 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவிடப்படுகிறது.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த வேம்பி கிராமத்தில் ஆதி திராவிட நலப் பள்ளியை அமைத் துத் தருவதாகவும், கலவையிலே ஆதி திராவிட மாணவர் விடுதியை அமைத்துத் தருவதாகவும் உறுதி அளித்தார்கள். ஆனால் இந்த ஆண்டும் அவர்கள் அதைச் செயல்படுத்தவில்லை. எனவே அடுத்த ஆண்டாவது அதற்கான உத்தரவாதத்தை அரசு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிட நல அதிகாரி மூலமாக இங்குள்ள இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப் பப்பட்டு அது பரிந்துரை செய்யப்படுமானால் அதன் மேல் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுடைய நலனைக் கருதி, அரசு மாவட்டந் தோறும் அந்த மக்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளி களுக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்கிறது. அதற்காக மாவட்ட அளவில் ஏதாவது ஒரு கமிட்டியை, நான்-அபிசியல்ஸ் கமிட்டியை அமைக்கும் உத் தேசம் இருக்கிறதா? அப்படி இல்லை என்றாலும் இனிமேல் அமைக்க உத்தேசிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடத் துறையின் மூலமாக மாவட்டக் கமிட்டி அதாவது டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் கமிட்டி என்று 9 மாவட்டங்களுக்கு போடப்பட்டு இருக்கிறது. இன்னும் பல மாவட்டங்களுக்கு அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக விவரங்கள் கேட்கப்பட்டு இருக்கின்றன. அவர்கள் நலம் காக்கின்ற வகையில் இந்தக் கமிட்டிகள் செயலாற்றிக் கொண்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்குச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1986 நவம்பர் 21]

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட குழந்தைகள் தங்குகின்ற விடுதிகள் சுகாதாரக் கேடாக இருக்கின்றன. அங்கே இருக்கின்ற விடுதிக் காப்பாளர் கள் சரியான முறையில் அந்த விடுதியைப் பராமரிப்பதில்லை. எனவே இதில் எல்லாம் உடனடியாக அரசு கவனம் செலுத்தி அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமா? எடுப்பதோடு மட்டும் அல்லாமல், ஆதி திராவிடர்கள் பள்ளிகளுக்கும் ஆதி திராவிடர்களின் முன்னேற்றத்திற்கும் மாவட்ட வாரியாக கமிட்டி அமைத்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் இதுவரை அமைக்க வில்லை. அரசு உடனடியாக அதை அமைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறை மூலம் நடத்தப் படுகின்ற ஹாஸ்ட்டல்களைப் பற்றி இங்கே சொன்னார்கள். ஒட்டு மொத்தமாக அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். தமிழ கத்தில் 750 ஹாஸ்ட்டல்கள் இருக்கின்றன. எந்த இடத்தில் சரியாக செயல்படவில்லை என்று சொல்வார்களானால் அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும் தஞ்சை மாவட்டத் தில் இந்த ஆதி திராவிட நலத்துறை மூலமாக கமிட்டி போட வில்லை என்று சொன்னார்கள். அதுபற்றிய விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அனுப்பப்பட்டு இருக்குமானால் அதன் மீது அரசு நடவடிக்கை எடுத்து உடனடியாக போடுவதற்கு ஆவன செய்யும்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவை தலை நாயகர் அவர்களே, ஆதி திராவிடர் அமைப்பைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளி வடகரையில் என்னுடைய தொகுதியில் நடைபெற்று வரு கிறது. அங்கே இருக்கின்ற விடுதி படிப்பதற்கு சரியான நல்ல இடமாக இல்லை. குடிப்பதற்கு கூட தண்ணீர் இல்லை, குளிப்பதற்கும் தண்ணீர் இல்லை. இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சருக்கு முறையீடுகள் வந்து இருக்கின்றனவா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் மீது இதுவரை முறையீடுகள் எதுவும் வரவில்லை. இனிமேல் வந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்.

திரு. வே. ரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய வரலாற்றுச் சிறப்பு உடைய சென்னை உயர்நீதி மன்றத்தில் நேற்றைய தினம் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். காலியாக இருக்கின்ற 6 நீதிபதிகள் பதவிகளை நிரப்ப ஒரு குறிப்பிட்ட வகுப்பினரையே நியமனம் செய்ய....(மணியடிக்கப் பெற்றது).

### (ஆ) செங்கற்பட்டு மாவட்டத்தில் பூச்சிகளால் பயிர்கள் பாதிப்பு.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் மழை இல்லாததால் 8 தாலுக்காக்களுக்கு மேல் வறட்சி பெரும் பகுதி உச்சக் கட்டத்தை அடைந்து இருக்கிறது. குறிப்பாக பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் தாலுக்காவில் பம்புசெட் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு இருக்கின்ற பயிர்களை எல்லாம் இன்றைக்குக் கதிர் வரும்போது கழுத்தை வெட்டுகின்ற குருத்துப் பூச்சிகள் பயிரை அழித்துக் கொண்டு இருக்கின்றன. அரசு தலையிட்டு அதை......

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குருத்து பூச்சி வந்து இருப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாய இலாகா மூலமாக அந்தப் பூச்சிகளை அழித்து பயிர் பாதுகாப்பு செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### (இ) ஆழ்வார் திருநகரி பகுதியில் பெட்ரோல் ஊற்று இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவை சபாநாயகர் அவர்களே, ஆழ்வார்திருநகரி யூனியனில் ராஜகிரி பஞ்சாயத்திலே திருவிலையா வட்டம் என்ற இடத்திலே பெட்ரோல் ஊற்று இருப்பதாக இப்போது செய்திகள் வந்து இருக்கின்றனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பார்வையிட்டு எங்களுக்கு வரும் திங்கட்கிழமையாவது அதைப் பற்றிய தகவலை......





மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்வார் திருநகரில் பெட்ரோல் ஊற்று கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் அதுபற்றிய தகவல் மத்தியப் பேரரசுக்குத்தான் தெரியும், அவர்களிடமிருந்து தகவல் பெற்று சபைக்கு அறிவிக்க முயற்சிக்கிறேன். (குறுக்கீடு.)

### (ஈ) அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படுவது.

திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் என்னுடைய தொகுதியில் உள்ள கொருக்குப்பேட்டை பாரதி நகரில் தீ பற்றி எரிந்து அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளம் கொண்டு உடனடியாக நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நேற்றைய தினம் பட்டா கொடுக்கும் போது சட்டமன்ற உறுப்பினராகிய நான் காலை முதல் மாலை வரை இங்கேயே இருந்தேன், எந்தவித தகவலும் எனக்குத் தெரிவிக்காமல் மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்களும், திரு. அங்கமுத்து அவர்களும் அங்கே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அறைக்கு வாருங்கள். அது என்னுடைய வேலை இல்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்களுக்காக நான் தீர்த்து வைக்கிறேன்.

திரு. எஸ். வேணுகோபால் : பட்டா கொடுத்து முடிந்து ஆகிவிட்டது. நாங்கள் * * மிகவும் விசுவாசமாக இருந்தும் பட்டா கொடுக்கும்போது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அறைக்கு வாருங்கள். நான் தீர்த்து வைக்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. எஸ். வேணுகோபால் : இதுமுறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் நான் ஒன்றும் சொல்லுவதற்கு இல்லை. நான் என்ன சொல்ல முடியும்?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

### 3. உறுப்பினர்கள் அரசியல் அமைப்புச் சட்டப் பிரதியை எரித்தது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக மிக முக்கியமான பிரச்சினை குறித்து தங்களுடைய விளக்கத்தையும் தீர்ப்பையும் எதிர் பார்த்து இந்தக் கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

இந்த அவையிலே சென்னையைச் சேர்ந்த 5 மாண்புமிகு உறுப்பினர்களும், கோவையைச் சேர்ந்த ஒரு மாண்புமிகு உறுப்பினரும் பொது இடத்திலே அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய பிரதியை எரித்ததால் சிறை செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பதாக இந்த அவைக்குத் தாங்கள் அறிவித்தீர்கள். Prevention of insult to National Honour Act——படி பொது இடங்களில் தேசியக் கொடியையும் அரசியலமைப்புச் சட்டப் பிரதியையும் அவமதிப்பு செய்பவர்களுக்கு 3 ஆண்டுக்காலம் சிறைத் தண்டனையும், வரையறையற்ற ஒரு அபராதமும், அல்லது இரண்டும் சேர்த்து கொடுக்கலாம் என்று சட்டத்தில் விதிகள் ஒரு புறமிருக்க, ஒருவர் தேர்தலில் போட்டியிட விரும்புவாரேயானால், வேட்பு மனு தாக்கல் செய்தவுடனே அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் 3-வது பாகம், 7-வது பிரிவின் 1-வது உட்பிரிவின்படி ——அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரகாரம் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டும். தேர்தலில் வெற்றிபெற்று, இந்த அவைக்கு வந்த பின்னாலே, அவை உறுப்பினராகத் தொடர்ந்து செயலாற்றுவதற்கு முன்னால் இதே அவையிலே பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்திலே 3-வது பாகத்திலே, 7-வது பிரிவிலே 2-வது உட்பிரிவின் கீழே, பற்றுறுதியையும், நம்பிக்கையையும் கொண்டு இருப்பேன் என்ற உறுதிமொழியை எடுத்துக்கொண்டதற்குப் பின்னர் தான் இந்த அவையிலே உறுப்பினராகச் செயலாற்றுவதற்குத் தாங்கள் அனுமதிக்கிறீர்கள். நான் உண்மையிலேயே, தெரிந்து கொள்ள விரும்புவது, இந்த 6 உறுப்பினர்களும் அரசியலமைப்புச் சட்டத்தை எரித்த காரணத்தாலே அவர்கள் இந்த அவையிலே தொடருகிறார்களா? அவர்களை இங்கே பணியாற்றுவதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களா, அல்லது மீண்டும் அவர்கள் இந்த அவைக்கு வந்து பணியாற்ற வேண்டுமென்றால் அரசியலமைப்புச் சட்டப் பிரகாரம், மீண்டும் அவர்களை பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளச் சொல்லப் போகிறீர்களா என்ற விளக்கத்தை உங்களிடமிருந்து நான் அறியவிரும்புகிறேன்.

**THIRU J. HEMACHANDRAN :** Mr. Speaker, Sir, yesterday in Parliament the Hon. Law Minister has given a reply on this.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே நான் பதில் சொல்வதற்கு ஒன்றுமில்லை. அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 188-ஐ மட்டும் படித்து விடுகிறேன்.

"Every member of the legislative Assembly or the egislative Council of a State shall, before taking his seat, make and subscribe before the Governor, or some person appointed in that behalf by him, an oath or affirmation according to the form set out for the purpose in the Third Schedule."

Third Schedule—I,—so and so—having been elected (or nominated) a member of the legislative Assembly (or legislative Council), do swear in the name of God/solemnly affirm, that I will bear true faith and allegiance to the Constitution of India as by law established, that I will uphold the sovereignity and integrity of India and that I will faithfully discharge the duty upon which I am about to enter என்று இருக்கிறது. இது தான் பதிலாக சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) இங்கே 234 உறுப்பினர்களுக்கும் நான் சபாநாயகராக இருக்கிறேன். ஒரு உறுப்பினர் ஆலோசனை கேட்டு, இன்னொரு உறுப்பினருக்கு பாதகம் ஆன விளைவை நான் இங்கே விளைவிக்கத்தயாராக இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** என்னுடைய ஆலோசனையைக் கேட்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** பதவிப் பிரமாணத்திற்கு மாறாக நடந்தால் என்ன அர்த்தம் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையைச் சார்ந்த உறுப்பினர்கள் போராட்டத்திலே ஈடுபட்டார்கள். அவர்கள் சில சட்டப் பிரிவுகளின்படி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எந்தெந்த பிரிவின்படி கைது செய்யப்பட்டார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் படித்துக் காண்பித்தார்கள். அதன்படி அவர்கள் சிறையிலே 15 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்தப் பிரிவுகளின் கீழ் வழக்கு நடைபெறும். வழக்கிலே அந்த உறுப்பினர்கள் எல்லாம் வாதாட இருக்கிறார்கள். வாதாடியப்பிறகு என்ன நிலைமை என்ற தீர்ப்பு வரும். தீர்ப்பு வருவதை பொறுத்து அதன்படி அவையோ மற்றவர்களோ ஒரு 'முடிவு எடுக்க வேண்டி வருமே தவிர, அதற்கு இடையிலே என்ன நிலைமை என்று நாம் எந்த முடிவும் எடுப்பதற்கில்லை. ஆக தீர்ப்பைப் பொறுத்து அந்த செக்ஷனைப் பொறுத்து, அவாகள் என்ன வாதாடுகிறார்கள், நீதிமன்றம் என்ன தீர்ப்பு அளிக்கிறது என்று நிலைமை வரும்வரையில் நாம் எந்த முடிவையும் எடுப்பதற்கில்லை. அது வந்ததற்குப் பிறகுதான் நாம் முடிவெடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பதில் சொல்லக் கூடிய அளவிலே இங்கே கேட்க வேண்டாம் என்று நான் சொல்லியிருக்கிறேன்.......................................... ........ (குறுக்கீடு) எல்லா கால் அட்டென்ஷன்களையும் அப்ஜக்ட் பண்ண சொல்லி விட்டேன். ஒன்றுக்குக் கொடுத்தால் இன்னொன்று வரும்........ (குறுக்கீடு).

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஈ) அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படுவது —தொடர்ச்சி.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுடைய உரிமைப் பிரச்சினை. நேற்று மாலை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றிருக்கிறது. அது 19–11–1986 முதல் 25–11–1986 வரை நடைபெறுகின்ற ஒரு விழாவிற்கான அழைப்பு. ஆனால் அது 20-ந்தேதி மாலைதான் உறுப்பினர்களுக்கும் கிடைக்கின்றது, என்றால் அந்த அழைப்பு அனுப்புவதன் நோக்கம் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவை நடவடிக்கை அல்ல. இது சம்பந்தமாக அமைச்சரிடம் வெளியே கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : உறுப்பினர்களுடைய உரிமைப் பிரச்சினையாகத்தான் நான் இதை கிளப்புகிறேன். அவை நடவடிக்கை என்று நான் கேட்கவில்லை.

### (உ) தாய்த் தமிழகத்துடன் இணைய போராடிய தியாகிகளுக்கு பென்ஷன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்த் தமிழகத்துடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைய வேண்டும் என்பதற்காகப் போராடிய தியாகிகளுக்குப் பென்ஷன் வழங்க வேண்டும் என்கின்ற விதத்தில் அவர்களுக்கு எமர்ஜென்சிக்கு முன்பாக 1976 வரைக்கும் வழங்கப்பட்டு வந்த பென்ஷன், எமர்ஜென்சி டிக்ளேர் ஆன பிறகு நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. அதை மீண்டும் வழங்க வேண்டுமென்று.... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் அனுமதி பெறவில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் வந்த போது நீங்கள் இல்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள். இன்று ஒரு நாள் தான் பாராளுமன்ற துணை சபா நாயகர் அவர்களுடைய திருமணத்திற்குச் சென்று விட்டு வந்தேன். அது கூட வேண்டாம் என்றால் இனி அதுவும் போகவில்லை. வேறென்ன செய்வது? கவனத்தை ஈர்த்தாகி விட்டது. போதும். நீங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் இதைத் தெரிவித்து இருப்பீர்களானால் அவர்கள் நிச்சயமாக ஒரு பதிலைச் சொல்வதற்கு வந்திருப்பார்கள். தீடீரென்று எழுப்பும் போது அவர்களும் பதில் சொல்ல முடியாது............ (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் ஒரு முறையாகக் கேட்க வேண்டும், கேள்வியாகக் கேட்க வேண்டும். குறுகிய காலக் கேள்வியாக கேட்க வேண்டும், கேள்வியை முறையோடு கேட்க வேண்டும். திடீரென்று கேட்கக் கூடாது. ........ (குறுக்கீடு) இந்தப் பேரவையில் கேட்கக் கூடாது.

## 3. உறுப்பினர்கள் அரசியலமைப்புச் சட்டப் பிரதியை எரித்தது —தொடர்ச்சி.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் விருப்பப்பட்டு, சபையில் எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்கு அனுமதி கொடுத்து அது பத்திரிகைக் குறிப்பிலே வந்துவிடும். நம்முடைய முன்னவர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களும் இங்கே பதில் சொல்லி விட்டார்கள். ஆனால் இங்கே, இந்தச் சட்டமன்றத்திலே இப்பொழுது இல்லாமல் சிறையில் இருக்கக் கூடிய சட்ட மன்ற உறுப்பினர்கள் சார்பாக அவர்கள் நிலமையை விளக்கிச் சொல்வதற்கு இயலாது. ஏனென்றால் அவர்கள் சம்பந்தமான ஒரு கேள்வி.......... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பதில் சொல்லவில்லை. பாதிப்பு ஏற்படக் கூடிய அளவுக்கு ஒரு இடமே கொடுக்க வில்லை. அதை நாம் விளக்க வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : சார் ஒரு நிமிடம். ஆகையினால் தாங்கள் ஒன்றும் சொல்லாமல் விட்டு விட்டீர்கள். முன்னவர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்த மட்டில் எங்கள் கட்சியின் சார்பாகச் சொல்ல விரும்புவது, அண்ணா அவர்கள் ............ (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 188 ஆவது பிரிவை நான் பதிலாகச் சொன்னேன். அதற்கு மேல் விவாதம் வேண்டாம்.

[1986 நவம்பர் 21

திரு. அ. ரகுமான்கான் : எங்களைப் பற்றி விவாதம் வந்து ................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் படிக்கும்போது இந்தக் கட்சிக்குத்தான் இந்தப் பிரிவு என்று சொல்லவில்லை ..............

திரு. அ. ரகுமான்கான் : அதிலே டிஸ்பியூட் இல்லை ஒரு நிமிடம் kindly excuse me நீங்கள் உங்கள் ரீகல் பொசிஷனைப் பற்றிச் சொல்லிவிட்டீர்கள். அதைப்பற்றி டிஸ்பியூட் இல்லை. சிறையில் இருக்கக் கூடிய சட்ட மன்ற உறுப்பினர்கள் சம்பந்தமாக கேள்வி எழுப்பப்பட்டு இருக்கிறது. அதற்குப் பதில் யாருமே ................(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பாயின்ட் ஆப் ஆர்டருக்குப் பதில் சொன்னால் இன்னொரு பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்பீர்கள். ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். அதற்கு நான் சொன்ன பதில் இதுதான் என்று சொன்னேன். உறுப்பினர்களுடைய பெயர் சொல்லவில்லையே,...... (குறுக்கீடு) அமருங்கள் சொல்கிறேன். பேராசிரியர் பேசும்போது, அந்தப் பிரச்சினையைப் பற்றி பேச ஆரம்பிக்கும்போது சொன்னேன். இதை என் முன்னால் பேச வேண்டாம் என்று ............ (குறுக்கீடு) இது பற்றி அவைக்குத் தகவல் வந்திருக்கிறது. தகவலின் அடிப்படையில் கேட்டார்கள்.

(முற்பகல் 10.30).

திரு. அ. ரகுமான்கான் : எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், எத்தனை பேர் சிறையில் இருக்கிறார்கள் என்பதோடு பிரச்சினை முடிந்து விட்டது. ஆனால், அவர்கள் அதோடு நிற்கவில்லை. அது சபைக் குறிப்பில் இருக்கிறது ............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நான் பதில் சொல்லவில்லை.......... (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : நீங்கள் பதில் சொல்லாவிட்டாலும், வெளியிலே இருக்கக்கூடியவர்களுக்குப் தப்பான ஒரு எண்ணம் வரும். எனவே, அதற்கு நான் விளக்கம் சொல்ல அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது சபைக் குறிப்பில் இருக்கிறது..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு எப்படிப் பதில் சொல்ல முடியும்? நானே முழுமையாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், மிக அதிகமாக இதில் வேண்டாம் என்றுதான் அதோடு நிறுத்தி விட்டேன்.



1986 நவம்பர் 21]

திரு. அ. ரகுமான்கான் : நாங்கள் ஏதோ தப்பான காரியம் செய்கிறோம் என்பது போலவும், பதவியிலிருந்து நீக்குவதற்கு ஏதோ ஷரத்து இருப்பது போலவும், எனவே நடவடிக்கை எடுப்பீர்களா என்று கேட்பது சபைக் குறிப்பில் இருக்கிறது.......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் எங்கேயோ போக வேண்டாம். அவர் ஒரு சந்தேகத்தை கேட்டார். அதை இந்த அவை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. வழக்கு மன்றத்தில் வழக்கு இருக்கிறது. அவர்கள் என்ன வாதாடுகிறார்கள் என்பதைப் பொறுத்தும், நீதிபதி என்ன தீர்ப்பு அளிக்கிறார் என்பதைப் பொறுத்தும், அதற்குப் பிறகுதான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சட்டப் பிரச்சினை பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர அதுவரையில் எதுவுமே இல்லை என்று சொன்னதற்குப் பிறகு பிரச்சினை அடங்கி விட்டது. மறுபடியும் அதைக் கிளப்ப வேண்டிய அவசியம் இல்லை.

## 4. அமைச்சரின் அறிக்கை.

### விதி 111-ன் கீழ்

### ஆதிதிராவிட, பிற்பட்டோர் நலத்துறை விடுதி மாணவர்களுக்கான உதவித் தொகை அதிகரிப்பு பற்றிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அறிக்கை ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111-ன் கீழ் கீழ்க்கண்ட அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்,

ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் 765 விடுதிகளும், பிற்பட்டோர் நலத்துறையின் கீழ் 556 விடுதிகளும் இயங்கி வருகின்றன. அதில் மொத்தம் முறையே 10 ஆயிரம் மாணவர்கள், கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சிக் கூட விடுதிகளிலும், 87-ஆயிரம் மாணவர்கள் பள்ளி விடுதிகளிலும் தங்கி வருகிறார்கள். தற்போது சென்னை நகரத்திலுள்ள கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சிக் கூட விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு, ரூபாய் 95-ம் புறநகர்ப் பகுதியிலுள்ள கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சிக் கூட விடுதியிலுள்ள மாணவர்களுக்கு ரூபாய் 80-ம், மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிக்கூட விடுதிகளிலே உள்ள

மாணவர்களுக்கு ரூ. 60-ம், மாதம், உணவுச் செலவுக்காக மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகைகள் கடைசியாக 1981-ல் நிர்ணயிக்கப்பட்டவை. இதற்கிடையே விலைவாசிகளுடைய உயர்வைக் கருத்தில் கொண்டு, மாணவர்களுக்கு நல்ல சத்துள்ள உணவு வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1–12–1986 முதல் கீழ்க்கண்டவாறு மாதம் உணவுத் தொகைகளை உயர்த்தலாம் என்று ஆணையிட்டுள்ளார்கள்.

(அ) கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சிக்கூட விடுதிகள் : சென்னை நகரில் மட்டும், இப்பொது வழங்கப்படும் தொகை ரூ. 95 (நபர் ஒன்றுக்கு), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கலாம் என்று ஆணையிட்டிருக்கிற தொகை மாதம் ரூபாய் 140. கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சிக் கூட விடுதிகளில் மற்றப் பகுதிகளில் இப்போது வழங்கப்படுகின்ற தொகை ரூபாய் 80. இனிமேல் முதலமைச்சர் ஆணையிட்டு இருக்கும் தொகை ரூபாய் 135.

மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிக்கூட விடுதிகளில் பழங்குடியினர் விடுதிகள், பழங்குடியினர் உறைவிடம், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில்இப்போது வழங்கப்படுகின்ற தொகை மாதம் ரூபாய் 60; முதலமைச்சர் உயர்த்தி இருக்கின்ற தொகை ரூபாய் 85 ஆகும். இதனால் மொத்தம் 97 ஆயிரம் மாணவர்கள் பயன் அடைவர். இதனால் ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் ரூபாய் 1.73 கோடியும், பிற்பட்டோர் நலத்துறையின்கீழ் ரூபாய் 91 இலட்சமும் அரசுக்குத் கூடுதல் செலவாகும். இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையாக இட்டிருக்கிறார்கள் என்பதைப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) ஓமலூர் டாசல் செராமிக் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட வேண்டியது குறித்து.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் டாசல் செராமிக் சென்டரில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு லே-ஆஃப் ஊதியமும் நிறுத்தப்பட்டுவிட்ட நிலையில் அவர்கள் படும் அல்லல் குறித்தும், மீண்டும் அத்தொழிற்சாலை திறக்கப்படவேண்டிய அவசியம் குறித்தும் உள்ள" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சேலம் மாவட்டம் ஓமலூரில் உள்ள டாசல் (TACEL)
தொழிற்சாலையில் 44 பேர் பணிபுரிகின்றனர். அவர்கள் 10
ஆண்டு முதல் 16 ஆண்டுகள் வரை வேலை செய்துள்ளனர். நிர்
வாகம், மூலப்பொருள் பற்றாக்குறையினால் 21–6–1986 முதல்
லே-ஆப் கொடுத்துள்ளது. லே-ஆப் ஈட்டுத்தொகை 30–9–1986
வரை கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பின் நிறுத்தப்பட்டுள்ளது.
28–10–1986 அன்று இந்நிறுவனத்தின் இயங்கும் டாசல் பீங்கான்
தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர்,
சென்னையில் நிர்வாகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பேச்சு
வார்த்தையின்போது நிர்வாகமானது, தற்சமயம் நஷ்டத்தில்
தொழிற்சாலை ஓடிக்கொண்டிருப்பதால், தொடர்ந்து 3 ஆண்டு
களுக்கு தற்சமயம் உள்ள மாறுபடும் பஞ்சப்படியை (Variable
Dearness Allowance) தொடர்ந்து இருக்க வேண்டும்
என தெரிவித்ததாகவும், அதற்கு தொழிலாளர்கள் ஒப்புக்கொண்
டார்கள் என்றும், ஆனால் நிர்வாகம் தங்கள் நிலையை மீண்டும்
மாற்றிக்கொண்டு, 5 வருடங்களுக்கு தற்சமயம் உள்ள மாறுபடும்
பஞ்சப்படியை ( Variable Dearness Allowance ) தொடர்ந்து
இருக்க வேண்டுமென்று கூறியதாகவும், ஆனால் தொழிலாளர்கள்
அதனை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் தெரிகிறது. இப்பிரச்
சினை குறித்து சேலம், தொழிலாளர் துறை துணை ஆணையர்
விசாரணை நடத்தி வருகிறார்.

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்பொது இருக்கிற பிரச்சினை, தொழிற்சாலையை
விரைவாகத் திறக்கவேண்டும் என்பதுதான். மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் இங்கே கொடுத்துள்ள விவர அறிக்கையில் குறிப்
பிட்டுள்ளபடி கூட, பேச்சுவார்த்தைக்குக் பிறகு நிர்வாகம்தான்
தன்னுடைய முடிவை மாற்றிக் கொண்டிருக்கிறது. எனவே,
நிர்வாகம் கொஞ்சம் இறங்கி வந்து, அதற்குத் தொழிலாளர்களும்
இணங்கி ஒரு உடன்பாடு ஏற்படும் நிலைமையை உருவாக்கி,
தொழிற்சாலையை விரைவாகத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ளவார்களா என்பதை
இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமுகமாகத் தீர்ப்பதற்கான முயற்சி எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தையின்போது ஆட்குறைப்பு செய்யலாமா என்று கூட நிர்வாகம் யோசித்துக் கொண்டிருப்பதாகத் தொழிலாளர்கள் என்னிடம் குறிப்பிட்டார்கள். அப்படி ஆட்குறைப்பு செய்வதைத் தொழிலாளர்கள் விரும்பவில்லை. அதற்கு மாறாக உற்பத்தியை எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்திக் கொடுக்கிறோம், அதற்காக உழைக்கிறோம். அதற்காக என்ன நிபந்தனை போட்டாலும் ஒப்புக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். எனவே பேச்சுவார்த்தையின்போது ஒரு சுமுகமான நிலைமை ஏற்படும் வகையில் ஆட்குறைப்பு இல்லாமல் பார்த்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: கன்சிலியேஷன் நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

### (ஆ) கொடைக்கானல் தொழில் நுட்பக் கல்லூரியில் ஏற்பட்ட தீ விபத்து.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கடந்த 6-11-1986 அன்று கொடைக்கானல் தொழில் நுட்பக் கல்லூரியில் தீ விபத்து ஏற்பட்டு மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு, தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கொடைக்கானலில் இயங்கும் கோடை அண்ணா பாலிடெக்னிக் ஒரு சுயநிதி ஆதாரப் பாலிடெக்னிக் ஆகும். அப்பாலிடெக்னிக்கின் மாணவர்கள் சேதப்படுத்தப்பட்ட பொருள்களுக்காக மாணவர்களிடமிருந்து ஈட்டுத்தொகை வசூலிக்கப்படலாகாது மாணவர்கள் விடுதியில் சாப்பாட்டுக் கட்டண நிலுவைத் தொகையினை செலுத்தாவிடினும் வாரியத்தேர்வுகளுக்கு நுழைவுச் சீட்டு வழங்கப்படவேண்டும் என்ற சில கோரிக்கைகளை முன்வைத்து 23-10-1986 முதல் மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்யத் தொடங்கினர். இதுகுறித்து தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் உத்திரவின் பேரில் மதுரை, தமிழ்நாடு பாலிடெக்னிக்கின் முதல்வர் அந்நிர்வாகத்தினரிடம் கலந்து மாணவர்களுக்கு தேர்வுகளுக்கான நுழைவுச் சீட்டினை எந்தவித முன் நிபந்தனையும் இன்றி வழங்க ஏற்பாடு செய்திருந்தார். அப்பயிலகத்தில் பயிலும் மாணவர்களின் நலன்களை கருத்தில் கொண்டு 3-11-1986



முதல் பயிலகமும், விடுதியும் திறந்து வைக்குமாறு நிர்வாகத்திடம் அறிவுறுத்தப்பட்டதின் பேரில், நிர்வாகமும் அதன்படியே 3-11-1986 முதல் பாலிடெக்னிக்கையும், விடுதியையும் திறந்து வைத்திருந்தது எனினும், மாணவர்கள் 4-11-1986 ஆம் தேதி காலையில் விடுதியில் சிற்றுண்டி தயார்நிலையில் இருந்தபோதிலும் அதனை சாப்பிட மறுத்து வெளியில் உள்ள உணவகங்களில் சிற்றுண்டியை எடுத்துக்கொண்டதாக தெரிகிறது. மேலும் அன்றைய தினமே தொடங்கிய (4-11-1986) வாரியத் தேர்வுகளையும் மாணவர்கள் புறக்கணித்துள்ளனர். இதேபோல் 5-11-1986 6-11-1986 ஆகிய நாட்களில் நடந்த வாரியத் தேர்வுகளும் மாணவர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

2. 6-11-1986-ம் தேதி சில விஷமிகளால் அப்பயிலகத்திற்கு தீ வைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் 4-11-1986 மற்றும் 5-11-1986-ல் நடைபெற்ற வாரியத் தேர்வுகளை புறக்கணித்துள்ள நிலையிலும் 6-11-1986-ல் அப்பயிலகத்தில் ஏற்பட்ட தீ சம்பவத்தாலும் இதர நாட்களில் நடைபெறவிருந்த வாரியத் தேர்வுகள் நிறுத்தப்பட்டன. மேற்படி சம்பவங்கள் குறித்து அண்ணா மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

3. கொடைக்கானல், கோடை அண்ணா பாலிடெக்னிக்கில் பயிலும் மாணவர்களின் எதிர்கால நன்மையை கருத்தில்கொண்டு நிறுத்திவைக்கப்பட்ட வாரியத்தேர்வுகளை எதிர்வரும் டிசம்பர் திங்கள் 16, 17, 18 மற்றும் 19 தேதிகளில் நடத்துவதற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே மாணவர்கள் தேர்வு எழுத முயற்சிகள் எடுக்கப்பட்டுவிட்டன. மேற்கூறப்பட்ட பாலிடெக்னிக் விவகாரங்களை விசாரணை செய்வதற்கு தொழில் நுட்பக் கல்வித்துறையால் 26-11-1986 அன்று ஒரு விசாரணை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றாமல் நிர்வாகம் குறை சொல்லுகிறது. வேறு, தவறு செய்யாத மாணவர்களையெல்லாம் வழக்கில் சிக்க வைத்துப் பழி வாங்க வேண்டும் என்று இத்தகைய தீ வைப்புச் சம்பவத்தை நிர்வாகமே உருவாக்கியிருப்பதாக மாணவர் பிரதிநிதிகள் சொல்லுகிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? எனவே மாணவர்கள்மீது போடப்பட்டுள்ள வழக்கை வாபஸ் பெற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியினுடைய மாணவர்கள், சேதப்படுத்தப்பட்ட பொருள்களுக்காக மாணவர்களிடமிருந்து ஈட்டுத்தொகை வசூலிக்கப்படலாகாது, மாணவர்கள் விடுதியில்

சாப்பாட்டுக் கட்டண நிலுவைத் தொகையினைச் செலுத்தா விடினும், வாரியத் தேர்வுகளுக்கு நுழைவுச் சீட்டு வழங்கப்பட வேண்டும் என்ற சில கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத் தத்தைத்துவக்கினார்கள் என்ற சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நிர்வாகத்தின்மீது என்ன தவறு என்ற தகவல் அரசிடம் இல்லை. காவல் துறை இது குறித்து ஒரு வழக்கைப்பதிவு செய்துவிசாரணை நடத்தி வருகிறது. விசாரணையின் அடிப்படையில் உண்மை என்ன என்று கண்டறிந்து அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய நிதிக் கல்லூரி நடத்த உரிமை பெறுகிற போது நன்கொடை வசூலிப்பதில்லை என்று அந்த நிர்வாகம் உறுதியளித்து விட்டு பின்னர் மாணவர்களையே நன்கொடை வசூலிப்பதற்காக பிழிந்தெடுத்ததன் காரணமாகத்தான் இத் தகைய சம்பவம் அங்கே நடைபெற்றதாகச் சொல்லப்படு கிறதே. எனவே சுய நிதிக் கல்லூரிகளையெல்லாம் அரசே மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி இந்தப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் என்ன என்று இன்னும் அறியப்படாமல் இருக்கிறது. தற்போது விசாரணை நடக்கிறது. விசாரணைக்குப் பிறகு அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். சுய நிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை அவற்றை அரசே எடுத்துக் கொள்ளும் எண்ணம் தற்போது இல்லை. தவறுகள் எங்கெங்கே நடக் கின்றன என்று தகவல் வந்தால் அத்தகைய தவறுகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும். தவறு செய்பவர்கள்மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 6. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை, குழுத் தலைவரின் சார்பாக திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழு தலைவரின் சார்பாக நான் அவைக்கு அளிக்கிறேன்.



(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1972–73-ஆம் ஆண்டிற்கான முன்னறிக்கைமீது பொதுக் கணக்குக் குழு அளித்த இரண்டாவது அறிக்கையில் (ஆறாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பத்தாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் மூன்றாவது அறிக்கையில் (எட்டாவது பேரவை) அளித்துள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை.

(ஆ) புதுப் பணித் திட்டம் நிதி ஒதுக்கத்திற்கு மேல் செலவாகியுள்ள புதுப் பணித் திட்டங்கள் பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை.

(இ) மிகைச் செலவை முறைப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் குறித்துப் பொதுக் கணக்குக் குழு (1983–84) அளித்த 25-ஆம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைபற்றிய மேற்படி குழுவின் நாற்பதாவது அறிக்கை.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை, குழுத் தலைவரின் சார்பாக திருமதி பா. வளர்மதி அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை பொது நிறுவனங்கள் குழுத் தலைவரின் சார்பாக நான் அவைக்கு அளிக்கிறேன்.

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977–78 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1980–82) பதினைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரை களின் மீது அரசு எடுத்த நடவடிக்கைபற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி ஐந்தாவது அறிக்கை.

(முற்பகல் 10–40.)

### (இ) அரசு உறுதி மொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அக்குழுத் தலைவரின் சார்பாக திரு. பொ. உத்திராபதி அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

[1986 நவம்பர் 22

திரு. பொ. உந்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் கீழ்காணும் அறிக்கையை அரசு உறுதி மொழிக் குழுத் தலைவரின் சார்பாக நான் அவைக்கு அளிக்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1986--87-ஆம் ஆண்டுக்கான அரசு உறுதி மொழிக் குழுவின் மூன்றாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

### 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

#### (அ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள்) நியமனத் திருத்தச் சட்ட முன்வடிவு 1986

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்ய அனுமதி கேட்கப்பட்டிருக்கிற 1986 ஆம் ஆண்டு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவை, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீடிப்பதற்குக் காரண காரிய விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிற காரணம், '' 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு முப்பதாவது சட்டம்) தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் 1983-ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் நாளன்று வெளியிடப்பட்டது. அதன் கீழ் விதிகளை வகுக்கவும், வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தவும் இன்னும் சில காலம் ஆகுமாதலால் ..........'' என்று இன்டெஃபெனட் டைம் போட்டு விளக்கம் கொடுக்கப்பட்டு வெகுகாலம் ஆகிவிட்டதால் இன்னும் தெளிவான நிலை ஏற்படாததால், பொது மக்களுடைய, மக்கள் பிரதிநிதிகளுடைய ஜனநாயக நாற்றங்கால் என்று சொல்லக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு விரைவிலே தேர்தலே நடத்தாமல் இருப்பதால் அறிமுக நிலையிலேயே நான் இதை எதிர்க்கிறேன்.



1986 நவம்பர் 21]

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன் வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அதற்கான காரண காரியங்களை ஆய்விற்கு வருகிறபோது எடுத்துச் சொல்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தும் நிலையிலேயே எதிர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. 1983 ஆம் வருஷத்தில் இந்தக் கூட்டுறவுச் சட்டம் இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட நேரத்தில் இந்த அவைக்குக் கொடுக்கப்பட்ட உறுதி மீறப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அன்றையதினம் அமைச்சர் அவர்கள், இரண்டு மாதங்களுக்குள் விதிகளை ஏற்படுத்தி தேர்தல் நடத்தப்படும் என்று சொன்னார்கள். அதற்கு மாறுபட்ட முறையில் மீண்டும் இந்த அலுவலர்களின் பதவிக் காலத்தை அரசு நீட்டித்திருக்கிறது. ஆகவே தேர்தலை நடத்த வேண்டுமென்று கோரி இந்தச் சட்டமுன்வடிவை நான், எதிர்க்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக அரசால் கவனிக்கப்படாமல் இருக்கிறது. சட்டம்கூட வந்தாகிவிட்டது. எனவே விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்துவதற்கான காலம் குறிப்பிடப்படாததால் எங்கள் கட்சியின் சார்பில் இதை எதிர்க்கிறேன். விரைவிலே தேர்தலை நடத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி, '' 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது. அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. அறிவிப்புகள்.

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை 1986-87.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1986—87 ஆம் ஆண்டுக்கான கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவை முன் மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது:—

MESSAGE.

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the year 1986-87 as detailed in the annexure enclosed.

(9) முதல் துணை நிதிநிலை அறிக்கை 1986-87
விவாதமும், வாக்கெடுப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1986—87 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.

பேரவை விதிகளின்படி இன்று விவாதமும், நிதியமைச்சர் அவர்களின் பதிலுரையும் ஒரு மணிக்கு முடிந்து மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு எடுக்கப்படும்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986—87 ஆம் ஆண்டிற்குக் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 17—11—1986 தேதியிடப் பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை, 1986—87 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

*திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள 1986—87 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை மீதும் கூடுதல் செலவின மானியக் கோரிக்கையின் மீதும் இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

பொதுப் பணித் துறையைச் சார்ந்த கட்டடங்கள், பாசனம், பாலங்கள் போன்றவற்றுக்கும், வறட்சி நிவாரணப் பணிகளுக்கும், விவசாயிகளின் கடன் தொகை மீதான வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கும் ஏற்பட்ட கூடுதல் செலவினங்கள் குறித்து மானியக் கோரிக்கைகளிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பொது மக்களுடைய நன்மைக்காகவும், அதே நேரத்தில் ஏழை எளிய மக்களின் நலன்களுக்காகவும் திட்டங்களைத் தீட்டுவதற்கு முன்பணமாக அரசு வழங்கியதை இந்த நேரத்தில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளுடைய கடன் தொகை மீதான வட்டியையும், அபராத வட்டியையும் அரசு தள்ளுபடி செய்துள்ளதை முதன் முதலில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் விவசாயிகள் தங்களுடைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவது குறித்துச் சொல்லும்போது, 31—12—1986-க்குள் முதல் தவணையையும், 30—6—1987-க்குள் இரண்டாவது தவணையையும் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பருவமழை பொய்த்ததன் காரணமாக, தற்போது வறட்சி நிலைமை தமிழகம் முழுவதும் நிலவுவதால், விவசாயிகளைப் பொறுத்தமட்டில் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை இருப்பதால், கூடுதலாக 6 மாத காலம் அவகாசம் கொடுத்து, முதல் தவணையை 30—6—1987-க்குள் கட்ட அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. எஸ். டேனியல்ராஜ்) [1986 நவம்பர் 21

அடுத்து, நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து தூத்துக்குடியைத் தலைமையிடமாக வைத்து சிதம்பரனார் மாவட்டம் என்று ஆரம்பித்து, துவக்க விழாவையும் நடத்தியிருப்பதை வரவேற்கிறேன். தூத்துக்குடியைப் பொறுத்தமட்டில் தற்போது வளர்ந்து வருகிற நகரமாக இருப்பதால், 'சிப்காட்' நிறுவனம் மூலமாக அங்கே பல தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவில் குஜராத்திற்கு அடுத்தபடியாக, தூத்துக்குடியில் அதிகமாக உப்பு உற்பத்தியாகிறது. தூத்துக்குடியைச் சுற்றிலும் குறிப்பிட்ட பகுதிகளில் உப்பு அதிகமாக உற்பத்தியாகிறது. தூத்துக்குடியிலிருந்து உப்பு வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறார்கள். சில நேரங்களில் உப்பு அதிகமாக உற்பத்தியாகி, தேக்கம் ஏற்படுகிறது. இந்த உப்பை மூலப் பொருளாகப் பயன்படுத்தி நூற்றுக் கணக்கான இராசயனத் தொழிற்சாலைகளைத் தனியார் துறையிலும், அரசுத் துறையிலும் உருவாக்கினால், பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு, அன்னியச் செலாவணி மிச்சமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தூத்துக்குடிக்கும், திருநெல்வேலிக்கும் இடையே அமைந்துள்ள வாகைக்குளத்தில் விமான நிலையம் அமைவதன் மூலமாக தூத்துக்குடியைச் சுற்றியுள்ள ஸ்பிக் நிறுவனம், ஹார்பர், தெர்மல் ஸ்டேஷன் போன்றவை மேலும் வளர்ச்சியடையும் என்று சொல்லி, அங்கே விமான நிலையம் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, உடனடியாக அங்கே வேலையைத் துவக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிதம்பரனார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மருதூர் மேலக்கால், கீழக்கால், ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்கால் ஆகிய அணைக்கட்டுகளின் செயல் பொறியாளர் அலுவலகத்தைப் தூத்துக்குடியில் அமைத்து, அந்த அணைக்கட்டுகளை இயக்குகின்ற பணியை சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

அடுத்து, நெல்லையிலே அரசு பொறியியல் கல்லூரியும் அரசு மருத்துவக் கல்லூரியும் இருக்கிற காரணத்தால், சிதம்பரனார் மாவட்டத்திற்குத் தலைநகரான தூத்துக்குடியில் சட்டக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 நவம்பர் 21] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

(முற்பகல் 10-50)

சிதம்பரனார் மாவட்டத்திலே வேலை செய்கின்ற அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்கு கடன் உதவிக்கு விண்ணப்பித்து பல வருடங்கள் ஆகின்றன. அந்த அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட கடனுதவி உடனடியாக வழங்கினால் அவர்களுடைய நலனும் பாதுகாக்கப்படும். அதே நேரத்திலே மாவட்டத்தின் வளர்ச்சியும் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது சிதம்பரனார் மாவட்டத்தின் தலைநகராக தூத்துக்குடி ஆகியிருக்கிறது. ஆகவே, தூத்துக்குடிக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் மின்சார இரயில் விட்டால் வசதியாக இருக்கும். சென்னையைப் போன்று தூத்துக்குடியும் வளர்ந்து வரும் நகரமாக வாய்ப்புகள் ஏற்படும். ஆகவே தூத்துக்குடிக்கும் திருநெல்வேலிக்கும் மின்சார இரயில் விடுவதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மருதூர் மேலக்கால், மருதூர் கீழக்கால் பகுதியிலே பழந்தொளி விவசாயம் செய்கின்ற விவசாயிகள் கடந்த 10 ஆண்டுகளாக விவசாயம் செய்யாமல் கஷ்டப்படுகின்றார்கள். அவர்கள் விவசாயத்திற்கு தண்ணீர் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்படுகிறார்கள். மருதூர் மேலக்கால், மருதூர் கீழக்கால் பகுதி விவசாயிகளுக்குத் தண்ணீர் விட அரசு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாயர்புரம் செந்தியம்பலம் தொழிலியற் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்திற்கு அரசு மூலமாக கடன் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்தச் சங்கத்திலே ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட வாதிரியார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வேலை செய்து வருகின்றார்கள். நெசவாளர் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்தொகை ரூ. 3,86,000-மும் முழு மானியமாக அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவ நண்பனாக விளங்குகின்ற புரட்சித் தலைவர் அவர்கள் அரசு, அந்த மீனவர்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடலிலே சென்ற மீனவர்கள் இறந்தால் அந்த மீனவர்களுடைய சடலங்களைக் கரைக்குக் கொண்டு வந்து மருத்துவ பரிசோதனைக்குள்ளாக்க வேண்டும். அப்போதுதான் மீனவ இலாக்கா அதிகாரிகள் உதவித் தொகை வழங்க முடியும் என்று சொல்கின்றார்கள். கடலுக்குள் சென்ற மீனவருடைய உடலை எப்படி கரைக்குக் கொண்டு வந்து மீன்வளத் துறையிலே ஒப்படைக்க முடியும் என்பதை நாம்

சற்று சிந்திக்க வேண்டும். ஆகவே அரசு இந்த ஆணையைத் தளர்த்தி மீனவர்கள் சங்கத்தின் மூலமாக ஒரு அத்தாட்சியை வழங்கினால் அவர்களுக்கு அந்த உதவித் தொகை வழங்க அரசு ஒரு ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் ஒட்டு மொத்தமாக, மீனவர்களுக்கு வலைகள் வாங்க வழங்கிய கடன் தொகை ரூ. 4 கோடியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அரசை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. என். சண்முகம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, 1986—87ஆம் ஆண்டுக்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்காக, உயர் மட்டக் கமிட்டியை வேலூர், திருவண்ணாமலை பகுதியின் மக்கள் கருத்தை அறிந்து சொல்ல அனுப்பியதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த நிதி ஆண்டுக்குள்ளாக மாவட்டத்தைப் பிரித்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். தற்போது கோட்டங்கள் பெரியதாக உள்ளதால் மூன்றாகப் பிரிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கே உள்ள வேலைப் பளுவைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வட்டங்கள் மிகப் பெரியதாக உள்ளதால், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் கோட்டத்தில் புதியதாக தாலுக்கா அலுவலகம் ஒன்று அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அதற்கு சோளிங்கர் காவேரிப்பாக்கத்தை தலைமையிடமாக கொண்ட தாலுக்கா அலுவலகம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு வட ஆற்காடு மாவட்டம் கடுமையான வறட்சியை இந்த ஆண்டு சந்தித்துக் கொண்டிருக் கின்றது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். என்றும் இல்லாத அளவுக்கு வட ஆற்காடு மாவட்டத்திலே இந்த ஆண்டு ஏரிகளில் ஒரு சொட்டு நீர்கூட இல்லை என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் விளைவாக வட ஆற்காடு மாவட்டம் ஆரம்பத்திலேயே வறட்சியைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அந்த நிலைமையில் மாவட்டம் இருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். விவசாயத் தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் இல்லாத நிலை இருக் கின்றது. பெரிதும் அதிர்ச்சியும் வேதனையும் இருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.





மாவட்டத்திலேயே மிகப் பெரிய ஏரியான காவேரிப்பாக்கம் ஏரியினுடைய கரையை உயர்த்தி, ஏரியின் கரைகளைப் பலப்படுத்துகின்ற திட்டம் உயர்மட்டக் கமிட்டியால் நிர்ணயிக்கப்பட்டு, அந்த உயர் மட்டக் கமிட்டி தன்னுடைய அறிக்கையை அரசிடம் அளித்திருக்கின்ற காரணத்தால் அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் பாலாறு படுகையும் காவேரிப்பாக்கம் ஏரியினுடைய படுகையும் திருவள்ளூர் வரை இருக்கின்ற நிலத்தடி நீரைத் தாக்கி வருகின்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதனால் திருவள்ளூர் வரை இருக்கின்ற நிலத்தடி நீர் பாதுகாக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற வட ஆற்காடு மாவட்டத்திலே நிலத்தடி நீரை மட்டுமே அங்குள்ளவர்கள் நம்பியிருக்கின்ற சூழ்நிலையிலே, நிலத்தடி நீர்ச் சட்டங்களைச் சிறிது தளர்த்திக் கொடுத்தாவது உடனடியாக மின் இணைப்புகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில் பல கிராமங்களில் 50 ஆண்டுக் காலமாக, 100 ஆண்டுக் காலமாகக் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளுக்கு எல்லாம் கூட இன்னமும் பட்டா கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. அதுபோல் கட்டப்பட்டிருக்கின்ற குடிசைகளுக்கு எல்லாம் இன்றுவரை பட்டா அளிக்கப்படாத காரணத்தால் தாட்கோ, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்றவை மூலம் கட்டப்படுகின்ற வீடுகள் எல்லாம் இவர்களுக்குக் கிடைப்பதில் சங்கடங்கள் இருப்பதால் வருவாய்த்துறை மிக வேகமாகப் பணியாற்றி பட்டா கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கடுமையான வறட்சியை எதிர் நோக்கி இருக்கின்ற வட ஆற்காடு மாவட்டத்திலே நெல் கொள்முதலைத் தீவிரப்படுத்தி தேவையான நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றங்கள் எல்லாம் மக்களுடைய பிரச்சினைகளை எளிதாகத் தீர்க்கும் என்ற நிலை மாறி ஊராட்சி மன்றங்களிலே இருக்கின்ற நிதியை எல்லாம் முறையற்ற முறையில் செலவு செய்து கொண்டிருப்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒன்றியத்திலே இருக்கின்ற பொது நிதியை முறையற்ற முறையில் செலவு செய்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் ஒன்றியங்கள் பொது நிதியைச் செலவு செய்வதற்குச் சரியான முறையினை வகுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவேரிப்பாக்கம் ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் அதனுடைய நிதியிலே ஏராளமான மோசடிகள் நடந்துள்ளன என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டுகிறேன். காவேரிப்

[திரு. என். சண்முகம்] [1986 நவம்பர் 21

பாக்கம் ஒன்றியத்திலேயுள்ள பொது நிதியிலிருந்து ஸ்டேட்
பாங்கில் கட்ட வேண்டிய பணம் எல்லாம் கட்டாமல் மோசடி
செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தடவையும் 30 ஆயிரம்,
40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் என்று எடுத்துச் செல்லப்பட்டு,
பணங்கள் எல்லாம் பாங்கிலே கட்டப்படாமலேயே போலி
ரசீதுகள் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அலு
வலகத்திலே செய்ய வேண்டிய தணிக்கை வேலையை சரியாக
அக்கவுண்டெண்ட் செய்யாத காரணத்தால், ரெக்கன்சிலியேசன்
முறையாக செய்யப்படாத காரணத்தால் இந்தப் பணங்கள்
எல்லாம் மோசடி செய்யப்பட்டு வழக்குகளும் பதிவு செய்யப்பட்
டிருக்கின்றன.

மக்கள் வளர்ச்சிப்பணி குறித்து நான் கேட்கின்ற நோக்தில்
எல்லாம் இந்தச் சட்டம் ஒத்து வரவில்லை, அந்தச் சட்டம்
ஒத்து வரவில்லை என்று சொல்கின்ற காரணத்தால் அங்கே
50 இலட்சம் ரூபாய் இன்னமும் செலவு செய்யப்படாமல் இருக்
கின்ற நிலை இருக்கிறது. அங்கே இந்நிலையை மாற்றி, ஒரு
மாஸ்டர் திட்டத்தைக் கொண்டு வந்து அப் பணத்தைப் பயன்
படுத்தி காவேரிப்பாக்கம் ஒன்றியத்தினுடைய வளர்ச்சிக்கு
உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குற்ற
வாளிகள் எங்கு இருந்தாலும், தவறு செய்தவர்கள் கண்டு பிடிக்
கப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான வழக்குகள் பதிவு
செய்யப்பட்டு இன்னமும் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்
படாமல் இருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே சுட்டிக்
காட்டுகிறேன்.

அடுத்து, இப்போது அரசாங்கம் ஊராட்சி ஒன்றியங்களிலே
இரண்டு மாத தேவைக்கான குழல் விளக்குகளைப் பெற்றுக்
கொள்ளலாம் என்று கூறியிருக்கிறது. ஆனால் காவேரிப்பாக்கம்
ஒன்றியத்திலே ஓராண்டு தேவைக்காக 2 ½ லட்சம் ரூபாய்
பெறுமானமுள்ள குழல் விளக்குகளை வாங்கி வைத்திருக்கிறார்
கள். 2,500 குழல் விளக்குகளுக்கு 2,500 'சோக்' களையும்
வாங்கியிருக்கிறார்கள். பொதுவாக ஒரு 'சோக்' 10 அல்லது 15
டியூப் லைட்களுக்குப்போதும். இப்படி சரியற்ற முறையில் பொது
நிதி ஆதாரங்கள் வீணாக்கப்பட்டு மக்கள் பணம் விரயமாகிக்
கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.
ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரை நிதியினைச் சரியாகப்
பயன்படுத்துகிறார்களா என்று கண்காணிப்பதற்கான உத்தரவைப்
போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப்
பொறுத்தவரை, கழிப்பறை கட்டுவதற்காக, 1,500 ரூபாய்
வீதம் ஒதுக்கப்படுகிறது. பெருவாரியான கிராமங்களில் அரசே
கழிவறைகளை கட்டிக்கொடுத்திருக்கிற நிலையில் இந்த 1,500



1986 நவம்பர் 21] [திரு. என். சண்முகம்]

ரூபாயை ஒவ்வொரு வீட்டுக்கும் ஒதுக்குவது தேவை
யில்லாதது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால்
'பர்டன்' இன்னும் அதிகமாகும். இந்த 1,500 ரூபாயை வீடு
கட்டுகிறவர்களுக்குக் கொடுத்துவிட்டால் அவர்கள் சற்று பலமாக
வலுவாக வீடுகளைக் கட்ட முடியும் என்று தெரிவித்துக்கொள்
கிறேன்.

அடுத்து, காவேரிப்பாக்கத்திற்காக அளிக்கப்பட்டிருக்கின்ற
ஆரம்ப சுகாதார நிலையம் இப்பொழுது இயங்கிக்கொண்டிருக்
கிறது. அதற்கு 5 ஏக்கர் நிலமும், 10 ஆயிரம் ரூபாயும் கட்டப்
பட்டுள்ளது. அதற்குப் புதிய கட்டிடங்களை கட்டுவதற்கான
நிதியை ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சோளிங்கர் அரசு மருத்துவமனைக்கு ஒரு எக்ஸ்ரே யூனிட்
வழங்குமாறும், சோளிங்கரில் இருக்கிற தீயணைப்பு நிலையத்
திற்கு ஆம்புலன்ஸ் வண்டி ஒன்றை வழங்குமாறும் கேட்டுக்கொள்
கிறேன். ராணிப்பேட்டையிலிருந்து சோளிங்கருக்கு இடையிலே
இருக்கின்ற 70 கிலோ மீட்டர் தூரத்திற்கு வழியிலே வேறு
வாகனங்களே இல்லாத நிலையில் பல கிராமங்கள் இருக்கின்ற
காரணத்தால் அவசியம் அங்கே ஒரு ஆம்புலன்ஸ் வண்டி வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் நாம் கோடிக்
கணக்கான பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். பல கிராமங்களில்
டெண்டர் விடப்பட்ட நிலையிலும் இன்னும் வேலை ஆரம்பிக்காத
காரணத்தால் தாமதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
அந்த வேலைகளையும் விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொள்
கிறேன். சரியான நேரத்தில் அவர்களுக்கு பொருள்கள் அளிக்கப்
படவில்லை என்கிறார்கள். அதையும் கவனிக்குமாறு கேட்டுக்
கொள்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மிகவும்
கண்டிப்பாக இருக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.
ராணிப்பேட்டை சிப்காட் பொறுத்தவரையில் அங்கே பல
தொழிற்சாலைகள், தொழிலாளர் பிரச்சினைகளாலே மூடப்
பட்டிருக்கின்ற காரணத்தால் பல தொழிற்சங்கங்கள் வர இயலாது
இருக்கின்ற ஒரு காரணத்தால் தொழிலாளர் பிரச்சினையை
அணுகுவதிலே ஒரு புதிய முறையைத் கொண்டு வர வேண்டும்.
கண்டிப்பான முறையிலே கொண்டு வர வேண்டும். தொழிலா
ளிக்கும் முதலாளிக்கும் இடைஞ்சல் இல்லாத அளவிற்கு திட்டங்
களைக்கொண்டுவந்து, மூடியிருக்கின்ற தொழிற்சாலைகளை
யெல்லாம் திறப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் எனக் கேட்டுக்
கொள்கிறேன்.

(திரு. என். சண்முகம்) [1986 நவம்பர் 21

சோளிங்கரிலே இருக்கின்ற சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ்-லே தொடர்ந்து தொழிலாளர் பிரச்சினை இருக்கின்ற காரணத்தால் அங்கே அமைதி குலைந்து இருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இரண்டு தொழிலாளர்கள் உயிரோடு கொளுத்தப்படுகின்ற அளவிற்கு அங்கே தொழிலாளர் பிரச்னைகள் தீவிரமாக உள்ளன என்றும், அரசு எடுத்து இருக்கின்ற கடுமையான நடவடிக்கையினால்கூட அங்கே இன்னும் பிரச்னைகள் முடியவில்லை, அங்கே பணி புரிந்து கொண்டிருக்கின்ற பல தொழிலாளர்களைச் சட்டத்திற்குப் புறம்பாக நிர்வாகம் நிறுத்திவிட்டு, வெளியே இருந்து அவுட்சைடர்ஸைக் (outsiders) கொண்டு பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். சுற்று வட்டாரத்திலே பணிபுரிந்து கொண்டிருந்த தொழிலாளர்களானாலும், அங்கேயிருக்கின்ற மக்களானாலும் நிர்வாகத்திற்கும், சட்டம் ஒழுங்கு குலையக்கூடிய பிரச்சினை அங்குதோன்றி இருப்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

வடாற்காடு மாவட்டத்திலேயே அரியூரிலே இருக்கின்ற நூற்பாலையிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என்பதையும், பக்கத்திலே திருத்தணியிலே சரஸ்வதி ஆலையிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என்றும், ஆனால் இந்த ஆலையிலே மட்டும் ஏன் தொடர்ந்து பிரச்சினை வருகிறது என்பதைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பேச அனுமதித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சரவர்கள் 1986–87–ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கையைத் கொண்டு வந்து இருக்கிறார்கள். பட்ஜெட்டிலே பல்வேறு மானியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், எதிர்பாராத நியூ சர்வீசஸ், புது தேவைகள், புது பணிகள் ஏற்பட்டுவிடுகின்ற காரணத்தினாலே இங்கே இந்தத் துணை மானியக் கோரிக்கை கொண்டு வரப்பட வேண்டியதாக இருக்கிறது. இதிலே பல்வேறு மானியங்களின்கீழ் புதுப்பணி குறித்து இங்கே அரசு சட்டமன்றத்தினுடைய ஒப்புதலுக்காக கோரிக்கைகள் வைத்திருக்கின்றார்கள்.

முதலாவதாக இங்கே தரப்பட்டிருக்கின்ற புத்தகக் குறிப்பில் பக்கம் 51-லே அடையாரிலுள்ள அமைச்சர்கள் குடியிருப்பு இல்லங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க 12 இலட்சம் ரூபாய் ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது, முதற்கண் செலவு செய்ய ஐந்து இலட்சம் ரூபாய் எதிர்பாராத செலவு நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அமைச்சர்களும்



1986 நவம்பர் 21] (திரு. அ. ரகுமான்கான்)

மனிதர்கள்தான், எனவே, அடையாற்றிலுள்ள அமைச்சர் பெருமக்களுடைய குடியிருப்புகளுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் பானை இங்கே, தண்ணீர் எங்கே என்று நாட்டிலே பல்வேறு இடங்களில் குடிதண்ணீர்ப் பிரச்னையினால் தாய்மார்கள் அலைகிறார்கள். அவர்களுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அமைச்சர்களுடைய குடிதண்ணீர்ப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு எந்த அளவிற்கு அக்கறை எடுத்துக்கொள்கிறோமோ அந்த அளவிற்கு அக்கறை அங்கேயும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில்—ஏற்கனவே இந்தச் சபையிலேயேகூட சொல்லியிருக்கிறேன். லாக் நகர், பரியல் கிரவுண்ட், பிரசிடென்சி பின்புறம் போன்ற பல்வேறு இடங்களிலே குழாய்களும் இல்லை, பல இடங்களில் குழாய்களில் தண்ணீரும் இல்லை. எனவே இங்கே அரசாங்கத்திலே இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைப் பரிசீலிக்கக்கூடிய அரசாங்கம் இதையும் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக நம்முடைய மிகப்பெரிய திட்டமாகச் சொல்லப்பட்ட கிருஷ்ணா நதித் திட்டம் சென்னை நகரத்து மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமான திட்டம். பகீரதன் கங்கையைக்கொண்டு வந்ததைப்போல இந்த அரசாங்கம் கிருஷ்ணா நதித் திட்டத்தைக்கொண்டு வருவதாகச் சொல்லப்பட்டு ஏறத்தாழ 60 கோடி ரூபாய் என்று நான் கருதுகிறேன். ஆந்திரா அரசுக்குக்கூட நாம் கொடுத்தாகிவிட்டது. ஆனால், அந்தத் திட்டம் என்னவாயிற்று என்று இன்னும் தெரியவில்லை. வருமா, வராதா ? சந்தேகமாக இருக்கிறது. கர்நாடகத்தைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்களும், அதைப்போலவே மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்களும் இந்தத் திட்டம் குறித்து ஐயப்பாட்டை எழுப்புகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் மத்திய அரசாங்கம் அனுமதி கொடுக்கவில்லை. பிளானிங் கமிஷன் அனுமதி கொடுக்கவில்லை, சுற்றுப்புறச் சூழ்நிலை இலாகா அனுமதி கொடுக்கவில்லை. காட்டு இலாகா அனுமதி கொடுக்கவில்லை. இந்திரா அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தபொழுது கொண்டுவந்த திட்டம். எனவே அந்தத் திட்டம் என்னவாயிற்று? இன்னும்சொல்லப் போனால், மத்திய அரசு அனுமதிக்கத் தவறுமானால், களத்தில் சந்திப்பேன் என்று சொன்ன திரு. காளிமுத்து கட்சிப்பணிக்காக, இப்பொழுது அமைச்சர் விட்டார்கள். ஆகையினால், இந்தக் கோரிக்கை வெளியே போய நிலைமை என்ன என்பது தெரியாமல்க் க்யின் இப்போதைய டில் இருக்கிறோம். எனவே, அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில்

(திரு. அ. ரகுமான்கான்) [1986 நவம்பர் 21

விளக்கம் தர வேண்டும். மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடி, வாதாடி, சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, கிருஷ்ணா நீர்த்திட்டத்தைக்கொண்டுவர முயற்சிஎடுக்கவேண்டும். ஆனால் எனக்குத் தெரிந்தமட்டில் அது வருவது போலத் தெரியவில்லை. எனவே, நிதி அமைச்சர் அவர்கள்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பதிலே இன்னொன்றையும் நான் குறிப்பாக இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பேட்டிலே, பக்கம் 5-ல் 1986-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், முதல் அமைச்சர் உடல் நலத்தைப் பரிசோதனை செய்து கொள்வதற்காக நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் அமெரிக்கா பயணம் செய்திருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலில் ஆயிரம் கருத்து வேறுபாடு இருந்தாலும் அண்ணாவைத் தலைவராக ஏற்றுக்கொண்ட நாமெல்லாம் மனிதாபிமான அடிப்படையில் இருக்கவேண்டும். எனவே அந்த அடிப்படையில் முதல்வர் நலம் பெற்று பல்லாண்டு வாழ எல்லோரின் சார்பாகவும் நானும் வாழ்த்துத் தெரிவிக்கிறேன். முதல் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் அமெரிக்கப் பயணம் சென்றதற்காக ரூ. 3.50 இலட்சம் முதற்கண் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது முதற்கண் ஒதுக்கப்பட்ட செலவு. மொத்தம் எவ்வளவு செலவாகியிருக்கிறது அவரோடு யார், யார் போனார்கள் என்ற விவரத்தையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இந்தச் சபைக்குத் தெரியாது.

அதைப் போலவே, இந்த அவையிலேயே ஏற்கனவே ஒரு கேள்வியைக் கேட்டேன். நாவலர் அவர்களும் பதில் சொல்வதாகச் சொன்னார்கள். ஜப்பானிலே கப்பல் வாங்குவதற்காக நம்முடைய முதல்வர், மீன்துறை அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் பலர் போனார்கள். டெக்னிக்கல் எக்ஸ்பெர்ட்ஸ் போனாலே போதும் என்பது என்னுடைய கருத்து. முதல்வரும் மற்றவர்களும் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டுப் போயிருக்கிறார்கள்.. அதற்காக, முதற்கண் ரூ. 3 இலட்சம் செலவு என்று போடப்பட்டது. மொத்தச் செலவு எவ்வளவு என்று கேட்டேன். அதோடு மட்டுமல்லாமல், எத்தனை பேர்கள் முதல்வரோடு போனார்கள் என்ற விவரத்தைக் கேட்டேன், பதில் இல்லை. அங்கேயிருந்து அமெரிக்காவுக்கு முதல்வர், அது போல் மற்றவர்கள் போயிருக்கிறார்கள். அந்தத் தொகை சம்பந்தமான விவரங்களையும் நான் கேட்டேன். அதனுடைய தொடர்புடைய விவரத்தைக் கேட்டேன். இதற்கு அரசாங்கமே செலவழித்திருக்கிறதா என்ற விவரத்தைக் கேட்டேன். நாவலர் அவர்கள் பதில் சொல்வதாகச் சொன்னார்கள், சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1986 நவம்பர் 21] (திரு. அ. ரகுமான்கான்)

அதே போல், அமைச்சர்களுடைய சுற்றுப்பயணம் சம்பந்தமாக கடந்த 9 ஆண்டுக்காலமாக எவ்வளவு தொகை செலவாகியிருக்கிறது என்ற கேள்வியைக் கலைக்கப்பட்ட மேல் சபையிலும் கேட்டிருக்கிறோம், சட்டசபையிலும் கேட்கிறோம். என்ன காரணத்தினாலோ அதற்கான பதில் வர மறுக்கிறது. எனவே, அதுபற்றிய விவரத்தைச் சொன்னால் உதவிகரமாக இருக்கும்; ஆகவே, அதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, அரசாங்க நிர்வாகக் குறை ளைச் சுட்டிக் காட்டுவது உள்நோக்கத்தோடு அல்ல; பல குறைகள் களையப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான். இப்பொழுது இருக்கக்கூடிய இந்த ஆட்சியிலே டெபுடி கலெக்டர் போஸ்ட்கள் 150 இடங்களுக்குக் காலியாக இருக்கின்றன. இன்னும் நிரப்பப்படவில்லை. அதைப் போலவே, சிவில் சர்ஜன் போஸ்ட்ஸ் மருத்துவமனைகளில் 100 இடங்களில் காலியாக இருக்கின்றன, இன்னும் நிரப்பப்படவில்லை, கால்நடை அதிகாரிகள் போஸ்ட்ஸ் 195 காலியாக இருக்கின்றன; நிரப்பப்படவில்லை. அது போலவே, 8-வது மாதம் எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், 7 ஐ. ஏ. எஸ். ஆபீசர்கள் நம்முடைய தலைமைச் செயலகத்தில் சம்பளம் வாங்கிக்கொண்டு, பணியே இல்லாமல் எந்த இலாகாவும் ஒதுக்கப்படாமல் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன், தவறாக இருந்தால் திருத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்வீஸ் கமிஷன் சேர்மன் பதவி காலியாக இருக்கிறது. அதிலே ஒரு மெம்பர் பதவி இன்னும் காலியாக இருக்கிறது. இங்கே கடற்கரைக்குப் பக்கத்திலே, பாரிஸ் கார்னரிலே இருக்கிற ஜார்ஜ் டவுன் கோர்ட்டிலே மாஜிஸ்டிரேட் பதவிகள் 7 காலியாக இருக்கின்றன; இன்னும் நிரப்பப்படவில்லை. சீப் மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்டிரேட்டினுடைய ஜூரிஸ்டிக்ஷனுக்கு உட்பட்ட 26 கோர்ட்டுகளில் 13 கோர்ட்டுகளில் மாஜிஸ்டிரேட்டுகள் போடப்படவில்லை.

அது மட்டுமல்ல, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பதவிகள் 6 காலியாக இருக்கின்றன. நான் கேட்க விரும்புகிறேன், இந்தப் பதவிகள் எல்லாம் நிரப்பப்படாததற்கு என்ன காரணம்? தயவு செய்து சொல்லுங்கள், அரசு ஏன் இதில் அக்கறை செலுத்தவில்லை? ஆக, நிரப்பப்படாத காலி இடங்களை நிரப்புவதற்கு ஏன் இந்தத் தாமதம் என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். இதனால் எவ்வளவு பெரிய நிர்வாகச் சீர்கேடுகள் நடைபெறுகின்றன? வழக்குகள் தேங்கியிருப்பதாலே ஏழை, எளிய மக்களுக்கு எவ்வளவு சிரமங்கள்? இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். வேக்கன்ட் போஸ்ட்ஸ் நிரப்பப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 15 நிமிடம் பேசி விட்டீர்கள். 13 உறுப்பினர்கள் இன்னும் பேச வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 11–10)

திரு. அ. ரகுமான்கான் : கருத்துக்களைச் சொல்லவில்லை, அதற்குள்ளே நீங்கள் மணி அடித்தால் எப்படி? பத்து ஆண்டுக்காலமாக பல கோடி ரூபாய்க்கான பல்வேறு காரியங்கள் நடைபெற்றிருப்பதை எல்லாம் சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது. அதிலே மூன்று பிரச்சினைகளை சொன்னவுடனே மணியடித்தால் என்ன செய்வது? பேச வேண்டாம் என்றால் சொல்லி விடுங்கள், உட்கார்ந்து விடுகிறேன். எங்கள் கட்சியின் சார்பாக ஒரே ஒருவர், நான் மட்டும்தான் பேசுகிறேன். 10 நிமிடமாவது பேச வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேச வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. மற்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். ஆகவே, நீங்கள் பேசுவதைச் சுருக்கமாகப் பேசி முடித்து விடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நான் ஏற்கனவே பல பிரச்சினைகள் பற்றி இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். 'மார்க் லிஸ்ட் ஸ்கான்டல்' பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். நான் நிரூபிக்கத் தயார் என்று சொன்ன மார்க் பட்டியல் குற்றச்சாட்டு நீதி மன்றத்திற்குப் போய், அங்கே 'ஸ்டிரிக்சர்ஸ்' பாஸ் செய்யப் பட்டிருக்கிறது. நான் அந்த அதிகாரியின் பெயரை இங்கே குறிப்பிட விரும்பவில்லை. அதில் சம்பந்தப்பட்ட ஒரு அதிகாரி டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன். அவர் செய்த சேவையைப் பாராட்டி, அவருக்கு 6 மாதம் எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் மீது நடவடிக்கை எடுக்கப் படுவதற்குப் பதிலாக, அவரைப் பாராட்டி 6 மாதம் எக்ஸ் டென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு விவகாரம். பக்கம் 30-ல் சத்துணவு போஸ்டர் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் சத்துணவு மையங்கள் திறக்கப்பட்டபோது முதலமைச்சரும் குழந்தைகளும் சேர்ந்து சத்துணவு சாப்பிடுவது மாதிரி ஒரு போஸ்டர் அடித்து ஒட்டியிருக்கிறார்கள். அதற்கு ஏறத்தாழ 8,06,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசு விளம்பரத்தை விரும்பாத அரசு என்று நம்புகிறேன். அந்தத் தொகையையும் சேர்த்து நல்ல சத்துணவாக, அர்த்தமுள்ள சத்துணவாகக் கொடுத்திருக்கலாம் என்று கருதுகிறேன்.



அடுத்து, கரூர்-திண்டுக்கல்-மதுரை-தூத்துக்குடி அகல இரயில் பாதை போடும் பணி மிகவும் தாமதமாக நடைபெறுகிறது. அதைப்போன்று சென்னை கடற்கரை-மயிலாப்பூர் லஸ் விரைவு இரயில் பாதை அமைக்கும் பணியும் தாமதமாக நடைபெற்று வருகிறது. இதைப் பற்றி எல்லாம் பாராளுமன்றத்தில் எங்கள் கட்சியின் சார்பில் எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு அரசின் சார்பில் அளிக்கப்பட்ட பதில் திருப்திகரமாக இல்லை. இந்தப் பணிகளைத் துரிதமாகச் செய்ய நம்முடைய அரசாங்கம் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

பல்வேறு பஞ்சாலைகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. அந்தத் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். கோவை, மேட்டூர் பஞ்சாலைகளைத் திறக்க இன்னும் முயற்சி எடுக்கவில்லை. அதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தெருவிலே நிற்கிறார்கள்.

அம்பத்தூர் இந்தியா போர்ஜ் தொழிற்சாலை 3 வருஷமாக மூடிக் கிடக்கிறது. 500 தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். அவர்களிலே 13 பேர் இறந்து போனார்கள். அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டும்.

காரைக்குடியில் தமிழ்நாடு கெமிக்கல்ஸ் பிளான்ட் இருக்கிறது. அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஜாயின்ட் செக்டாரில் தொடங்கப்பட்டது. 1,30,00,000 ரூபாய் அப்போதைய மூலதனம், தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. திரு. அனந்தசாமி அவர்களுக்கு அதிலே பங்கு இருந்தது. இந்த அரசு வழக்குப் போட்டது. பின்னர் வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டது. அந்த நிறுவனத்தில் 'டிட்கோ' வுக்குப் பங்கு இருக்கிறது. 53 சதவீதம் டிட்கோவின் பங்கு அதிலே இருக்கிறது. ஆரம்பத்தில் மெதுவாக நடைபெற்று, பின்னால் உற்பத்தி அதிகமாகி, இலாபமும் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இலாபம் வருகிறது. டிட்கோவின் பங்குத் தொகை 1,10,00,000 ரூபாய். ஆகவே, அரசாங்கத்திற்கு இதிலே நல்ல வருமானம் வருகிறது. டிட்கோவிற்கு இருக்கிற ஷேர் 1,10,000. இந்த ஷேர்களை எல்லாம் அரசாங்கம் தனியார்களுக்கு விற்கிறது. அதிலும் மிகக் குறைந்த விலைக்கு விற்கிறது. சுமார் 4 கோடி ரூபாய்க்கு விற்கிறார்கள். நல்லமுறையில் சரியான விலைக்கு விற்றால் 40 கோடி ரூபாய் வரும்.

ஒரு தொழிற்சாலை நல்ல முறையில் இலாபகரமாகச் செயல்படுகிறபோது, உற்பத்தி அதிகமாக வருகிறபோது, அதை ஏன் தனியாருக்குக் கொடுக்க வேண்டும்? கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? அதற்கான பின்னணி என்ன? பத்திரிகையில் வந்திருப்பதால் நான் அதுபற்றிச் சொல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட

*தனி நபருக்கு விற்றிருப்பதாக நான் அறிகிறேன். தனிப்பட்ட
ஒருவருக்கு விற்பனை செய்வதில் என்ன நியாயம் இருக்கிறது
என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.*

அடுத்து, மெக்னீஷியம் மெக்னடைட் பிராஜக்ட் ஒன்று
இருந்தது. அதன் கதி அதோகதியாக இருக்கிறது—சமத்துவம்
பேசுகிறோம்; பொதுவுடைமைப் பூங்கா என்று சொல்கிறோம்.
அதே நேரத்தில் கோடிக்கணக்கில் வருமானம் வரக் கூடிய
நிறுவனத்தை ஒரு தனியாருக்கு விற்கிறோம். இது என்ன
நியாயம்?

இன்னொரு முக்கியமான பிரச்சினையையும் இங்கே குறிப்
பிட விரும்புகிறேன். மாண்புமிகு நாவலர் அவர்கள் அருள் கூர்ந்து
இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
1981 முதல் அரசுப் பணியில் டெம்பரரியாக சுமார் 4,000
ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் எம்பிளாய்
மென்ட் ஆபீஸ் மூலமாக வந்தவர்கள். அவர்களுடைய பணி
நிரந்தரமாக்கப்படும் என்று நம்பி, திருமணம் செய்துகொண்டு,
வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். அவர்கள் பல்வேறு சமயங்
களில் முறையிட்டுக் கொண்டதன் பேரில் 22–9–1984-ல் ஒரு
ஆணை பிறப்பித்தார்கள். ஆணை எண் 996. அதிலே வேடிக்கை
என்னவென்றால் 25–6–1984 அன்று பணியில் இருப்பவர்கள்
மட்டும் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.
25-ந் தேதி டெம்பரரியாக இருக்கிற தட்டச்சர், ஸ்டெனோ
கிராஃபர், ஜூனியர் அசிஸ்டன்ட் போன்றவர்கள் எல்லாம்
இந்த ஆணைப்படி 'பெர்மனன்ட்' ஆவார்கள். ஆனால் 24-ந்
தேதி, ஏற்கனவே சர்வீசில் இருந்த ஒருவர் அன்று மட்டும்
லீவில் சென்றிருந்தால் அவர் நிரந்தரமாக்கப்படமாட்டார்.
அவர் பெர்மனன்ட் இல்லை. ஆகவே, இந்த ஆணையினால்,
பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பாதிப்பைப் போக்கப்
பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்
அமைச்சர் அந்தக் கோரிக்கைகளைக் கருணையோடு பரிசீலித்து
13–5–1985-ல் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்.
வேலை செய்கிறவர்கள் மனு போடுங்கள். விவரத்தைச்
சொல்லுங்கள். உங்களையெல்லாம் பழையபடி அதே இடத்தில்
நிரந்தரமாக ஆக்கி விடுகிறேன் என்று சொன்னார்கள்.
இதுவரைக்கும் அவர்கள் தெருவிலேதான் நிற்கிறார்கள். ஆனால்
மணம் ஆகி பலபேர்கள் குடும்பம் நடத்த முடியாமல் கஷ்டப்
படுகிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரமாக்குவதற்கு
இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த
நேரத்தில் வைக்க விரும்புகிறேன்.

அதேபோல இன்னொரு முக்கியமான பிரச்சினையைச்
சொல்ல விரும்புகிறேன். நம்முடைய உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, புதுச் சட்டம்
ஒன்று கொண்டு வந்து தேர்தலை நடத்தப் போகிறோம் என்று
சொல்லிவிட்டு, மேயருடைய பதவிக் காலத்தை 6 ஆண்டு



களாக ஆக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். முன்னாள்
உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கேயே தான் இருக்
கிறார்கள். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்
போது மேயருடைய பதவிக் காலம் 5 ஆண்டு என்று இருந்தது.
அதை ஒரு சட்டம் கொண்டு வந்து 4 ஆண்டுகள் என்று ஆக்கி
னார்கள். அதற்குப் பிறகு இன்னொரு சட்டம் கொண்டு வந்து
3 ஆண்டுகள் ஆக்கினார்கள். அன்றைய உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்களைக் கேட்ட போது, குறுகிய காலம் பதவி
யில் இருந்தால்தான் சிறப்பாகச் செயல்பட முடியும் என்று சொன்
னார்கள். ஐந்தை 4 ஆக ஆக்கி, நான்கை 3 ஆண்டுகளாக
ஆக்கிவிட்டு, இப்போது மேயருடைய பதவிக் காலத்தை 6
ஆண்டுகள் ஆக்கப் போகிறோம் என்று சொல்லுகிறீர்களே, அப்
போது, அதிகக் காலம் இருந்தால்தான் சிறப்பாகச் செயல்பட
முடியுமா, குறைந்த காலம் இருந்தால் சிறப்பாகச் செயல்பட
முடியுமா என்பதை இந்த அரசாங்கம்தான், முரண்பாடுகளுக்குப்
பேர்போன அரசாங்கம்தான் எனக்குத் தெரிவிக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன்.
மயிலாடுதுறைக்கும், திருவள்ளூர் ஒன்றியத்திற்கும் தேர்தலை
நடத்துவதிலே என்ன தடை? விரைவிலே தேர்தலை நடத்த
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு இந்திரா
காங்கிரஸ் நண்பர்கள் எங்களுடன் ஒத்துழைப்பார்கள் என்று
நம்புகிறேன். சேலத்திலே கூடி அவர்கள் ஒரு தீர்மானமே
போட்டிருக்கிறார்கள். அகில இந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி
யில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் மற்றும் நகராட்சித்
தலைவர்களுடைய அதிகாரம் பறிக்கப்படுகிறது. 1958-வது
வருட சட்டத்தை அரசு சீர்குலைக்கிறது என்று சொல்லி விட்டு,
ஆகவே எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று அவர்கள்
சொல்லலாம், அது வேறு விவகாரம். ஆனால் அதே நேரத்தில்
அவர்கள் எங்களோடு சேர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்
கள் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான விஷயத்தையும் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
இங்கே ஒரு பத்திரிகையில் அரசாங்கத்தின் சார்பாக முதலமைச்சர்
அவர்கள் கையெழுத்துப் போட்டு ஒரு விளம்பரம் வந்திருக்கிறது.
அதை உங்கள் அனுமதியோடு படிக்கிறேன்.

''மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்
கள் விடுக்கும் முக்கிய அறிவிப்பு: அரசு நிர்வாகத்தில் சம்பந்தம்
இல்லாத யாருடைய குறுக்கீட்டையும், தலையீட்டையும் நான்
எப்போதும் விரும்புவதில்லை. எனது மனைவியாகவே இருந்
தாலும் அல்லது எனது உறவினர் என்று சொல்லப்படுபவராக

இருந்தாலும், அவர்களுக்கும் இது பொருந்தும். அமைச்சர்களேயானாலும் சரி, தலைமைச் செயலாளர், அரசு உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகள் யாராக இருந்தாலும் சரி என்னுடைய அபிப்பிராயத்தை அறிந்து நடக்க வேண்டும்'' என்று 13–6–1986 அன்று ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். நான் கேட்பது எல்லாம், இந்த அறிக்கையை வெளியிடுவதற்கு அவசியம் என்ன ஏற்பட்டது? அப்படியானால் கடந்த 9 ஆண்டுக் காலத்திலே முதலமைச்சருடைய அபிப்பிராயத்தை ஏற்று, அமைச்சர்களும், அதிகாரிகளும் நடக்கவில்லையா? அப்படி நடந்திருந்தார்கள் என்று சொன்னால் இந்த அறிக்கை வருவதற்கு என்ன அவசியம்— என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன், நம்முடைய உள்துறையின் ஆணையர் மற்றும் செயலாளர் அவர்கள் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே சொல்லுகிறார்கள். ''இங்கே முதலமைச்சருடைய கையெழுத்து இட்டு—போலியான கையெழுத்து இட்டு—பல பேர் வேலைக்கு சிபாரிசு செய்தும், டிரான்ஸ்பர் வேண்டும் என்று சிபாரிசு செய்தும், பைனான்சியல் அஸிஸ்டன்ஸ் கேட்டும் பல சிபாரிசுகள் வருகின்றன. எனவே அதிகாரிகள் எல்லாம் அந்தப் போலித்தனமான கடிதங்கள் குறித்து முதலமைச்சரைக் கலந்து கொண்டுதான் காரியங்கள் ஆற்ற வேண்டும் என்று உத்திரவு போடப்பட்டிருக்கிறது.''

நான் கேட்கிறேன். இதிலே நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திடீர், திடீர் என்று இந்த உத்திரவு வருகிறது. இப்படி திடீர், திடீர் என்று உத்திரவு வருகிறது என்று சொன்னால், இதுவரையில் அரசாங்க முத்திரையிட்டு, முதலமைச்சர் கையெழுத்திட்டு இது மாதிரி சுற்றறிக்கை வந்து, பல்வேறு குறிப்புகள் வந்து, கடிதங்கள் வந்து பல பேர்களுக்கு டிரான்ஸ்பர் போடப்பட்டு இருக்கிறதா, இல்லையா? அதை எப்படிக் கண்டு பிடிப்பது? பல பேர்களுக்கு அப்பாயின்ட்மென்ட் கொடுக்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்று எப்படிக் கண்டுபிடிப்பது? பைனான்சியல் அஸிடன்ஸ் கேட்டு—இது கூடப் புரியவில்லை, நிதியமைச்சர் தான் விளக்க வேண்டும். ஒரு கடிதத்தின் மூலம் பைனான்சியல் அஸிடென்ஸ் டிபார்ட்மென்ட் மூலம் கொடுக்க முடியாது—வந்ததற்கு உதவி கொடுக்கப்பட்டதா, இல்லையா என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது? அப்படியானால் இது குறித்து இந்த அரசாங்கம் என்ன செய்கிறது? நிர்வாகம் எப்படி இருக்கிறது என்பதற்கு அடையாளம்தான் இது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டும் அல்ல, நம்முடைய முன்னாள் சீஃப் செகரட்டரி திரு. அந்தோணி அவர்கள் திடீர் என்று மாற்றப்படுகிறார்கள். என்ன காரணம் என்று கேட்டால், அதைப்பற்றிக்





கூறப்படுவது, அரசியல் சட்டத்தினுடைய விதி முறைகளின்படி,
கேபினட் மீட்டிங் கூடினால் அதன் மினிட்ஸை, அரசாங்கத்
தின் கொள்கை விளக்கங்களை கவர்னர் அவர்களுக்குத் தெரி
விக்க வேண்டும், அதன்படி அவர் எல்லாம் சரியாகச் செய்
திருப்பார் என்றுதான் நான் கருதிக் கொண்டு இருந்தேன். ஆனால்
அவர் அதைத் தெரிவிக்கத் தவறி விட்டார், ஆகவே
அவர் நீக்கப்படுகிறார் என்ற முறையிலே திடீர் என்று அவர்
நீக்கப்பட்டிருக்கிறார்.

(முற்பகல் 11–20)

ஆனால் இந்தக் கருத்து ஆளுநர் அவர்களிடத்தில் தெரிவிக்கப்
பட்டிருக்கிறது. ஆளுநர் அவர்களை விவாதத்தில் கலக்கக்
கூடாது. ஆனால் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அரசாங்
கத்தினுடைய கேபினட் மீட்டிங்கில் எடுக்கக்கூடிய கொள்கை
முடிவுகள் எனக்கு தெரியவில்லை, (I am k pt in the dark)
என்று ஆளுநரே சொல்கிறார் என்றால், ஆளுநர் எப்படி நிர்
வாகம் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது என்று சொல்கிறார் என்று
நான் சொல்லக் கூடாது. கடிதப் போக்குவரத்தை வைத்துதான்
பேசுகிறேன். தேவைப்பட்டால் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்து
விடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே,
நம்முடைய கல்வித் துறையில் ஒரு முக்கியமான குற்றச்சாட்டை
நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வடாற்
காடு மாவட்டத்தில் சாரண சாரணியர் இயக்கக் கட்டடத்
திற்கு நன்கொடை வசூலிப்பதற்கு அரசாங்கம் உத்தரவு போட
வில்லை. அந்த டிபார்ட்மென்ட் உத்தரவு போடவில்லை.
அதற்கு ஒரு கமிட்டி இருக்கிறது. அவர்களும் அனுமதி கொடுக்க
வில்லை. ஆனால் அந்த சி.இ.ஓ. 2–6–1986 அன்று
உத்தரவு போட்டிருக்கிறார். அதற்கான காப்பியை வைத்திருக்
கிறேன். மாணவர்களிடத்தில் லாட்டரிச் சீட்டு 2 ரூபாய் என்று
கையெழுத்தே இல்லாமல் விற்று பல இலட்ச ரூபாய் வசூல் செய்
யப்பட்டிருக்கிறது. இன்னும் பணிவோடு இந்த அரசாங்கத்தின்
கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதுபோன்ற
ஊழல் நடந்திருக்கிறது. ஒரு சி.இ.ஓ. அதைச் செய்திருக்கிறார்,
இதை அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்டினால் அதற்கு நடவடிக்கை
எடுத்திருக்கிறார்களா என்றால், சாதாரணமாக அவரை ட்ரா
ட்ரான்ஸ்பர் செய்திருக்கிறார்களே தவிர வேறு நடவடிக்கை
இல்லை. இந்த லாட்டரிச் சீட்டு விற்பனையில் யார் யார் சம்
பந்தம்? யார் யாருக்குப் பங்கு? பின்னணியில் இருப்பவர்கள்
யார்? எவ்வளவு கொள்ளையடிக்கப்பட்டது? அந்த லாட்டரிச்
சீட்டைக் கூட இங்கே நான் கொண்டு வந்திருக்கிறேன். மாண்பு
மிகு நாவலர் அவர்களிடத்தில் அதைக் கொடுக்கக் கூட நான்
தயாராக இருக்கிறேன்.

அடுத்து அரசாங்க நிர்வாகத்தில் நடைபெறுகிற தவறுகளை
இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மதுரை, இராஜாஜி
மருத்துவமனையில் டெலிபோன் ஆபரேட்டர் போஸ்டிற்கு ஒரு
இண்டர்வியூ நடைபெறுகிறது. தகுதியுள்ளவரைத் தேர்ந்
தெடுக்க வேண்டும். அங்குள்ள டீனும் மற்றவர்களும். அவர்
டெலிபோன் ஆப்பரேட்டர் பயிற்சிக்கான சர்டிபிகேட்டை, இன்ஸ்
டிடியூஷனில் கொடுத்ததைக் கொடுக்கிறார். அந்த இன்ஸ்டிடி
யூஷன் ரெகக்னைஸ்ட் ஆகவில்லை. அது டவுட்டாக இருக்கிறது.
ஆனாலும் அவருக்கு அப்பாயிண்ட்மென்ட் கொடுத்து விடுகிறார்
கள். பெயரை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. அவருக்கு
அப்பாயிண்ட்மென்ட் கொடுத்து விடுகிறார்கள். இது அரசாங்
கத்தின் கவனத்திற்கு வருகிறது. இங்கே இருக்கிற நம்முடைய
டைரக்டர் ஆப் எம்பிளாய்மென்ட் அண்ட் டிரெயினிங்கிற்கு,
கடிதம் மூலம் அவருடைய சர்டிபிகேட் சம்பந்தமாக டவுட்
வருகிறது, அது ரெககனைஸ்டாகத் தெரியவில்லை என்று தெரி
விக்கிறார்கள். தகுதியுள்ள மற்றவர்களை விட்டு விட்டு, அவ
ருக்குத் தகுதியிருக்கிறது என்று வேலை கொடுக்கிறார்கள்.
ஆனால் சர்டிபிகேட்டே டவுட். பின்னால் அவரை வேலை
யிலிருந்து நீக்கி விடுகிறார்கள். அப்படி நீக்கியதற்குப் பிறகு
அவர் அப்பீல் செய்கிறார். அவர் அப்பீல் யாருக்கு செய்கிறார்
என்றால் இங்கேயிருக்கக்கூடிய சென்னை, டைரக்டர் ஆப் மெடிக்
கல் எஜூகேஷனுக்கு. அப்படி அப்பீல் செய்கிற காலகட்டத்தில்
இடையில் அவர் திருப்பரங்குன்றம் போய் இன்னொரு சர்டிபி
கேட்டை வாங்கிக் கொண்டு வந்து விடுகிறார். அந்த சர்டிபி
கேட்டை அதிகாரிகளிடம் கொடுத்திருக்கிறார். டி.எம்.இ. அலு
வலகத்தில் அப்பீல் இருக்கிறபோது அந்த சர்டிபிகேட்டை
வாங்கி வந்து கொடுத்திருக்கிறார். அந்த சர்டிபிகேட்டை
எங்கே வாங்கியிருக்கிறார் என்றால் மீனாட்சி தொழிற் பயிற்சிப்
பள்ளி. இந்தப் பள்ளி யாருக்கு என்று கேட்டால் பெண்களுக்கு.
வேட்பாளர் ஆணா பெண்ணா என்று கேட்டால் ஆண். இப்படி
பெண்களுக்கென்று இருக்கிற ஒரு அமைப்பிலே சர்டிபிகேட்
வாங்குவதற்கு இவர் எப்படி பெண்ணாக மாறினாரோ தெரி
யாது. அங்கேயிருந்து சர்டிபிகேட்டை வாங்கிக் கொடுத்திருக்
கிறார். உடனே டி.எம்.இ. உத்தரவு போடுகிறார். டீன் அவரை
நீக்கியது தவறு என்றும், பழையபடி அவரை வேலையில் சேர்த்
துக் கொள் என்றும் சொல்கிறார். ஆகவே நான் தெரிவிக்க
விரும்புகிறேன், நிர்வாகத்தில் இதுபோன்ற பல உதாரணங்களைச்
சொல்லலாம். நீங்கள் அனுமதித்தால் இன்னும் பேசலாம்.
ஆனால் நேரம் கருதிப் பேசவில்லை. இவற்றுக்கெல்லாம் நாவலர்
அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேற்றையதினம்
உறுப்பினர் திரு.சைதை சா. துரைசாமி அவர்கள் மின்வாரிய
நிதிநிலை அறிக்கையில் பேசும்போது "என்.சி.பி.எச்." என்ற
நிறுவனம் சம்பந்தமாக சில கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள்.
அதை மறுத்து உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களும் கருத்துக்





களைத் தெரிவித்தார்கள். திரு. சைதை சா. துரைசாமி தாம் கூறிய குற்றச்சாட்டை நிரூபிக்க சான்றுகள் கொடுப்பதாகக் கூறினார்கள். இதில் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஒரு தனிப்பட்ட நிறுவனத்திற்கு வெளி நாட்டு நிதியுதவி பற்றி இருப்பதால் அதுகுறித்து நம்முடைய பேரவை ஒரு முடிவிற்கு வர முடியாது என்பதாலும், மேலும் இது மின்வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்தோடு ஒட்டியதல்ல என்பதாலும் இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் பேசிய பேச்சுக்களின் பகுதிகள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறுகின்றன.

* திரு. மு. மரிமுத்து : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கையின் மீது, மதிப்பீடுகளும் அந்தச் செலவுகளுக்கான கோரிக்கைகளும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் இங்கே சமர்ப்பிக்கப் பட்டு இருக்கின்றன. இதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். அரசு தீவிரமாகச் செயல்படுகின்ற காரணத்தாலும், எதிர்பாராமல் ஏற்படுகின்ற வளர்ச்சிப் பணிகளாலும், இப்படிப் பட்ட கூடுதல் செலவுகள் எல்லா அரசாங்கத்திலும் ஏற்படும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

இங்கே இருக்கக்கூடிய மதிப்பீடுகளையும், அதற்கான கோரிக்கைகளையும் நாம் சிறிது உற்று நோக்குவோமேயானால், அரசு பொதுமக்களுடைய பிரச்சினைகளை, சமூகப் பிரச்சினைகளை எவ்வளவு தீவிரமாக, நுணுக்கமாக அணுகுகிறது என்பதை மிகத் தெளிவாக அறியலாம். குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால், "தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு வீடு கட்டுகின்ற பணி." அந்தத்தாயகம் திரும்பிய தமிழர்களுக்குக் கடன் வழங்கி, அரசு வீடு கட்டிக் கொள்ளச் சொல்கிறது. ஆனால் அந்த வீடு கட்டுகின்ற பணியில் ஈடுபடுகிற பல ஒப்பந்தக்காரர்கள் அந்தத் தாயகம் திரும்பிய தமிழர்களுடைய அறியாமையையும், இயலாமையையும் பயன்படுத்தி, ஊடே புகுந்து அவர்களுக்குக் கெடுதி செய்கிறார்கள். அவர்களுடைய பணத்தைப் பறித்துக் கொள்கிறார்கள், வீடு கட்டி, அவர்களிடம் ஒப்படைக்காமல் இருந்துவிடுகிறார்கள். எனவே இதையெல்லாம் கவனத்தில் கொண்டு, குறையைத் துடைக்கின்ற எண்ணத்தோடு, மதுரையில் விளாங்குடிப் பகுதியில் சுமார் 792 வீடுகள், வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு, அந்த வீடுகளை இந்தத் தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு அளிப்பதற்காக அரசு சுமார் 1 கோடியே 11 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. அப்படி ஒதுக்கியதற்காக அனுமதி கோரி இருக்கிறது. நான் எதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், தாயகம் திரும்பிய தமிழர்களின் பால் மாண்புமிகுஇதய தெய்வம் புரட்சித் தலைவருடைய அரசு எந்த அளவிற்கு அக்கறையும் கருணையும் கொண்டு இயங்குகிறது என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் இந்த நிகழ்ச்சி அமைகிறது என்று சுட்டிக் காட்டத்தான்

[திரு. மு. மாரிமுத்து] [1986 நவம்பர் 21]

குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால், மதுரையிலே திருப்
பரங்குன்றம் தொகுதியைச் சேர்ந்த தனக்கன்குளம் கிராமத்
திலே இருக்கக்கூடிய பி. ஆர். சி. காலனியில் சுமார் 100,
150 தாயகம் திரும்பிய தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்
களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளில் அவர்களைக் குடியமர்த்த
இன்றும் அந்த ஒப்பந்தக்காரர்கள் மறுக்கிறார்கள். எவ்
வாறோ ஏமாற்றி, அந்தத் தமிழர்களிடமிருந்து பணத்தைப்
பெற்று, அதற்கான கடனைப் பெற்று, அந்த வீட்டைக்கட்டி
முடித்த பிறகும் அந்த வீட்டை ஒப்படைக்க மறுக்கிறார்கள்.
நான் கூட பல முறை அதற்காக மாவட்ட ஆட்சியரை அணுகிய
போது, மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நடவடிக்கை
எடுப்பதாக உறுதி தந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை
இருக்கிறது என்பதையும், அதைப் போக்குவதற்காகத்தான்
தமிழக அரசு முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறது
என்பதையும், நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு
இருக்கிறேன்.

அடுத்து மதுரை நகரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு.
அந்த மாநாடு நடைபெற்ற நேரத்திலே குடிநீர்ப் பிரச்சினைக்காக
ஏறத்தாழ 54 லட்ச ரூபாயை இந்த அரசு ஒதுக்கியது. அப்படி
ஒதுக்கப்பட்ட பணம் இன்று செலவழிக்கப்பட்டு, மதுரை
மாநகராட்சியினுடைய குடிநீர்ப் பிரச்சினையை ஓரளவு
தீர்த்து வைத்திருக்கிறது. ஒரு விழாவை நடத்துகின்றபோது
அந்த நகரத்தில் இருக்கக்கூடிய வளர்ச்சிப் பணிகளையும் எண்ணிப்
பார்க்கின்ற அரசுதான் தமிழகத்திலே ஆட்சி நடத்திக் கொண்டி
ருக்கிறது என்பதை நிரூபிக்கின்ற வகையில் இந்த நிகழ்ச்சி
அமைகிறது. இந்த 54 லட்ச ரூபாய் பணத்திலே பாதிப் பணத்தை
ஏறத்தாழ 27 லட்ச ரூபாயை, மானியமாக வழங்குவதற்கு
அரசு முன் வந்திருக்கிறது. அதே நேரத்தில் மீதம் இருக்கக்கூடிய
27 லட்ச ரூபாயைக் கடனாகத் தரவேண்டும் என்று சுட்டிக்காட்
டப்படுகிறது. நான் மிகப் பணிவோடு நமது இதயதெய்வம்
புரட்சித் தலைவர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துக்
கொள்கிறேன். மதுரை மாநகராட்சியில் நிதிநிலை
பற்றாக்குறையாக இருக்கிறது. வளர்ந்து வருகின்ற அந்த
மாபெரும் நகரம் இன்னும் நிதி வசதி போதாத நிலையில்
இருக்கிறது. எனவே அதைக் கருத்தில் கொண்டு, மீதம்
இருக்கக்கூடிய அந்த 27 லட்ச ரூபாயை மானியமாகக் கொடுத்து
விடுவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் பணிவன்போடு
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மதுரையில் இப்போது ஒரு பிரச்சினை. மதுரை மாநக
ராட்சி, மதுரை மின்சார இலாகாவிற்குப் பணம் செலுத்த
வேண்டியிருக்கிறது. அந்த பாக்கியை செலுத்த முடியாத
காரணத்தாலே மதுரை மின்சார இலாகா, மதுரை மாநக
ராட்சிக்கு இனிமேல் மின் சப்ளையை நிறுத்துவோம் என்று
சொல்கிறது. இது எந்த வகையிலே நியாயம் என்று எனக்குப்



1986 நவம்பர் 21] [திரு. மு. மாரிமுத்து]

புரியவில்லை. மதுரை மாநகராட்சியிலே வசிக்கக்கூடிய மக்கள்,
மதுரையிலே உபயோகப்படுத்துகின்ற அந்த மின்சாரத்திற்கான
பணத்தை மாநகராட்சிக்கு வரியின் மூலமும், கட்டண
மாகவும் செலுத்திவிடுகிறார்கள். அந்தப் பணம் மதுரை
மின்சார இலாகாவிற்குச் சேரவில்லை என்ற காரணத்
மதுரை மாநகராட்சிக்குத் தருகின்ற மின்சார சப்ளையை
நாங்கள் நிறுத்துவோம் என்று சொல்கிறார்கள் என்று சொன்
னால், இதனால் பாதிக்கப்படப்போவது மக்கள். எனவே
அது எந்த வகையிலே நியாயம் என்று எனக்குப் புரியவில்லை.

(முற்பகல் 11–30)

எனவே அரசு உடனடியாக இதிலே தலையிட்டு இந்தப்
பிரச்சினையை சுமுகமாக முடித்துத் தர வேண்டும் என்று நான்
பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர்
அவர்கள் சரித்திரம் படைக்கக்கூடிய சத்துணவுத் திட்டத்தைக்
கொண்டு வந்துள்ளார். அந்தச் சத்துணவு திட்டத்திற்காக
அரசு பல்வேறு கிராமங்களிலும், பல்வேறு நகரங்
களிலும் நல்ல பல கட்டிடங்களைக் கட்டிக்கொடுத்து
இருக்கிறது. அந்தக் கட்டிடங்கள் பழுதுபடாமல்
இருப்பதற்கு அவை மீண்டும் புதுப்பிக்கப்படுவதற்கு ஒரு சீரான
திட்டத்தையும் அதற்கான செலவினங்களையும் இந்த நிதி
நிலை அறிக்கை தாங்கிக் கொண்டு இருக்கிறது. சிறந்த முறை
யில் இருக்கக்கூடிய அந்தச் செலவினத்தையும் நான் வரவேற்
கிறேன். அதே நேரத்தில் இந்தச் சரித்திர முக்கியத்துவம்
வாய்ந்த மிகச் சிறந்த திட்டத்திலே பணியாற்றுகின்றவர்கள்
இன்னும் குறைந்த சம்பளத்தில் தான் இருக்கிறார்கள்.
அந்தச் சம்பளத்தை வைத்துக்கொண்டு அவர்கள் வாழ்க்கையை
நடத்த முடியவில்லை. எனவே அவர்களுக்குச் சம்பளம்
சிறிது உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று
நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே கூட்டுறவுத்துறையிலே நியாய விலைக்
கடைகளைப் பற்றி இங்கே பெருமையோடு நாம் சுட்டிக்காட்டு
கிறோம். கடந்த 7 ஆண்டுக் காலமாக தமிழகத்தில் அத்தியா
வசியப் பண்டங்கள், அத்தியாவசிய உணவுப் பொருட்களின்
விலைகள் ஏறவில்லை. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத
சிறப்பு இது. வேறு எந்த மாநிலத்திற்கும் இல்லாத ஒரு
பெருமை இந்தத் தமிழகத்திற்கு உண்டு என்று சொன்னால்
மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி
யில் விலைவாசி உயர்வு அதிகமாக இல்லை. இதற்குக் கார
ணம் நாம் வலை போல ஒவ்வொரு கிராமத்திலும் நியாய
விலைக் கடைகளை நிறுவி இருக்கிறோம். அதன் மூலம்
உணவு விநியோகத்தைச் சீராக நாம் செய்து கொண்டு இருக்

[திரு. மு. மாரிமுத்து] [1986 நவம்பர் 21]

கிறோம். எனவே இந்த உணவுப் பிரச்சினையில் விலைவாசி உயர்வு என்ற பிரச்சினையே எழாது என்று உறுதியோடு இருக் கிறோம். ஆனால் அந்த உணவுப் பண்டங்கள் வினியோகிக்கக் கூடிய கூட்டுறவு விற்பனை அகங்களில் வேலை பார்க்கக்கூடிய விற்பனையாளர்களுக்குச் சம்பள விகிதம் மிக மிகக் குறைவு. சாதாரணமாக ஒரு விற்பனையாளருக்கு மாதத்திற்கு 200 ரூபாய் தான் சம்பளம் கொடுக்கிறார்கள். இந்தத் தொகை நிச்சயமாகப் போதாது. எனவே இதையும் சிறிது அதிகமாக்கி 300 ரூபாயா வது கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தக் கூடுதல் செலவினத்திற்கான மானியக் கோரிக்கையில் குடிநீர் வசதிக்காகவும், பல்வேறு மாநகரங்களில் எதிர்பாராமல் ஏற்படுகின்ற வறட்சிப் பணிகளுக்காகவும் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. மதுரை திருப்பரங்குன்றம் தொகு தியில் திருப்பரங்குன்றம், அவனியாபுரம், திருநகர் போன்ற பேரூராட்சிகளை வறட்சி மிகவும் பாதித்து இருக்கிறது. குடி நீர்ப் பிரச்சினை அங்கே பூதாகாரமாக உருவெடுத்து இருக்கிறது. திருநகர் பேரூராட்சியைப் பொறுத்தவரையில் இன்னும் குடிநீர் சரியான முறையில் வினியோகிக்கக்கூடிய சூழ்நிலை இல்லை. எனவே அந்தத் திருநகர் குடிநீர்ப் பிரச்சினையை அரசு பரி வோடும், கனிவோடும் நோக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். திருப்பரங்குன்றம் பேரூராட்சியைப் பொறுத்த வரையில் ஏற்கனவே 9 ஆழ் குழாய்க் கிணறுகள் விராட்டிபத்து என்னும் பகுதியில் போடப்பட்டு இருக்கின்றன. அதிலிருந்து திருப்பரங்குன்றம் பேரூராட்சிக்குக் குடிநீர் சப்ளை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த 9 ஆழ் குழாய்க் கிணறுகளில் ஏறத்தாழ 7 கிணறுகள் தற்போது சரியான முறையில் வேலை செய்யவில்லை. அதில் தண்ணீர் வற்றிவிட்டது. அங்கே இருக் கக்கூடிய மோட்டார் பம்பு செட்டுகள் சரியான முறையில் வேலை செய்யவில்லை. இந்தக் குறைபாட்டை நீக்கித் தர வேண்டும். இன்னும் அதிகமான அளவில் அந்தத் திருப்பரங் குன்றம் பேரூராட்சிக்குக் குடிநீர் வசதி செய்து தரவேண்டும் என்று நான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அரசை மீண்டும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள் கிறேன். அவனியாபுரம் நகரத்தைப் பொறுத்த வரையில் குடிநீர்ப் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. அவனியாபுரம் பேரூராட்சிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதற்கு ஏறத்தாழ ஒரு லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் 2 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டு அதற்கான பூர்வாங்க வேலைகள் கூட இன்னும் செய்யப்படாமல் இருக்கின்றன. எனவே அந்த வேலைகளைத் துரிதப்படுத்தி அவனியாபுரம் பேரூராட்சிப் பகுதிக்கு விரைவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கின்ற வகையில் ஒரு சிறந்த திட்டத்தை மிக விரைவாக உருவாக்கித் தருவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்



1986 நவம்பர் 21] [திரு. மு. மாரிமுத்து]

கொள்கிறேன். நல்ல பணிகளுக்காக அதன் செலவினத்திற்காக தொகையை ஒதுக்கி உள்ள இந்தத் துணை மானிய கோரிக்கையை வரவேற்று அமைகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அவைமுன் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்திருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மிக வேக மாக மாறி வருகின்ற நிலைமையில் புதிய வளர்ச்சித் திட்டங்கள் காரணமாக இந்த அனுமதிகள் அவசியமாகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நியாயமான காரணங்கள் தான். இந்தத் திட்டங்களைச் செயற்படுத்தவும், அமல்படுத்தவும் இந்த அரசு எடுக்கும் நிலைபாடுகள் குறித்து இந்த நேரத்தில் விளக்க நான் முயற்சி செய்கிறேன். குறிப்பாக மிக வேகமாக மாறி வரக் கூடிய நிலைமை என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழகத்திலே, கிராமங்களிலே சகலத்திலே அடிமட்டத்திலே இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்கள், ஆண்களும், பெண்களுமாக சுமார் 60 இலட்சம் பேர்கள் தினக் கூலிகளாக விவசாயத்தில் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்பை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வேகமாக மாறி வரக் கூடிய சூழ்நிலை அவர்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கிறது என்பதை நம்முடைய அரசு கவனத்தில் எடுக்கவில்லை என்ப தைத்தான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறைந்தபட்சக் கூலி அவர்களுக்கும் தீர்மானிக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இப்போது 3 ஆண்டுகளுக்கு மேலாகியும், அந்தக் கூலியைப் பற்றி மறுபரிசீலனை செய்து, அவர்கள் இன்று பெறக்கூடிய கூலியை உயர்த்தவும், அவர்க ளுடைய வேலையைப் பாதுகாக்கவும், உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லை, எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி இருக்கக் கூடிய கூலியைப் பரிசீலனை செய்வதற்கு முன்னாலே, இன்றைக்கு இருக்கக் கூடிய கூலியைக் கூட அமலாக்க எந்தவிதமான உத்தரவாதமான நிர்வாக ஏற்பாடுகளும் ஏற்படுத்தப்படவில்லை. அதோடு மட்டுமல்லாமல் சட்டக் கூலி யைக் கேட்டால் ஏராளமான பொய் வழக்குகள் அந்த விவ சாயத் தொழிலாளர்கள் மீது போடப்பட்டு, அவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள், அல்லல்களுக்கு ஆளாக்கப் படுகிறார்கள்.

[திரு. கோ. வீரய்யன்] 1986 நவம்பர் 21]

அடுத்து அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய குடிசை
களுக்கு எல்லாம் தீ வைக்கப்படுகிறது. ஊரை விட்டு விரட்டப்
படுகிறார்கள். இப்படித் தொடர்ந்து வரக் கூடிய நிகழ்ச்சியாக
இருக்கிறது. சமீபத்திலே கூட, திருச்சி மாவட்டம், லால்குடி
வட்டம், நெற்குப்பை கிராமத்திலே 9—9—1986-ல் பட்டப்
பகலிலே இந்த விவசாயத் தொழிலாளர்கள் கூலி கேட்ட
காரணத்தாலே ஏறத்தாழ 400 வீடுகள் வரையில் தீ வைக்கப்
பட்டு எரிக்கப்பட்டன. கூலி கேட்ட ஒரு காரணத்திற்காக
ஒரு பெண்ணும்கூட வெந்து மாண்டாள். திருச்சி மாவட்ட
ஆட்சித் தலைவர் அறிக்கைப்படி, 16 இலட்சம் மதிப்பளவில்
பொருட்சேதங்கள் அங்கு ஏற்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட
நிலைமை அந்த விவசாயத் தொழிலாளர்கள் கூலி கேட்டதனால்
ஏற்பட்டது. சட்டப்படி கூலி கேட்டு, ஒரு பேச்சுவார்த்தை
நடந்து, 2—9—1986 அன்று அதிகாரிகளுக்கு முன்னால் நிலச்
சுவான்தார்களையும், விவசாயத் தொழிலாளர்களையும்
வைத்துப் பேசி சட்டப்படி கூலி கொடுப்பது என்று அவர்கள்
ஒத்துக்கொண்டு, பிறகு அவர்களை ஊரை விட்டு விரட்டி
விட்டார்கள். இந்தத் தகவல் சமயபுரம் காவல் நிலையத்திலே
2—9—1986 அன்று கொடுக்கப்பட்டது. அப்படி கொடுக்கப்
பட்ட பிறகும்கூட, 9—9—1986-லே 400 வீடுகள் வரையில்
தீ வைக்கப்பட்டு எரிக்கப்பட்டன. அதனால் 16 இலட்சத்திற்கும்
மேற்பட்டசொத்துக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில்
12—9—1986 அன்று அரசுக்கு நாங்கள் கூறினோம். இதற்கு
ஒரு நீதி விசாரணை வேண்டும். காரணம், கூலி கேட்டாலோ,
அல்லது சமூகக் கொடுமைகளை ஏற்க மறுத்தாலோ வீட்டோடு
எரித்து, உயிரோடு கொளுத்துவது அல்லது ஊரை விட்டு
விரட்டுவது போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் தொடர்ந்து நடந்து
வருகின்றன. அதை இன்றிருக்கக் கூடிய சட்டங்களால் தடுக்க
முடியவில்லை. எனவே இவற்றுக்கெல்லாம் நீதி விசாரணை
நடைபெறுமானால், அதிலே ஒரு வழிகாட்டி நெறிமுறை
இந்த அரசுக்குக் கிடைக்கும். எனவே இப்படிப்பட்ட நடவடிக்
கைகளை எதிர்காலத்திலாவது விவசாயத் தொழிலாளர்கள்
கூலி கேட்கும்போது அரசு அறிவித்து, சட்டப்படி கூலி கேட்கும்
போது,அவர்கள் மீது சுமத்தப்பட்ட பழிகள், கொடுமைகளிலிருந்து
அவர்களை எப்படிப் பாதுகாக்கவேண்டுமென்பதற்கு ஒருடைரக்டி
வாக நீதி விசாரணை நடத்தவேண்டும். எனவே நீதி விசாரணை
நடத்தவேண்டும் என்று கூறி இருந்தோம். ஆனால் இதுவரையில்
எந்த உத்தரவாதமும் கொடுக்கப்படவில்லை. நடவடிக்கை
களும் எடுக்கப்படவில்லை. நெற்குப்பையில் வீடுகள் எரிக்கப்
பட்டு உயிரோடு கொளுத்தப்பட்டு,அதிலே ஒரு பெண் மாண்டாள்
என்பதையும் கருத்தில்கொண்டு, அதை நிச்சயமாக அரசு
பரிசீலனை செய்து நீதி விசாரணை ஏற்படுத்தமுடியும். தமிழ
கத்தில் உள்ள 60 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கும்
இது உதவியாக இருக்கும் என்று சொல்லி, இதை அரசினுடைய
கவனத்திற்குக் கொண்டு வந்து, வற்புறுத்த விரும்புகிறேன்.



1986 நவம்பர் 21] [திரு. கோ. வீரய்யன்]

அடுத்தபடியாக இன்னொரு முக்கியமான பிரச்சினை. இந்த
அரசு சமீபத்தில் விவசாயிகள் பட்டிருக்கக்கூடிய கடனுக்கு
வட்டி நிவாரணம் அளிக்கிறோம் என்று அறிவித்திருக்கிறது.
அது சம்பந்தமாக, கூட்டுறவுத்துறை மூலமாக அரசு ஒரு ஆணை
வெளியிட்டிருக்கிறது. 27—9—1986லே அந்த ஆணையை
வெளியிட்டு அதற்கு ஒரு விளக்கக் குறிப்பை கூட்டுறவுத்துறை
16 பக்கங்கள் அளவிற்கு 3—10—1986லே வெளியிட்டிருக்கிறது.
அதிலே அவர்கள் குறிப்பிடுகிறார்கள். 31—3—1986 வரை
யுள்ள வட்டி, அபராத வட்டி, கூடுதல் வட்டி தள்ளுபடியாகும்.
1—4—1986 முதல் உள்ள வட்டி, அபராத வட்டியும். அசலில்
சரி பாதியும், 31—12—1986க்குள்ளும், மீதியை 30—6—1987க்
குள்ளும் கட்டினால்தான் இது தள்ளுபடியாகும். அப்படி அவர்
கள் கட்டத் தவறுவார்களேயானால் 31—3—1986 அன்றைக்கு
இருக்கக்கூடிய வட்டி தள்ளுபடி ஆகாது. கட்டத் தவறினால்
மட்டுமல்ல. 10 ஆயிரத்தில் 9 ஆயிரம் கட்டிவிட்டு 1 ஆயிரம்
கட்ட முடியவில்லை என்றால் கூட இந்த வட்டித் தள்ளுபடி
சலுகை கிடைக்காது என்று அந்த உத்தரவின் மூலமாக நடை
முறைப்படுத்தப்படுகிறது. அதுமட்டுமல்ல. 1—7—1985
முதல் 31—3—1986 வரையுள்ள காலத்தில் பூராக் கடனையும்
தீர்த்தவர்களுக்கு வட்டி திருப்பித் தரப்படும். அதற்கு முன்
னால் உள்ளவர்களுக்கோ, கட்டியவர்களுக்கோ அல்லது இந்தக்
காலத்தில் பாதி கட்டியவர்களுக்கோ அந்த வட்டியைத்
திருப்பித்தர இயலாது என்பதை இந்த அரசு ஆணையாக
வெளியிடுகிறது. அந்தக் கணக்குப்படி பார்ப்போமானால் இந்த
நடப்பு ஆண்டிலே 18 மாவட்டங்களில் செப்டம்பர் மாதம்
வரையில் வறட்சி இருந்தது. அதற்கான செலவு கூட இந்தத்
துணை மானியக் கோரிக்கையிலே வைக்கப்பட்டிருக்கிறது.
அக்டோபர் மாதத்திலேதான் பருவமழை துவங்கி விவசாய
வேலைகள் தமிழகத்திலே துவங்கப்பட்டிருக்கின்றன. அக்டோபர்
மாதத்திலே விவசாய வேலைகள் துவங்கப்பட்டிருக்கிற இந்தச்
சூழ்நிலையில் எப்படி 31—12—1986க்குள் பாதியைக் கட்ட
முடியும் என்பதை அரசும் கூட்டுறவுத் துறையும் மறு பரிசீலனை
செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கட்டினால்
தான் வட்டிச் சலுகை—இது போகாத ஊருக்கு வழி காட்டு
வதைப் போல இருக்கிறது.

(முற்பகல் 11-40)

கொடுக்காத நிவாரணத்திற்கு ஒரு அரசு ஆணை. இதற்கு
ஏராளமான விளம்பரங்கள். உதாரணத்திற்கு ஒரு கடனைச்
சொல்கிறேன். மன்னை தாலுக்காவில் கோவிந்தசாமி என்ற
விவசாயி வாங்கிய கடனில் 19—6—1982 வரை கட்டியிருப்பது
5,816 ரூபாய். அவருக்குச் சேர்ந்திருக்கக்கூடியது 6,277 ரூபாய்.
இதிலே அவர் அசலில் பாக்கி செலுத்த வேண்டியது 539
ரூபாய். ஆனால் அவர் தலையிலே சுமத்தப்பட்டிருப்பது
ரூ. 6,277. இதை அவர் கட்ட வேண்டுமென்று 5—1—1986-ல்
அவருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. ரூ. 5,816
நீங்கள் கட்ட வேண்டும். ரூ. 2,184 தள்ளுபடியாகும்.

[திரு. கோ. வீரய்யன்] [1986 நவம்பர் 21

இதற்கு 9 மாதத்திற்குரிய வட்டி, அபராத வட்டி சேர்த்துக்
கட்டினால் அந்தச் சலுகை வழங்கப்படும் என்று சொல்லப்படு
கிறது. டிசம்பர் இறுதிக்குள் அந்தக் கடனிலே பாதியைத்
திருப்பிச் செலுத்திவிடுவது என்பது எந்த ஒரு விவசாயி
னுடைய சக்திக்கும் அப்பாற்பட்ட ஒன்றாகும். எனவேதான்,
நாங்கள் பூராவையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று
கேட்கவில்லை. சிறு விவசாயிகளுக்கு அசலில் தள்ளுபடி
வேண்டும் என்று நாங்கள் கோரவில்லை. 5 தவணைகள்
கொடுக்க வேண்டுமென்று உயர் மட்டக் குழுவில் கோரியிருந்
ததே, அதைக் கூட நாங்கள் கோரவில்லை. இப்போது போட்
டிருக்கக்கூடிய உத்திரவு விவசாயிகளுக்குப் பயன்தரக்கூடியதா,
வேண்டுமா, வேண்டாமா என்பதை அரசு பரிசீலனை செய்ய
வேண்டும்.

நம்முடைய கல்வி, சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சில
தினங்களுக்கு முன்னாலே குறிப்பிட்டார்கள். நம்முடைய நாட்
டுப் பிரதமருக்கு நல்லெண்ணம் இருந்தாலும் கூட, அவருக்கும்
தெரியாமல் கூட அவருடைய அலுவலகத்திலிருந்து இந்தியிலே
உத்திரவுகள், கடிதங்கள் அனுப்பப்படுகின்றன என்று சொன்னார்
கள். அதுபோன்று இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் எப்படியும் இந்தக் கடனிலே நிவாரணம் அளிக்க
வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களுடைய எண்ணத்திற்கு
மாறாக, அவர்களுடைய முயற்சிக்கு மாறாக அரசு உத்திரவுகள்
வெளியிடப்படுகின்றன. உள்ளபடியே இந்தச் சலுகை விவசாயி
களுக்குக் கிடைக்கக்கூடிய முறையிலே மாற்றப்படவேண்டும்.
வறட்சி என்று அறிவிக்கப்பட்டு, நிலவரி கூட தள்ளுபடி செய்யப்
பட்ட இந்தக் காலத்தில் வட்டி, அபராத வட்டி விதிப்பது எந்த
வகையிலும் நியாயம் இல்லை. எனவே நான் வற்புறுத்திக் கேட்டுக்
கொள்வது, கடனைத் திருப்பிச் செலுத்தமாட்டோம் என்று
சொல்லவில்லை. திருப்பிச் செலுத்துகிறோம், அதற்குத் தவணை
கள் அரசாங்க உத்தரவிலே மாற்றப்படவேண்டும். முதல்
தவணை 31–3–1987 என்றும், இரண்டாவது தவணை 31–3–88
என்றும், அந்த இரண்டாவது தவணைக்கு மட்டும் சாதாரண
வட்டி மட்டும் என்று விதிக்கவேண்டும். அபராத வட்டி கூடாது
என்றும், 31–3–1987 வரையில் உள்ள வட்டி தள்ளுபடி செய்யப்
படவேண்டும் என்றும், முதல் தவணை செலுத்திவிட்டால், புதிய
கடனைப் பெறத் தகுதி அவர்களுக்கு இருக்கிறது என்றும்,
31–3–1986 வரை வட்டியாகச் செலுத்தியிருப்பதை முன் தேதி
குறிப்பிடாமல் அரசிலே வரவு வைத்துக்கொள்ளவேண்டும் என்
றும், நில வள வங்கியில் எத்தனை தவணைகள் பாக்கி இருக்
கின்றனவோ, அத்தனை தவணைகளிலே அதை வாங்கிக்கொள்ள
வேண்டும் என்றும் அரசு உத்திரவுகள் குழப்படி இல்லாமல்
பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய முறையில் இருக்க வேண்டும். 10
ஆண்டுக்காலமாக தேங்கி இருக்கக்கூடிய பிரச்சினையில், அவற்
றைத் திருப்பிச் செலுத்துவதற்கான வாய்ப்பை விவசாயிகளுக்கு
அளித்து உத்தரவு மாற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.



1986 நவம்பர் 21] [திரு. கோ. வீரய்யன்]

அடுத்தபடியாக ஒரு விஷயம். காவிரி பாசனப் பகுதியில் சரி
யான தண்ணீர் கிடைக்காமல், ஒருபோக சாகுபடியைக் கூட
பாதுகாக்கமுடியாத நிலை ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டி
ருக்கிறது. எனவே, ஒரு போக சாகுபடியைப் பாதுகாப்பதற்காவது
கர்நாடகத்திலிருந்து தண்ணீர் வருவதற்கு முயற்சி செய்ய
வேண்டும் என்பதோடு, காவிரிப் பிரச்சினையில் நிரந்தரமாகத்
தீர்வு காணவேண்டும். தமிழகத்திலே வழக்கிலே ஒரு பழமொழி
சொல்வார்கள்; ''கணவனைக் கண்டவுடன் தாலியைத் தேடி
னாள்'' என்பது போல் அல்லாமல், ஒவ்வொரு வருடமும் ஜூன்,
ஜூலை மாதங்களில் மட்டும் காவிரிப் பிரச்சினையைப் பற்றிப்
பேசுவோம், மற்ற காலங்களில் எல்லாம் அதைக் கிடப்பிலே
போட்டு விடுவோம் என்பது போல் அல்லாமல் அதைத் தீர்ப்பதற்
கான முயற்சியைத் தொடர்ந்து எடுத்துத்தீர்க்கவேண்டும் என்று
கோருகிறேன்.

விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய உர மானியக் கூப்பனுக்குப்
பதிலாக ரொக்கமாக வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து ஒரே ஒரு பாயிண்ட்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் 10 உறுப்
பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கோ. வீரய்யன் :** சாதாரண விவசாயிகள் மீதும் தொழி
லாளிகள் மீதும் ஏராளமான பொய் வழக்குகள் போடப்படு
கின்றன. பிரிவு 107 என்பது சாதாரணமாக, தினசரி அன்றாட
நிகழ்ச்சியாக எந்தவிதமான ரெஃபரன்ஸும் இல்லாமல், எந்தவித
மானகாரணமும் சொல்லப்படாமல், இரு தரப்பு என்று கூட
இல்லாமல் தொழிலாளிகள் மீதுமட்டும்—விவசாயத் தொழிலாளி
கள் மீது மட்டும் ஏராளமான வழக்குகள் போடப்பட்டிருக்
கின்றன.

17–10–1986-இல் சேலத்தில் ஒரு பெண் கொலை செய்யப்
பட்டாள் என்பதைப் பற்றி புகார் கொடுத்தும், காவல்துறை
உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று வந்திருக்கும் மகஜரை
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் அளிக்கிறேன். அதன்
மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு
முடிக்கிறேன்.

**திரு. ஆ.கா.அ. அப்துல் சமத் :** மாண்புமிகு பேரவையி
னுடைய துணைத் தலைவர் அவர்களே, சபையினுடைய முன்
னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் துணை
மானியக் கோரிக்கையை அங்கீகரிக்கும் வகையில் சில வார்த்தை
களைச் சொல்ல இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக்
கொள்கிறேன்.

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1986 நவம்பர் 21

நாம் இப்போது 'ஒருமைப்பாடு வாரம்' நாடெங்கும் கொண்
டாடிக் கொண்டிருக்கிறோம். நாட்டினுடைய ஒருமைப்பாடு
பேணப்படவேண்டும் என்ற உணர்வு இன்று பரவலாக இருக்கிறது.
ஒருமைப்பாட்டை நாம் எப்படி அடையமுடியும்? வாழக்கூடிய
சமுதாயங்களுக்கிடையில் நிலவக்கூடிய அமைதியை நீடிக்கக்
கூடிய வகையிலும், மேலும், அன்பும் பாசமும் தழைக்கக்கூடிய
வகையிலும், நடக்கக்கூடிய காரியங்கள் எல்லாம் ஒரு தனிப்பட்ட
வர்களுடைய செயல்பாடுகளாக இருந்தாலும், அரசு எடுக்கக்
கூடிய முயற்சியாக இருந்தாலும் அந்த அடிப்படையில் இருந்தால்
தான் நாம் விரும்பக்கூடிய ஒருமைப்பாட்டை இந்த நாட்டிலே
நிலைநாட்டமுடியும்.

இதுபற்றி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டிய
தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டில் பல நல்ல கருத்துக்கள்
பரிமாறப்பட்டு இருக்கின்றன. அவற்றிலே ஒன்று—இன்று
சமுதாயங்களுக்கிடையில் வேறுபாடு தழைக்கவும்,
அந்த வேறுபாடு பல இடங்களில் முரண்பாடாக மாறுவதற்கும் எது
காரணமாக இருக்கிறது என்று சொன்னால் நம்முடைய பாடப்
புத்தகங்களிலே, குறிப்பாக மாணவர்களுக்கு நாம் பள்ளிக்கூடங்
களிலே படிப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கக்கூடிய பாடப்புத்தங்
களில் சொல்லப்படக்கூடிய தவறான வரலாறுகள்.

ஒரு மதத்தைப் பற்றி இன்னொரு மதத்தினர் வேகம் கொள்
ளத்தக்க விதத்திலும், ஒரு மதத்தைச் சார்ந்த அரசர்களுடைய
வாழ்க்கையைப் பற்றிப் படிக்கும்போது, மற்றொரு மதத்தைச்
சார்ந்தவர்கள் அவர்கள் மீது ஒரு நிலையான விரோத மனப்
பான்மை கொள்ளத்தக்க விதத்திலேயும், ஏற்கனவே ஆங்கிலேயர்
களுடைய ஆட்சிக் காலத்தில் சமுதாயங்களுக்கிடையில் பிளவு
நீடித்தால்தான் நாம் நிலைக்கமுடியும் என்று பிரித்தாளக்கூடிய
சூழ்ச்சியின் அடிப்படையில் விஷம் தோய்ந்த எழுத்தாளர்களால்
எழுதப்பட்ட வரலாறுகள் இன்னமும் நம்முடைய பிஞ்சு நெஞ்
சங்களிலே, நம்முடைய மாணவர்களுக்கு விதைக்கப்படத்தக்க
அளவுக்கு பல காரியங்கள் நம்மை அறியாமலே நடந்து வரு
கின்றன.

(முற்பகல் 11-50)

இவையெல்லாம் களையப்பட வேண்டுமென்று ஒருமைப்
பாட்டு மாநாட்டுத் தீர்மானமாக நிறைவேற்றி இருக்கிறார்கள்.
அதிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரும் உறுப்பினராக
இருக்கிறார். ஆனால் நான் மெத்த வேதனையோடு இரண்
டொரு குறிப்புகளை மாத்திரம் இங்கே சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். இவ்வளவு கவனத்தை நாம் எடுத்துக்கொண்டாலும் கூட
தமிழக அரசின் சார்பாக நம்முடைய பள்ளிக்கூடங்களில் இலவச
மாக வழங்கப்படக்கூடிய பாட புத்தகங்களில்கூட எவ்வளவோ
தவறான கருத்துக்கள், குறிப்பாக மதமாச்சர்யங்களைத் தோற்று
விக்கக் கூடிய கருத்துக்கள் இருந்து வருகின்றன என்பதை நான்
சென்ற முறையே இந்த அவையில் பேசும்போதுகூட சில



1986 நவம்பர் 21] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

உதாரணங்களோடு குறிப்பிட்டுக் காட்டினேன். அவற்றை அப்
போதே நீக்கிவிடுவதற்கான ஆணைகள் பிறப்பித்ததையும் நான்
இங்கே நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

அதைப் போலவே இன்னும் திரும்பத் திரும்பச் சொல்லக்கூடிய
ஒரு கருத்து மாமன்னர் அவுரங்கசீப் பற்றிய ஒரு கருத்தாகும்.
நம்முடைய மாநிலத்தின் 6—வது வகுப்பு மாணவர்களுக்கு வர
லாற்றுப் பாடமாகத் தமிழக அரசினுடைய சார்பாக இலவச
மாகத் தரப்படக்கூடிய புத்தகத்திலும் அவரைப்பற்றிய ஒரு
குறிப்பு இருக்கிறது. அது பாடப் புத்தகத்தில் மட்டும்தான்
இருக்கிறது என்று சொல்லப்படுமானால் இன்றையதினம் தமிழக
திலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பாக " வாழ்வியல்
களஞ்சியம்" என்ற அருமையான அறிவியல் நூல் ஒன்று சமீபத்
தில் 2 மாதங்களுக்கு முன்னால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.
இப்படி அறிவார்ந்த மக்களைக் கொண்டு, அவர்களாலே, அவர்
களின் ஏற்பாட்டின்படி பல்கலைக் கழகப் பேராசிரியர்களால்
பதிப்பித்து வெளியிடப்பட்டிருக்கக்கூடிய இந்தப் புத்தகத்தில்கூட
முற்றிலும் முரணான குறிப்புகள் இருக்கின்றன என்பதை நான்
மிகச் சுருக்கமாக இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நூலின் 873 ஆவது பக்கத்தில் ஒரு குறிப்பு காணப்படு
கிறது. அவுரங்கசீப்பினுடைய ஆட்சிமுறையைச் சுட்டிக்காட்டும்
போது "ஒரு இஸ்லாமிய அரசன் பிற சமயத்தினருடைய நாடு
களையும் இஸ்லாமிய நாடுகளாக மாற்றுவதையே நோக்கமாகக்
கொண்டு ஆட்சி புரிய வேண்டும் என்ற குர் ஆனின் கொள்கையில்
இவர் அசைக்க இயலாத பற்றுறுதி கொண்டிருந்தார்" என்று
குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பணிவோடு
தெரிவித்துக் கொள்கிறேன்: திருக் குர்ஆனில் 6,666 வசனங்கள்
இருக்கின்றன. அரபு மொழியில் இருக்கிற அந்த மூலக் குர்ஆனை
தமிழில் முற்றாக மொழி பெயர்த்த பெருமை எனது தந்தை
யாருக்கு உண்டு. நான் அதை 8வது பதிப்பாக வெளியிட்டிருக்
கிறேன். அந்த 6,666 வசனங்களில் எங்காவது ஒரு வரி மூலம்
மறைமுகமாகக்கூட இந்த கருத்து சொல்லப்பட்டிருக்கிறது என்று
நிரூபிக்கப்படுமானால் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக
இருக்கிறேன். ஆனால் இவ்வாறு முற்றமுற்ற முரண்பட்ட கருத்து
வரலாற்றுப் புத்தகமாக எழுதியவர்களால் கற்பனையாகச்
சொல்லப்பட்டிருந்தாலும்கூட இன்றைக்கும் 120 கோடி மக்க
ளாகப் பல்கிப் பெருகியிருக்கிற ஒரு சமுதாயம்—ஒவ்வொரு
நாளும் அதைப் படித்து, புரிந்து வழிபட்டு நடக்கக்கூடிய ஒரு
சமுதாயம் வேதநூலாகக் கொண்டிருக்கிற ஒரு நூலில் இவ்வளவு
பெரிய தவறான கருத்து இருக்கிறது என்று நமது தஞ்சைப்
பல்கலைக் கழகம்—தமிழ்ப் பல்கலைக் கழகம்—மாண்புமிகு
முதலமைச்சரைக் காப்பாளராகக் கொண்டு தமிழக அரசினுடைய

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1986 நவம்பர் 21

நிதியுதவியால் செயல்படும் பல்கலைக் கழகம் பிரசுரித்திருக்கிற ஒரு மிகப் பெரிய நூலில்—இப்படிப்பட்ட ஒரு குறிப்பு—இருப்பது மிகவும் வேதனையை அளிக்கிறது.

இதற்குப் பதில் வேண்டுமானால் நாம் எங்கேயும் போகத் தேவையில்லை. நம் மாநிலத்திலிருந்து வெளியிடப்படும் பிரபல தினசரி பத்திரிகையின் 9 ஆம் தேதிய இணைப்பான தினமணி கதிரில் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் அடிக்கடி சொல்லப்படுவது இதுதான். ''அவுரங்கசீப் பற்றி சொல்லிவிட்டு அவர் செய்த சாதனையைச் சொல்லிவிட்டு, அவருக்கிருந்த மதப்பற்றினையெல்லாம் சொல்லிவிட்டு, அவர் இந்த நாட்டில் செய்த ஒரே ஒரு காரியம் பிற சமயத்தைச் சேர்ந்த வர்களின் வணக்கத்திற்குரிய தலங்களை இடித்துவிட்டார்'' என்பதுதான். இதைத்தான் பாட நூலிலிருந்து பல்கலைக் கழகத் தின் களஞ்சியம்வரை சொல்லிக் கொண்டிருக்கிறோம். இது எவ்வளவு பெரிய தவறு என்பதை எடுத்துக்காட்ட இன்றைக்கு அந்தப் பத்திரிகையில வந்திருக்கிற குறிப்பை உங்கள் அனுமதி யோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

''இந்தியாவை ஆண்ட மொகலாய மன்னர்கள், இவர்களின் சந்ததியினர் மற்றும் இதர முகமதியர்கள் இந்துக்களுக்கு எதி ரானவர்களென்று பாடப் புத்தகங்களில் எழுதப்பட்டிருந்தது இதெல்லாம் பிற்காலத்தவர் சிலரால் ஏற்பட்ட தவறான கருத் துக்கள். இதை பாபரின் உயிலும், அவுரங்கசீப்பின் உத்தரவும் மெய்ப்பிக்கின்றன'' என்று சொல்லிவிட்டு இந்த ஆதாரம் எங்கேயிருக்கிறது என்பதையும் குறிப்பிடுகிறார்.

மொகலாய மாமன்னன் பாபர் தனது மகன் ஹுமாயூனுக்கு எழுதி வைத்துள்ள உயிலின் பிரதி கல்கத்தா ராஜாராம் கல்லூரி முதல்வர் டாக்டர் பாலகிருஷ்ணாவிடம் இருக்கிறது. அதிலே அவர் என்ன குறிப்பிடுகிறார் என்பதைக் குறிப்பிடுகிறேன்.

''என் அருமை புத்திரா! இந்தியாவில் அனேகவிதமான மதங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. இப்பேர்ப்பட்ட ஓர் இராஜி யத்தை எனக்கு அளித்துள்ள ஆண்டவனைப் போற்றுகிறேன். உன்னுடைய ஹிருதயத்தினின்று மதத்துவேஷ உணர்ச்சிகளை அழித்துவிடு. அந்தந்த மதச் சம்பிரதாயங்களுக்கு ஏற்றவாறு நீதிவழங்குவாயாக! இந்த நாட்டின் ஜனங்களுக்கும், அரசாளும் நமக்கும் நல்ல சம்பந்தம் இருக்க வேண்டியது அவசியம். எனவே முக்கியமாகப் பசுவைப் பலியிடுவதை நிறுத்தி விடு. அவ்வாறு செய்யாவிட்டால் இந்த நாட்டினரின் நன்மதிப்பை நாம் அடைய மாட்டோம். நம்முடைய சர்க்காருக்கு உட்பட்டுள்ள ஒரு ஜாதி யாரின் கோவில்களையும், தாபங்களையும் அழிக்க முற் படாதே. நன்மதிப்பு என்ற ஆயுதத்தால் இஸ்லாத்தை வளர்க்க வேண்டுமேயன்றி, கொடுங்கோன்மை என்னும் கத்தியால் இஸ்



1986 நவம்பர் 21] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

லாம் வளராது'' என்று பாபர் தம் உயிலில் குறிப்பிட்டிருக்கிறார். நம்முடைய பாரதப் பிரதமர்கூட சமீபத்திலே பாராளுமன்றத் திலே இதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

அதே போல அடிக்கடி குற்றம் சாட்டப் பெறுகிற அவுரங்கசீப் என்ன உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார் என்ற குறிப்பை சுருக்கமாக உங்கள் அனுமதியோடு இந்தச் சபையின் முன்னால் குறிப்பிட விரும்புகிறேன். பட்டத்திற்கு வந்த சில வருடங்களில் ஓர் உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அதில், ''இஸ்லாமிய சட்டத்தின்படி ஹிந்துக் கோயில்களும், விக்கிரஹ ஆராதனைகளும் தாக்கப்படாமல் காக்க வேண்டுவது நமது கடமை. நம்முடைய சமஸ்தானத்திற்கு ஓர் புகார் வந்திருக் கிறது. அதாவது காசியில் தலைமுறை தலைமுறையாக தங்கள் மதாச்சாரப்படி மத அனுஷ்டானங்களை நடத்தி வந்த பிராமணர் கள் தடுக்கப்பட்டும். ஹிந்து பிரஜைகள் தாக்கப்பட்டும் இருக்கி றார்களாம். இந்தத் தொந்தரவுகளினால் நம்முடைய பிரஜை களில் சிலருக்கு மனோபீதி உண்டாகியிருப்பதாக அறிகிறோம். ஆகவே, அமைதியின்மை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இக் காரணங் கொண்டு அடியிற்கண்ட பர்மானை-உத்தரவைப் பிறப் பிக்கின்றேன்''.

"இந்த உத்தரவு வெளியிட்ட தினத்தினின்று மத அபிப்பிராயத் திற்காக ஒரு பிராமணனையும் துன்புறுத்தலாகாது. ஹிந்து தேவா லயங்களை அகௌரவமாகப் பேசக்கூடாது. நம்முடைய செல்வம் அபிவிருத்தியாவதற்கும் நாடு செழிப்பதற்கும் நம்முடைய ஹிந் துப் பிரஜைகள் சாந்தமாக வாழ்வார்கள்'' என்று அவர் குறிப் பிட்டுள்ளார். இது தினமணி கதிரில் வெளி வந்திருக்கக்கூடிய ஆதாரபூர்வமான குறிப்பு. இத்தனைக்கும் பிறகும்கூட குறிப் பாக நம்முடைய வளர்ந்து வரக்கூடிய இளந் தலைமுறையினர் நெஞ்சங்களில் நஞ்சு பாய்ச்சக்கூடிய கருத்துக்கள் பாடப் புத்தகங் களில் இருப்பது நல்லதல்ல. எடுக்கப்பட வேண்டுமென்று மரியாதையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக வெளி யிட்டிருக்கக் கூடிய கலைக் களஞ்சியத்திலேகூட வரலாற்று முரண் பாடுகள் இருக்கின்றன. குறிப்பாக உலகமெல்லாம் அறிந்த நிகழ்ச்சி. ஜனநாயகப் போராட்டத்திலே ஒரு சின்னஞ்சிறு கூட்டம் அடியோடு அழிக்கப்பட்ட மாபெரும் வரலாறு. அதைப் பற்றிக் குறிப்பிடும்போது ' ஹசனுக்கும், உசேனுக்கும் நடந்த போரில் உசேன் கொல்லப்பட்டார் ' என்று சொல்லப்பட்டிருக் கிறது. அவர்கள் இரண்டு பேரும் சகோதரர்கள். ஹசன் இறந்து இரண்டரை ஆண்டுகளுக்கு பிறகு உசேன் எகிதோ போரில் கொல்லப்பட்டார். ஆனால் இரண்டு பேருக்கும் இடையே நடந்த போரில் உசேன் கொல்லப்பட்டார் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. நம்முடைய பல்கலைக்கழக ஆராய்ச்சித் திறனைப்பற்றி உலகத்திலே உள்ளவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதை

[திரு •ஆகா. அ. அப்துல் சமத்] [1986 நவம்பர் 21

எண்ணும்போது எனக்கு வேதனையாக இருக்கிறது. இத்தகைய
குறைபாடுகள் களையப்படுவதற்கு பாடப் புத்தகக் குழுவிலே
படித்தறிந்த ஒரு முஸ்லீம் உறுப்பினரைப் போட்டால் ஆரம்பத்தி
லேயே கிள்ளியெறிவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று தெரி
வித்துக் கொள்கிறேன்.

இந்த அவையிலேகூட ஒரு நண்பர் கேள்வி நேரத்தின்போது
அவுரங்கசீப் இந்தியாவில் ஜெஸ்யா வரி விதித்திருந்ததைப் போல
இந்த அரசாங்கம் வரி விதிக்கிறது என்று குறிப்பிட்டார். அதைப்
பற்றிச்சொல்வதானால், ஜெஸ்யா வரி என்பது பாதுகாப்பு வரி
யாக விதிக்கப்பட்டதே தவிர, ஒரு மதத்தினரை இழிவுபடுத்தக்
கூடிய தலை வரியாக விதிக்கப்பட்டதல்ல. அக்பர் கூட ஜெஸ்யா
வரியை ரத்துச் செய்துவிட்டு 86 விதமான வரியை விதித்திருக்
கிறார். குறிப்பாக இஸ்லாமியர்களுக்கு ஜகாட் வரி, நில வரி
இருந்தன. மற்ற எட்டு வரிகள் இருந்தன. இவற்றிலிருந்து
விலக்களிக்கப்பட்ட மக்களுக்கு ஜெஸ்யா வரி விதிக்கப்பட்டது
என்று ஈஸ்வரி பிரசாத் போன்ற மாமேதைகள், அண்மையில்
காலமான சரித்திர மேதையான திரு. ஆர். சி. மஜூம்தார்
போன்றவர்கள் எல்லாம் எழுதியிருக்கிறார்கள். வரலாற்றிலே
காலம் காலமாக அறிஞர்களால் எழுதப்பட்ட விஷயத்தில்
மாச்சரியங்கள் இல்லாத அளவிற்கு, குறைபாடுகள் இல்லாத
அளவிற்கு பார்த்துக் கொள்வதற்கு தமிழக அரசு நல்ல ஏற்பாடு
களைச் செய்து இந்தக் குறைபாடுகளைக் களைந்து சமுதாயங்
களுக்கிடையிலே உண்மையான வரலாற்றைச் சொல்லி, கட்டுப்
பாடு, அமைதி நிலவ ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு
அமைகிறேன்.

(நண்பகல் 12-00).

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1986-87-ஆம் ஆண்டுக்கு துணை
மதிப்பீட்டுத் தொகையாக 56.47 கோடி ரூபாய் அனுமதிக்கக்
கோரியும், 1980-81-ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவு 18.41
கோடி ரூபாய் அனுமதிக்கக் கோரியும் மாண்புமிகு நிதி அமைச்சர்
அண்ணன் டாக்டர் நாவலர் அவர்களாலே கொண்டுவரப்பட்
டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது கருத்துக்களைச் சொல்வ
தற்கு வாய்ப்புக்கொடுத்தமைக்கு உண்மையிலேயே நான் என்னு
டைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களின் தேவை
களை வேகமாகப் பூர்த்தி செய்திட, வறட்சிப் பணிகளுக்காக,
குடிநீர் வழங்குவதற்காக, ஈழத் தமிழ் அகதிகளுக்காக, முதல்
அமைச்சர் சத்துணவு வழங்கும் மையங்களின் கட்டிடங்களைப்
பழுது பார்க்கும் பணிகளுக்காக, இன்னும் பல்வேறு தேவையான
திட்டப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை எண்ணி
நான் இதயபூர்வமாகப் பாராட்டுகிறேன். இன்றைய தினம்
நாட்டிலே ஒரு அமைதிப் புரட்சியை உருவாக்கும் வகையில்
சத்துணவுத் திட்டம், இலவச மின் திட்டம், இலவசப் பாட



1986 நவம்பர் 21] [திரு. எப். எம். இராசரத்தினம்]

நூல் திட்டம், இலவச சீருடைத் திட்டம் போன்ற பல்வேறு
திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற எங்கள் இதய தெய்வம்
டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசைப் பாராட்டுவதற்கு
மனம் இல்லாதவர்கள் காழ்ப்புணர்ச்சியோடு புழுதி வாரித்
தூற்றுவதையே நோக்கமாகக் கொண்டு உரையாற்றலாம்.
ஆனால், நாட்டுமக்கள், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்,
தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள், ஒதுக்கப்பட்டவர்
கள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆதரவு என்றைக்கும் இதய தெய்வம்
டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்குத்தான் உண்டு என்
பதை அண்மையில் நடைபெற்ற நெல்லை, அருப்புக்கோட்டை
இடைத் தேர்தல்கள் மூலமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்
என்பதைச் சொல்லுவது என்னுடைய கடமை.

இன்றைக்கு நாட்டு மக்களின் நலன்கள் கருதி பல்வேறுபட்ட
திட்டங்களை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. அதற்காக
இன்றைக்கு துணை மானியத்தின் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்
பட்டிருப்பதை உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டவர்
ளாக இருக்கிறோம். என்னுடைய தொகுதியான கொளச்சல்
தொகுதியை எடுத்துக் கொண்டால், அங்கேயுள்ள கொளச்சல்
துறைமுகம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே இயற்கையான
ஒரு துறைமுகமாக இருக்கிறது. அங்கே கடற்கரைக்கு மிக
அருகாமையில் கப்பல்கள் நிற்க வாய்ப்பு இருக்கிறது. அந்தத்
துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்காக 4 ஆண்டுகளுக்கு முன்பு
இந்த அரசால் ஆய்வு செய்யப்பட்டும், அந்தப் பணிகள் தொடங்
காத நிலையில் இருந்து வருவதைப் பார்க்கிறோம். மணவாளக்
குறிச்சி மணல் ஆலையிலிருந்து மணல் வெளி நாடுகளுக்கெல்லாம்
ஏற்றுமதி செய்யப்படுகிறது. நிலக்கரியை இறக்குமதி செய்யவும்
முந்திரி ஆலைகளுக்குத் தேவையான முந்திரியை இறக்குமதி
செய்யவும் மற்றும் பல்வேறு வாய்ப்புகளையும் கொண்டது
கொளச்சல் துறைமுகம். அந்தத் துறைமுகத்தை உருவாக்க
ஆகும் செலவில் பாதிச் செலவை மணவாளக்குறிச்சியில் உள்ள
மணல் ஆலை நிர்வாகம் கொடுக்கத் தயார் என்று கூறியிருக்கி
றார்கள் எனவே, அரசாங்கம் அதைப் பற்றி ஆய்வு செய்து,
கொளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்தும் பணியை உருவாக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மணவாளக்குறிச்சி மணல் ஆலையிலிருந்து கொடிய
விஷம் கலந்த அமில நீர், அந்த ஆலையின் அருகாமையிலுள்ள
கடற்கரையில் சென்று வடிவதால், சின்னவிளை, பெரியவிளை,
மணவாளக்குறிச்சி கடற்கரைப் பகுதிகளை ஒட்டி வாழும் மக்கள்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி கிடைத்திருக்கிறது.
எனவே, இது குறித்து தேவையான நடவடிக்கையை அரசு எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. எப். எம். இராசரத்தினம்) [1986 நவம்பர் 21

அடுத்து, மின் வாரியத்திற்காக கோடிக்கணக்கான பணத்தை
நாம் அனுமதிக்கிறோம். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால்
குமரி மாவட்டத்தில் 8,000 வீடுகள், இன்றைக்கு மின் இணைப்பு
கொடுக்கப்படாமல் உள்ளன. இந்தச் சூழ்நிலையை நீக்குகின்ற
வகையில் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்
டும். கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால்
நாஞ்சில் நாடு நெற் களஞ்சியம் என்று சொல்லுவார்கள். பேச்சிப்
பாறை அணையை நம்பித்தான் இந்த மாவட்டம் இருக்கிறது.
அந்த அணை ஒரே சகதியாகவும், மணல் நிறைந்தும் இருப்பதால்,
அந்த அணையின் கொள்ளளவு குறைந்திருக்கிறது என்று சொல்லு
கிறார்கள். எனவே, அந்த அணையைத் தூர் வார வேண்டும்.
கால்வாய்களில் மதகுகள் சுவர்கள் இல்லாமல் பழுதடைந்திருப்
பதால் அணை நீர் திறந்துவிடும்போது பாதித் தண்ணீர் வீணா
கிறது என்று தெரிகிறது. எனவே, அந்தக் கால்வாய்களை பழுது
பார்க்கின்ற பணிகளையும், மதகுகளைப் பழுதுபார்க்கின்ற பணி
களையும் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்கிறேன். மேலும், கோதையாறு மேம்பாலம், மாம்பழத்
தாறு அணைத் திட்டம் நிதி ஆதாரம் இல்லாததால் இன்றைக்கு
முடக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, குறைந்த அளவுக்காவது இந்த
திட்டத்தினை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டு, அந்த
மாவட்டத்தினுடைய வரலாற்றை எடுத்துப் பார்க்கின்ற நேரத்
தில், 50 மைல்களுக்குப் பக்கத்தில் திருவனந்தபுரம் தலை
நகராக இருந்தும், 500 மைல்களுக்கு அப்பால் சென்னை
தலைநகராக இருந்தாலும் பரவாயில்லை என்ற அளவில்,
இன உணர்வு காரணமாக மீண்டும் தமிழகத்தோடு இணைக்க
வேண்டும் என்று சொல்லி, நேசமணி, சிதம்பரநாதன் போன்ற
மாவீரர்கள் எல்லாம் சிறை சென்றிருக்கின்றார்கள், பெருந்
துன்பங்களுக்கு ஆளாகியிருக்கின்றார்கள். அந்த வரலாற்றை
நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். விடுதலை வீரர்கள், தியாகி
கள் இவர்களுக்கெல்லாம் உதவித் தொகைகள் வழங்க வேண்டும்
என்று இந்த மன்றத்திலே விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்
கிறேன். இந்த நேரத்தில் இந்த அளவுக்கு அரசினுடைய துணை
மானியக் கோரிக்கையில் நாட்டில் உள்ள ஏழை எளியவர்களுக்கு,
விவசாயிகளுக்கு, சாதாரணமானவர்களுக்கு என்று நிதி ஒதுக்
கீடு செய்திருக்கின்றார்கள். அதற்குக் காரணமாக உள்ள இதய
தெய்வம், புரட்சித் தலைவர் அவர்களுக்கும், நாவலர் அவர்
களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களை அளித்து அமைகிறேன்.
வணக்கம்.

*திரு. பா. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1986-87
ஆம் ஆண்டுக்காகக் கொண்டு வந்திருக்கக்கூடிய துணை நிதிநிலை
அறிக்கையின் மீது சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள
விழைகிறேன்.



1986 நவம்பர் 21] [திரு. பொ. உத்திராபதி]

பருவ மழை தவறியதால், குறிப்பாக தமிழகத்தில் கடுமை
யான வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. அந்தக் கடுமையான
வறட்சியால் விவசாயத் தொழிலாளர்கள் பட்டினியால் வாடிக்
கொண்டிருக்கின்றவர்கள், வெவ்வேறு மாநிலங்களுக்கு, கேரளா,
ஆந்திரா போன்ற மாநிலங்களுக்குக் குடி பெயர்ந்து சென்றுவாழக்
கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. வறட்சிப் பணிகளுக்
காக, வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்று கோடி கோடி
யாக அளிக்கப்பட்டது. ஆனால் வறட்சிப் பணிக்காக அளிக்கப்
பட்ட பணம், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிட்ட
வில்லை என்பதைத்தான் நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன்.
அதுபோல விவசாயத் தொழிலாளர்கள் தமிழகத்தில் ஒரு கோடி
பேர்கள் இருக்கின்றார்கள். குறிப்பாக காவிரியை நம்பி வாழக்
கூடியவர்கள் 10 லட்சம் பேர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு
ஒரு கூலி உயர்வு தரவேண்டும் என்று மூன்று ஆண்டுகளுக்கு
முன்பாகவே அறிவித்து, நம் பாரதப்பிரதமர் அவர்கள், விவசாயி
களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க மறுபரிசீலனை
செய்யவேண்டும், அவர்கள் பயன் பெறும் வகையில் கூலி
நிர்ணயம் செய்து அதை அமலாக்க வேண்டும் என்று குறிப்பிட்
டிருந்தார்கள். ஆனால் விவசாயத் தொழிலாளிகளுக்கு எந்த
விதமான பாதுகாப்பும் இல்லை. அவர்களுடைய பிரதிநிதிகளை
வைத்துக்கொண்டு, விலைவாசிகளைக் கருத்தில் கொண்டு,
அதற்குத் தகுந்தாற்போல் கூலி உயர்வை நிர்ணயிக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்று மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் அந்த
நிதி தஞ்சை மாவட்டத்தை எட்டிப் பார்க்கவில்லை. ஆனால்
அதற்குப் பதிலாக தஞ்சை மாவட்டத்தையொட்டிய பகுதிகளில்,
ஹைவேஸ் இலாகா, பொதுப்பணித் துறைகளில் ஊராட்சி ஒன்றி
யங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகள்தான் நடந்தன. வறட்சி
வேலைகள் குறைக்கப்பட்டு மற்ற வேலைகள் கொடுத்தார்களே
தவிர வேறல்ல. வறட்சிக்காக ஒதுக்கப்பட்ட வேலைகள் கொடுக்
கப்பட்டு, அதன் மூலமாக அவர்களுக்குப் பலன் கிடைக்கவில்லை
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சையில் ஊராட்சி ஒன்றியத்திற்கு, பஞ்சாயத்துக்கு ஒரு
குளம் என்று சொன்னால் அதற்கு ரூ. 3,500 தான் என்று சொல்
கின்றார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஆயிரம் தொழிலாளர்
கள் வாழ்கின்றார்கள். அந்த அடிப்படையில் வறட்சி வேலை
களால் அந்தப் பகுதி மக்களைப் பாதுகாக்க முடியவில்லை.

இன்னொன்று மேட்டூர் நீர்ப் பிரச்சினை என்பது தொடர்ந்து
10 ஆண்டுக் காலமாக இருந்து வருகின்றது. இன்றைக்கு மேட்டூர்
நீர்ப் பிரச்சினையால், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் ஜூன்
மாதம் வரக்கூடிய தண்ணீர் ஆகஸ்ட் மாதம் 20ம்
தேதிக்கு மேல்தான் திறந்துவிடப்பட்டது. இதனால் இரண்டு

மாதங்கள் காலங் கடந்துதான் தண்ணீர் விடப்
பட்டது. இதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நாங்கள்
ஆகஸ்ட் மாதம் மத்திய அரசை வலியுறுத்தி ரெயில் மறியல்
போராட்டம் நடத்தினோம். என்னை உட்பட 500 பேர்கள்
மீது வழக்கு இருக்கின்றது. அந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இன்றைக்கு
மேட்டூரில் 72 அடி தண்ணீர்தான் இருக்கின்றது. தஞ்சை
மாவட்டப் பயிருக்கு ஜனவரி மாதம் கடைசிவரை தண்ணீர்
கிடைக்க வேண்டும்.

காவிரிப் பிரச்சினையை தமிழக அரசு நடுவர் தீர்ப்புக்கு,
மத்தியஸ்தத்துக்கு விடவேண்டுமென்று கேட்டிருக்கின்றது.
ஆனால் பாராளுமன்றத்தில் நீர்ப்பாசனத் துறை அமைச்சர்
அவர்கள் நடுவர் தீர்ப்புக்கு விடுவது பரிசீலனையில் இருந்து
கொண்டிருக்கின்றது என்று இப்போது அறிவித்திருக்கின்றார்கள்.

(பிற்பகல் 12-10)

மத்திய அரசு இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையில் காலம் தாழ்த்
தக்கூடாது. காலம் தாழ்த்துவது என்பது தமிழகத்தைப் புறக்
கணிப்பதாகத்தான் அர்த்தம் ஆகும். இப்பிரச்சினையை நடுவர்
தீர்ப்புக்கு விட வேண்டுமென்று நம்முடைய அரசு கேட்கிறது.
அதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 125 கோடி ரூபாய் வட்டி, அபராத வட்டி தள்ளுபடி
செய்வது பற்றி அறிவித்திருக்கிறார்கள். பாக்கியை 31-12-1986க்
குள் ஒரு பகுதியையும், 30-6-1987-க்குள் இன்னொரு பகுதியை
யும் கட்டச் சொல்கிறார்கள். டிசம்பர் மாதத்தில் வயலில் பயிர்
தான் இருக்கும், விளைச்சல் ஆகியிருக்காது. அதேபோல ஜுன்
மாதம் தண்ணீர் கேட்கக்கூடிய மாதம். ஆகவே, இதில் ஒரு
சிறிய மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
31-3-1987-க்குள் ஒரு பகுதியையும், 31-10-1987-க்குள்
இரண்டாவது பகுதியையும் கட்டுவதற்கு அனுமதிக்க வேண்டும்.
ஏனென்றால், மார்ச் மாதம் முழுமையாக அறுவடையாகி இருக்
கும். அதேபோல அக்டோபர் மாதத்தில் குறுவை அறுவடையாகி
இருக்கும். இதனால் விவசாயிகளுக்கும் பலன் கிடைக்கும்.
அரசுக்கும் விவசாயிகள் கடனைத் திருப்பி கட்டமுடியும். இதை
யும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய
20 அம்சத் திட்டத்தைத் தமிழரசு பத்திரிகையில் வெளியிட்
டிருக்கிறார்கள். மறைந்த பிரதமர் அவர்களும் சரி, இப்போது
இருக்கிற பிரதமர் அவர்களும் சரி, 4-ஆம் அம்சத் திட்டமாக
''விளை நில உச்சவரம்பு, நீர் மற்றும் நிர்வாக சட்ட இடையூறு





களை அகற்றி பணிகளைப் பூர்த்தி செய்தல்'' என்கிற திட்டத்தை
பற்றி அறிவித்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே நில உச்சவரம்பு
சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலமாக, குவியலாக இருக்கிற
நிலங்களை நமது நாட்டிலேயுள்ள, தமிழகத்திலே உள்ள
கோடிக் கணக்கான ஏழை விவசாயிகளுக்கு நல்ல முறையில்
பகிர்ந்து அளித்தால்தான் இந்திய நாட்டிலுள்ள உணவுப் பஞ்சம்
தீரும் என்று சொல்லுகிறார்கள். இதையொட்டித்தான் இதே
மன்றத்தில் 1980ஆம் ஆண்டு ஒரு சட்டத்தை நிறைவேற்றி
னோம். 1958ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1960 ஆம்
ஆண்டு ஏப்ரல் 6 ஆம் தேதிக்கு முன்பு, 3 ஆண்டுக்கு இடைப்பட்ட
காலத்தில் இருக்கக்கூடிய பினாமி நிலங்களை எடுத்து நிலமற்ற
ஏழை விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்ற சட்டத்தை இயற்றி
னோம். மைய அரசுக்கு அதை அனுப்பியவுடன் மத்தியில்
இருக்கிற திட்டக் கமிஷன் அதனைத் திருப்பி அனுப்பியதாக
அறிவிக்கப்பட்டது. அதில் என்ன திருத்தம் செய்ய வேண்டு
மென்று சொல்லி அனுப்பினார்கள்? இதுபற்றி மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். இச்சட்டம் நிறை
வேற்றப்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 25 ஆண்டுக்
காலத்திற்குள் 24 முறை திருத்தம் செய்யப்பட்டும், உண்மை
யிலேயே இந்த நாடு சுதந்திரம் பெற்ற பிறகும் இன்னும் நம்
முடைய ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்கள் அடிமை
களாகத்தான் இருக்க வேண்டுமா என்பதைப் பற்றி எண்ணிப்
பார்க்க வேண்டும்.

குறிப்பாக நில உச்சவரம்புச் சட்டம் குறித்து ஒன்றை நான்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் 1984 ஆம் ஆண்டு இதுபற்றி
அறிவித்தபோது 1 லட்சத்து, 57 ஆயிரத்து, 263 ஏக்கர் நிலம்
உபரியாக இருப்பதாகச் சொல்லப்பட்டது. இந்த நிலம் நில உச்ச
வரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டிருக்கின்றதா இல்லையா
என்பதைப் பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறி
விக்க வேண்டும். 31-3-1984 அன்று உள்ளபடி குத்தகை நிலம்
மொத்தம் 6,36,565 ஏக்கர் என்று சொல்லப்பட்டது. ஆனால்
பதிவு செய்யப்பட்டிருப்பதோ 4,39,401 ஏக்கர் மட்டுமே.
அப்படி என்றால் 1,97,164 ஏக்கர் இன்னும் பதிவு செய்யப்படா
மல் இருக்கின்றது. இந்த நிலங்களும் முறையாக பதிவு செய்யப்
படாததால் சட்டத்தின் பெயரால் விவசாயிகளுக்குக் கிடைக்கக்
கூடிய கடன் சலுகைகள், மின்சார இணைப்பு போன்ற நன்மை
கள் கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்
பட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தஞ்சையில் வலங்கை
மான் தாலுக்கா நல்லூர் கிராமத்தில் * * *
என்பவர் 4 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்கிறார். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

[1986 நவம்பர் 21

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இதற்கு முன்னாலே உள்ள மரபுகளையும் தாங்கள் கொடுத்திருக்கின்ற தீர்ப பினையும் ஒட்டி, இந்த அவையிலே இல்லாத ஒருவரைப் பற்றிய விவரங்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவா பேச ஆரம்பித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் இந்த ** நிலப்பிரச்சினை சம்பந் தமான வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினாலே அதை விடுத்து பொதுவான கருத்துக்களைச் சொல்லுவார்களே யானால் பொருத்தமாக இருக்கும்.

திரு. பொ. உத்திராபதி : நான் குற்றம் சொல்லவில்லை. இப்படி ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் குத்தகை பதிவு இல்லாமல் இப்படி ஒரு நபர் ஆர்.டி.ஆர். அலுவலகத்திலே பதிவு போட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இப்படி ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட குத்தகை விவசாயிகள் ஆர்.டி.ஆர்.க்கு மனு போட்டும் இன்னும் அந்தப் பதிவுக்கு அதிகாரிகள் தீவிரம் காட்டாததால் ** போன்றவர்கள் பலன் கிடைக்கா மல் இருக்கிறார்கள். ஆகவே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சொல்லி விடுகிறேன். அவர் பதிவதற்கான மனுச் செய்திருக்கிறார் என்று அதைச் சொல்லக்கூடாது என்று சொல்கிறீர்களா? பிறகு எதையும் பேச முடியாது. பதிய வேண்டுமா, பதியக் கூடாதா என்று சொல்லவில்லை. ஒரு வழக்கு போட்டிருக் கிறார்கள். அந்த வழக்கை விரைவுபடுத்துங்கள் என்று அரசாங்கத்திற்குச் சொல்கிறார். அவ்வளவுதான். (குறுக்கீடு) மிகத் தெளிவாகச் சொல்கிறேன். குறிப்பைப் பாருங்கள். இந்த ஆர். டி. ஆர். அலுவலகத்தின் நடவடிக்கைகளை விரைவு படுத்துங்கள் என்று அரசாங்கத்தைக் கேட்கிறார். இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என்று அவர் சொல்லவில்லை. பதிய வேண்டும் அல்லது பதியக் கூடாது என்று சொல்லவில்லை. ஆர்.டி.ஆர். அலுவலகத்தில் இருப்பதை விரைவுபடுத்த வேண்டுமென்று அமைச்சரைக் கேட்கிறார். அதற்குமேல் அதிகம் பேசாதீர்கள். மெரிட்டுக்குள்ளே போகாதீர்கள்.

திரு. க. பாரமலை : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, இப்படி அதிகாரிகள் போக்கு இருக்கின்ற காரணத்தினால் தான்

* * * *

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : பார்த்துவிட்டு எடுத்துவிடலாம், அப்படி இருந்தால் எடுத்து விடலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 நவம்பர் 21]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தியினுடைய இருபது அம்சத் திட்டத்திற்கும், இப்பொழுது இருக்கக்கூடிய பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுடைய திட்டத்திற்கும் வலிவு கொடுக்க வேண்டும், நிறைவேற்ற வேண்டும் என்றுதான் நான் சொல்லிக்கொண்டு இருக்கிறேனே தவிர, அதைத் தடுக்கச் சொல்லவில்லை. போட்டோ உள்பட, பாரதப் பிரதமர் இந்திரா காந்தி படம் இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் சொல்கிறேன். நான் தவறுதலாகச் சொல்லவில்லை. தமிழகத்திலே மத்திய சர்க்கார் அனுமதி வழங்கியும், மாநில சர்க்காரால் அனுமதி வழங்கப்பட்டும், இன்னும் பினாமி நிலச் சட்டம் அமுலாக்கப்படாமல் இருக் கின்றது. இதே சட்டசபையில் முன்னால் இருந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. இளையபெருமாள் கூட இன்னமும் இந்த ஆட்சியில் பினாமி நிலச் சட்டம் அமலாக்கப்பட முடியவில்லை, நிலப்பிரபுக்கள் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றிக்கூடப் பேசியிருக்கிறார். நான் அதை ஒட்டித்தான் சொல்கிறேன். இன்றைக்கு இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் ஒரு காணி அளவுகூட நிலம் இல்லாமல் பரதேசிகளாக இருக்கிறார்கள். பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தில் இருக்கக்கூடிய நான்காவது அம்சத்தை நிறைவேற்றுவோமேயானால், தமிழகத்திலே ஒரு கோடிக்கு மேல் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய அளவிற்கு நிலம் இருக்கும்.

எங்கள் மாவட்டத்தில் இன்றைக்குக் குறிப்பாகச் சொல்லப் போனால் பத்தாயிரம் ஏக்கர்களுக்கு மேல் பினாமி நிலம் வைத்து இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு அரசாங்கப் புறம்போக்கு நிலத்தை ஒரு விவசாயத் தொழிலாளி ஒரு செண்ட் ஆக்கிரமித்து விட்டால் உடனே அகற்றுகிறோம். ஆனால் எங்கள் மாவட்டத்தில் அரசலாற்றுப் படுகையில் 1,500 தென்னை மரங்கள் போட்டு இன்றைக்கு மரத்தை 100 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். 500 தென்னை மரங்கள் போட்டு அவர்களே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவை

(திரு. பொ. உத்திராபதி) [1986 நவம்பர் 21

அத்தனையும் அரசாங்கப் புறம்போக்கு. ஒரு பெரிய வசதி
படைத்தவர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். நான் சொல்லக்
கூடியது பாபநாசம் தாலுக்காவில், அரசலாறு படுகையி
லேயும், கரையிலேயும் இன்றைக்குப் பெரிய நிலப்பரப்பு
வைத்து அனுபவித்துக்கொண்டிருக்கிறார். உடனடியாக நட
வடிக்கை எடுத்து வெளியேற்றி விட்டு, அரசு எடுத்து ஏழை
களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டுகிறேன்.

குறிப்பாக தமிழகத்தில் காமராஜர் முதலமைச்சராக இருந்த
பொழுது 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று கொண்டு வந்தார்;
ஆனால் மிச்ச நிலம் இல்லை. கலைஞர் முதலமைச்சராக இருந்த
பொழுது 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றார், ஆனால் மிச்சம்
இல்லை. ஆனால் மிச்ச நிலம் இருக்கிறது என்று அரசாங்கத்தால்
அறிவிக்கப்பட்டிருக்கிறது. சட்டம் இன்றைக்கு நிலப்பிரபுக்
களைத் தீண்டிப் பார்ப்பதற்குச் சில முட்டுக்கட்டைகள்
இருக்கின்றன. அந்த முட்டுக்கட்டைகளைத் தீர்க்க வேண்டு
மானால் அரசு உறுதியாக இருக்கவேண்டும். இன்றைக்குக்கூட
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியா முழுவதிலும் பாரதப்
பிரதமருடைய இந்த நான்காவது அம்சத் திட்டத்தை நிறை
வேற்ற வேண்டுமென்று பினாமி நிலப் போராட்டத்தை இந்தியா
முழுமைக்கும் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆந்திராவிலே
நடத்தி இன்றைக்கு 56,000 ஏக்கர் நிலம் அரசு எடுத்துக்
கொடுத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

நாங்கள் நடத்தக்கூடிய போராட்டங்கள் எல்லாம் ஏதோ
நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும், எங்களுக்கு வைத்துக்
கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. அரசாங்கத்தால்
அறிவிக்கப்பட்டு, பினாமி முறையில் மறைக்கப்பட்டிருக்கிற
நிலங்களை, வெளியே கொண்டுவர வேண்டும்; நிலமற்ற ஏழை
விவசாயிகளுக்கு அவை பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்ப
தற்காகத்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போராடுகிறது.
இந்த நோக்கத்திற்காகத்தான் இன்றைக்கு தஞ்சை மாவட்டக்



1986 நவம்பர் 21] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

போராட்டத்தில் ஈடுபட்டிருக்
தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம் நடத்துகின்ற
கிறது. இப்படி நியாயமான காவல் துறையினர் பல வழக்கு
ஏழை எளிய விவசாயிகள்மீது சாட்டியிருக்கிறார்கள்.
களைப் போட்டு, கொலைக் குற்றம் நடத்தப்படுகின்ற
பினாமி நிலங்களை வெளியே கொண்டுவர கொலைக்
போராட்டத்தில் ஈடுபடுகிறவர்கள் மீது போலீசார் வழக்குகளை
குற்றம் சாட்டி வழக்குப் போடுகிறார்கள். அந்த நிலங்களை வைத்
எல்லாம் வாபஸ் பெற வேண்டும். பினாமி (காங்கிரஸ் கட்சி
திருப்பவர்களிலே ** (கூச்சல்—குழப்பம்) உறுப்பினர்களும்
உறுப்பினர்களும் கம்யூனிஸ்ட் கட்சி
எழுந்து நின்றார்கள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பெயர்
அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (கூச்சல்—குழப்பம்)
என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு முன்னாலேயே
அந்தப் பெயரை நான் நீக்கிவிட்டேன். உறுப்பினர்கள் ஒருவருக்
கொருவர் நேரடியாகப் பேச வேண்டாம். தயவுசெய்து எல்
லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே விவாதிக்கப்
படுவது துணை மானியக் கோரிக்கை. ஆகவே, துணை மானியக்
கோரிக்கை மீதுதான் விவாதம் நடைபெற வேண்டும். வெளியிலே
நடைபெறுகின்ற மாச்சரியங்கள், கட்சிக்குக் கட்சி நடை
பெறும் போராட்டங்கள், மற்றவை பற்றி அவையிலே
கொண்டுவரக்கூடாது. அந்த வகையிலே பிரச்சினையைக்
கொண்டு போக வேண்டாம் என்று திரு. உத்திராபதி அவர்
களுக்குத் தங்கள் மூலமாக வேண்டுகோள் விடுக்கிறேன். பிரச்
சினைகள் அந்த அளவுக்குப் போகக் கூடாது. கொள்கையைச்
சொல்லுங்கள், இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்
லுங்கள், அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைச் சொல்
லுங்கள். மாச்சரியங்கள் என்றால் அது கட்சிக்குக் கட்சி இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

அதை வெளியிலே அரசியல் ரீதியாகத் தீர்த்துக்கொள்ள
வேண்டும். அது அங்கே தீர்க்கப்பட வேண்டியதே தவிர
இங்கே தீர்க்கப்பட வேண்டியதல்ல. மாண்புமிகு உறுப்பினர்
திரு. உத்திராபதி அவர்கள் அதை எல்லாம் அறிந்து செயல்படக்
கூடியவர்கள். ஆகவே, அந்தப் பெயரை எடுத்துவிடலாம்;
நீக்கிவிட உத்தரவிட்டுவிட்டீர்கள். பெயரைக் குறிப்பிடாமல்
துணை மானியக் கோரிக்கைமீது மேற்கொண்டு விவாதத்தைத்
தொடரலாம்.

திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவரவர்களே,
நான் இந்த அவையைப் பொறுத்தவரையில் எந்த சர்ச்சையும்
இல்லாமல் மக்கள் பிரச்சினைகளை மட்டுமே பேசுகிறேன்.
இப்போதும் அப்படித்தான் பேசுகிறேன். ஆனால் சிலருடைய
பெயரைச் சொல்லும்போது, ** பெயரைச் சொன்னவுடன்
கோபம் வருகிறது. (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தவிப்பட்ட
வர்களைப் பற்றிச் சொன்னால் அவர்கள் இங்கே வந்து மறுக்க
முடியாது. ஆகவே அந்தப் பெயரை அவைக் குறிப்பிலிருந்து
நீக்கிவிட உத்தரவிடுகிறேன். (கூச்சல்—குழப்பம்) நீங்கள் என்
கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு முன்னாலேயே நீக்கி
விட்டேன். ஒரு கட்சியைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களும்
இப்படி எழுந்து நிற்பது முறையல்ல. தயவுசெய்து எல்லோரும்
உட்காருங்கள்.

திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவரவர்களே
நான் ஒன்றுமே சொல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட நபரை...
(கூச்சல்—குழப்பம்)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்
அகற்றப்பெற்றது.



136499

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின்
முன் வரிசையிலே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே
இருக்கிறார்கள். அவர் சொல்வதற்கு முன்னாலேயே நான்
நீக்க வேண்டியதை நீக்கிக் கொண்டுதான் இருக்கிறேன்.
அதனால் இப்படி எல்லா உறுப்பினர்களும் எழுந்து நிற்க
வேண்டிய அவசியம் கிடையாது. அர்த்தம் கிடையாது.
இப்படி எல்லா நண்பர்களும் எழுந்து நின்றுகொண்டிருந்
தால் எப்படி சபையை நடத்த முடியும்? ஆகவே அந்தச்
செய்கையில் நியாயம் கிடையாது. (கூச்சல்-குழப்பம்.)

பல உறுப்பினர்களும் அளவுக்கு மீறிப்பேசுகிறபோது
நாங்கள் நீக்கிக்கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே,
மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் அவை
யில் இல்லாதவர்களைப் பற்றி தயவுசெய்து குறிப்பிட
வேண்டாம். அப்படிக் குறிப்பிட்டதை ஏற்கனவே நீக்கி
யிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை
விட்டு விட்டுப் பேசினால் நீக்க வேண்டிய அவசியம் இருக்
காது.

திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு
ஒரு வார்த்தை கூட தப்பாகப் பேசவில்லை, பேச மாட்டேன்,
நான் வேண்டுமானால் பெயரைக் கூடச் சொல்லவில்லை.
அந்த நபர் வைத்திருக்கிற நிலம் ஒரு பெரிய மனிதருக்குச்
சொந்தமான நிலம் என்று சொல்லுகிறேன். அதிலே
கோபம் வர வேண்டிய அவசியம் கிடையாது. (கூச்சல்-குழப்
பம்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதிலே
ஓனர்ஷிப் பற்றி கோர்ட்டிலே கேஸ் இருக்கிறது என்று
சொல்லுகிறார்கள். அப்படி இருக்கும்போது எப்படிச் சொல்
வது? (குறுக்கீடு) தப்பு என்று சொல்லுகிறார்கள். வழக்கு
மன்றத்திலே வழக்கு இருக்கும்போது, நிலம் யாருக்குச்
சொந்தம் என்பதை இந்த மன்றத்திலே நாம் தீர்மானிக்க

V211,31 N86
N86·31·1&2

[பேரவைத் துணைத் தலைவர்] [1986 நவம்பர் 21

முடியாது. ஆகவே அந்தப் பகுதியை நீக்கி விடுகிறேன்.
(குறுக்கீடுகள்) இது எல்லா நண்பர்களுக்குமே பொருந்து
வதுதான். வழக்குகள் என்று வந்தாலே நாம் யாராக
இருந்தாலும் வேக வேகமாக நீக்கிவிடுகிறோம். ஆனால்
நேற்று எதிர்க்கட்சி தரப்பிலே என்ன பண்ணினீர்கள் என்று
யோசித்துப் பாருங்கள். நீதிமன்றத்தைப் பற்றி பேசுவோம்
பேசுவோம் என்று சொன்னீர்கள். அது போன்ற முறைகள்
சரியல்ல. அவை தவிர்க்கப்பட வேண்டும். அத்தோடு
திரு. உத்திராபதி அவர்கள் நீதி மன்றத்தில் உள்ள வழக்கு
களைப் பற்றியும் பேச வேண்டாம். அவையிலே இல்லாத
தனிப்பட்டவர்களைப் பற்றியும் பேச வேண்டாம்.
தொடர்ந்து வேறு ஏதாவது பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.
இல்லாவிட்டால் உட்கார்ந்து விடுங்கள். நேரம் ஆகிவிட்
டது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் வேண்டும். ஒரு வழக்கு
சம்பந்தப்பட்ட விஷயங்களை, நீதிமன்றம் சம்பந்தப்பட்ட
விஷயங்களை பேசக்கூடாது என்பதை நானும் அறிவேன்.
நான் இங்கே 10 வருஷமாக இருக்கிறேன். அதிகம் படிக்காமல்
இருந்தாலும் கூட, அனுபவத்தில் நடப்பதைக் கவனித்துக்
கொண்டிருக்கிறேன். தாசில்தார் ஆபிசிலே மாவட்ட ஆட்சி
யருக்குப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று கேட்டு
மனுக்கள் நிறைய வந்து தேங்கியிருக்கின்றன. ** **
போன்ற இப்படிப்பட்ட நண்பர்கள் (குறுக்கீடு) பெயரைச்
சொன்னாலே இவர்களுக்கு ஏன் கோபம் வருகிறது? இந்த
நண்பர்கள் எல்லாம் மனு போட்டிருக்கிறார்கள். இந்த
மனுக்கள் எல்லாம் வந்து குவிந்து கிடக்கின்றனவே, அவற்றை
அரசின் மூலமாக ஒரு குழு அமைத்து தீவிரமாகப் பரி
சீலித்து எந்தெந்த மாவட்டத்தில் விவசாயிகள் இந்த மனுக்
களைக் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்து, அவர்களுக்கு
நிலங்களைப் பதிவு செய்தால்தான், மின்சாரத் தொடர்பு
கிடைக்கும், அரசாங்கத்திலே இருக்கக்கூடிய கடன்கள் கிடைக்
கும் என்பதற்காகத்தான் வலியுறுத்திச் சொல்ல வந்தேனே
தவிர பிரச்சினையாக ஒன்றும் இல்லை. பெர்சனலாக

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



1986 நவம்பர் 21]

** வேண்டியவர் வேண்டாதவர் என்பது எனக்கு
கிடையாது. (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்
குறிப்பிட்டுச் சொன்ன பெயர்களை நீக்கிவிட மீண்டும்
ஆணையிடுகிறேன்.

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1986—87 ஆம் ஆண்டின்
முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த
மைக்கு நன்றி தெரிவித்து, ஜனதா கட்சியின் சார்பாக
என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகி
றேன்.

வறட்சி நிவாரணத்தைப் பற்றி மிகத் தெளிவாக இந்தக்
குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. வறட்சி நிவாரணத்தைப்
பொறுத்த அளவிலே இன்னும் பல்வேறு ஊர்களில் இருந்தும்
எனக்கு, குடிதண்ணீர் சரியாகக் கிடைக்கவில்லை என்ற
புகார் வந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக காமராசர்
மாவட்டத்திலே வறட்சி நிவாரணத்திற்காக கோடிக்கணக்
கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே
வறட்சி நிவாரணத்திற்காக ஆழ்குழாய்க் கிணறுகளைத்
தோண்டுவதற்காக திருச்சுழி வட்டாரம், நரிக்குடி வட்டாரம்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; இதற்கு
முன்னாலே நடந்த விவாதத்திலே தனிப்பட்ட நபர்களின்
பெயர்கள் குறிப்பிட்டது நீக்கப்பட்டிருக்கிறது. அதை யாரும்
பத்திரிக்கையிலே வெளியிட வேண்டாம். அவைக் குறிப்பிலே
யிருந்து நீக்கிவிட உத்திரவிடப்பட்டிருக்கிறது. நீக்கியாகி
விட்டது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, நண்பர் திரு. உத்திராபதி அவர்கள் பேசும்
போது ஒரு பெயரைக் குறிப்பிட்டார், ** என்று,
அவரைப் பற்றி, அவர்கள் எனக்கு அவைக்கு வெளியே
தகவல் சொல்வார்களா என்று தெரிந்து கொள்ள விரும்பு
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதையும்
நீக்கி விடுகிறேன்.

(பிற்பகல் 12-30.)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : காரியாபட்டி வட்டாரம்
முதலிய பகுதிகளுக்கு வறட்சி நிவாரணத்திலே மிக
அதிகமான செலவை இந்த அரசாங்கம் செய்திருப்பதாக
நாம் அறிகிறோம். காரணம் அருப்புக்கோட்டை இடைத்
தேர்தல் சென்ற 31–8–1986-ம் தேதி நடைபெற்ற காரணத்
தால் இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வறட்சி நிவா
ரணத் தொகையை மிக அதிகமாக இந்த மூன்று வட்டாரத்
தில் இந்த அரசு செலவு செய்திருக்கிறது. நான் சொல்லிக்
கொள்ள விரும்புவது ஒரு தொகுதியில் இடைத் தேர்தல் வந்
தால் அரசாங்கத்தினுடைய புதிய வேலைகளை அந்தப்
பகுதியில் நடத்தக் கூடாது என்று சட்டமே இருக்கிறதென்று
நினைக்கிறேன். அப்படி இருக்கிறபோது வறட்சி நிவாரணம்
என்ற பெயரால் அந்த மூன்று இடங்களிலும் அதிகமாக
செலவு செய்து சோலைவனமாக மாற்றியிருக்கிறார்கள். சோலை
வனமாக மாற்றியதை நான் குறை சொல்லவில்லை. அதைப்
போல் மற்ற எட்டு வட்டாரங்கள் காமராஜர் மாவட்டத்தில்
இருக்கின்றன. அவற்றையும் சோலைவனமாக மாற்றியிருந்தால்
மகிழ்ச்சியடைந்திருப்போம். தேர்தல் வருகிற காரணத்தால்
அந்த மூன்று வட்டாரங்களில் மட்டும் ஆழ்குழாய் கிணறுகள்
ஏற்கனவே இருந்த இடத்திற்குப் பக்கத்தில் புதியதாக, பத்தடி

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.



தூரத்தில் போடப்பட்டிருக்கின்றன. அதைப்போல புதியதாக
சாலைகளும் போடப்பட்டிருக்கின்றன. அதைப்போல அந்த
மூன்று வட்டாரத்திலே ஏறத்தாழ 30 நகரப் பேருந்து
கள் புதியதாக விடப்பட்டிருக்கின்றன. இதெல்லாம் ஜூன்
மாதத்திற்குப் பிறகு ஆகஸ்ட் மாதத்திற்குள்ளாக நடந்தி
ருக்கின்றன. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால்
ஒரு இடைத் தேர்தலைச் சந்திப்பது என்பது ஆளும் கட்சிக்கு
மிகவும் எளிது. ஆனால் மற்ற கட்சிகளுக்கு அது மிகுந்த
சிரமம் வாய்ந்த காரியம் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.
பல கோடி ரூபாய் அந்தத் தொகுதியில் செலவழிக்கப்பட்டிருப்
பதை நான் கண்கூடாகப் பார்த்தேன். அப்படி பார்க்கிற
போது அந்தத் தொகுதியில் விறுவிறுப்பும், கடுமையான போட்டி
யும் ஏற்பட்டு, அங்கே செலவழிக்கப்படுகிற பணத்தின் காரண
மாக ஒவ்வொரு கட்சிக்காரருக்கும் தன் கட்சிதான் வெற்றி
பெறவேண்டுமென்ற வெறி ஏற்பட்டு 31–8–1986-ம் தேதி
யன்று நடந்த அருப்புக்கோட்டை இடைத்தேர்தலில் தும்மு
சின்னம்பட்டி என்ற வாக்குச் சாவடியில் கொலை நடந்தி
ருக்கிறது. அங்கே விஜயரங்கன் என்ற தலையாரி வெட்டி
கொலை செய்யப்பட்டிருக்கிறார். பிறகு துப்பாக்கி ஏந்திய
போலீஸ்காரர்கள் வெளியே பாரா இருந்திருக்கிறார்கள்.
அரை மணி நேரம் வாக்குச்சாவடிக்கு வெளியே தகராறு நடந்தி
ருக்கிறது. அதன்பேரில் உள்ளே புகுந்த கும்பல் விஜயரங்கன்
என்ற தலையாரியை வெட்டிக் கொலை செய்திருக்கிறது.
அரசாங்கத்தினுடைய அலுவலர் கொலை செய்யப்பட்டிருக்கி
றார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீதிமன்றத்
தில் வழக்கு இருப்பதால் உறுப்பினர் அதுபற்றி பேச வேண்
டாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்
களே, இதற்கு ஒரு நீதி விசாரணை வைக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல விஜயரங்கனுடைய மனை
விக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கி

[திரு. எ. எஸ் ஏ. ஆறுமுகம்] [1986 நவம்பர் 21

ரேன். அவருடைய வைப்புத் தொகை மட்டும் கிடைத்தி
ருப்பதாகவும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த
தொகை கிடைக்கவில்லையென்றும் தெரிகிறது. இதற்காக,
கிராமத் தலையாரிகள் விருதுநகரில் மாவட்ட ஆட்சித்தலைவர்
அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் கூட இருந்தார்கள்.
இந்த நிலைமையெல்லாம் போக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இந்தக் கோரச் சம்பவத்திற்கு ஒரு நீதிவிசாரணை ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச்
சம்பவம் நடப்பதற்குக் காரணமாக இருந்த வெறி உணர்ச்சி
யைத் தூண்டாத வகையில், இடைத் தேர்தல்களில் நீங்கள்
பயன்படுத்துகிற சாதனங்களைக் குறைக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்று கூடத் தோன்று
கிறது. இந்த மாதிரி இடைத் தேர்தல் வந்தால் அங்கே
எந்தக் கட்சி வெற்றி பெற்றிருந்ததோ அந்தக் கட்சிக்கே அதைக்
கொடுத்துவிட்டுப் போகலாமென்று நினைக்கிற தன்மை கூட
வருகிறது. ஏனென்று சொன்னால் தமிழ் நாட்டில் உள்ள
மக்கள் எல்லோரும் இடைத் தேர்தல் வராதா என்று
எண்ணுகிற அளவில் இங்கே வேலைகள் நடைபெறுகின்றன.
அதைப் பார்க்கிற போது இதைப் போன்ற எண்ணம்தான்
வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து
தூத்துக்குடி மாவட்டத்திற்கு வ. உ. சி. மாவட்டம் என்று
பெயர் வைத்திருக்கிறார்கள். செக்கிழுத்த செம்மல் சிதம்
பரனாருக்கு ஒரு மாவட்டம் வைத்ததில் ரொம்ப மகிழ்ச்சி.
அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். அங்கே
சென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி
நகராட்சி மேம்பாட்டிற்காக 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கி
யிருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜர் பிறந்த புண்
ணிய பூமி விருதுநகர். காமராஜர் மாவட்டம் சென்ற
வருடம் 1985-ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து செயல்
பட்டு வருகிறது. இந்த விருதுநகரில் வந்து பார்த்தால்



1986 நவம்பர் 21] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

நகர் முழுதும் தெருக்கள் குண்டும் குழியுமாக இருக்கின்றன.
சுகாதாரக் கேடு மிக அதிகமாக இருக்கிறது. குடிநீர்ப் பற்றாக்
குறை மிக அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நக
ரத்திற்கு, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்த
புண்ணிய பூமிக்கு, முதல்வர் அவர்கள் 75 இலட்சம் ரூபாய்
ஒதுக்கிக் கொடுத்து, விருதுநகரினுடைய மேம்பாட்டிற்கு
வழிவகை செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான்காவது சம்பளக் கமிஷன் பற்றி சொல்லும்
போது, இதிலே 2 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டதாக
சொல்லியிருக்கிறீர்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது
இந்த நான்காவது சம்பளக் கமிஷன் சொல்லிய பரிந்துரைப்
படி,—அனைத்து தனியார் பஸ் தொழிலாளர் சங்கம் ஒன்று
திருநெல்வேலியிலே இருக்கிறது. அவர்கள் எல்லாம் சேர்ந்து
ஏன்னிடம் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள்,—அரசு
பஸ்களில் வேலை செய்கிற—ஊழியர்களுக்கும், இவர்களுக்கும்
சம்பளத்தில் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. அந்தச்
சட்டம் பற்றி கூட உச்ச நீதிமன்றத்திலே வழக்கு பதி
வாகியிருக்கிறது என்று சொல்கிறார்கள். சட்டத்தைப் பற்றி
எல்லாம் உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருந்தது, அதிலே
எங்களுக்கு சாதகமாக தீர்ப்பாகியிருக்கிறது என்றெல்லாம்
அவர்கள் சொல்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் இதைப் பார்த்து, தனியார் பஸ்களிலே வேலை
செய்கின்ற தொழிலாளர்களுக்கு அரசு கழகங்களிலே வேலை
செய்கின்ற ஊழியர்களுக்குக் கொடுப்பதைப் போல சம்ப
ளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

நெசவாளர்கள் பற்றிச் சொல்லும்போது, அவர்களுக்கு
ரிபேட் போன்றவை கொடுத்ததன் மூலமாக 10 கோடி
ரூபாய்க்கு மேலே செலவழித்திருப்பதாகச் சொல்லியிருக்கி
றீர்கள். ஆனால் நாங்கள் கேட்கும்போது, இந்த ரிபேட்

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 நவம்பர் 21]

ஒரு வருடம் சென்ற பிறகுதான் கிடைக்கிறது என்று அவர்
கள் சொல்கிறார்கள். அப்படி ஒரு வருடம் சென்று
கிடைக்கும்போது, அதற்கு ஒரு இடைக்கால பட்ஜெட்டிலே
தொகை போடவேண்டுமா என்று நான் கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன்.

கைத்தறித் துணிக்கு 22 ரகங்கள் ஒதுக்கித் தரவேண்டும்
என்று இந்த அரசு கேட்டு இருப்பதை, மத்திய அரசு ஒதுக்க,
இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் கடன் சுமையை
இந்த அரசு நீக்கியிருக்கிறது. வட்டியைத் தள்ளுபடி செய்தி
ருக்கிறது. அபராத வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறது.
இதைப் பாராட்டுகின்ற நேரத்திலே நீங்கள் 31-12-1986-க்குள்
பாதித் தொகையை செலுத்த வேண்டும் என்று
கட்டளையிட்டு இருக்கிறீர்கள். நீங்களே வறட்சி என்று
பாதிக்கு மேற்பட்ட மாவட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள்.
வறட்சி என்று அறிவித்த இடங்களிலே எல்லாம் எப்படி வெள்
ளாமை வந்து இருக்கும்? இந்த வறட்சியிலே அவர்களுக்கு
வருமானம் எப்படி வந்திருக்கும்? எனவே இதை நீங்கள்
சரியாக சீர்தூக்கிப் பார்த்து, முதல் தவணை கட்டுவதற்கு
6 மாத காலம் தள்ளிக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்
திலே நான் அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்
கொள்கிறேன். அதன் பிறகு நீங்கள் தவணைகளைத்
தொடர்ச்சியாக முடிந்த அளவிற்கு வசூல் செய்வதிலே
எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அதேமாதிரி இந்த
முதல் தவணை கட்டுவதற்கு நீங்கள் அறிவித்த பிறகு,
திரும்பச் செலுத்துவதற்கு வட்டி கேட்பதாக அறிகிறோம்.
நீங்களேதான் சலுகையைத் தந்திருக்கிறீர்கள். பிறகு ஏன்
வட்டியைக் கேட்கிறீர்கள் என்று தெரியவில்லை. அந்த
வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.



1986 நவம்பர் 21] [திரு. எ, எஸ். ஏ, ஆறுமுகம்]

அதேபோல் 1985-ஆம் வருடம் ஏதோ ஒரு தேதியை அறிவித்திருக்கிறீர்கள். அதற்கு முன்பாக கட்டியவர்களுக்கு எல்லாம் அந்தத் தள்ளுபடி கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். பாக்கியிலே ஆயிரம் ரூபாயை வரவு வைத்திருப்பார்கள். அதை அவர்கள் வட்டிக்கு வரவு வைத்து விட்டார்கள். எனவே அதை அசலிலே வரவு வைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இதையும் இந்த அரசு பரிவோடு கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு விலை ரூ. 200 என்று அறிவிக்கப்படுகிறது இந்த மன்றத்திலே. மற்ற மாநிலங்களிலே எல்லாம் ரூ. 250 வரையில் கொடுக்கிறார்கள். விவசாயிகளுடைய கோரிக்கை ரூ. 300 ஆக இருக்கிறது. எனவே இந்த அரசு அதைப் பார்த்து, தேவையானதைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கரும்புக்கு விலையைக் கூட்டிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையிலிருந்து வந்தவர்களுக்காக வீடுகள் எல்லாம் வாங்கிக் கொடுத்து இருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சி. இலங்கையிலிருந்து வந்தவர்களுக்கு வீடு கொடுத்ததைப் போல, இவர்களுடைய நன்மைக்காக இலங்கை அகதிகள் நலக் குழு என்ற ஒரு குழு இருப்பதாகவும், அது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் இருப்பதாகவும், அது சரியாகச் செயல்படுவதில்லை என்றும், எனக்கு ஒரு மனு வந்திருக்கிறது. அதிலே முன்னாள் அமைச்சர் பி.டி. சரஸ்வதி அம்மாள் அவர்கள் துணைத் தலைவராக இருப்பதாகவும் சொல்கிறார்கள். இந்தக் குழு நல்லமுறையில் செயல்பட, அவர்களுடைய நன்மைக்காக பாடுபடவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் ஏரியிலிருந்து 430 லட்ச ரூபாய் செலவில் கால்வாய் கட்ட இருக்கிறீர்கள், மிக்க மகிழ்ச்சி. 30 கண்மாய்களுக்குத் தண்ணீர் வழங்க இருக்கிறீர்கள். இந்தத் திட்டம் 1978-லே உங்கள் ஆட்சி

ஆரம்பித்தபோதே வந்தது. அப்போது மத்தியிலே ஜனதா
ஆட்சி இருந்தபோது, இதற்கு 85 லட்ச ரூபாயை ஒதுக்கிக்
கொடுத்திருந்தார்கள். அந்த நேரத்திலே நீங்கள் இந்தப்
பணத்தை வாங்கிச் செலவழிக்காததாலே விட்டுப் போய் விட்டது.
இப்போது விலைவாசி உயர்வினால், இந்த 85 லட்ச ரூபாய்
என்பது ரூ. 430 லட்சமாக உயர்ந்திருக்கிறது. எனவே திரும்பவும்
மத்திய அரசிடம் கேட்டு இந்தத் தொகையைப் பெறவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நான் மற்றொரு விஷயத்தைச் சொல்ல விரும்பு
கிறேன். தேனி பகுதியிலே ஒரு கால்வாய் இருப்பதாகவும்,
அந்தக் கால்வாயிலே இருக்கிற தண்ணீரை அந்தப் பகுதியிலே
இருப்பவர்களுக்குக் கிடைக்க விடாமல் சிலர் செய்வதாகவும்—
அதாவது பி.டி.ஆர். கால்வாய் திட்டத்திலே சேர்ந்த கண்மாய்
களான, கோவிந்த நகரம் கண்மாய், அம்பாசமுத்திரம் கண்மாய்'
பசலகிருஷ்ணாபுரம் கண்மாய் போன்ற கண்மாய்கள் எல்லாம்
இருக்கின்றன—சாமாட்சிபுரம் மற்றும் அம்பாசமுத்திரத்திலே
உள்ள மக்கள் நூற்றுக்கணக்கானவர்கள் கையெழுத்து போட்டு
மனு எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது).
அந்தக் கால்வாயிலிருந்து தண்ணீர் விடுவதை பலர் அரசியல்
செல்வாக்கு உள்ளவர்கள் தடுத்து இருப்பதாக எனக்குச் செய்தி
வந்திருக்கிறது. எனவே இதைச் சரி பார்த்து, அனைத்து மக்
களுக்கும் இந்தக் கால்வாய் மூலமாக தண்ணீர் கிடைக்க வழிவகை
செய்யவேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்
கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

[பிற்பகல் 12-40.]

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது
சில வார்த்தைகள் பேச எனக்கு அனுமதி அளித்த மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.





நமது தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளுடைய கஷ்டத்தை உணர்ந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும் என்ற நோக்கோடு இன்றைக்கு 125 கோடி ரூபாய்க்கான வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளி இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் எல்லாம் நன்றிக் கடன் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏன் என்றால் விவசாயிகளுக்காக இந்த 20 ஆண்டுக் காலமாகவும் அதற்கு முன்னாலும் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இப்போது கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாக வளர்ந்து கொண்டு வந்திருக்கின்றன. ஆனாலும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கிய கடன்களை எங்களால் கட்ட முடியாத ஒரு நிலை உருவாகி 20 ஆண்டுக் காலம் கஷ்டப்பட்டு உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்ற நிலை உருவாகியதற்குப் பின்னால் இப்போது நமது மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் 125 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து இருக்கிறார்கள் என்பதை நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். ஆனால் தற்போது கொடுத்துள்ள கணக்குப்படி அவர்கள் சில காலத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் காலத்திற்குள் வட்டியையும், அசலையும் கட்ட வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை இணைத்து இருக்கிறார்கள். அப்படி ஒரு பகுதியை கட்டியவர்களுக்குத்தான் அந்தச் சலுகை உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் கொடுத்து இருக்கின்ற காலத்தை இன்னும் ஓர் ஆண்டுக் காலத்திற்குத் தள்ளி சலுகை கொடுத்து விவசாயிகள் படும் கஷ்டத்தை நீக்கி அவர்கள் மீண்டும் கடன் பெற நீங்கள் உதவிகரமாக இருக்க வேண்டும் என்று நான் இந்தச் சபையில் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி நகரில் சைனிக் பள்ளி என்று ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளியில் கிட்டத்தட்ட 75 ஊழியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்த 20 ஆண்டுக் காலமாக அவர்களுக்கு முதலில் கொடுத்த சம்பளத்தைத் தவிர அரசு ஊழியர்களுக்கு அளிக்கக் கூடிய வேறு சலுகைகள் எதுவும் கிடைக்காமல் அவர்கள் என்னிடம் வந்து ஒரு மனுவைக் கொடுத்து இருக்கிறார்கள். அதை நேற்று நான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர்

[திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்] [1986 நவம்பர் 21

அவர்களிடம் கொடுத்து இருக்கிறேன். நீங்கள் உடனடியாக
அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து அவர்களையும் அரசு
ஊழியர்களாக மாற்றி அவர்களுக்கும் நல்ல ஒரு வளர்ச்சியைக்
கொடுக்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

விளவங்கோடு தொகுதியில் அண்டுசோடு கிராமத்தில் விள
வங்கோடு தாசில்தார் தன் சாதியும், சொந்தக்காரர்களும்
உள்ள அந்தக் கிராம அலுவலகத்தை மாற்றிவிட்டார்கள். இதை
ஆட்சித் தலைவரிடம் சொல்லி 10 ஆயிரம் ஜனத்தொகை உள்ள
இடத்தை விட்டுவிட்டு ஒரு சிறிய சமுதாயம் உள்ள இடத்திற்கு
மாற்றி இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதை மீண்டும் இந்தக்
கிராமத்திற்கே மாற்றிக் கொடுக்கவேண்டும் என்று மிகவும் தாழ்
மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய
உடுமலைத் தொகுதியில் குடிநீருக்காக மானுப்பட்டி கூட்டுக்
குடிநீர் திட்டம், பூலாங்கிணர் கூட்டு குடிநீர் திட்டம்,
உடுமலை நகரத்திற்கு ஒரு அடிஷனல் கூட்டுக் குடிநீர்
திட்டம் போன்ற 3 திட்டங்களை 4 ஆண்டுகளுக்கு முன்
னாலேயே அறிவித்து இந்த 4 ஆண்டுகளாக வேலை செய்து
வந்தும் கூட இன்னும் அந்தக் குடிநீர் பிரச்சினை தீராமல்
இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் தொட்டிகளைக் கட்டி
விட்டார்கள். குழாய்களைப் பதித்து விட்டார்கள். இந்த 2
ஆண்டுக் காலத்தில் அந்தத் தொட்டிகளில் எல்லாம் வெடிப்பு
விட்டு இருக்கின்றன. இதனால் அரசுக்குத்தான் அதிகமான
வருவாய் இழப்பு ஏற்படும். காரணம் இனிமேல் அந்தத் தண்
ணீரை அந்தத் தொட்டிகளில் விட்டால் கூட அந்தத் தொட்டிகள்
எல்லாம் இடிந்து போகக்கூடிய ஒரு நிலையில்தான் இன்றைக்கு
இருக்கின்றன. நானும் அதிகாரிகளைக் கேட்டபோது அவர்கள்
6 மாத காலத்திலே நாங்கள் இதை முடித்துவிடுகிறோம் என்று
சொல்லியும், குடிநீர்த் திட்டம் நிறைவேறாமல் இருக்கிறது என்
பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



1986 நவம்பர் 21] [திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்]

கேரளாவில் மேற்கு நோக்கிச் செல்லும் 3 ஆற்றுத் திட்டங்களை
பற்றி இந்தச் சபையிலே எடுத்துச் சொன்னேன். அப்போது
இருந்த நமது மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் எனக்
குப் பதில் அளித்திருந்தார்கள். நாங்கள் கேரளாவிற்கு எழுதி
யிருக்கிறோம், தேதி கேட்டிருக்கிறோம், தேதி கிடைத்தால்
கேரள அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி, இதை அமலுக்
குக் கொண்டு வருவோம் என்று எனக்குப் பதில் தந்தார்கள்.
இரண்டு ஆண்டுகளாகியும் இன்னும் பேசியதாகத் தெரியவில்லை.
அந்தத் திட்டத்தை நமது தமிழக முதல்வர், புரட்சித் தலைவர்
அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போதே, நிறைவேற்றிக்
கொடுத்தீர்களேயானால், நமது தமிழகம் நல்ல, செழிப்பான ஒரு
நாடாக வளர்ச்சியடையும் என்பதை உங்கள் மத்தியிலே கூறிக்
கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986—87ஆம் ஆண்டு
முதல் துணை மதிப்பீடுகளைப் பொறுத்து, ரூ. 56,47,00,000-க்கு
நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும், மிகைச் செலவைப்
பொறுத்தவரையிலும், ரூ. 18,41,00,000-க்கு ஒதுக்கீடு செய்ய
வேண்டுமென்றும் வைத்த கோரிக்கையின் மீது மாண்புமிகு
உறுப்பினர்கள் 9 பேர்கள் இங்கே கருத்துரைகள் வழங்கியிருக்
கிறார்கள். கருத்துரைகளை விரிவாகவும் சொல்லியிருக்கிறார்
கள், விளக்கமாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இது
துணை மானியக் கோரிக்கை என்ற வகையிலே தான் வைக்கப்
பட்டிருக்கிறதே தவிர, நிதிநிலை அறிக்கை அல்ல. இது நிதி
நிலை அறிக்கையாக இருக்குமானால், கொள்கைகள், கோட்பாடு
கள், மற்றவைகள் எல்லாம் அதன் அடிப்படையிலே ஏற்பட்டு,
பல்வேறு கருத்துக்களையும், பல்வேறு கோரிக்கைகளைப் பற்றி
யும் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு உண்டு. ஆகவே துணை
மானியக் கோரிக்கையைப் பொறுத்து, அது ஏற்கனவே கூடுதல்
செலவாக ஒப்புக்கொள்ளப்பட்டதைப் பொறுத்து, இந்த அவை
யிலே பேசி தீர்த்து, ஒப்புக்கொள்ளப்பட்டதைப் பொறுத்து, கூடு
தலான செலவுகள் எந்தெந்த வகை என்ற கணக்கும் தரப்பட்டி
ருக்கிறது. ஏன் இந்தச் செலவு ஏற்பட்டது என்பதற்கான

காரண காரிய விளக்கங்கள் எல்லாம்கூட தரப்பட்டு, அதற்கான விவரக் குறிப்புகளும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது என்றும் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசுக்கும், அவைக்கும் சொல்ல வேண்டிய கருத்துக்கள் பலவற்றை இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 9 பேர்கள் எடுத்துச் சொல்லிய அத்தனை கருத்துக்களுக்கும் இங்கே விடையளிப்பது இயலாது என்பதை எடுத்து சொன்ன உறுப்பினர்களே நன்றாக உணர்வார்கள் என்றாலும், அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்கள், அந்தந்தத்துறையிலுள்ள குறைபாடுகளை நீக்கவும், நிறைபாடுகளை இன்னும் நிறைவு செய்யவும் தக்க நடவடிக்கைகளை முறைப்படி மேற்கொள்வார்கள் என்பதை மட்டும் நான் ஒட்டு மொத்தமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

வறட்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையிலும், இந்த அரசு உடனுக்குடன் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது என்பதையும், அதனைப் பொறுத்து மத்திய அரசு 2 குழுக்களை அனுப்பி, அந்த 2 குழுக்களும் தமிழகத்திற்கு வந்து, 2 பிரிவுகளாகப் பிரிந்து சென்று, 2 பகுதிகளைப் பார்த்துவிட்டு, அவர்கள் அறிக்கைகளை மத்திய அரசுக்குத் தந்து, மத்திய அரசும் ஓரளவிற்கு ஒதுக்க வேண்டிய நிதிகளை ஒதுக்கி, அனுமதிக்க வேண்டிய நிதிகளை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு குழுக்கள் வரவேண்டுமென்று நாம் காத்திராமல் அதற்கு முன்னாலே பல்வேறு திட்டங்களை இங்கே ஆரம்பித்து இருக்கிறோம், மத்திய அரசு குழுக்கள் வந்து பார்த்ததற்குப் பின்னர் தமிழகத்திலே அந்த இரண்டு குழுக்களும் சென்னையில் இருந்த நிருபர்களுக்குப் பேட்டியளித்தபோது, பாராட்டத் தக்க அளவிற்கும் தங்களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய அளவிற்கும் இந்த வறட்சி நிவாரணப் பணிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்று அவர்கள் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.



நாம் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட இடர்பாடுகள், துயரங்கள் வராமல் இருப்பதற்குத் தடுப்பு நடவடிக்கைத் திட்டங்களையும் அதோடு சேர்த்து வளர்ச்சித் திட்டங்களையும், பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களையும் சேர்த்து, உரிய முறையில் மத்திய அரசுக்கு அனுப்பினாலும், மத்திய அரசு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மட்டும்தான் நாங்கள் இப்போது அனுமதி அளிப்போம் என்றும், ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாக வளர்ச்சித் திட்டங்கள், மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்களை அந்த வகையிலேதான் காணுவோமே தவிர, இந்த வாய்ப்பிலே காணமுடியாது என்று சொல்லி, ரூ. 38 கோடிக்கு ஒதுக்கீடு அளித்தார்

[பிற்பகல் 12-50]

கள். ரூ. 38 கோடி அளவிற்கு அனுமதி அளித்தார்கள். அந்த வகையிலே பல்வேறு பணிகளை நாம் நிறைவேற்றி இருக்கிறோம். குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்பதற்காக இரண்டு, மூன்று ஆண்டுக்காலமாக முன்னுரிமை தந்து செய்து கொண்டு வருகிறோம் என்பதை இந்த மாமன்றம் அறியும். சென்ற ஆண்டில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இந்த மன்றம் கூர்ந்து கவனித்துக்கொண்டு வந்திருக்கிறது. இப்போது ஏற்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளில் முன்னுரிமை தந்து கிட்டத்தட்ட ரூ. 14 கோடிக்கு மேல் அதற்கென்று செலவழிக்கப்பட்டது. 6,000-க்கு மேற்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்கும் அதன் மூலமாக ஆங்காங்கே குடிநீர்ப் பிரச்சினையை ஓரளவிற்குத் தீர்ப்பதற்கும், எங்கெங்கே ஆழ்துளைக்கிணறுகள் போட்டு குடி தண்ணீர் கிடைக்கவில்லையோ அங்கே / லாரிகள் மூலமாக, பக்கத்திலே எங்கே குடி தண்ணீர் கிடைக்கின்றதோ அங்கிருந்து கொண்டு வருவதற்கான வகையிலும் ஏற்பாடுகள் செய்து அவற்றையும் நிறைவேற்றுவதற்கான பெரும் முயற்சிகளிலே ஈடுபடவும் செய்திருக்கிறோம். அந்த வகையில் குடி தண்ணீரைப் பொறுத்த வரையிலே நாம் முயன்று கொண்டிருக்கிறோம். அந்தப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

[டாக்டர் இரா நெடுஞ்செழியன்] [1986 நவமபர் 2]

இங்கு பல்வேறு பிரச்சினைகளை நண்பர்கள் உருவானாக்கி
னாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள்,
மாண்புமிகு முதல்வர் அமெரிக்கா சென்றதைப் பற்றி எடுத்துச்
சொன்னார்கள். அமெரிக்கா சென்ற செலவினத்தைப்பற்றி அவர்
கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள்
உடல்நலம் குன்றி அமெரிக்காவிற்கு சென்று வந்தபோது ஏற்பட்ட
செலவினம் முழுவதையும்—கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்
ஆனபோது—அரசு ஏற்க வேண்டாம் என்று கருதி, பொது மக்
களே அதை ஈடுகட்டுவார்கள் என்று வேண்டுகோள் விடுத்ததின்
பேரில், அரசுக்கு எந்த வகையிலும் செலவில்லாமல், அந்தத்
தொகை முழுவதும் திரட்டப்பட்டு அது அரசுக்கு ஈடுகட்டப்
பட்டது என்பதை அப்போது அவர்கள் நன்கு அறிவார்கள்.
இப்போது 3,50,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டாலும் அதிலே
அந்நியச் செலாவணிக்காக 19,256 ரூபாய் செலவிடப்பட்டது.
மிகுதி ரூபாய் 3,31,000 திருப்பி செலுத்தப்பட்டுவிட்டது. மற்
றைய வகைகளில் ஆங்காங்கிருந்து செலவுக் கணக்குகள் வர
வேண்டும். ஒரு வகையிலே மட்டும் வந்திருக்கிறது. ஏர் இந்
தியாவைப் பொறுத்தவரையில் 3,79,000 ரூபாய் என்று செலவுக்
கணக்கு வந்திருக்கிறது. அந்தச் செலவை ஈடுகட்டுகின்ற அள
வுக்கு அரசு இருக்கிறது. மற்ற செலவினங்கள் அமெரிக்காவில்
உள்ள தூதுவர் மூலமாக போர்டிங், லாட்ஜிங் போன்றவற்றிற்
வரவேண்டும். வந்ததற்குப் பிறகு இந்த அவைக்குத் தேவை
பட்டால் ஒட்டுமொத்தமாக இந்தச் செலவினத்தை வைக்
றேன் என்பதையும் உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்து
கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் மாண்புமிகு
உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க, குடிநீர்ப்
பிரச்சினையைக் கூடுமான வரைக்கும் தீர்ப்பதற்கு நாம் முயற்சி
செய்துகொண்டு வருகிறோம். தெலுங்கு கங்கை திட்டத்தைப்
பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதை விரைவிலே நிறைவேற்ற
வேண்டும் என்கின்ற நோக்கத்தினுடைய அடிப்படையிலேதான்
நாம் இருக்கிறோம். ஆகவே, நம்முடைய மாநிலத்தைப்
பொறுத்து இருக்கின்ற பிரச்சினையிலே சிக்கல் இல்லை. ஆந்திர



1986 நவம்பர் 21]

மாநிலத்திலிருந்து 5 டி.எம்.சியும், மஹாராஷ்டிராவிலிருந்து 5
டி.எம்.சியும், கர்நாடகத்திலிருந்து 5 டி.எம்.சியும் வரவேண்டும்
என்பதை 1976-ம் ஆண்டிலேயே மாண்புமிகு முன்னாள் பிரதம
மந்திரி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுடைய ஏற்பாட்
டின் பேரில் 15 டி.எம்.சி. குடி தண்ணீருக்காக தருவது என்
பதை மூன்று மாநிலங்களும் ஒப்புக்கொண்டு விட்டன. அந்த
15 டி. எம். சியும் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்ற நிலை
ஏற்படுகின்றபோது 15 டி.எம். சியும் தமிழகத்திற்கு வருவதிலே
தகராறு இருக்கிறது. ஆனால் கொண்டு வந்து சேர்க்கின்ற
போது அவ்வளவு செலவினமும் தமிழகமே ஏற்றுக்கொள்ள
வேண்டுமென்றால் 600, 700 கோடி ரூபாயை நாமே ஏற்றுக்
கொள்ள வேண்டும். ஆனால் தெலுங்கு கங்கை திட்டம் என்று
வருகின்றபோது நம்முடைய எல்லை வருகின்ற வரையில், ஆந்
திர அரசினுடைய பாசனத் திட்டத்திற்கும், அவர்களுடைய
குடிநீர்த் திட்டத்திற்கும் பயன்படுத்திக்கொண்டு, நம்முடைய
எல்லைக்கு, பிறகு கொண்டு வந்து சேர்க்கின்ற அளவுக்கு, நம்
முடைய செலவையும் ஏற்றுக்கொள்கின்ற அளவுக்குக்கொண்டு
வருகின்றபோது 720 கோடி ரூபாய் ஆகிறது. அதிலே 200
கோடி ரூபாய் அளவுக்கு நம்முடைய செலவும், 520 கோடி ரூபாய்
அளவுக்கு ஆந்திர மாநிலத்தினுடைய செலவும் ஆகின்றது.
இந்தத் திட்டத்தை துவக்கி வைத்ததே, மாண்புமிகு இந்தியப்
பிரதமராக இருந்த மறைந்த இந்திரா காந்தி அம்மையார்
அவர்கள்தான். இந்த 3 மாநில முதலமைச்சர்களுடைய முன்
னிலையில் இதைத் துவக்கி வைத்தார்கள். இப்போது இந்த
3 மாநிலங்களுக்குள்ளே நீரைப் பாசனத் திட்டத்திற்குப் பயன்
படுத்தலாமா வேண்டாமா, தண்ணீரை எந்த அளவிற்கு எடுப்
பது என்பதிலே சிக்கல்கள் இருக்கின்றன.

இந்தச் சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும் என்ற காரணத்தி
னால் மத்திய அரசு இன்னும் ஒப்புதல் அளிக்காமல் இருக்கிறது.
ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் கிடைக்க வேண்டிய
டி.எம்.சி.யைப் பொறுத்த வரையில் தகராறு இல்லை.
நம்முடைய பணிகளும் நம்முடைய பக்கத்திலே நடைபெற்றுக்

கொண்டிருக்கின்றன. விரைவிலே தீர்க்க வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களிடத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கான குறிப்புரைகளைத் தந்து இருக்கிறார்கள். விரைவிலே கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக பிரதமர் அளவிலேயே ஒருகூட்டத்தைக் கூட்டி 3 மாநில முதலமைச்சர்கள் இதற்குத் தொடர்புடைய முதலமைச்சர்களைக் கூப்பிட்டு வைத்து இந்தப் பிரச்சினையை அவர்கள் மட்டத்திலேயே தீர்ப் பார்களேயானால் மிகவும் சுலபமாக இருக்கும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கள் எடுத்துத் தெரிவித்தார்கள். பொறுத்து. பொறுத்துப் பார்த்து தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டத்தில் அதனுடைய பலனை அனுபவிக்கிறவர்கள் அதை டிரிபியூனலுக்கு விடுவதன் மூலமாகத்தான் தீர்வு காண முடியும், வேறு வழியில்லை என்று சொன்னார்கள். பல தடவை உட்கார்ந்து பேசியாகி விட்டது. இதில் சிறிதும் முன்னேற்றம் காணும் சூழ்நிலை இல்லாததன் காரணமாக, காலம் கடக்க, கடக்க நமக்குத் தான் கேடு. காலம் கடக்க, கடக்க அவர்கள் புதிய, புதிய அணைக்கட்டுகளைக் கட்டுகிறார்கள். ஆனால் ஒரு அணைக்கட்டுக்கும் கர்நாடக அரசு, மத்திய அரசின் அனுமதியைப் பெறவே இல்லை. அனு மதியைப் பெறாதது மட்டுமல்ல, மத்திய அரசின் உதவியையும் பெறவில்லை. அவர்கள் கட்டிக் கொண்டே இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலைக்கு இடம்,கொடுக்கக் கூடாது என்பதற் காகத்தான் மறுபடியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற திங்கள் முதல் நாள் மற்றும் இரண்டாம் நாள் டெல்லிக்குப் போய் இருந்த போது விரிவான கடிதம் கொடுத்து இருக்கிறார் கள். மற்றொன்றும் சொல்லியிருக்கிறோம். டிரிபியூனலுக்குப் போனாலும் கூட 2, 3 வருஷம் ஆவதற்கு இடமே இல்லை; தமிழகத்தைப் பொறுத்த வரையில், காவிரி நீர்ப் பிரச்சினையில் புள்ளி விவரங்கள் எல்லாம் தெளிவாகவே இருக்கின்றன. காலத்திலிருந்து திரட்டப்பட்ட புள்ளி விவரங்கள் அந்தக் மாநிலத்தைச் சேர்ந்திருக்கிற பொருளியல் நிபுணர்கள் இரண்டு இருக்கிற புள்ளி விவரங்கள், தெளிவாக இருக்கின்றன. கொடுத்து அதை



டிரிபியூனல் உட்கார்ந்து பார்ப்பார்களானால், ஆறு மாதத் திலே கூட தீர்த்துவிட முடியும். அதிக பட்சமாக ஓராண்டுக்கு மேல் கூட போகாது என்று எல்லாம் சொல்லியிருக்கிறோம். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போல், விரைவு படுத்திட, எல்லா நடவடிக்கையையும் அரசு எடுத்துக்கொள்ளும் என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். ' (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் பேசி முடித்த பிறகு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்வார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். விளக்கமாகச் சொல்வதற்கு நேரம் இல்லை. கடன் பற்றி, மொத்த கடன், அசலைப் பொறுத்த வரையில் 460 கோடியே 55 இலட்சம் ரூபாய் இருக் கிறது. கூடுதல் வட்டி, அசல் வட்டி மட்டும் 125 கோடி ரூபாய். ஏற்கனவே கட்டியவர்களுக்கு, அவர்களைக் கெடுக்கக் கூடாது என்பதற்காக அதிலே 20 கோடி வருகிறது. கிட்டத் தட்ட 155 கோடி தள்ளுபடி செய்ய வேண்டிய சூழ்நிலை வரு கிறது.

முதலிலே, 31—12—1986-க்குள்ளாக முழுவதும் கட்ட வேண்டும் என்று சொன்னோம். பல பேர் கேட்டுக்கொண்டதற் கிணங்க, பாதியை இப்போது கட்டுங்கள். மீதிப் பாதியை அடுத்த ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் கட்டுங்கள் என்று—முதலிலே போட்ட உத்தரவு 31-12-1986-க்குள் முழு தும் கட்டிவிட்டால் அந்த வட்டி அத்தனையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது.

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1986 நவம்பர் 21

அந்த வட்டி—அவர்கள் சொன்னார்கள்—இப்போது தான்
விளைச்சல் இல்லை என்று. இது அந்தத் தவணையைப்
பொறுத்தது அல்ல. இது 10 ஆண்டு, 8 ஆண்டு, 7 ஆண்டு
தவணை தவறிய வட்டி. இந்த ஆண்டு வாங்கிய வட்டிக்கு
இப்போது கேட்கவே இல்லை. இந்த ஓராண்டு வாங்கிய கடனுக்
குக் கேட்கவில்லை. அது அடுத்த ஆண்டு, அதற்கடுத்த ஆண்டு
கேட்கப் போகிறோம். இப்போது வாங்கியதற்கு இன்னும்
தவணை தவறவில்லை. இது வாங்கியதெல்லாம் தவணை
தவறியது. புள்ளி விவரம் எல்லாம் சொல்ல எனக்கு நேரம்
இல்லை.

52 ஆயிரம், 53 ஆயிரம் டிராக்டர் வாங்கி, விற்றவர்கள்,
நிலங்களை எல்லாம் விற்றவர்கள் கணக்கு எல்லாம் இருக்கிறது.
அடுத்த வாய்ப்பு ஏற்படும்போது விரிவாகப் பேசுகிறேன். ஆனால்
அவர்கள் சொன்ன சில பல கருத்துக்களை எந்த வகையில்
என்று நாம் ஆராய்ந்து பார்த்து கேட்டார்கள் என்பதற்காகத்
தான் 6 மாதம் தள்ளிக் கொடுத்திருக்கிறோம். வேறு பல சூழ்
நிலைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை
எல்லாம் எந்த வகையிலே செய்யலாம் என்பதைப் பற்றி அரசு
ஆராயும் என்பதைச் சொல்லி அவர்களுக்கு ஒரு நிமிடத்தைக்
கொடுத்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்
கள் பேசும்போது மதுரையிலே தவறுதலாக ஒரு நியமனம் செய்
யப்பட்டதாகப் பேசினார்கள். மதுரை மருத்துவக் கல்லூரியில்
தொலை பேசிக்காக, டெலிபோன் ஆப்பரேட்டருக்காக தார்
ஜஹான் ஜெஹாங்கிர் என்கின்ற முஸ்லீம் வாலிபன் நியமிக்கப்
பட்டது தவறு என்று வேலையை விட்டு நீக்கப்பட்டார். பிறகு
மீண்டும் ஒரு சர்ட்டிபிகேட் கொண்டு வந்து கொடுத்தார். அந்த
சர்ட்டிபிகேட் பெண்கள் கல்லூரியிலிருந்து கொடுக்கப்பட்டு
இருக்கிறது. மகளிருக்காக இருக்கின்ற கல்லூரியில் எப்படி ஒரு
ஆணுக்கு சர்டிபிகேட் கிடைத்தது என்பதைப் பற்றி அவர்கள்
எழுப்பினார்கள்.



1986 நவம்பர் 21] [திரு. ப. உ. சண்முகம்]

நான் சென்று மேற்கொண்டு தகவலை எல்லாம் விசாரித்
தேன். அந்த இடத்தில் இரண்டு இருக்கிறது. மீனாட்சி இன்ஸ்
டிட்யூட் ஆஃப் இன்ஜினீரிங் டெக்னாலஜி என்று ஒன்று இருக்கி
றது. அதோடு கூட, ''அசோசியேட்ட் இன்ஸ்டிட்யூட் ஆஃப்
மீனாட்சி இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்யூட் ஃபார்
வுமன்'' என்று ஒன்று இருக்கிறது. இரண்டு இருக்கிறது. இப்
போது கிடைத்திருக்கிற கடைசித் தகவல்படி இரண்டிலும் சரி,
ஆண்களையும், பெண்களையும் சேர்த்துக் கொள்கிறார்கள்.
சேர்த்துக் கொள்வதற்கு அனுமதியும் அளிக்கப்பட்டிருக்கிறது.
இரண்டிலும் அந்த டெலிபோன் ஆப்பரேட்டருக்காக கொடுத்து
இருக்கிற சர்டிபிகேட்டில் ஆண்களையும் சேர்த்துக் கொள்ளலாம்
என்று ஏற்கனவே 1982-லிருந்து இருப்பதாக அரசுக்குத் தகவல்
கிடைத்திருக்கிறது. எனவே அவர் தவறான தகவல் தந்து இருக்
கிறார் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவர் அவர்களே,
இன்றைக்கில்லை என்றாலும் நாளைக்காவது பேச எனக்கு
அனுமதி அளிக்க வேண்டும். நான் இங்கே சொன்னது தவறு
என்று அமைச்சர் அவர்கள் எஸ்டாபிளிஷ் செய்து விட்டார்.
எனவே என்னிடம் இருக்கிற தகவலை நான் சொல்லச் சந்தர்ப்பம்
அளிக்க வேண்டும்................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டுமே அவைக்
குறிப்பில் இருக்கின்றன. எனவே இதற்கு மேல் வேறு எதுவும்
வேண்டாம்.

(பிற்பகல் 1.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பிற்பகல் 1.00
மணி. விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

பேரவை முன்னுள்ள கேள்வி :

''1986—87 ஆம் ஆண்டிற்குக் கூடுதல் செலவிற்கான மானியக்
கோரிக்கைகள் அடங்கிய 17—11—1986 தேதியிட்டப்பெற்ற அறிவிப்
பில் குறிப்பிடப் பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள்

[பேரவைத் தலைவர்] [1986 நவம்பர் 21

ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1986–87 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப்பெற்ற 1986–87 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|
| எ. வருவாய் கணக்கில் செலவு | |
| 1. நில வரித் துறை .. .. | 25,37 |
| 4. பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் .. .. | 1,64 |
| 5 முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் .. .. | 21,45 |
| 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. .. | 14,66 |
| 11 மாவட்ட நிர்வாகம் .. .. .. | 1,54,33 |
| 15 காவல் துறை .. .. .. .. | 21,28 |
| 17 கல்வி .. .. .. .. .. | 2,52,94 |
| 18 மருத்துவம்.. .. .. .. .. | 1,04,67 |
| 19 பொதுச் சுகாதாரம் .. .. .. | 49,78 |
| 20 வேளாண்மை .. .. .. .. | 16,19 |
| 21 மீனளம் .. .. .. .. .. | 1,25 |
| 22 கால்நடை வளர்ப்பு .. .. .. | 3,05 |



1986 நவம்பர் 21]

| கோரிக்கை. | (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|
| எ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 23 கூட்டுறவு .. .. .. .. .. | 35,38 |
| 25 சின்கோனா .. .. .. .. | 55 |
| 26 கைத்தறியும் துணித் தொழிலும் .. .. | 12,84,64 |
| 28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் .. .. .. | 35,97 |
| 29 தொழிலாளர் நலனும் தொழிற் சாலைகளும் .. .. .. .. .. | 2,45 |
| 30 சமூக நலன் .. .. .. .. | 2,83,47 |
| 31 பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் .. .. .. .. .. | 1,00 |
| 32. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் .. .. .. .. .. | 1,42 |
| 35 நுகர் பொருள் வழங்கல் .. .. .. | 2,89,76 |
| 36 பாசனம் .. .. .. .. .. | 1,15,86 |
| 37 பொதுப் பணிகள்—கட்டடங்கள் .. .. | 5,12 |
| 38 பொதுப் பணிகள் பணியாளரமைப்பும் கருவிகளும், தளவாடமும் .. .. | 23,07 |
| 39 சாலைகளும் பாலங்களும் .. .. .. | 76,23 |
| 40 சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் .. .. .. | 9,21,00 |
| 41 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 4,88,75 |
| 42 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் .. .. .. .. .. | 35,25 |
| 43 பல்வகை .. .. .. .. .. | 49.01 |

கோரிக்கை. (ரூபாய் ஆயிரத்தில்.)

எ. வருவாய் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 45 காட்டு வளத் துறை .. .. .. | 2,87 |
| 47 செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. .. | 5,95 |
| 48 ஊரகத் தொழில்கள் .. .. .. | 13,91 |
| மொத்தம்—எ. வருவாய்க் கணக்கில் செலவு .. | 43,38,87 |

பி. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.

| | |
|---|---|
| 51 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 23,73 |
| 52 பாசனம் குறித்த மூலதனச் செலவு .. | 1,67,13 |
| 53 பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு .. .. .. | 4,58,00 |
| 55 சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 6,50 |
| 56 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு .. | 3,84 |
| 57 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 16,37 |
| 58 பல்வகை மூலதனச் செலவு .. .. | 1,55,27 |
| மொத்தம்—பி. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு | 8,30,84 |



கோரிக்கை. (ரூபாய் ஆயிரத்தில்).

சி. கடன்கள், முன் பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

| | |
|---|---|
| 59 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் .. .. .. .. | 4,57,85 |
| பெரு மொத்தம் .. | 56,26,96 |

8. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

" தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார் ".

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1980–81.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"1980–81-ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையின் முன் மொழிய ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது."

MESSAGE

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Sunder Lal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for Excess Expenditure for the year 1980–81."





10. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.
1980–81—வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

"1980–81ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் அடங்கிய 17—11—1986 தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1980–81ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுகளுக்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

நிறைவேற்றப்பெற்ற 1980–81ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

| கோரிக்கை. | | (ரூபாய்). |
|---|---|---|
| 5 | முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் | 91,698 |
| 6 | பத்திரப் பதிவு | 2,68,005 |
| 18 | மருத்துவம் | 92,75,503 |
| 31 | பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் | 11,16,350 |
| 36 | பாசனம் | 1,85,44,016 |
| 37 | பொதுப்பணிகள்—கட்டடங்கள் | 95,01,990 |
| 44 | எழுதுபொருள்—அச்சுத் துறை | 71,32,929 |
| 45 | காட்டு வளத் துறை | 15,68,389 |
| | பெரு மொத்தம் .. | 4,74,98,880 |

8. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ச) நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.''

7. அரசினர் சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன் வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1986ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை 24-11-1986 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.04 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



11. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

167. நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் 1985–86-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

168. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1985-86-ஆம் ஆண்டிற்கான பனிரெண்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

35. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1972–73-ஆம் ஆண்டிற்கான முன்னறிக்கை மீது பொதுக் கணக்குக் குழு அளித்த இரண்டாவது அறிக்கையில் (ஆறாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பத்தாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் மூன்றாவது அறிக்கையில் (எட்டாவது பேரவை) அளித்துள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

36. புதுப்பணித் திட்டம்/நிதி ஒதுக்கத்திற்கு மேல் செலவாகியுள்ள புதுப் பணித் திட்டங்கள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை (தமிழ்).

37. மிகைச் செலவை முறைப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் குறித்துப் பொதுக் கணக்குக் குழு (1983–84) அளித்த 25-ஆம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற் கொண்ட நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நாற்பதாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

38. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77 மற்றும் 1977–78ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1980–82) பதினைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஐந்தாவது அறிக்கை (தமிழ்).

39. 1986–87-ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை (தமிழ்).

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts [illegible] Madras-5.
10 The South India Saiva Siddhaanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 E. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chetty & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. [illegible] Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Ruby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-1.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri [illegible], 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri [illegible]villas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-1.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 30[illegible] AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO [illegible] NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு 19-5-1987

Issued 19-5-1987

A. Lib. 2954
12/5/1989
529/88 AL/88

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
### OFFICIAL REPORT

திங்கட்கிழமை நவம்பர் 24, 1986—தொகுதி 31 எண் 2

Monday the 24th November 1986—Volume 31 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009

Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600009

விலை ரூ. 31

## உள்ளடக்கம்.

**24–11–1986**


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 131—162 |
| 2. அறிவிப்புகள்— | |
| (அ) உறுப்பினர் திரு. ரா. சின்னச்சாமி கைது செய்யப்பெற்றுள்ளது .. .. .. | 162—163 |
| (ஆ) பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1986 | 178 |
| (இ) பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன் வடிவு, 1986 .. | 179 |
| (ஈ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1986 .. | 181 |
| 3. அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர் | 163—171 |
| உறுப்பினர்கள் தகுதியை இழத்தல்— | 173—176 |
| பேரவைத் தலைவர் தீர்ப்பு.. .. .. | 216—219 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| சமையல் எண்ணெய் .. .. .. .. | 172—173 |
| | 176—137 |
| . அறிக்கை அளித்தல்— | |
| பொது நிறுவனங்கள் குழு .. .. .. | 177—178 |
| . அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப் படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1986. .. .. .. .. | 178 |
| (ஆ) பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1986 .. .. | 179 |
| (இ) பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 .. | 179—180 |
| (ஈ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு, 1986 .. .. | 180 |
| (உ) நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவு, 1986 .. .. .. .. | 181 |

பக்கங்கள்.


(ஊ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 .. 182

(எ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 . .. 183—185

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 184—185

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம். 183

(ஏ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986 .. 186

(ஐ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1986 .. 186—203

மாண்புமிகு திரு. க. இராசாராம் 186, 195—203

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் 187—189, 190, 200

திரு. டி. ஆர். வேங்கடரமணன் 180—192

திரு. மா. சின்னராசு 192—195

(ஒ) பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 .. 203—204

(ஓ) தமிழ்ப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 .. 204

(ஔ) ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986 .. .. .. 205—215

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 205, 213—215

திரு. ஜி. கே. ஜெ. பாரதி 205—208

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் 208—210

திரு. வை. பாலச்சந்திரன் 210—211

திரு. செ. செம்மலை . 211—213




2954

பக்கங்கள்


(அஅ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 .. .. .. 220—225

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் 220, 223—225

திரு. ஜி. கே. ஜெ. பாரதி 220—221

திரு. வை. பாலச்சந்திரன் 221—223

(அஆ) பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1986 .. .. .. 225—234

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் 225, 232—233

திரு. டி. ஆர். வேங்கடரமணன் 226—220, 229—230

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் 223—234

திரு. வை. பாலச்சந்திரன் .. . 230—232

அரசினர் தனித் தீர்மானம்—

இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு ஏற்பளிப்பு.. .. .. .. ..

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. .. 234

திரு. டி. ஆர். வேங்கடரமணன்.. .. .. 235—236

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் .. .. .. 236

திரு. வை. பாலச்சந்திரன் .. .. .. 237

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 237—238

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, நவம்பர் 24, திங்கட்கிழமை.

கார்த்திகை 9, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்பு மிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.''

ஆக்கமும் கேடும் சொல்கின்ற சொல்லால் வருதலால் ஒருவன் தன்னுடைய சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்ள வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### புயல், வெள்ள நிவாரணத் தொகை.

*144—(*வினா எண் 2292)*—திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு வழங்கும் புயல், வெள்ள நிவாரணத் தொகையை அரசின் மானியத் தொகையில் கட்டிக் கொடுக்கப் பட்ட ஆதி திராவிடர் வீடுகளுக்கும் கொடுக்க விதிமுறைகளை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

### வெள்ளக் கட்டுப்பாடு உயர்மட்டக் கமிட்டி.

*145—(*வினா எண் 9998)*—திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கு நிரந்தரத் தீர்வு காண உயர் மட்டக் கமிட்டி (Flood Control Commission) ஒன்றினை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் சென்னை, வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, தஞ்சை கிழக்குக் கடற்கரை பகுதிகள், மற்றும் தமிழ்நாட்டின் பல பகுதிகள் பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. ஆண்டு தோறும் வெள்ளத்தால் உயிரிழப்பும், பொருட் சேதமும் ஏற் படுகிறது. பெரும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி, பாதுகாக்கும் பணிகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வெள்ள, நிவாரணப் பணி களை முறையாகச் செய்ய திட்டங்களைத் தீட்டிச் செயல்பட நிரந்தர அமைப்பு ஒன்றை ஏற்படுத்த அரசு எதிர்காலத்திலாவது முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பாதக தணிப்புத் திட்டம் (Anti Disaster Plan) என்ற திட்டத்தின் கீழ் முதலமைச்ச ரைத் தலைவராகக் கொண்டு மாநில அவசர நிலை மற்றும் நிவாரணப் பணி அமைப்பு ஏற்கனவே இருந்து வருகிறது. மேலும் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு மாநில ஆலோசனைக் குழு ஒன்றும் இயங்கி வருவது குறித்து குறிப்பிடப் பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு ஆலோசனைக் குழு உள்ளது. இக் குழுக்கள் அவசர காலங் களில் செயலில் ஈடுபட்டு நிவாரணப் பணிகளை அவ்வப்போது செயல்படுத்தி வருகின்றன. இதைத் தவிர வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கு நிரந்தரத் தீர்வு காண உயர்மட் டக் குழு இயங்கவில்லை. வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப் புகள் போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு செய்யப்படு கின்றன. நிரந்தரத் தீர்வை அந்தந்த துறைகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டிலிருந்து அவ்வப்போது செய்து வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இந்த ஆண்டும் கூட வறட்சி தொடங்கியிருக்கிறது. சென்ற ஆண்டு தொடங்கிய வறட்சிப் பணிகள் முற்றுப் பெறாத நிலையில் இந்த ஆண்டும் வறட்சி வரும் என்ற நிலையிலே மக்கள் அச்சத்திலேயிருக்கிறார் கள். இது ஒரு புறமிருக்க திடீரென்று வருகிற வெள்ளத்தால் வரும் வெள்ள நீரை சேமித்து வைத்து, பிற்காலத்தில் அதைப் பயன்படுத்த முறையான நடவடிக்கையை இனியாவது அர சாங்கம் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப் பிட்டது போன்ற தடுப்பு முறை நடவடிக்கைகள் எடுக்க மாண்புமிகு முதலமைச்சர் தலைமையின் கீழ் கொண்ட ஒரு





அமைப்பு இருக்கிறது. தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் ஒரு குழு இயங்கி வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் களின் கீழ் குழு இயங்கி வருகிறது. பட்ஜெட்டில் இதற்காக மத்திய அரசு ஆண்டுக்கு கிட்டத் தட்ட எட்டரை, எட்டே முக் கால் கோடி ஒதுக்கி வர வேண்டுமென்ற முறை இருக்கிறது. அத்தொகையை வறட்சி, வெள்ளம் வராத காலங்களில் அப்படியே சேமித்துக் கொண்டு வருகிறோம். வேறு எந்த வகையிலும் அத்தொகை செலவழிக்கப்படக்கூடாது. எதிர் பாராத வகையில் வறட்சி, வெள்ளம் ஏற்படுகிறபோது சேமித்து வைத்திருக்கிற இந்தப் பணத்தைச் செலவழித்த பிறகுதான் மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமானாலும் உதவி செய்யும். அந்த அளவிலே வறட்சியும், வெள்ளமும் அவ்வப்போது இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிற சூழ்நிலையிருப்பதால் அதற்காக முன் கூட்டி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை வளர்ச்சித் திட்டங்களின் மூலமாகவும், வேறுபல திட்டங்களின் மூலமாகவும் வகுக்கும்படியாக அந்தந்தத் துறைகள் அறி வுறுத்தப்பட்டிருக்கின்றன.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீகார் மாநிலம், பாட்னாவில் இது போன்ற நிரந்தர அமைப்பு இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் கடுமையான அளவிலே வறட்சியாலோ அல்லது பெரும் வெள்ளத்தாலோ தமிழகம் பாதித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே, வந்த பிறகு அவசரம் அவசரமாக அள்ளித் தெளித்தாற்போல் செய்வதைவிட வருமுன் காக்கும் அரசாக ஏன் நிரந்தர அமைப்பை உருவாக்க அரசு முன்வரக்கூடாது? இதிலே அரசாங்கத்திற்கு என்ன சங்கடம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பணியைச் செய்கின்ற முழு அதிகாரம் படைத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிர்வாகத்தின் முழு அதிகாரம் படைத்தவர் தலைமைச் செயலர் அவர்கள். மாவட்டத்தில் முழு அதிகாரம் படைத்தவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள். இவர்கள் மூன்று பேரின் தலைமை யின் கீழும் குழுக்கள் இருக்கின்றன. வெள்ளச் சேதங்கள் எங் கெங்கு ஏற்பட்டிருக்கின்றன, தண்ணீர் எங்கெங்கு தேங்குகிறது, அதைத் தடுப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்று சொல்ல லாம். உதாரணமாக அடையாறில் வெள்ளம் வருகிறபோது இரு கரைகளும் உடைபடுவதால், பாதிப்பு ஏற்படுகிறது. அந்தக் கரைகள் உயர்த்தப்பட வேண்டுமென்று, 2 கோடி ரூபாய் அள வுக்குத் திட்டம் வகுக்கப்பட்டு, மத்திய அரசு அதை ஒத்துக் கொண்டு, மாநில அரசு அதை ஏற்றுக்கொண்டு, அதன் கரை களை உயர்த்துவதால் வெள்ளச் சேதம் தடுக்கப்படுமென்று சொல்லும்போது சம்பந்தப்பட்ட துறைகளினால் அந்தத் திட்டங் கள் கொடுக்கப்படுகின்றன ஒரு அமைப்பு தனியாக ஏற்படுவதால்

இவை ஏற்பட்டுவிடாது. ஆங்காங்கு ஏற்படும் வெள்ளச் சேத மானாலும், வறட்சி நிவாரணப் பணியானாலும், அவற்றுக்கு அந்தந்தத் துறை அல்லது மாவட்ட அளவில் அல்லது மாநில அளவில் அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறவர்கள் உடனடியாக கவனிக்கவேண்டிய பணியைப் பற்றி ஆராய வேண் டும். அதற்கு குழுக்கள் இயங்கி வருகின்றன.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சிறு மழை பெய்தால்கூட வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுவிடுகிறது. அதற்குக் காரணம் குளங்களும், ஏரிகளும் ஆக்கிரமிக்கப்படுவ தாலும், தூர் எடுக்கப்படாததாலும் என்று நினைக்கிறேன். ஆக்கிரமிப்புக்களைத் தடுக்க அதிகாரம் பெற்றிருக்கிற இலாக் காக்கள் அதைச்செய்து நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டாலேயே வெள்ளச் சேதத்தை தடுத்துவிடலாமென்று கருதுகிறேன். அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா: நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீர்ப் பாசனத் துறையின் சார்பாக குளங்கள், ஏரிகள், வாய்க்கால்கள் ஆகியவற்றில் தூர் வாருகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. சில சமயங்களில் தண்ணீரைக் கொண்டு வந்து சேர்க்கும் கால்வாய்களையே ஆக்கிரமித்துக் கொண்டு, அவற்றிலேயே வீடுகள் கட்டிக்கொண்டு குளத்திற்கும், ஏரிக்கும் தண்ணீர் வராமல் செய்துவிடுகிறார்கள். மேலும் குளங் கள், ஏரிகள் வறண்டு போகின்ற நேரங்களில் அந்த புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக்கொள்ளும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. இவற்றைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நீர்ப்பாசனத்திற்கு இல்லாவிட்டாலுங்கூட, அவற் றைச் சுற்றியுள்ள கிணறுகளில் குடி தண்ணீருக்காக நீர் ஊற்றுகள் ஏற்பட வேண்டுமென்றால் ஏரிகள், குளங்களில் தண்ணீர் தேங்கி யிருக்க வேண்டும். அந்த அடிப்படையில் திட்டமிட்டு, மாவட்டங் களைப் பொறுத்த வரையில், 'பேஸ்டு ப்ரோக்ராம்' என்ற அடிப்படையில் தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உசிலம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றல்.

146—(*வினா எண். 4399) திரு. பி. கே. எம். முத்துராம லிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தேர்வுநிலைப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தேர்வுநிலை பேரூ ராட்சியை நகராட்சியாக மாற்றுவது சம்பந்தமாக உசிலம்பட்டி பேரூராட்சி மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் அம் மன்றம் 11—7—86-ம் தேதிய 77-வது தீர்மானத்தில் தொடர்ந்து பேரூராட்சியாகவே இருக்கட்டும் என தீர்மானித்துள் ளது.



திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, உசிலம்பட்டி பேரூராட்சியை நகராட் சியாக மாற்ற வேண்டுமென்று பல ஆண்டுகளாகச் சொல்லப் படுகிறது. அதன் மூலமாக அந்த நகரத்தின் அபிவிருத்தி ஏற் பட்டு, அந்தப் பகுதி முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று பல ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது. இதற் கிடையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது போன்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தப் பேரு ராட்சி நகராட்சியாக மாற்றப்பட்டால், அந்தப் பகுதி முன் னேறும் என்று அங்கேயிருக்கும் வியாபாரப் பெருமக்கள் நினைத் துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இது பற்றி அரசு அறிவுறுத் துமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, ஒரு பேரூராட்சி நகராட்சியாக மாற்றப் பட வேண்டுமென்றால் அதற்கென்று 'பைனான்சியல் நார்ம்ஸ்' —நிதிநிலைமை பற்றிய வரைமுறைகள் உள்ளன. வருவாய் 5 இலட்சம் ரூபாய் இருந்தால்தான் அந்தப் பேரூராட்சி மூன்றாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்படும். அந்த 'பைனான்சியல் நார்மஸ்' உசிலம்பட்டியில் இருக்கிறதா என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. பிறகு நல்ல முடிவு எடுக்கும்.

சென்னை புறநகர் பேருந்து நிலையம்

147—(*வினா எண். 4454) திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச் சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எஸ்பிளனேட்டில் உள்ள புறநகர் பேருந்து நிலையத்தை இடநெருக்கடி காரணமாக வேறு இடத் திற்கு மாற்றும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, சென்னை நகரத்தில் இருக்கின்ற புறநகர் பேருந்து நிலையம் மிகவும் சுகாதாரச் சீர்கேடு நிறைந்திருக்கிறது. அங்கே பஸ்கள் நிற்க இட நெருக்கடி இருக்கிறது. மேலும் பயணிகள் தங்க ஓய்விடங்கள் இல்லாமல், பொது மக்கள் மிகவும் அவதிப் படுகிறார்கள். தலைநகரில் இப்படி ஒரு பேருந்து நிலையமா என்று நினைக்கும் அளவுக்கு அந்தப் பேருந்து நிலையம் இருக் கிறது. தன் தொகுதி மக்களின் நலன் கருதி தினமும் தொகுதியை வலம் வரும் மாண்புமிகு அமைச்சரவர்கள், இந்தத் தலைநக ருக்கு வரும் மக்களின் நலன் கருதி, அந்தப் பேருந்து நிலையத் திற்கு திடீர் விஜயம் செய்து, அந்தப் பேருந்து நிலையத்தை விரிவான ஒரு இடத்திற்கு மாற்றும் திட்டத்தை விரைவாக பரி சீலிப்பார்களா ?

[1986 நவம்பர் 24

(முற்பகல்-9.10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அப்படி மாற்றுவது என்றாலும் இடப் பிரச்சினையுடன் பல பிரச்சினைகள் இருக்கின்றன. மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன உணர்வுகளை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியுமோ அவைகளைச் செய்ய அரசு சித்தமாக இருக்கிறது.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சென்னைக்கு அருகிலுள்ள கம்மம்பட்டி என்ற பகுதியிலே இந்தப் பேருந்து நிலையத்தை மாற்றுவதற்கு ஒரு உத்தேசம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா அல்லது இந்த திட்டத்தை கைவிட்டு விட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, அது பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

ஊராட்சி ஒன்றியங்களில் வசூலிக்கப்படும் உள்ளூர் மேல்வரி.

148—(*வினா எண். 8027) திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச் சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்விப் பொறுப்பை அரசே ஏற்றுக்கொண்டு விட்டதால் ஊராட்சி ஒன்றியங்களில் கல்விக்காக வசூலிக்கப்படும் லோக்கல் சர்சார்ஜ் வசூலிப்பதைக் கைவிடச் செய்யும் திட்டம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, அரசு கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் இப்படிப்பட்ட ஊராட்சிப் பகுதிகளிலே பல்வேறு இடங்களிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலும், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றும்போது அந்த இடம் இட்டு நிரப்பாமலும் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் சர்சார்ஜ் நியாயமானதாக இருக்கின்றதா என் பதை அரசு மீண்டும் பரிசீலிக்குமா ? இப்படிப்பட்ட குறைகளை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்க ளுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன், இந்த லோகல் சர்சார்ஜ் என்பது கல்விக்காக மட்டுமல்ல. பொது நிதிக்காக வசூலிக்கப்படுகின்றது. கல்விக்கும் இதிலிருந்து செலவு செய்யப்படுகிறது.



1986 நவம்பர் 24]

சென்னை மூலக்கொத்தளம் பேருந்து நிலையம்.

149—(*வினா எண். 8431) திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச் சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மூலக்கொத்தளம் (பேசின் பாலம்) பேருந்து நிலையத்தை சென்னை பிராட்வே பேருந்து நிலையத்திற்கு மாற் றும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, சென்னையில் மூலக்கொத்தளம் பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தின் அருகில் பக்கிங்காம் கால்வாய் இருக்கின்றது. அதன் பக்கத்தில் எதிரிலேயே கருவாட்டு மண்டி இருக்கின்றது. அதனால் சுகாதார வசதி குறைவாக இருக்கின்றது. எதிர் காலத்தில் கொத்தவால் சாவடியை கோயம்பேட்டுக்கு மாற்ற இருக்கிறோம். ஆகவே அந்த இடத்திற்கு பேருந்து நிலையத்தை மாற்ற அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எந்த கருத்துருவும் இது பற்றி அரசினிடத்தில் தற்போதில்லை.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பேசின் பிரிட்ஜ் பஸ் நிலையம் போது மானதாக இல்லை. அங்கு பயணிகளுக்கு ஷெல்ட்டர்கள் இல்லை. எனவே அதை விரிவுபடுத்தி அங்கு ஷெல்ட்டர்கள் அமைத்துக் கொடுக்கின்ற பணியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

காட்டுமன்னார் கோயில் ஊராட்சி ஒன்றிய பொதுநல நிதி.

150—(*வினா எண். 9123)-திரு. ச. ஜெயச்சந்திரன் மற்றும் திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் 1984–85, 1985–86 ஆகிய ஆண்டு களில் பொதுநல நிதியிலிருந்து வாங்கிய மின்விளக்குகள், குடி தண்ணீர் குழாய்கள், சத்துணவுப் பொருள்கள் ஆகியவைகளின் விபரம் என்ன ?

(ஆ) இந்தப் பொருட்கள் வாங்குவதற்கு அரசின் முன் அனுமதி பெறப்பெற்றுள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) காட்டுமன்னார்கோயில் ஒன்றியப் பொது நிதியிலிருந்து வாங்கப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூபாய்கள்.

| ஆண்டு | | மின் விளக்குகள் மதிப்பு ரூ. | குடிதண்ணீர் குழாய்கள். மதிப்பு ரூ. | சத்துணவுப் பொருள்கள் |
|---|---|---|---|---|
| 1984–85 | .. | 8,86,585 | 11,718 | இல்லை. |
| 1985–86 | .. | 3,84,673 | 3,91,997 | இல்லை. |

(ஆ) இல்லை.

**திரு. ஏ. தங்கராசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற பொது நிதியை இப்படி அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெறாமலேயே அதிகாரிகள் அபிப்ராயப்படி எடுத்து செலவு செய்திருக்கிறார்களே, அப்படிப்பட்ட அதிகாரிகள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ? காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியம் மட்டுமல்லாமல் மேற்கொண்டு இம்மாதிரி தமிழகத்திலுள்ள பல ஊராட்சி ஒன்றியங்களிலும் இம்மாதிரி லட்சக்கணக்கில் வேண்டுமென்று பொது நிதியிலிருந்து பணத்தை எடுத்து செலவு செய்திருக்கிறார்களே, இனிமேல் அரசாங்கத்தினுடைய அனுமதியை பெற்றுத்தான் செலவு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் உத்தரவு இடுவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### ஊராட்சி, பேரூராட்சி, ஒன்றியத் தேர்தல் வழக்குகள்.

151—(*வினா எண். 9731)—திரு. வி. கே. இராசு : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடந்து முடிந்த ஊராட்சி, பேரூராட்சி, ஒன்றியத் தேர்தல்களில் அரசு மீது வழக்கு ஏதேனும் போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எதிர் வழக்காடியுள்ளதா ?





**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவிகளில் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு இல்லாமல், ஊராட்சித் தேர்தல்களை நடத்தியதற்கு எதிராக அரசு மீது, டெல்லி உச்ச நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனுவும், ஒரு உரிமையியல் மேல் முறையீடும் போடப்பட்டுள்ளது.

(ஆ) ஆம்.

### ஆண்டிப்பட்டி அரசினர் மருந்தகம்.

152—(*வினா எண். 2000) திரு. இரா. முத்தையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசினர் மருந்தகத்தை மருத்துவமனையாக உயர்த்தும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தரம் உயர்த்தப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசினர் மருந்தகத்தை 24 படுக்கைகள் கொண்ட பொதுப்பிரிவு, 8 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவுடன், அறுவை அரங்கு, எக்ஸ்ரே பிரிவு மற்றும் மருத்துவர்கள் குடியிருப்பு இல்லங்கள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசாணை (நிலை) எண். 1110, சுகாதாரம், நாள் 9-6-1986-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### கோவை மருத்துவமனையில் தீப்புண் தீவிர சிகிச்சைப் பிரிவு.

153—(*வினா எண். 6654) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீப்புண் சிகிச்சைக்கு தீவிர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படத் தொடங்கும் ?

[1986 நவம்பர் 24

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. கு. ரமணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி தீப்புண் கேஸ்கள் ஏராளமாக ஆஸ்பத்திரிகளுக்கு வந்த வண்ணம் இருக்கின்றன. எப்படி மருத்துவமனைகளில் கடுமையான வியாதிகளுக்கு விசேஷமான பிரிவை ஏற்படுத்தி சிகிச்சை அளிக்கப்படுகிறதோ அதுபோல் தீப்புண் கேஸ்களுக்கும் விசேஷப் பிரிவை ஏற்படுத்தி சிகிச்சையளிக்க வேண்டும். காரணம் தீப்புண் என்று வருகின்ற கேஸ்களில் பலர் இறந்துவிடுகின்றனர். அது மட்டுமல்லாமல் குடிசைகளில் தீ பிடிக்கின்றபோது ஒட்டுமொத்தமாக பலர் தீயில் சிக்கி தீக்காயத்துடன் சிகிச்சைக்காக வருகின்றார்கள். ஆகவே, இதற்காக தனியாக விசேஷப் பிரிவு ஏற்படுத்துவது என்பது அத்தியாவசியமானதும், நியாயமானதும் ஆகும். ஆகவே, இதுபற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் தீப்புண் வைத்தியத்திற்கு என்று தனிப் பிரிவு இல்லை. தீப்புண்ணால் பாதிக்கப்பட்டு வருகின்றவர்களுக்கு வைத்தியம் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை மனதிலே கொண்டு நிதி ஆதாரத்தையும் மனதிலே கொண்டு அரசு பரிசீலிக்கும்.

**டாக்டர் ந. மாசிலாமணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் இந்தியாவிலேயே கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில்தான் தீப்புண்ணுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. அங்குள்ள வசதி தமிழகத்தில் உள்ள வேறு எந்த அரசு மருத்துவமனைகளிலும் கிடையாது. அங்குள்ள வசதி அளவிற்கு தமிழகத்திலே உள்ள அனைத்து அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஏற்படுத்துவதுடன், பிளாஸ்டிக் சர்ஜரி டிப்பார்ட்மென்ட் மூலம் சிகிச்சை அளிக்கும் முறையை விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையிலே தீப்புண்ணுக்கான இன்டென்சிவ் கேர் யூனிட், இ.சி.ஜி., பிளட் பாங்க், லேபரேட்டரி போன்ற வசதிகள் இல்லை. அதற்கான வசதியும் ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தைக் கொஞ்சம் திருத்திக்கொள்ள வேண்டுகிறேன். ஏற்கெனவே 4 இடங்களில் தீப்புண்ணுக்கான தனிப் பிரிவுகள்





இருக்கின்றன. அரசினர் பொது மருத்துவமனை, சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை, சென்னை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய 4 இடங்களிலும் தீப்புண்ணுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**திரு. செ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டில் இருக்கின்ற அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அன்றாடம் தீப்புண்ணினால் பாதிக்கப்பட்டவர்கள் இறக்கிறார்கள். நேற்று முன்தினம் கூட செல்வி என்பவர் தீப்புண் ஏற்பட்டு அங்கே சேர்த்த உடன் மருத்துவ வசதியில்லாமல் இறந்துவிட்டார்கள். மேலும் அங்கே தீப்புண்ணால் பாதிக்கப்பட்டு ஆண், பெண் இறக்காத நாளே இல்லை. ஆகவே, அங்கே தீப்புண்ணுக்கு தனியாக தீவிர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக தீப்புண்ணுக்கு சிகிச்சை அளிக்க பிரிவு இல்லை. ஆனால் அரசு மருத்துவமனைகளில் தீப்புண் பட்டவர்களுக்கு அல்லது காயம் பட்டவர்களுக்கு அத்தகைய வசதி அளிக்கப்படுகிறது.

**திரு. மா. சின்னராசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இதுபோன்று தீப்புண்பட்ட நோயாளிகளும், மற்ற தொழிற்சாலைகளிலிருந்து தீ விபத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்ற நோயாளிகளும் அதிகரித்து வருகின்றார்கள். இந் நிலையில் அங்கேயுள்ள படுக்கை வசதி அவசியம் கூடுதலாகத் தேவை என்கிற நிலையும் இருக்கிறது. ஆகவே, அங்கே கூடுதல் படுக்கை வசதியை ஏற்படுத்த அரசு ஏதேனும் செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என்று அறிய விருகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இல்லை என்று சொன்னேன். அங்கே இருக்கும் நிலைமைகளை உத்தேசித்து, நிதிநிலையையும் சேர்த்து ஆராய்ந்து அதுபற்றி அரசு முடிவெடுக்கும்.

**திரு. வி. பாலகிருஷ்ணன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி பெருநகரிலே பட்டாசுத் தொழிலும் தீப்பெட்டித் தொழிலும் அதிகமாக வளர்ந்து வருகின்றன. அடிக்கடி தீ விபத்துகள் ஏற்படுகின்றன. சிவகாசி அரசு பொது மருத்துவமனையில் தீப்புண் சிகிச்சைக்காகத் தனிப் பிரிவு அமைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவரவர்களே, சிவகாசி பட்டாசு சிவகாசியிலேயே வெடிப்பதில்லை. மற்ற இடங்களில், தமிழ்நாடு முழுவதும் வெடிக்கப்படுகிறது.

[1986 நவம்பர் 24

### அச்சன்புதூர் பேரூராட்சியில் அரசு மருத்துவமனை.

*154—(*வினா எண். 9192)* திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் அச்சன்புதூர் பேரூராட்சி பகுதியில் அரசு மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுவிட்டதா?

(இ) எப்பொழுது பணிகள் தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) மற்றும் (இ): கேள்விக்கு இடமில்லை.

**திரு. தெ. பெருமாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட அச்சன்புதூர் பேரூராட்சியில் அன்றாடக் கூலி வேலை பார்க்கக்கூடிய ஏழை எளிய மக்கள் வாழ்கிறார்கள். ஒரு தொழிலாளி நோய்வாய்ப்பட்டால் ஏறத்தாழ கடையநல்லூரில் உள்ள மருத்துவ மனைக்கு வருவதற்கு பத்து கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஏழை எளியவர்களாக இருக்கின்ற காரணத்தினால் ஒரு டாக்சி அமர்த்திக்கொண்டு வர முடியாது. அங்கே மிகவும் மோசமாக இருக்கக்கூடிய நோயாளிகளைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, இந்த ஆண்டு இல்லா விட்டாலும் அடுத்த ஆண்டாவது அச்சன்புதூரிலே ஒரு மருத் துவமனை அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச் சரவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுகோள் வைக்கிறார்கள்; கேள்வி கேட்க வில்லை.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை தாலுக்கா அச்சன்புதூரிலே இப்பொழுது அரசு மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். செங் கோட்டை தாலுக்காவில் இருக்கக்கூடிய ஆய்குடியிலே சகல வசதிகளும் பொருந்திய ஒரு அரசு ஆஸ்பத்திரி நீண்ட நெடுங் காலமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் அங்கே டாக் டர்கள் இல்லை என்கின்ற புகார் பலமுறை அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டும்கூட இன்னும் அங்கே டாக்டர்கள் நியமிக்கப்படவில்லை. அமைச்சரவர்கள் இந்த



1986 நவம்பர் 24]

வேண்டுகோளை ஏற்று உடனடியாக ஆய்குடியிலே ஒரு ஆண் மற்றும் பெண் மருத்துவர்களை நியமனம் செய்வதற்கு உத்தர விடுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு மருத்துவர்கள் இல்லையோ அங்கெல்லாம் மருத்துவர்களை நியமிக்க ஆணை பிறப்பித் தாகிவிட்டது.

### முகையூர் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை.

*155—(*வினா எண். 10085)* திரு. மு. சந்திரசேகர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம்—முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மணலூர்பேட்டை பேரூராட்சி எல்லையில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றி அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இல்லை.

### தமிழ்நாடு இந்து கோயில்களின் ஆண்டு வருமானம்.

*156—(*வினா எண். 1257)* திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச் சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதிலுமுள்ள இந்து கோயில் சொத்துக் களில் இருந்து அரசுக்குக் கிடைக்கும் மொத்த ஆண்டு வரு மானம் எவ்வளவு?

(ஆ) அப்பணம் எதற்கெதற்கெல்லாம் செலவழிக்கப் படுகிறது?

(இ) ஒவ்வொரு செலவினத்தின் மீதும் செலவழிக்கப்படும் பணத்தின் விழுக்காடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, (அ) கோயில்களிலிருந்து உதவித் தொகை மற்றும் தணிக்கைத் தொகை வகையில் அரசுக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ. 1,58,95,219 ஆகும்.

(ஆ) இந்தத் தொகை இலாகாவின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் நித்திய பூசை, திருவிழா, திருப்பணி, ஆலய நிர்வாகம் போன்றவற்றை கண்காணிக்கவும், திருக்கோயில் மானியங்களையும், சொத்துக்களையும் பாதுகாக்கவும் தேவையான நிர்வாகச் செலவுகளுக்கு செலவழிக்கப்படுகிறது.

(இ) பொது நிர்வாகத்திற்கு 52 சதவீதமும், ஆலய நிர்வாகத்திற்கு 26 சதவீதமும், ஆலயத் தணிக்கைக்கு 18 சதவீதமும் ஆலய திருப்பணி வேலைகளைக் கண்காணிக்கும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஊதியப்படிகள், ஏனைய செலவுகளுக்கு 4 சதவீதமும் செலவழிக்கப்படுகிறது.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய சட்டத்தின் 92-வது பிரிவு உட்பிரிவு 1 திருத்தப்பட்ட பிறகு அங்கே இருக்கின்ற அரசுப் பணியாளர்களுக்கு ஊதியம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஆன்யுவல் கான்ட்ரிப்யூஷன் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் 4-வது சம்பளக் கமிஷனுடைய முடிவின்படி அந்தப் பணியாளர்களுக்கு ஊதியம் உயர்த்திக் கொடுக்கப்படவில்லை என்று சொல்வது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. வை. பாலசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத்துறை ஆட்சியின் கீழ் இருக்கின்ற சமய நிறுவனங்களை தன்னாட்சி அமைப்பிடம் ஒப்படைப்பதாக அரசு ஏதேனும் முடிவு மேற்கொண்டு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில்—நேற்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்படியொரு கருத்து இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்களுக்கு உரிய நிலங்களிலிருந்தும் மற்ற கட்டிட சொத்துக்களில் இருந்தும் கோயிலுக்கு வர வேண்டிய குத்தகைத்தொகை, வாடகை பாக்கி போன்றவைகளை வசூலிக்க ஏதாவது தனி நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? அதைப்போல, தமிழகம் முழுவதும் உள்ள கோயில்களில் குத்தகை, வாடகை பாக்கி எவ்வளவு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.



திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவில்களுக்கு கிடைக்கின்ற நிதியைச் செலவிடும்போது, பொது நிர்வாகத்திற்கு 52 சதவிகிதமும், கோவில் நிர்வாகத்திற்கு 26 சதவிகிதமும், தணிக்கைக்கு 18 சதவிகிதமும் என்று பல்வேறு கணக்குகளைச் சொன்னார்கள். பொது நிர்வாகத்திற்குச் செலவிடப்படுவதில், எவ்வித வருமானமும் இல்லாமல், வசதியும் இல்லாமல், பூஜைக்கே வழியில்லாமல் இருக்கின்ற கோவில்களுக்கு ஏதேனும் செலவிடப்படுகிறதா, அப்படி செலவிடப்படுகின்றது என்றால், அது எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இதுபற்றிய தனிக் கேள்வி எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. தி. [illegible]பராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள கோயில்களில் வருமானம் எவ்வளவு வருகின்றது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால், திருச்செந்தூர் போன்ற மிக முக்கியமான கோயில்களில்கூட சுத்தம் இல்லாத நிலை—அசுத்தமான முறையில், [illegible] முடிந்த [illegible] கோயிலை [illegible] அவர்களே, ஏன் இந்தக் கோயில்களையும் [illegible] கூடாது? அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அசுத்தமாக இருப்பதாக இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். சுத்தமாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. சுப்பராயன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள பொதுக் கோயில்களை சொத்துக்களையும், [illegible] அரசே மேற்கொண்டு, பூஜை [illegible] பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இதைப் பரிசீலிக்கும் உத்தேசம் இல்லை.

டாக்டர் கே. [illegible]: பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை கோவில்களிலிருந்து இப்போது கிடைக்கக்கூடிய வருமானம் பெருமளவில் பலரால் எடுத்துக் [illegible] மோசமான சூழ்நிலையைக் கொண்டிருக்கிறது. உண்மையில் வருமானம் தரக்கூடிய வகையில் இதை அரசு [illegible] தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று [illegible] விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, போதிய தகவல்கள் கொடுத்தால், அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் நிலங்களை சாகுபடி செய்து வரும் குத்தகை [illegible]சாமிகளுக்கு அந்த நிலத்தை உடமையாக்கித் தரும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. அது எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அது இன்னும் அரசின் ஆய்வில் இருக்கிறது. முடிவு எடுத்தவுடன் அரசு அறிவிக்கும்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்களிடமிருந்து. கோவில் சொத்துக்களிலிருந்து வரவேண்டிய பாக்கி அதிகமாக இருக்கிறது. அதை வசூல் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது [illegible] அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, வசூல் செய்வதற்கு அந்தந்தக் கோவில் நிர்வாகிகள் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரம் போன்ற மாநகரங்களில் ஆலயங்களுக்குச் சொந்தமான, விலை மதிக்க முடியாத [illegible] வீடுகளில், நிலங்களில் எல்லாம் குறைந்த வாடகையில் இருக்[illegible]ர்கள். அப்படிப்பட்ட வீடுகளையும், நிலங்களையும் ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, குறைந்த வாடகைக்கு நெடுங்காலத்திற்கு இருப்பது [illegible] அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எப்படி வாடகையை உயர்த்தலாம் என்று அரசு யோசித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்துக் கோயில்களின் சொத்துக்களை எடுப்பது போல், பள்ளி[illegible] சர்ச் போன்ற கோயில்களின் சொத்துக்களையும் [illegible] வருமானம் வரக்கூடிய பள்ளிவாசல், சர்ச [illegible] அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அது மாதிரி யோசனை ஏதும் இல்லை. [illegible]





திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி கோவிலூர் கோவிலிலுள்ள கோயில் நிலங்களை ஒருவர் எடுத்துக் கொண்டு, அந்த நிலத்தை தான் அனுபவித்து வரும், ரூ. 75,000 குத்தகை பாக்கியுள்ள ஒருவரை அக்கோவில் தக்காராக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மூலமாக நாடு, சமுதாயம் சிறப்புறும். எனவே கோவில் மூலம் வருகின்ற வருமானத்தில் 50 சதவீதம் கல்விக்காக மட்டும் எடுத்துக் கொண்டு செலவழிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கோயில்கள், கல்லூரிகள் துவக்குவதற்கும், மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகள், பாலிடெக்னிக்குகள் துவக்குவதற்கும் பணத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றன.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறைக்கு வரவேண்டிய வாடகை, அதே போல் இந்தச் சொத்துக்கள் மூலம் ஏற்படுகின்ற பிரச்னைகள், வழக்குகள் நீண்ட காலம் முடிவு பெறாமல் இருக்கின்ற காரணத்தினால், அறநிலையத் துறைக்கு வருமானம் வராமல் இருக்கிறது. எனவே, அவைகளை விரைவாக விசாரித்து பைசல் செய்வதற்கு என விசேஷ டிரிபியூனல் ஏற்படுத்த அரசு ஏதாவது பரிசீலனை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள உயர்நீதி மன்றம் அல்லாத வழக்கு மன்றங்களில் வழக்குகளைக் கவனிக்க ஒரு வழக்கறிஞரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளைக் கவனிக்க ஒரு வழக்கறிஞரும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை சம்பந்தமான நிலங்களையும், வீடுகளையும் சில பெரியவர்கள் லீசுக்கு எடுத்துக்

கொண்டு அரசாங்கத்திற்குக் குறைந்த குத்தகையைக் கட்டு கிறார்கள். ஆனால் அவர்களே அந்த நிலங்களை அதிகப்படி யான குத்தகைக்கு ஏழைகளுக்கு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து யார் அந்த நிலங்களை, வீடுகளை அனுபவிக்கிறார்களோ அவர்களுக்கே லீசுக்கு விடுவதற்கு வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மாதிரி குத்தகைக்கு எடுத்த செல்வந்தர்களின் பட்டியலை மாண்புமிகு உறுப்பினர் கொடுத் தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. டி. என். முருகானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கான்ட்ரிபியூஷன் வசதியில் சிலாப் சிஸ்டம் இருப்பதைப் போல ஆடிட் பீஸ் வசதியிலும் சிலாப் சிஸ்டத்தைக் கடைப்பிடிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன்பு இது சம்பந்தமாக ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதிலே சிலாப் சிஸ்டம் இப்போது இல்லை.

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களைக் குத்தகைக்கு அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள் கடந்த காலத்தில் அவர்களே அந்த நிலங்களை மற்றவர்களுக்குக் கிரயத்திற்கு விற்று இருக்கிறார் களே, அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து கோயில் நிலங்களைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைக்கு எடுத்தவர்கள் மேற்படி நிலங்களை விற்க முடியாது, அது சட்ட விரோதக் ஆகும். அப்படி விற்றிருந்தால் மீண்டும் அந்த நிலங்களைக் கோயில்கள் கைப்பற்றும்.

**திரு. க. நரசிம்மபல்லவன் :** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பரம்பரை தர்மகர்த்தாக்கள் என்று சொல்லிக் கொண்டு அவர்களுடைய சொத்துக் கணக்குகளைச் சரியாகக் காண்பிக்காமல் இருப்பதாகத் தெரிகிறது. பரம்பரை தர்ம கர்த்தாக்கள் என்று சொல்லி நிர்வாகம் செய்யக் கூடியவர்கள் அரசுக்குச் சரியான கணக்குகளைக் காட்டாமல் இருக்கிறார்கள். மேலும் கோயில் நிலங்களிலிருந்து குத்தகை வசூலாவதும் இல்லை. ஆகவே அந்த நிலங்களைக் குறைந்த விலைக்கு ஏழை களுக்கு வீட்டுமனைகளாக விற்று உதவ அரசு முன் வருமா ?



**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரை தர்மகர்த்தாக்கள் என்று சொல்கிறவர்கள் நிர்வாகத்தில் ஊழல் இருந்தால் அவர் களுடன் கூட பரம்பரை தர்மகர்த்தா அல்லாத ஒருவரை அரசு நியமிக்கலாம். பரம்பரை தர்மகர்த்தாக்கள் ஊழல் செய் கிறார்கள் என்றால் நிர்வாக அதிகாரிகள், இந்து அறநிலையத் துறை அதிகாரிகள் நிர்வாகம் செய்வார்கள்.

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் சொத்துக்களை அரசு பொதுக் காரியங்களுக்காக எடுக்கிறபோது அங்கே இருக்கிற தக்கார்கள் அதற்குத் தடை செய்கிறார்கள். பொதுக் காரியங்களுக்கு எடுக் கிற போது தடையை நீக்கி உடனடியாக பொதுக் காரியங்களை ஆரம்பிப்பதற்கு அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது வரையில் அப்படி தக்கார் கள் தடையாக இருந்ததாகத் தகவல் இல்லை. தடையாக இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## புரோ நோட் மோசடி.

157—(*வினா எண் 4123) **திருமதி நா. ராமாம்பாள் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புரோ நோட்டு மோசடிகளைக் குறைக்க கட்டாயப் பதிவுச் சட்டத்தின் கீழ் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நடைமுறைப்படி புரோ நோட்டு பதிவு செய்யப்பட வேண்டுமென கட்டாயப் படுத்த இயலாது.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லேவாதேவி முறையில் புரோநோட் சிஸ்டம் மிக மிக அரசாங்கத்தை மோசடி செய்யக் கூடிய வகையிலும் பொது மக்களை, ஏழைகளை மோசடி செய்யக்கூடிய வகையிலும் இருக்கிறது. ஆகவே இந்த லேவாதேவி செய்யக் கூடியவர்கள் பற்றி—அவர்களுக்குள்ளே தகராறு வந்தால்தான் கோர்ட்டிற்குப் போனால்தான்—வெளியே தெரிய வருகிறது. இந்த நிலை யைப் போக்குவதற்குக் கடன் கொடுக்கக் கூடியவர்கள் அரசாங் கத்தில் பதிவு செய்ய வேண்டும் அல்லது குறைந்த பட்சம் ஸ்டாம்ப் பேப்பரில் எழுத வேண்டுமென்ற அளவுக்காவது சட்டத்தைத் திருத்தி அந்த முறையைக் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா ?

[1986 நவம்பர் 24

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியப் பதிவு சட்டப் பிரிவு
17-ஏ முதல் இ வரை உள்ள ஆவணங்கள் தவிர்த்து மற்ற
ஆவணங்களைப் பதிவு செய்ய வேண்டியதில்லை என்று சட்டம்
இருக்கிறது. எளிதில் பணம் வாங்கவும் கொடுக்கவும் தான்
அந்த முறை கையாளப்படுகிறது. கரன்சி மாதிரி அது இருக்க
வேண்டுமென்பதால்தான் அந்த முறை கையாளப்படுகிறது.
அதைப் பதிவு செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்த தற்
போது முடியாது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்**
**(பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நாம் கொண்டு வந்திருக்கிற பாஸ் புத்தகச்
சட்டத்தைக் கூட இந்திய ரிஜிஸ்திரேஷன் பரிவிற்குள்
கொண்டு வர முடியும், அதைப் பதிய வைக்க முடியும் என்ற
அளவுக்கு நாம் முற்போக்கான நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.
உண்மையிலேயே புரோ நோட்டுகள் பல சமூகக் கொடுமைகளை
உருவாக்குகின்றன. எதுவுமே கொடுக்காமல் நோட்டிலே
ஒன்றுக்கு இரண்டாக எழுதி வாங்குவது போன்ற நிலைமைகள்
இருக்கின்றன. இதனால் சில குடும்பங்களே கெடுகிற நிலை
மையைப் பார்க்கிறோம். இன்னும் சொல்லப் போனால்
கறுப்புப் பணத்தை வெளியே கொண்டு வருவதற்கும் இது ஒரு
வாய்ப்பாக இருக்கும். ஆகவே மீண்டும் இது குறித்து சட்டத்
துறையிலே சொல்லி ஏதாவது ஒரு வகையிலே இந்த இந்தியன்
ரிஜிஸ்திரேஷன் ஆக்டிற்குள்ளே கொண்டு வரவோ அல்லது
தாசில்தார் மூலமாக பதிவு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்
படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப் பதிவு செய்யாததால்
இன்ன, இன்ன சமூக விரோதமான காரியங்கள் நடக்
கின்றன என்ற பட்டியல் கொடுத்தால் அது பற்றி ஆராய்ந்து
பிறகு முடிவு செய்யலாம்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, திருமணங்களையெல்லாம் கட்டாயமாக
பதிவு செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே அரசு அறிவித்து
இருக்கிறது. அந்தக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறதா?
நிலங்களில் புரோ நோட்டுகளில் மோசடிகள் நடப்பது
போல், திருமணங்களில் கூட 7, 8 திருமணங்கள் செய்து
மோசடி செய்கிறார்களே, அதைத் தடுக்கும் வகையில் கட்
டாயம் திருமணம் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற கொள்கை
நடைமுறைப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத்
தலைவர் அவர்களே, பதிவு செய்ய வேண்டுமென்று திருத்தம்
இருப்பதாகத் தெரியவில்லை.



1986 நவம்பர் 24]

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர்
அவர்களே, சில அரசியல்வாதிகள் கூட சில பொது மக்களிடம்
புரோ நோட்டு மோசடி செய்துள்ளனர். அப்படிப்பட்டவர்
கள் தேர்தலில் நிற்பதற்குத் தடை விதிக்கப்படுமா என்று
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத்
தலைவர் அவர்களே, அரசியல்வாதிகளோ, வேறு யாரோ,
யாராக இருந்தாலும் இந்தச் சட்டம் ஒன்றுதான்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் என்ன, என்ன
சமூகக் கேடுகள் விளைகின்றன என்று குறிப்பிட்டால் நல
மாக இருக்கும் என்றார். பெரும்பாலான லேவாதேவிக்
காரர்கள் புரோ நோட்டிலே 10 கையெழுத்துக்களை வாங்கி
வைத்துக் கொள்கிறார்கள். காலாவதியாவதைக் கூட வரவு
வைத்ததாகக் கணக்கிட்டு செய்கின்றார்கள். எனவே, தாலுகா
ஆபீசில் ஒவ்வொரு புரோ நோட்டும் பதிவு செய்யப்பட
வேண்டுமென்று வைக்க வேண்டும். தாசில்தார் கூட தவறு
செய்யக்கூடாது. எனவே, அந்த, அந்தக் கணக்கைத் தாசில்தாரும்
கொடுக்க வேண்டும். வரவு வைத்தாலும், தாலுகா ஆபீசில்
ஒரு ரிஜிஸ்டரில் அதைப் பதிவு செய்ய வேண்டுமென்று
கொண்டுவந்தால் ஏழை மக்களுக்கு அது பெருத்த உபகாரமாக
இருக்கும். ஆகவே, அதை அமைச்சர் பரிசீலனை செய்வாரா
என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது பற்றி பதில்
அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. டி. ஆர். வெங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இன்றையதினம் கூட ஒரு சட்டத்
திருத்தம் அட்டாச்மெண்ட்டை சிவில் கோர்ட்ஸ்சை ரிஜிஸ்தர்
செய்ய வேண்டுமென்று கொண்டு வருகிறோம். அதைப் போல
வங்கிகளில் கடன் வாங்குகின்றபொழுது, அந்த டெப்பாசிட்
டைட்டில் டீட் என்று சொல்லி, மார்ட்கேஜ் மூலமாக, கடன்
வாங்கி அதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் இருக்கிறது.
ஆகவே, வங்கியிலே டெப்பாசிட் ஆப் டைட்டில் டீடை
வைத்துக் கடன் வாங்கிவிட்டு தனியாரே அதே சொத்தையும்
இன்றைக்கு விற்று விடுகின்றார்கள். அதனாலே, என்கம்பரன்ஸ்
டீட் வங்கியிலே இருப்பது தெரியாமல் பலரும் இன்னல்களுக்கு
உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த டெப்
பாசிட் ஆப் டைட்டில் டீடையும் கண்டிப்பாக, இன்றைக்கு
எப்படி சிவில் கோர்ட் அட்டாச்மெண்டை ரிஜிஸ்தர் செய்
கிறார்களோ, அதே போன்று, ரிஜிஸ்தர் செய்ய வேண்டுமென்று
சட்டத் திருத்தத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய
விரும்புகிறேன்.

[1986 நவமபர் 24

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. அரசு இது பற்றி ஆராயலாம்.

திரு. வே. கு. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஒரு குழந்தை பிறந்தால் அதை உடனடியாகப் பதிவு செய்வதைப் போல், ஒருவர் திருமணம் செய்தால் கட்டாயமாக ரிஜிஸ்டர் ஆபீசில் பதிவு செய்ய வேண்டுமென்ற திருத்தத்தை அரசு கொண்டு வர முன்வருமா ? காரணம், ஒருவர் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு ஏமாற்றி, வேறொரு பெண்ணைத் திரு மணம் செய்கின்ற நிகழ்ச்சி நடக்கின்றது. ஆகவே, அதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிப் பலர் பல தடவை வலி யுறுத்தி வருகிறார்கள். அது பற்றி நாம் யோசனை செய்ய லாம்.

உப்பிலியாபுரத்தில் சூரிய ஒளி மூலம் மின்சாரம்.

158—(*வினா எண். 7314 திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதிக்கு சூரிய ஒளி மூலம் மின்சாரம் வழங்கும் திட்டம் அரசு பரிசீ லனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவை எந்தெந்த கிராமங்களில் அமல் செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியின் மூலம் கிடைக்கும் மின்சாரம் நீண்ட நாளைக்குப் பழுதின்றி செயல்படக் கூடியதா ? நீர் மின் சக்தி மற்றும் அனல் மின் சக்தியினால் கிடைக்கும் மின்சாரம், சூரிய ஒளியின் மூலம் கிடைக்கும் மின்சாரம், இவற்றில் சூரிய ஒளியின் மூலம் கிடைக்கும் மின்சாரம் சிக்கனமா ? அப்படி யானால் ஒரு மின் இணைப்புக்கு ஆகும் செலவு என்ன என்பதை ான் அறிய விரும்புகிறேன்.



1986 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியைப் பயன்படுத்தி விளக்குகள் கொல்லிமலை, கல்வராயன் மலை போன்ற பகுதி களில் போடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் எல்லா கிராமங்களிலும் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு இணைப்பு கொடுக்கப்பட்டதால்தான், சூரிய ஒளியிலிருந்து மின்சார விளக்கு போட உத்தேசம் இல்லை யென்று பதில் சொன்னேன்.

திரு. சி. பழனிமுத்து : தலைவரவர்களே, சூரிய ஒளியி லிருந்து மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிற கீழ்நாட்டில் மண் ணூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இரண்டு, மூன்று கிராமங் களில் மின் விளக்குகள் சரியாக எரியவில்லை. இரவு 8 மணி முதல் காலை 2 மணி வரையில் அதாவது 6 மணி நேரம் தான் மின் விளக்குகள் எரிகின்றன. அதன் பிறகு விளக்குகள் எரியவில்லை. ஆகையால் போடப்பட்ட சில மாதங்களில் திரும்பக் கழற்றி வந்துவிட்டார்கள். ஆகவே சூரிய ஒளியி லிருந்து மின்சார விளக்குகளுக்கு மின் இணைப்பு கொடுத் திருப்பதை மாற்றிவிட்டு, மற்ற இடங்களில் கொடுக்கப் பட் டிருப்பதைப் போல மின் இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே சூரிய ஒளி மூலம் எரிய வைக்கப்படுகின்ற மின் விளக்குகளால் கொஞ்ச மாதம் ஆனவுடன் இப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற் படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது உண்மை. ஆகவே, அந்தக் குறைபாட்டை நீக்கி, மின்சார இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி இரா. சரோஜா : தலைவரவர்களே, பச்சை மலைப் பகுதியில் வானாடு, கோம்பை ஆகிய பகுதிகளில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்டிருக்கிற மின் விளக்குகள் எரியவில்லை. அதை அறிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்றப் பகுதிகளில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல் மின் இணைப்புக் கொடுக்க ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர் களே, பச்சைமலைப் பகுதியில் இந்தக் குறைபாடு இருந்தால் விரைவில் மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## Contract of Electricity Board in Tamil Nadu

159—(*Q. No. 7364—)THIRU M. SUNDARA DOSS: Will the Hon. the Minister for Tourism, Prohibition and Electricity be pleased to state—

(a) whether contracts for consultancy services has been given to Messrs Tatas by Tamil Nadu State Electricity Board for their North Madras and Tuticorin Projects ; and

(b) the methods adopted to select them ?

மாண்யுமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, [அ] ஆம்

[ஆ] ஆலோசனை வழங்கும் நிறுவனங்களின் செயல் திறனை
யும், அவற்றுடன் வாரியத்திற்குஏற்பட்ட முன் அனுபவத்தையும்
சீர்தூக்கிப் பார்த்தபின் வாரியம் தகுந்த நிறுவனத்தைத்
தேர்ந்தெடுக்கிறது அந்த வகையில் டாடா நிறுவனம் தேர்ந்
தெடுக்கப்பட்டுள்ளது.

கோவையில் கால்நடைகளுக்கு தீவனத் தட்டுப்பாடு.

160—(*வினா எண். 7415) திரு. கா. வே. கந்தசாமி :
மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கால் நடைகள்
தீவனத் தட்டுப்பாட்டைப் போக்க மானிய விலையில் தீவனம்
விநியோகிக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விநியோகிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோவை மாவட்டத்தில்
மானிய விலையில் கால்நடைத் தீவனம் விநியோகிக்கும் திட்டம்
ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 9–40)

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, வெளி
மாநிலங்களுக்கு வைக்கோல் எடுத்துச் செல்லப்படுவது தடை
செய்யப்பட்டிருந்தும் மீண்டும் வெளி மாநிலங்களுக்கு வைக்
கோல் எடுத்துச் செல்லப்படுவதை அரசு அறியுமா ? எடுத்துச்
செல்லாத அளவுக்கு நல்ல முறையில் அரசு தடை செய்ய முன்
வருமா ? கூட்டுறவு பால் பண்ணைகளுக்கு மலிவு விலையில்
வைக்கோல் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே,
9—10—1986 முதல் 8—4—1987 வரை தமிழ்நாட்டிலிருந்து
வைக்கோல் போக தடை செய்யப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை மாவட்டத்
தில் பல கிராமங்கள் இன்றைக்கும் கடுமையான வறட்சியால்
பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் கால்நடைத் தீவனம்
கிடைப்பது அரிதாக இருக்கிறது ; மிகவும் மோசமான நிலைமை
அங்கே இருக்கிறது. தீவனப் பற்றாக்குறையால் விவசாயிகள்



ஆடு, மாடுகளைக் குறைந்த விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்
கள். மனிதர்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டால், நாம்
வெளியே சொல்கிறோம் ; ரேஷன் கடைகள் மூலமாக
உணவுப் பொருள் வழங்க ஏற்பாடு செய்கிறோம். ஆடு, மாடு
கள் பேச முடியாது. வாய் பேச முடியாத கால்நடைகளுக்கு
நியாய விலையில் தீவனம் கிடைக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம்
முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே,
கடைசியாக எடுக்கப்பட்ட புள்ளி விவரப்படி 1982-ல் கோவை
மாவட்டத்தில் இருந்த கால்நடைகளின் எண்ணிக்கை 6,93,325.
நாள் ஒன்றுக்கு ஒரு கால்நடைக்குத் தேவையான தீவனம் 2
முதல் 2.5 கிலோ கிராம் என்று கணக்கிட்டு, கால்நடைகளுக்குப்
போதுமான தீவனம் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி போதுமான
தீவனம் இல்லாமல் இருந்தால், மாவட்ட ஆட்சித் தலை
வருக்குச் சொல்லி, தேவை இருந்தால், பூர்த்தி செய்ய நட
வடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவரவர்களே, கன்னியா
குமரி மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் ஒரு பகுதியிலிருந்து
இன்னொரு பகுதிக்கு வைக்கோல் எடுத்துச் செல்ல முடியாத
நிலைமை இருக்கிறது. செக் போஸ்டில் தடை செய்யப்படுகிறது.
மாவட்டத்திற்குள்ளேயே ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு
வைக்கோல் வாங்கிக்கொண்டு செல்ல முடியவில்லை. இப்படிப்
பட்ட கடுமையான தடையை நீக்கி, மாவட்டத்திற்கு உள்ளே
வைக்கோல் எடுத்துச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே,
தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கு வைக்கோல் கொண்டு
போகத்தான் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மாவட்டத்திற்
குள்ளே எடுத்துச் செல்ல தடை இருக்குமானால் அது நீக்கப்
படும்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, கால்நடைகளைப்
பொறுத்தமட்டில், குறிப்பாக கறவை மாடுகளுக்கு மேய்ச்சல்
நிலம் என்று ஒதுக்கப்பட்டிருந்த புறம்போக்கு நிலத்தில் இப்
போது 'சோஷியல் ஃபாரஸ்ட்' திட்டம் செயல்படுத்தப்படுவ
தால் காலார நடந்துசென்று கால் நடைகள் தீவனம் உட்கொள்
வது தடை செய்யப்பட்டிருப்பது அரசுக்கு தெரியுமா ?
ஆகவே, அதைத் தவிர்த்து, மிக அவசியமான கால் நடை மேய்ச்
சல் பகுதிகளை மீண்டும் அதற்காக அவர்கள் பயன்படுத்தக்
கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை
நான் அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 24

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் தீவனத்திற்காக
என்று பயிர் வளர்ப்பதற்காக தனியாக ஒரு திட்டம் தயாரிக்கப்
பட்டு அமல்படுத்தப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த வைக்கோல் கொண்டுபோவதைத்
தடுப்பதற்காக இன்றைக்குத் தமிழக அரசு மூன்று மாதங்களுக்கு
ஒரு முறை தடை உத்தரவு பெற்றுக்கொண்டிருக்கிற ஒரு
அருமையான நிலைமையை ஏற்படுத்தி இருப்பதால் தமிழகத்தில்
வைக்கோல் பஞ்சம் ஓரளவுக்கு நீங்கி இருக்கிறது என்ற உணர்வில்
நான் அரசுக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆனால் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை என்று இந்தத் தடை
உத்தரவைப் பெற்று நீடித்துக் கொண்டு போகின்ற காரணத்தால்
இந்தத் தடை உத்தரவு வருவதற்குள்ளாக உள்ள இடைப்பட்ட
இரண்டு, மூன்று நாட்களில், அதாவது அந்த இடைவெளியில்
உள்ள காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு சில சமூகவிரோத
சக்திகள் மாநிலத்தின் எல்லையில் வைக்கோலைக்
கொண்டுபோய் தயாராக வைத்திருந்து, தடையுத்தரவு
இல்லை என்ற போர்வையில் வெளி மாநிலத்திற்குள்
கடத்திக் கொண்டு போகிறார்கள். இப்படிப்பட்ட
நிலைமை என்னுடைய தொகுதியிலேகூட நடந்து கொண்டு
இருக்கிறது. ஆகவே மத்திய அரசோடு இந்த அரசு போராடி
உடனடியாக முழுமையான தடையைப் பெற்றுத்தர அரசு
முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள தடையைப்
பொறுத்தவரையில்கூட 9-10-1986 முதல் 8-4-1987 வரை என்று
அதாவது கிட்டத்தட்ட 6 மாத காலத்திற்குத் தடை விதிக்
கப்பட்டு இருக்கிறது. 8-4-1987-க்குள்ளாக அறுவடைக்காலம்
வரும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

**திரு. வே. கு. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, கோவை, பெரியார் மாவட்டங்களில் கடந்த
ஆண்டு கடுமையான வறட்சி ஏற்பட்டு விவசாயத்திற்கான
கால்நடைகளைக் கூட விற்றுவிட்ட நிலைமை ஏற்பட்டது.
அப்படிப்பட்ட இடங்களைப் பொறுத்த வரையில், விவசாயக்
கல்லூரிகளிலும் பவானிசாகர் போன்ற பகுதிகளில் விவசாயப்
பண்ணைகளிலும் உற்பத்தி செய்யப்படுகின்ற மாட்டுத் தீவனத்
தை, எப்படி ஏழை எளிய விவசாயிகளுக்கு மின்சாரத்தைத்
தருகிறார்களோ அதுபோல் கணக்கெடுத்து ஒரு மாடு, இரண்டு
மாடு என்று வைத்திருக்கிற சாதாரண விவசாயிகளுக்கு குறை
வான விலையில், மானியமாகக் கொடுக்க அரசு முன்வருமா
என்று அறிய விரும்புகிறேன்.



1986 நவம்பர் 24]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரண நடவடிக்கை
களில் கால்நடைத் தீவனம் வழங்குவதும் ஒரு நிவாரணம்தான்
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே மலிவு
விலையில் தீவனம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருகிறது.

**திரு. கோ. ரகுபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஒவ்வொரு கிராமத்திலும் மேய்க்கால் புறம்
போக்கு என்று சொல்லி 10 ஏக்கர், 20 ஏக்கர் என்று நிலத்தை
வைத்துக்கொண்டு அவை மாடு, கன்றுகள் மேய்ப்பதற்குரிய
இடமாக ஒதுக்கப்பட்டு இருந்தது. இப்போது சோஷியல்
பாரஸ்ட் என்ற அடிப்படையில் மரம், செடி வைக்கிற ஒரு
நிலைமை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அந்த மேய்க்கால்
புறம்போக்கு இல்லாமல் போனால் மாடுகள் மேய்க்க இடமே
இல்லாமல் போய்விடும். எனவே இதைத் தடை செய்ய அரசு
முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மேய்ச்சல் நிலங்களில் காடுகள்
வளர்க்கிற திட்டம் இல்லை. அவைகளில் மாட்டுத் தீவனங்
களே வளர்க்கப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கிராமப் பஞ்சாயத்துக்களில் 58-வது
சட்டத்தின் பிரகாரம் தனியார்கள் நிலங்களைக்கூட அதாவது
கண்மாய்களைக் கூட பஞ்சாயத்துக்குச் சொந்தமாக்கிவிட்
டார்கள். அப்பேர்ப்பட்ட நிலங்கள் தனியாரிடத்திலே இருக்கும்
போது கூட ஆடு, மாடு மேய்வதற்கான ஒரு மேய்ச்சல்
தரையாகத்தான் அவைபயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால்
1972, 1973, 1974 ஆகிய ஆண்டுகளில் அந்த கண்மாய்
புறம்போக்குகளில் எல்லாம்கூட பட்டா போட்டுக் கொடுக்
கப்பட்டு இருக்கிறது. இவற்றை எல்லாம் கேன்சல் செய்து
அப்படிப்பட்ட இடங்களில் புல் வளர்த்து அவர்களுக்கு விநி
யோகம் செய்வதற்கான வழிவகை செய்யப்படுமா என்பதை
நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்
களே, ஏற்கனவே கொடுக்கப்பட்ட பட்டாக்களை நீக்க
வேண்டியதில்லை. புல் வளர்ப்பதற்கும், இதர மாட்டுத்
தீவனம் வளர்ப்பதற்கும் போதுமான நிலங்கள் இருக்கின்றன.

[1986 நவம்பர் 24

அரூர் வட்டம் தீர்த்தமலை கோயில் திருப்பணி.

161—(*வினா எண். 9059) திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம் புராதனமான தீர்த்தமலை கோயில் திருப்பணி மேற்கொள்வது பற்றி அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், தீர்த்தமலை அருள்மிகு தீர்த்த கிரிஸ்வரர் திருக்கோயிலில் திருப்பணி மேற்கொள்வதற்காக ஏற்கனவே நியமிக்கப்பட்ட திருப்பணிக்குழுக்கள் திருப்பணி வேலைகளில் தீவிர நடவடிக்கை எடுக்காததனால், புதிய திருப்பணிக் குழு ஒன்று அமைத்தல் தொடர்பாக நிர்வாக அறங்காவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அறங்காவலரிடமிருந்து அறிக்கை பெற்றதும், புதிய திருப் பணிக்குழுவை அங்கீகரிப்பதற்கும், திருப்பணி வேலைகளை துவங்குவதற்கும் உரிய மேல் நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் வட்டம், தீர்த்தமலை அருள்மிகு தீர்த்த கிரிஸ்வரர் திருக்கோயிலுக்கு முன்பிருந்த அறநிலையத்துறை அமைச்சர் அண்ணன் திரு. ஆர்.எம்.வி. அவர்கள் கூட வந் திருந்தார்கள். அந்தக் கோயிலுக்கு பாதை அமைக்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் நேரடியாகப் பார்த்து வந் தார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன் னது போல திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு அது சரியானபடி செயல்படவில்லை என்று சொன்னார்கள். திருப்பணிக் குழு விற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. அறநிலையத் துறையின் அறங்காவலர்கள் சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்னால் பத்தாயிரம் ரூபாய் திருப்பணிக்காக வசூல் செய்து அப் படியே செலவழிக்கப்படாமல் பாங்கில் இருக்கிறது. ஆகவே சரியான உத்தரவு போட்டு போடப்படக் கூடிய திருப்பணிக் குழுவிற்கு அந்தப் பணத்தை எடுத்து செலவழிக்க உரிமை உண்டு என்று போட்டால்தான், அந்தப் புதிய திருப்பணிக் குழுவினால், நல்லமுறையில் திருப்பணிகளைச் செய்ய முடியும். ஆகவே அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா? போடப் பட வேண்டிய திருப்பணிக்குழுவை சீக்கிரத்தில் போட நட வடிக்கை எடுக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.



1986 நவம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அவை யில் தயவுசெய்து அமைதி காக்க வேண்டும்.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே திருப்பணிக் குழு வை நியமனம் செய்வதற்கும் திருப்பணிகளை துவங்குவதற் கும் இந்தத் துறை நடவடிக்கை எடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புராதனமான தீர்த்தமலை கோவில் போன்று தமிழ் நாட்டில் பல கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்களுக்கு போதிய வருமானம் இல்லாத காரணத்தால் திருப்பணி செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, திருக்கோவில்களுக்கு திருப் பணி செய்வதற்கென்று தனியாக ஒரு லாட்டிரி சீட்டு ஆரம்பித்து, அதன்மூலம் வரும் வருமானத்தை வைத்து திருப்பணிகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே' அது பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் வினாவைப் போட வேண்டும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணிகளுக்கு என்று கோவில்களைத் தேர்ந்தெடுப்பதில் தமிழக அரசு ஏதாவது வரன்முறை வைத் திருக்கிறதா? ஆம் எனில் எந்த அடிப்படையில் என்ற தகவல் களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக வினாவைப் போடும் படி மாண்புமிகு பேரவைத் தலைவரின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்களில் திருப்பணி செய்வதற்கு அரசு கடைப் பிடிக்கின்ற நடைமுறைகள் என்ன? இன்றைக்கு பல்வேறு திருக் கோவில்கள் தேவஸ்தான பொறுப்பில் இருக்கின்றன. அந்த தேவஸ்தானங்கள் அந்தக் கோவில்களைச் சரியாக பராமரிக் காமல் இருக்கின்றன. திருப்பணிகளும் செய்வதில்லை. அப் படிப்பட்ட கோவில்களுக்கு அரசே பொறுப்பு எடுத்து, திருப் பணிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக் கிற கேள்வி ஒரு மாவட்டத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட கோவிலைப் பற்றியது. பொதுவாக திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் உள்ள கோவில்களைப் பற்றியெல்லாம் கேட்டால் என்னிடம் விவரம் இல்லை. ஆகவே தனி வினா போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[1986 நவம்பர் 24

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் இருக்கிற
இந்த தீர்த்தமலை கோயிலின் தீர்த்தம் உண்மையிலேயே
சர்வரோகத்தைப் போக்கக் கூடிய ஒன்றாகும். வரலாறு ரீதி
யாக மட்டும் அல்லாது விஞ்ஞான ரீதியாகவும் அது நிரூபிக்
கப்பட்டிருக்கிறது. அதேபோல தீப்பத்துறை என்ற கிராமத்
திலே இருக்கிற ஒரு பாறை மீது எண்ணெய் விட்டால், அது
கசப்பாகி பாம்பு கடிக்கு மிகச் சிறந்த வைத்தியமாக இருப்ப
தாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட அத்தியா
வசியமான ஊர்களை நல்ல முறையில் விளம்பரப்படுத்தி,
அங்கே எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, யாத்ரி
கர்கள் வர, போக்குவரத்து வசதிகள், ஓட்டல்கள், தங்கும்
விடுதிகள் போன்ற அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து
பொது மக்களுக்கு உதவிகரமாக ஏற்பாடு செய்ய அரசு முன்
வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணிக் குழு மூலமும்,
அறங்காவல் துறை மூலமும் விளம்பரங்கள் செய்யலாம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின்
தலைநாயகர் அவர்களே, புராதனமான திருக்கோயில்களை
எல்லாம் திருப்பணி செய்ய வேண்டும் என்று அரசு முன்
வந்திருக்கிறதா? இது வரையில் எத்தனை கோவில்களுக்கு திருப்
பணி செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக வினாவைப் போடும்
படி கேட்டுக் கொள்கிறேன்.

**போளூர் தொகுதி அமிர்தி சுற்றுலா மிருகக் காட்சி சாலை.**

162—(*வினா எண். 9581) திரு. ஜெ. ராஜாபாபு :
மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியிலுள்ள அமிர்தி காட்டிலுள்ள
சுற்றுலா மிருகக் காட்சி சாலையை அபிவிருத்தி செய்யும் செயற்
குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : ஆண்டு
தோறும் இயற்கைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்
படும் நிதியைக் கொண்டு அமிர்தி மிருகக் காட்சி சாலை



1986 நவம்பர் 24]

சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இம் மிருகக்
காட்சிச் சாலையின் மேம்பாட்டுப் பணிகளுக்கு என 1985–86
ஆம் ஆண்டில் ரூ. 2,07,000-மும் 1986–87 ஆம் ஆண்டில்
வனவிலங்குகளின் மேம்பாட்டிற்காக ரூ. 4,00,000 மும் செலவு
செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, போளூர் தொகுதியில் உள்ள அமிர்தி பகுதியில்
உள்ள வனப்பகுதிகளையும் மிருகக் காட்சி சாலையையும்
பார்க்க ஏராளமான மக்கள் நாள்தோறும் வருகிறார்கள்.
அவர்களுக்கு அங்கே எந்தவிதமான வசதியும் கிடையாது.
அந்தப் பகுதியிலே தங்கும் விடுதி கட்டி எல்லா வசதிகளை
யும் செய்து கொடுப்பதோடு, அதை சுற்றுலா மையமான
பகுதியாக அறிவிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத்
தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்கு வருகிற பயணிகளுடைய
வசதிகளை கவனிப்பதற்கான நடவடிக்கையை துறை நிச்சய
மாக எடுக்கும்.

திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமிர்தி பகுதியில் அதிகமான சந்தன மரங்கள்
இருக்கிற காரணத்தால் அங்கு அந்தப் பகுதியில் சந்தன
எண்ணெய் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்
களே, ஏற்கனவே சந்தன எண்ணெய் எடுப்பதற்கு தனியாக
ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு போது
மான சந்தன மரங்கள் கிடைக்கவில்லை. இப்படி மரங்கள்
கிடைப்பதற்கு அரிதாக இருக்கிறபோது புதியதாக ஒரு தொழிற்
சாலை ஆரம்பிக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. டி. ஆர். வெங்கடரமணன் : தலைவர் அவர்களே,
தமிழ் நாட்டில் மிகச் சிறந்த பிரபலமாக விளங்குகிற சுற்று
லாத் தலமான குற்றாலத்தில் ஒரு மிருக காட்சிச் சாலை
அமைக்க தமிழக அரசு முன் வருமா? ஏற்கனவே குற்றாலம்
டவுன்ஷிப்பில் ஒரு சிறிய மிருக காட்சிச் சாலை இயங்கி கொண்
டிருக்கிறது. அதை விரிவுபடுத்துவதற்கு அமைச்சர் அவர்கள்
நடவடிக்கையெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்
களே, அதைப் பார்வையிடச் செய்து, அறிக்கை பெற்ற
பிறகு அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி இருக்கிறது. அங்கே சுற்றுலா துறை மூலமாகவும், தனியாகவும் பலதரப்பட்ட மக்கள் வந்து செல்கிறார்கள். அங்கே ஒரு மிருகக் காட்சிசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தும் அங்கே எந்தவிதமான மிருகமும் இல்லை. ஆகவே அதை விரிவுபடுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்ல இயலும்.

**ஜெயங்கொண்டம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.**

163—(*வினா எண் 9949)—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சூனூர் பு. கோ. ஜெகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர் திரு. ரா. சின்னச்சாமி கைது செய்யப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு தர்மபுரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து 23-11-1986-ம் தேதியன்று கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றது:

" I have the honour to inform you that on 23rd November 1986 at 11.35 Hours, Thiru R. Chinnasamy, M.L.A., (D.M.K.) of Dharmapuri Assembly Constituency and 49 others assembled at the Bus Stand, Dharmapuri, as a protest against alleged imposition of Hindi, defying regulatory order under Section 30 (2) Police Act in force. After a brief address, they burnt the 17th Part of the (relevant portion of Official Languages) Constitution of India and caused insult to the honour of





the Constitution of India. They were arrested under section 143, 188 I.P.C., section 7(1)-A, Criminal Law Amendment Act and Section 2 of Prevention of Insult to National Honour Act, 1971. They were brought to the Dharmapuri Police Station at 11.50 hrs. A case in Dharmapuri Police Station Cr. No. 622 of 1986 was registered.

They were produced before Hon. Judicial First Class Magistrate and they were remanded for a period of 13 days up to 5th December 1986 and they are being taken to Central Prison, Salem ."

## 3. அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர் உறுப்பினர்கள் தகுதியை இழத்தல்— பேரவைத் தலைவர் தீர்ப்பு.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே,
பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையிலே கடந்த வெள்ளி
யன்று ஒரு முக்கியமான பிரச்னை குறித்து நான் தங்களிடம்
விளக்கம் கோரினேன். இந்த அவையைச் சேர்ந்த மாண்புமிகு
ஆறு உறுப்பினர்கள் அரசியல் சட்டத்தினுடைய அடிப்படையில்
பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டதற்குப் பிறகு, பொது
இடங்களில் அரசியல் சட்டத்தின் பிரதிகளை எரித்த குற்றத்திற்
காக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்
என்ற செய்தியைத் தாங்கள் அறிவித்ததைத் தொடர்ந்து அவர்
கள் இந்த அவையில் உறுப்பினர்களாகத் தொடர்கிறார்களா,
அவர்கள் தொடர்ந்து பணியாற்றுவதற்கு தாங்கள் அனுமதிக்
கிறீர்களா என்ற விளக்கத்தை....(கூச்சல் — குழப்பம்) நான்
நீங்கள் கொடுத்த தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறேன். அந்தத்
தீர்ப்பின் உள்ளே போக வில்லை. தாங்கள் அன்றைக்கு அளித்த
பதிலை முழுமையானதாகவோ, என்னுடைய கேள்விக்கு
ஏற்ற பதிலாகவோ. என்னுடைய கேள்விக்கு நேரிடையான
பதிலாகவோ நான் கருதவில்லை. (கூச்சல்-குழப்பம்).

(முற்பகல் 10.00)

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் அரசியல் சட்ட விளைவுகள் என்ன என்பதை உங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இந்தப் பிரச்சனையைப் பற்றி அன்றைக்கே எழுப்பினீர்கள். அன்றைக்கே நாவலர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் இப்போது மறுபடியும் இந்தப் பிரச்சனையை எழுப்பி இருக்கிறீர்கள். நான் இப்போது சொல்லக்கூடியது என்னவென்றால், அதாவது burning of the Constitution by Members of this House is unbecoming, uncalled for and unconstitutional. அந்த நிலையில் I have a ruling for that.

It is brought to my notice by the Commissioner of Police, Madras that the following members of this House Thiruvalargal (1) K. Anbazhagan, (2) S. Balan, (3) A. Selvarasan, (4) Parithi Ilamvazhuthi and (5) P. Ponnurangam have been arrested for burning publicly the Constitution Part XVII.

I have also received a similar information in respect of Thiru M. Ramanathan, representing Coimbatore (West) and Thiru R. Chinnasamy, representing Dharmapuri Constituency, from the Police authorities concerned. It was widely published in almost all the newspapers and other media that D.M.K.Members of this House werealso going to burn publicly the Constitution. In response to a point of order raised by Thiru N. S. V. Chithan whether the House has to wait for the verdict of the Court in criminal prosecution and after that the House can take a decision. I cited and read the Article 188 of the Constitution of India which runs as follows :—

" Every member of the Legislative Assembly or the Legislative Council of a State shall, before taking his seat, make and subscribe before the Governor, or some person appointed in that behalf by him, an oath or affirmation according to the form set out for the purpose in the Third Schedule."

The point now for consideration is whether a Member having taken oath under Article 188 of the Constitution, can violate the oath and still continue as a Member of this House.

I must mention, as a Speaker of this House at this juncture, have a constitutional duty to take action against Members of the Assembly who grossly violate the oath or affirmation.

In this case of burning publicly the Constitution or a part of it, Criminal Courts and the Executive are concerned with violation of criminal law and as such their prosecution and verdict has nothing to do with the discharge of Constitutional obligations of Members, but the Speaker is concerned with it. In other words, we the Legislators are concerned about the conduct of the Members of this House in burning publicly the Constitution and its effect on their status. However unpleasant it may be. I must say that as a Constitutional functionary I cannot be a silent spectator to the burning publicly of The Constitution by any member of this House.

The question now before the House is whether the Members mentioned above have violated the oath taken under the Constitution that they will bear true faith and allegiance to the Constitution of India as law established. Every member of this House has a Constitutional



obligation to perform under Article 188 and there is an express provision of penalty for non-compliance of the provisions of Article 188 before taking his seat in the House. So taking oath is not a mere formality or a ritual. Hence it is clear that an elected Member's eligibility to sit in this House arises because of the oath he is bound to take under the Constitution. By burning publicly the Constitution, the said Members have made it understood that they have no faith or allegiance to the Constitution of India.

The founding fathers of the Constitution could not have visualised Members of the Legislature or Parliament burning the Constitution or part of it publicly and hence in the absence of express provisions of law in the Constitution dealing with the Members of this House for having violated the oath taken immediately after election to the House, I have no other option except to invoke my residuary power under Rule 312 of Tamil Nadu Legislative Assembly Rules framed under Article 208 of the Constitution of India to preserve and protect the Constitution of India.

Rule 312 of the Tamil Nadu Legislative Assembly Rules runs as follows :—

" All Matters not specifically provided for in the Constitution or in these rules and all questions relating to the detailed working of these rules shall be regulated in such manner as the Speaker may from time to time direct."

I would like to point out that the Legislature, Judiciary and the Executive are all creatures of Constitution. It has been repeatedly held and I hold that Constitution is supreme and any Member of this House causing injury to its supremacy will never be tolerated.

Hence, I declare that the Members of this House, viz.,

1. Thiru K. Anbazhagan representing Park Town Constituency.
2. Thiru S. Balan representing Egmore Constituency.
3. Thiru A. Selvarasan representing Harbour Constituency.
4. Thiru Parithi Ilamvazhuthi representing Perambur Constituency.
5. Thiru P. Ponnurangam representing Royapuram Constituency.
6. Thiru M. Ramanathan representing Coimbatore (West) Constituency and

[பேரவைத் தலைவர்] [1986 நவம்பர் 24

7. Thiru R. Chinnasamy representing Dharmapuri Constituency.

have violated the oath taken by them under Article 188 by burning the Constitution or part of it publicly and therefore the elected Members' eligibility to sit in this House ceases and they are disqualified to continue as Members of this House.

I am forwarding the copy of this Ruling along with the proceedings to His Excellency the Governor of Tamil Nadu as well as to the Election Commission of India, New Delhi, for appropriate follow up action.

(கூச்சல்—குழப்பம்) முடிந்தாகிவிட்டது.

திரு. அ. ரகுமான்கான் : நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள் ;
எங்கள் தரப்பிலிருந்து எங்களுடைய நிலையை விளக்கத்தைச்
சொல்ல அனுமதிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூலிங் மீது பேசக்கூடாது.
I have made clear the constitutional and legal provisions.

திரு. க. மனோகரன் : நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள்.
எங்கள் நிலை விளக்கத்தைச் சொல்ல அனுமதிக்கவேண்டும்.

MR. SPEAKER : There need not be a debate on my ruling.

THIRU K. MANOHARAN : Mr. Speaker, Sir, you should not arrogate yourself to the position of a Constitutional Pundit.

Mr. SPEAKER : I am not a constitutional Pundit. I am only a student of Constitutional law. As a student of Constitutional Law. I am talking to you.

THIRU K. MANOHARAN : I am so sorry. (Interruption)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; No. இதை நீங்கள் சொல்ல
வேண்டாம். Don't talk like that. அந்தப் பெரிய வார்த்தை
எல்லாம் வேண்டாம்.

திரு. க. மனோகரன் : என்ன பெரிய வார்த்தை ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பண்டிட் என்கிற பெரிய
வார்த்தை. அதையெல்லாம் சொல்ல வேண்டாம். Please don't
talk like that. நான் சொல்லியிருப்பது சட்டப்படி கரெக்ட்.



1986 நவம்பர் 24]

திரு. க. மனோகரன்: நீங்கள் உங்களுடைய அறிவிப்பைத் தீர்ப்புக்
கொள்வதற்காக இப்படி.... (குறுக்கீடு) Please listen to me.
I have listened to you.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நான் சொல்லு
வதை கேளுங்கள். Inside the House, I have to protect the
Constitution. (Interruptions)

திரு. அ. ரகுமான்கான் : நாங்கள் எங்கள் எக்ஸ்பிளனேஷனை
கொடுப்பதற்கு அனுமதி கொடுங்கள். Please allow us to explain
our position.

MR. SPEAKER : Please don't force me. (Interruption) There need not be any debate on my ruling. Don't speak on my ruling. That is over.

THIRU K. MANOHARAN : I am requesting you to listen to me. After all, we are human beings. To err is human. If you think that I have violated the convention, I may be excused for it. But allow me to explain our position. You have no right to disqualify any member of this house.

MR. SPEAKER : I am not allowing it. This is not a Court. (Interruption) I am invoking my residuary powers. Please for Heaven's sake respect this Institution. I will not allow any disrespect to the Constitution inside the House. I am forwarding a copy of my ruling along with the proceedings to the Governor and the Election Commission for follow up action. (Interruptions.)

(முற்பகல் 10.10)

The Speaker has got ample powers. Legislature is a Democratic institution. It is supreme. The House is supreme. The Constitution is supreme. (கூச்சல் - குழப்பம்).

அடுத்து, திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் கீழ்க்கண்ட
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு
உணவுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.
(திரு. இரா. தாமரைக்கனி எழுந்து நின்றார்.) (குறுக்கீடுகள்)
நான் சொல்கிறேன். One thing I caution you. இதைப்பற்றி
அதிகமாகப் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) They have
violated the oath. அதை இங்கே விளக்க முடியாது. (குறுக்கீடுகள்)
இப்படிப் பேசுவது முறையாகாது. (குறுக்கீடுகள்) பேராசிரியர்
அன்று கேட்டபோதே சொன்னேன். என் முன்னால் இந்த
மாதிரிப் பேசாதீர்கள் என்று. இப்போது அதை யாராவது
ஒருவர் ஜஸ்டிஃபை பண்ணினால், அதுவே கூட disqualification.
Do not talk about the burning of the Constitution issue here
I cannot be a witness. If you say that you are going to burn it, it
s an offence. As a matter of caution, I am telling you,

இங்கே நீங்கள் எரிக்கலாம் என்று சொன்னால் கூட, அதுவும்
offence. (கூச்சல்-குழப்பம்) நீங்கள் பேசுவது சரியல்ல. At least
I am protecting you all. Do not make me a witness. (Interruptions).

திரு. கி. மனோகரன் : பதில் சொல்வதற்கு நான் அனுமதி
வேண்டுகிறேன். ரூலிங்கை சேலஞ்ச் பண்ணவில்லை. (குறுக்கீடு
கள்).

Mr. SPEAKER: Are you going to justify the violation of oath?
It is a point of law. It is quite simple. You have come to the House
after taking the oath. Now you have committed a crime. Your
eligibility ceases. (Interruptions).

I will explain to you. I have said already " However unpleasant
it may be........" I am not now performing a pleasant job. You
have come into the House and taken the seat after taking the oath.
It is quite simple. If you violate the oath, naturally you are unseated.

THIRU K. MANOHARAN : Please allow me (Interruptions).

Mr. SPEAKER : You cannot justify that action and sit here
(Interruptions.) That is for a criminal punishment. The Court and
the Executive are concerned with the violation of Criminal Law. I
am only concerned with the violation of the Constitution. Inside the
House nobody can decide the Constitutional working except the Speaker.
Inside the House I am competent to pass a judgment.

திரு. கி. மனோகரன் : நான் உங்கள் ரூலிங் பற்றி பேசவில்லை.
Mr. Speaker, Sir, you have said about the supremacy of the
Constitution, the supremacy of Parliament and all that. என்னுடைய
கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். No vigorous nation can
tolerate the lifeless Constitution. This is No.1.

Mr. SPEAKER : They have violated the oath. Do not make
me a witness. அதைத்தான் நான் சொல்கிறேன். வெளியிலே
பேசுவது வேறு, சபையிலே பேசுவது வேறு (Interruption). With
great respect I am talking to you. Inside the House வேண்டாம்.
நீங்கள் பப்ளிக் மீட்டிங்கில் எது வேண்டுமானாலும் பேசலாம்
....(குறுக்கீடு) கோர்ட்டிலே ரூ. 100 ஃபீஸ் கட்டினால் யார்
வேண்டுமானாலும் கான்ஸ்டிட்யூஷனை சேலஞ்ச் பண்ணலாம்....
(குறுக்கீடு) நான் திருப்பத் திருப்பச் சொல்கிறேன்.
Criminal case is different from the violation of oath. The Police is
concerned with the burning issue. It is a law and order problem.
It is a crime. I am not concerned with the crime. I am only concerne
with the violation of Constitution inside the House. (குறுக்கீடுகள்)



I will tell you. The Founding Fathers of the Constitution have not visualised this contingent event.

திரு. கி. மனோகரன் : நான் உங்களுக்கு எக்ஸ்ப்ளெயின் பண்ண வேண்டும். அதற்கு என்னை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் பேசும்போது கான்ஸ்டிட்யூஷன் சுப்ரீம் என்று குறிப்பிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அதை நான் மட்டும் சொல்லவில்லை. சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறது.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ** ** ** ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமெண்டில் பேசியது இங்கு வேண்டாம். The House is not concerned with that deliberation. I will explain. Simply because they have violated, do not come to their rescue. I have no other option. Do not make it a political issue. I am only deciding a constitutional issue here.

(முற்பகல் 10–20)

திரு. கி. மனோகரன் : அதுதான், கான்ஸ்டிடியூஷனல் இஷ்யூவைப்பற்றித் தான் நான் பேசுகிறேனே தவிர, உங்களுடைய ரூலிங்கைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. அதன்மூலம் நீங்கள் இந்தச் சட்டத்தை எரித்த நண்பர்களை வெளியே அனுப்பினாலும் சரி, அல்லது அவர்கள் பதவி இழந்தாலும் சரி, துளிகூடக் கவலைப்படப் போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) Certainly the Chapter of the Constitution is.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) I am forced to speak. இங்கே தி.மு.க. பார்ட்டி மூலமாக 22 பேர் சட்டப் பேரவைக்கு வந்திருந்தாலும், ''ஓத்'' எடுக்கும்போது, கட்சி சார்பிலே மொத்தமாக யாரும் வந்து 'ஓத்' எடுக்கவில்லை. இன்டிவிஜுவலாக, ஒவ்வொருவரும் மெம்பர்தான், ஆக்ஷன் என்று வரும்போது, Party cannot come into play. It is not a Party issue. The Party issue can be debated outside. (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்)

திரு. கி. மனோகரன் : ** **

MR. SPEAKER : Don't refer to that. It is un-constitutional.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கி. மனோகரன் : அவர் மறுக்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுப்பதைப் பற்றி சொல்லவில்லை. (குறுக்கீடு) அவைக்குள்ளே ஏன் பேசுகிறீர்கள்? * * என்று வெளியே பேசுங்கள். நானா வந்து பார்க்கிறேன். எனவே, அது வேண்டாம். (குறுக்கீடு) அரசியல் சட்டத்தை * * என்று சொன்னதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படுகிறது. பாராளுமன்றத்தில் பேசினேன் என்று சொன்னீர் களே, அது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) (கூச்சல்—குழப்பம்) Do you justify * * (குறுக்கீடுகள்) அமைச்சர் ஆவதற்கு முன்பு எரிப்பது வேறு. அமைச்சராக இருந்து எரிப் பது வேறு. சட்டமன்ற உறுப்பினராக இருந்து எரிப்பது வேறு. சாதாரண மனிதன் எரிப்பது வேறு. (குறுக்கீடு) எம்.எல்.ஏ., எம்.பியாக எரித்துவிட்டு பிறகு வருவது, (குறுக்கீடு) அந்த கன்விக்ஷனிலே டிஸ்குவாலிபிகேஷன் கிடையாது. எம். எல். ஏ.வாக பதவியேற்ற பிறகு, அமைச்சராகப் பதவியேற்ற பிறகு, பதவிப் பிரமாணத்தை மீறினால் நிச்சயமாக பதவி இழக்கவேண்டும். அதுதான் சட்டம். (குறுக்கீடு) இதுதான் ஃபர்ஸ்ட் டைம். (குறுக்கீடு, கூச்சல்) Anybody who opposes this Judgment, anybody who opposes this order, anybody who opposes this Ruling (Interruption) இது முறையல்ல. உறுப்பினர்கள் தயவு செய்து இதோடு நிறுத்திக் கொள்ளவேண்டும். அடுத்து திரு. தாமரைக்கனி அவர்களை அழைக்கிறேன். (கூச்சல்—குழப்பம்)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சமையல் எண்ணெயை வியாபாரிகள் விற்க வேண்டிய விலையை தமிழக அரசு நிர்ணயம் செய்திருந்தும், வியாபாரிகள் அதிகவிலைக்கு விற்றுவருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து''....(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சட்டத்தைத்தான் சொல்லுகிறேன். (குறுக்கீடுகள்) அது சாதாரண சட்டம். அரசியல் சட்டம் அரசியல்வாதிகளுக்காக மட்டுமல்ல. அது எல்லோருக்கும் பொது. அரசியல் பண்ணுகிறவர்களுக்கு அரசியல் சட்டம் தேவையில்லை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு தீர்ப்பைக் கொடுத்துவிட்ட பிறகு..........

திரு. கி. மனோகரன் : பேரவைத தலைவர் அவர்களே, தயவு செய்து என்னைப் பேச அனுமதியுங்கள்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்பு இருக்கிறது. திரும்பத் திரும்ப அதற்கே போவது சரியல்ல. எனவே தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான்தான் உங்கள் எல்லோர் சார்பிலும் பேசுகிறேன். 234 உறுப்பினர் கள் சார்பிலும் நான்தான் பேசுகிறேன். இதில் எந்த ஒரு உறுப்பினர் பாதிக்கப்பட்டாலும் நான்தான் பாதுகாப்புத் தர வேண்டும்....

திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, தயவு செய்து ஒரு நிமிஷம் அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வளவு நேரம் அனுமதித்தாலும் உங்கள் அனுபவம் பூராவையும் இங்கே சொல்வதென்றால் முடியுமா ?

திரு. கி. மனோகரன் : தயவு செய்து என்னைப் பேச அனுமதித்துவிட்டு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நல்ல மனது வைத்து கொஞ்ச நேரம் அனுமதியுங்கள். கருத்தைச் சொல்வதற்கு மட்டும் என்னை அனுமதியுங்கள். நான் உங்க ளுடைய தீர்ப்பைத் தாக்கிப் பேசுகிறேன் என்றோ அல்லது கண்டிக்கிறேன் என்றோ தாங்கள் தயவு செய்து எண்ண வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசியல் சட்டம் என்பது, ஆரம்பத்தில் நான் சொன்னதைப் போல் மக்களுக்காகத்தானே தவிர அதற்காக மக்கள் இல்லை என்று அழுத்தந்திருத்தமான கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இது ஒன்று. இரண்டாவது அரசியல் சட் டத்தை எரிப்பதற்காக வந்த அண்ணா அவர்கள் 6 மாதம் தண்டனைக்குள்ளாக்கப்பட்டார்கள் என்று நீங்கள் அறிந்திருப் பீர்கள் என்றும் நான் நம்புகிறேன். (குறுக்கீடு). அதற்கு நான் பதில் சொல்லுகிறேன். காரணமும் சொல்லுகிறேன். (குறுக்கீடு).

(முற்பகல் 10–30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைக்கு இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தின் மீது நாள் முழுவதும் விவாதம் நடை பெற்றது. அதிலே எல்லோரும் கலந்து கொண்டார்கள். இப் போது வந்து வேறுமாதிரியாகப் பேசுவது தவறு.

திரு. கி. மனோகரன்: நீங்கள் ஆரம்பித்து வைப்பதாக இருந்தால் (குறுக்கீடுகள்) தாங்கள் கூறிய இந்தத் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெளிநடப்புச் செய்கின்றனர் என் பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.) (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்பு அப்படியே இருக்கும். (கூச்சல், குழப்பம்).

## 4. கவன ஈர்ப்பு.

### சமையல் எண்ணெய் விலை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சமையல் எண்ணெயை வியாபாரிகள் விற்க வேண்டிய விலையை தமிழக அரசு நிர்ணயம் செய்திருந்தும், வியாபாரிகள் அதிக விலைக்கு விற்று வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

### அறிக்கை.

சமையல் எண்ணெயின் வெளிச்சந்தை விலையினை அரசு நிர்ணயிப்பதில்லை. மத்திய அரசு ஒதுக்கீடு செய்து நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப் படும் எண்ணெயின் விலையை மட்டும் மாநில அரசு நிர்ணயம் செய்கிறது.

2. 19-9-1986க்கு முன் வெளி அங்காடியில் கடலை எண் ணெய் மற்றும் நல்லெண்ணெய் விலைகள் மிகவும் உயர்ந் திருந்தன. 10-9-1986 அன்று மட்டும் கடலை எண்ணெயின் அதிகபட்ச விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 26.95 ஆகவும், நல் லெண்ணெயின் அதிகபட்ச விலை சுமார் 27 ரூபாயாகவும் நில வியது. முன்னாள் உணவு அமைச்சர் அவர்கள் 19-9-1986 அன்று சமையல் எண்ணெய் வர்த்தகர்களுடனும், ஆலை சொந் தக்காரர்களுடனும் ஒரு கூட்டம் நடத்தினார். இதன் விளைவாக கடலை எண்ணெய் விலை ரூ. 26.95லிருந்து படிப்படியாகக் குறைந்து 24-9-1986 அன்று கிலோ ஒன்றுக்கு சுமார் 22 ரூபா யாக நிலவியது. இதேபோன்று நல்லெண்ணெய் விலையும் 27 ரூபாயிலிருந்து குறைந்து சுமார் 23 ரூபாய் வரை நிலவியது. மீண்டும் முன்னாள் உணவு அமைச்சர் அவர்கள் 20-10-1986 அன்று சமையல் எண்ணெய் வர்த்தகர்களுடனும், ஆலை சொந்தக்காரர்களுடனும் ஒரு கூட்டம் நடத்தினார். அந்தக் கூட் டத்தில் அமைச்சர் அவர்கள் கோரிக்கையை ஏற்று அனைத்து எண்ணெய் வர்த்தக பிரதிநிதிகளும் தாங்களாகவே கடலை எண்ணெயையும், நல்லெண்ணெயையும் உடனடியாக கிலோ ஒன்றுக்கு 17 ரூபாய்க்குள் விற்பதற்கு ஒப்புக் கொண்டனர்.

மாவட்டங்களிலும் இவ்வாறே கடலை எண்ணெய் மற்றும் நல்லெண்ணெயை கிலோ ஒன்றுக்கு 17 ரூபாய்க்குள் விற்குமாறு எண்ணெய் வர்த்தக சங்கப் பிரதிநிதிகளை கேட்டுக் கொள்ளு



மாறு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். சில மாவட்ட ஆட்சித்தலைவர்கள், வர்த்தகப் பிரதிநிதிகள் தங்கள் கோரிக்கையை ஏற்று கடலை எண்ணெயையும் நல்லெண்ணெயையும் கிலோ ஒன்றுக்கு ரூ. 17-க்கு மிகாமல் விற்க சம்மதித்துள்ளதாக அரசுக்கு தெரிவித்தனர். அரசும் இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெயை பொது விநியோக முறையின் கீழ் கூடுதலாக வழங்கி விலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. தீபாவளி பண்டிகையின் போது சமையல் எண்ணெய்கள் மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அரசு வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடனும் ஆலை சொந்தக்காரர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தியது. அதற்கொப்ப தாங்களாகவே நிறைவேற்றத்தகுந்த ஒரு ஒப்பந்தம் உருவாகியது. இது சட்டப்படி செய்யப்பட்டதல்ல. கவன ஈர்ப்புப் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது போல தமிழக அரசு கடலை எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய்யின் விலைகளை நிர்ணயம் செய்து ஆணைகள் எதுவும் வெளியிடவில்லை. அமைச்சரின் கோரிக்கையை ஏற்று வர்த்தகர்கள் தாமாகவே முன்வந்து விலையைக் குறைத்தனர். எண்ணெய் வித்துக்கள் விளைச்சல் உள்ள மாவட்டங்களில் எண்ணெய் குறைந்த விலைக்கு விற்கப்பட்டுள்ளது. பொதுவாகவே பல இடங்களில் வர்த்தகர்கள் அரசு கேட்டுக் கொண்ட விலைகளில் சமையல் எண்ணெயை விற்றிருக்கிறார்கள். 20-10-1986 அன்று அமைச்சர் அவர்கள் கூட்டம் நடத்திய பின் சமையல் எண்ணெய் விலை கிலோ ஒன்றுக்கு சுமார் 6 ரூபாய் குறைந்தது. இந்த விலைக் குறைப்புக்கு எண்ணெய் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டும் தற்போது சில காரணங்களால் முடியாதென்று கூறியுள்ளனர். இது குறித்து ஆலோசிக்க 4-12-1986 அன்று எண்ணெய் வர்த்தக சங்கத்தினருடனும் ஆலை சொந்தக்காரர்களுடனும் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 3. அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்தோர் உறுப்பினர்கள் தகுதியை இழத்தல்—பேரவைத் தலைவர் தீர்ப்பு—(தொடர்ச்சி)

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, நாங்கள் சொன்ன ஒரு வார்த்தையைக் கூட நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் எப்படி? பிரச்சினைகள் என்னவென்று கேட்டால், பாதிக்கப்பட்ட ஒரு கட்சியினுடைய உறுப்பினர்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி நீங்கள் பேச வேண்டாம். 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான்தான் பேச வேண்டும். I should be satisfied. I have seen that they have taken oath. I have seen that they have violated the oath. They have given wide publicity in the papers. சட்டசபையில் சட்டத்தைப் பின்பற்றுங்கள். வெளியே பேசுவதுஎன்பது வேறு.

4

[1986 நவம்பர்

திரு. கு. ரமணி: உங்களுடைய தீர்ப்பைப் பற்றி நான்
சொல்லவில்லை. இந்தச் சபையில் ஒருவர்தான் ஒரு விஷயத்தைச்
சொல்ல வேண்டியிருக்கிறது என்று சொல்லும்போது, அது
சட்ட திட்டங்களுக்கும், விதிகளுக்கும் ஒத்ததா இல்லையா என்று
தீர்ப்புக் கொடுத்தால், அது வேறு விஷயம். அவரைப் பேசவே
விடாமல் எந்த விதத்திலும் அனுமதிக்காமல்... ..

(கூச்சல் குழப்பம்)

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், இந்தியக்
கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அரசியல் அமைப்புச்
சட்டத்தைப் பொறுத்தும், அந்த அரசியலமைப்புச் சட்டத்தி
னுடைய விதிமுறைகள் பற்றியும் நடைபெறுகிற நிர்வாகத்தைப்
பொறுத்தும், நாடாளுமன்ற நடவடிக்கைகள், சட்டமன்ற நட
வடிக்கைகள் ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய
தன்மைகள், பொறுப்புகள் ஆகியவற்றைப் பற்றியும் எடுத்துச்
சொல்லி ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். ஒரு ஜனநாயக நாட்
டில் அரசியல் கட்சிகள் தங்களுடைய கொள்கைகள், கோட்
பாடுகள், திட்டங்கள் ஆகியவற்றினுடைய அடிப்படையில்,
விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், எப்படிப்பட்ட
விளைவுகள் வந்தாலும், சட்டத்தின் மூலமாக எப்படிப்பட்ட
விளைவுகள் வந்தாலும் அதைத் தாங்கிக் கொள்கிற அளவிற்கு,
அதனால் வருகிற விளைவுகளை ஏற்றுக் கொள்கிற அளவிற்கு
கொள்கை, மற்றவைகளை எடுத்து வைத்து வாதாடுவது
என்பதும், போராடுவது என்பதும் ஜனநாயக அரசியலில்
இருக்கின்ற ஒன்று.

அந்த வகையிலேதான் அண்ணல் காந்தி அடிகளாகட்டும்'
பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களாகட்டும், பேரறிஞர்
அண்ணா அவர்களாகட்டும், 28 முறை சிறை சென்ற பகுத்தறி
வுத் தந்தை பெரியார் அவர்களாகட்டும், மற்றவர்களாகட்டும்
போராடி வந்திருக்கிறார்கள். ஆகவே அவரவர்கள் தங்களுடைய
கருத்துக்களை நிலைநாட்டுவதற்கு என்ன முறைகளைக் கையாள்
கிறார்கள் என்பது அவரவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்
தது. அதனுடைய விளைவுகளைத் தாங்கிக் கொள்வதும்,
தாங்கத் தயாராக இருப்பதும் அவரவர்களுடைய விருப்பத்தைப்
பொறுத்தது. ஆனால் சட்ட திட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்
டிய பொறுப்பு, அதை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு அர
சினுடைய முக்கியமான கடமையாக இருக்கிறது. அது இந்த
அவையினுடைய முக்கியமான கடமையாக இருக்கிறது. இங்கே
ஒரு பிரச்சினை எடுத்துச் சொல்லப்பட்டது. அதை மட்டும்
நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய கருத்தை வெளிப்
படுத்த, அதில் இருக்கும் நியாயத்தை வெளிப்படுத்த, அதனால்
ஏற்படும் விளைவுகள் முழுவதையும் தாங்கிக் கொள்கிறேன்



1986 நவம்பர் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்று சொல்லி, அப்போது எரித்தார்கள். அப்போது சட்ட
மன்றத்திற்கு உள்ளே வருகின்றபோது, இப்படி 'ஓத்' எடுத்துக்
கொண்டு வர வேண்டுமென்ற நிலையில்லை. அப்போது 'டிஸ்
குவாலிபிகேஷன்' சட்டமும் வரவில்லை. அப்படிப்பட்ட விளைவு
கள் எல்லாம் வந்ததற்குப் பின்னாலேதான் இந்தச் சட்டமே
வந்தது. இந்தச் சட்டம் வந்த பிறகுதான் எம்.எல்.ஏ.—வாக
ஆகும்போது, இந்தச் சட்டத்தைப் படித்துவிட்டு எம்.எல்.ஏ.
ஆகிறேன் என்று கையெழுத்துப் போடுவதும், அதற்குப் பிறகு
இந்த அவைக்கு வரும்போது சொல்லிவிட்டு வர வேண்டுமென்ற
நியதி எல்லாம் வந்ததே தவிர, முன்பு இல்லை. பேரறிஞர்
அண்ணா அவர்கள் இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொன்ன
போது, வேறு பல சட்டங்களின்கீழ், கிரிமினல் லா அமென்ட்
மென்ட் ஆக்ட் போன்றவைகளின்கீழ், 6 மாதங்கள் சிறைத்
தண்டனையை ஏற்றுக் கொண்டார்கள். அண்ணல் காந்தியடிக்கு
5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை கொடுத்த
போது, அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். அதேபோன்று
தான் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களும், குற்றவாளிக்
கூண்டிலே நிறுத்தி வைக்கப்பட்டபோது, 'என்னுடைய மன
துக்கு இது சரி என்று படுகிறது, ஆகவே இதைச் செய்தேன்,
சட்டப்படி என்னைத் தண்டிக்க வேண்டுமென்று கருதினால்,
அதை எதிர்த்து நான் வாதாடுவதாக இல்லை, ஆக உங்களுக்கு
எவ்வளவு தண்டனை எனக்குத் தந்தால், எவ்வளவு அபராதம்
போட்டால் திருப்தி ஏற்படுமோ அவ்வளவு தண்டனை தாருங்
கள்'' என்று சொன்னார்கள். பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்
கோர்ட்டிலே அவர் மீது வழக்குப் போடப்பட்டு, 2 ஆண்டுகள்
கடுங்காவல் தண்டனையும், 2,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்
பட்டு, அவர் பெல்லாரி சிறைக்கு அனுப்பப்பட்டார் என்ற
வரலாறெல்லாம் அனைவருக்கும் தெரியும். ஏனென்றால்
பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை அடிக்கடி இழுந்ததால்
சொல்கிறேன். அவர்கள் விளைவுகள் முழுவதையும் தாங்கிக்
கொள்ளத் தயாராக இருந்தார்கள். காந்தி அடிகளும் விளைவு
கள் முழுவதையும் தாங்கிக் கொள்ளத் தயாராக இருந்தார்கள்.
அப்போது சட்டங்கள் எல்லாம் இல்லை. இப்போது தாங்கள்
அளித்த தீர்ப்பு, ஏற்பட்டிருக்கிற சட்டத்தின் அடிப்படையில்
எம்.எல்.ஏ. வாக ஆகும்போது ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து
விட்டுத்தான் வர வேண்டும், உள்ளே நுழையும்போது ஒப்புதல்
வாக்குமூலம் கொடுத்து விட்டுத்தான் வர வேண்டும் என்ற நிலை
யில், அந்த ஒப்புதல் வாக்குமூலம் அரசியலமைப்புச் சட்டப்படி
மீறப்படுகிறது என்ற வகையிலே அளிக்கப்பட்டதாகும். அரசியல்
அமைப்புச் சட்டம் மீறப்பட்டிருக்கிறது என்பதுதானே தவிர
வேறல்ல. தாங்கள் சொன்னது அதுதான். அது நடந்ததா,
இல்லையா, என்ன முறையில் நடந்தது என்பதெல்லாம் வழக்கு
மன்றத்திலே உள்ள வழக்கின் மூலம் அளிக்கப்பட வேண்டிய
தீர்ப்பு. அங்கே என்னவாகும் என்பது பற்றி எல்லாம் சொல்ல
வில்லை என்பதைத் தாங்களே தெளிவுபடுத்தியிருக்கிறீர்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 நவம்பர் 24

இந்த வரலாற்று உண்மைகளையும், இருக்கிற சூழ்நிலை களையும் இந்த அவை உணர்ந்துக் கொள்ள வேண்டுமென்பதற் காகவும், இதில் குழப்பம் அடைந்து விடக்கூடாது என்பதற் காகவும்தான் சொல்கிறேன்.

4. கவன ஈர்ப்பு—(தொடர்ச்சி).

சமையல் எண்ணெய் விலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, கவன ஈர்ப்பு தொடரும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, எண்ணெய் வியாபாரிகளுடன் அமைச்சரவர்கள் நடத்திய பேச்சு வார்த்தைகளில், 17 ரூபாய்க்கு ஒரு கிலோ எண்ணெய் விற்க வேண்டுமென்று ஏகமனதாக முடிவெடுக்கப் பட்டதா அல்லது அதற்கு யாராவது எதிர்ப்பு தெரிவித்துள்ள னரா என்பதை அறிய விரும்புகிறேன். அமைச்சரவர்கள் விலையை அறிவித்தாலும் கூட, எண்ணெய் வியாபாரிகள் விலையைக் குறைக்காதது ஏன் ?

அடுத்து, கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் எண்ணெய் விலை அதிகமாக இருப்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அதைக் குறைக்க எண்ணெயை அதிகமாக இறக்குமதி செய்ய அமைச்சர வர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10–40]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமையல் எண்ணெய் விலை மிக அதிகமான அளவுக்கு, ஏறக்குறைய 28 ரூபாய்வரை விற்பனை ஆகிக் கொண் டிருந்ததை கவனத்திலே கொண்டு, பொது மக்களுக்குக் குறை வான விலையிலே சமையல் எண்ணெய் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, எண்ணெய் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் கொண்ட பிரதிநிதிகளோடு அரசு அளவிலே பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அந்தப் பேச்சு வார்த்தையின் இறுதியில் எண் ணெய் உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும் 17 ரூபாய்க்கு விற் பதாக ஒத்துக்கொண்டார்கள். அப்படி ஒத்துக்கொண்ட வியா பாரிகள் சங்கம், உற்பத்தியாளர்கள் சங்கங்களினுடைய சார் பிலே அவர்களுடைய பிரதிநிதிகளுக்கு கடிதம் எழுதி, 17 ரூபாய்க்கு எண்ணெய் விற்பனை செய்ய வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். வாலன்டரியாக கடிதம் எழுதி, அதன் நகலை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். அரசு எடுத்த நடவடிக்கை களின் வாயிலாக விலை குறைந்து, இன்றைக்கு சில மாவட்டங் களிலே 17, 18 ரூபாய் என்ற அளவிலும், சராசரியாக 20 ரூபாய்



1986 நவம்பர் 24] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

என்ற அளவிலும் எண்ணெய் விலை இருக்கிறது. அரசு இதற் காக ஆணை எதுவும் பிறப்பிக்கவில்லை. இது ஒரு மியூட்சுவல் அன்டர்ஸ்டாண்டிங்கில் பேச்சுவார்த்தையின் அடிப்படையிலே தான் ஏற்றுக்கொள்ளப்பட இருக்கின்றது. தீர்மானமாக ஏற் றுக்கொள்ளப்பட்ட முடிவாகும். இப்போது புதிதாக பொறுப் பேற்று இருக்கின்ற உணவு அமைச்சர் அவர்கள் 4–12–1986லே மீண்டும் எண்ணெய் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் சங்கங் களுடைய பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்த இருக் கின்றார்கள். பாமோலின் மத்திய அரசு 3 ஆயிரம் டன் நமக்கு ஒதுக்கீடு செய்து கொண்டிருந்தது. பின்னர் 5 ஆயிரம் டன்னாக ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். நம்முடைய தேவை 12 ஆயிரம் டன். 12 ஆயிரம் டன் ஒதுக்க வேண்டும் என்று தமிழக அரசின் சார்பில் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. மீண்டும் வலியுறுத்தி வருகிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, நமது தேவையில் 3 சதவிகிதம் நல்லெண்ணெய் கூட கிடைக்கவில்லை. வெளி மாநிலங்களிலிருந்து 80 பர்சென்ட் எண்ணெய் இறக்குமதி செய்கிறோம். இந்த நிலைமைகளினால் அபாயகரமான நிலை ஏற்படுகின்றது. முதல்தரமான எண்ணெய் கிடைக்காமல் 2–ம் தரம் 3–ம் தரம் எண்ணெயும், கலப்படம் அதிகரிக்கின்ற நிலைமைகளும் இருக்கின்றன. ஆகவே பொதுமக்களுக்குத் தரமான நல்லெண்ணெய் கிடைக்கவும், குறைந்த விலையில் கிடைக்கவும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, சமையல் எண்ணெய்கள் தரமாகவும் கிடைக்க வேண்டும், அதே நேரத்திலே விலை குறைவாகவும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தப்பட்டு அந்த கூட்டத்தில் சில முடிவுகள் மேற்கொள்ளப் பட்டன. தொடர்ந்து அதை அமல் நடத்த 4–12–1986ல் மீண் டும் எண்ணெய் உற்பத்தியாளர்கள், எண்ணெய் வியாபாரிகள் ஆகியவர்களோடு உணவு அமைச்சர் அவர்கள் பேச இருக்கின் றார்கள்.

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன் :—

(1) 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகம்) அறிக்கையிலுள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பான குறிப்புரைகளின் மீது பொது நிறுவனங்கள் குழு (1982–83) அளித்த இருபத்து இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி ஆறா வது அறிக்கை.

(2) 1970–71 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்கள் குறித்த பத்திகள் மீதான குழுவின் (1980–81) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள (வணிகத் துறைகள் பற்றிய) பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி ஏழாவது அறிக்கை.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்தல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி.)

(ஆ) பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு :—

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி.)

(ஆ) பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி.)

(இ) பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு :—

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி.)

(இ) பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

[1986 நவம்பர் 24

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 80/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 80/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.



1986 நவம்பர் 24]

(உ) நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 81/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 81/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி.)

(ஈ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை" ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஊ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1986.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 66/1986) நிறைவேற்றப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**17–11–1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





(எ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு 1986.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 67/1986)** ஆய்வுக்கு எடுத்துக்கொள் ளப் பெறவேண்டும்."

**திரு. எஸ். ஏ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு எதிர்பாராத நிதி செலவுக்காக வேண்டி 50 கோடி ரூபாயை இதுவரை ஒதுக்கி யிருந்தார்கள். இந்த ஆண்டு அந்தச் சட்டத்தைத் திருத்தி 100 கோடி ரூபாயாக வேண்டுமென்று கேட்கப்பட்டு இருக்கிறது. 50 கோடி ரூபாய் அளவிலேயே இந்த அரசு எதிர்பாராத செல தகைக்கு வைத்துக்கொண்டால் போதும் என்றும், அது மிக்க நலமாக இருக்கும் என்றும் நான் கருதுகிறேன். எதிர்பாராச் செலவு என்பது புயல், வெள்ளம் அல்லது எதிர்பாராத, மிக அத்தியாவசியமான செலவுகளுக்கு மட்டும் அதிலிருந்து இந்த அரசு செலவழித்தால் போதும் என்று நினைக்கிறேன். உங்களு டைய விளக்கக் குறிப்பிலே செல்லியிருப்பது, நீங்கள் சென்ற சட்டமன்றக் கூட்டம் மே மாதம் வரை நடைபெற்ற போது இருந்த செலவுகளாக இருக்கின்றன. அந்தச் செலவு களையெல்லாம் அப்பொழுதே நிதிநிலை அறிக்கையிலேயே சேர்த்து நீங்கள் அனுமதி வாங்கியிருக்கலாம். அதைத் தவிர அரசுக்கு இந்த 50 கோடி ரூபாயே எதிர்பாராச் செலவுக்குப் போதும் என்பது எங்களுடைய கருத்து. இப்பொழுது நீங்கள் சொல்லுகின்ற செலவெல்லாம், பல வகைகளிலே பல துறை களிலே ஏறத்தாழ துணை நிதிநிலையிலே 41 கோடி ரூபாய் செலவு என்று கணக்கு சொல்லியிருக்கிறீர்கள். அதேபோல் வறட்சியோ, பெரும் புயலோ எதுவுமே இப்பொழுது வரவில்லை அதற்குரிய செலவுகளை நீங்கள் காண்பித்திருப்பதாக அந்தக் கணக்கிலே இல்லை. வேறு பல செலவுகளுக்குக் கணக்குகளைக் காட்டி, எதிர்பாராச் செலவுக்கு 100 கோடி ரூபாய் வேண்டு மென்று கேட்பது சரியல்ல என்று கருதுகிறேன்.

அதேபோல், ஏற்கனவே இருந்த பல எதிர்பாராச் செலவு என்பது 50 கோடி ரூபாயே இருக்கலாம் என்று சொல்லி, ஜனதாக் கட்சியின் சார்பாக, வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**17—11—1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவை துணைத் தலைவர் அவர்களே, எதிர்பாராச் செலவு
என்ற வகையில் எப்பொழுதுமே சட்டப்படி ஒப்புக்கொள்ளப்
பட்டது 50 கோடி ரூபாய். அவ்வப்பொழுது ஏற்படுகின்ற
கூடுதலான செலவுகள் ஏற்படுகின்ற பொழுது அவையின் முன்
வைக்கப்பட்டு அவையினுடைய ஒப்புதல் பெறப்பட்டு ஒரு குறிப்
பிட்ட காலத்திற்கு அதனுடைய தொகையை உயர்த்துவதும்,
பிறகு அதனுடைய பழையபடி அந்தத் தொகை 50 கோடிக்கு
வருவதுமாகவும் ஒரு வழக்கம் இருந்து வருகிறது. இப்பொழுது
கூட 1987 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி வரையிலும்,
இந்த 50 கோடியை 100 கோடியாக உயர்த்தித்தந்தால்தான் சில
எதிர்பாரா செலவினங்களை ஈடுகட்ட முடியும் என்று காரணம்
கூறப்பட்டிருக்கிறது. அதற்கு மிக முக்கியமான காரணம்
சாதாரண புதிய பணி என்ற முறையில் சிலபல செலவுகளை
நாம் தாங்க வேண்டியிருக்கிறது. நெசவாளர்கள் கூட்டுறவுச்
சங்கங்கள் — கோவாப்டெக்ஸ் போன்ற நிறுவனங்கள் ஆகிய
வற்றிற்குத் தள்ளுபடி அளிப்பதற்கு ஊக்க ஆதரவுத்தொகையை
வழங்க வேண்டியிருக்கிறது. இந்த வகையிலே டெல்லியிலிருந்து
நமக்கு ஒரு ரிபேட்டாக வர வேண்டும். ஆகவே, அந்த வகைக்கு
வராததன் காரணமாக பிரைமரி கூட்டுறவுச் சங்கங்களிலே அந்த
ரிபேட் தொகை கொடுக்கப்படாமலேயே இரண்டு மூன்று
ஆண்டுக் காலமாக இருப்பதனால் பிரைமரி கூட்டுறவுச் சங்கங்
கள் சரியாக இயங்காமல் தவித்துக் கொண்டு இருக்கின்றன.

ஆகவே, நாம் அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு,
டெல்லியிலே இருந்து பணம் வருகின்றபொழுது நாம் அதை
ரீஇம்பர்ஸ் செய்ய வேண்டிய அவசியம் இருப்பதன் காரணத்
தால், உடனடியாக அவர்கள் நம்மிடம், ரூ. 30 கோடிக்கு மேல்
தர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது, பிரைமரி கூட்டுறவுச்
சங்கங்கள், மற்றவை எல்லாம் சேர்த்து. இப்பொழுது, ஓரள
வுக்கு, ரூ. 10, 12 கோடி அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்
கிறது.

அதுமட்டுமல்லாமல், இப்பொழுது, வட்டி, கூடுதல் வட்டி,
அபராத வட்டி, ஆகியவற்றை எதிர்பாராத வகையில் தள்ளுபடி
செய்வது என்கின்ற நிலை ஏற்படுகின்றபொழுது ரூ. 125 கோடிக்
குத் தள்ளுபடி செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏற்
கனவே, கட்டிய வட்டியைத் திருப்பித் தருகின்ற வகையில் ரூ. 20
கோடி, ஆக, ரூ. 145 கோடிக்கு வழி செய்ய வேண்டும். வழி
செய்ய வேண்டுமென்றால், அந்த வங்கிகள் எல்லாம் இயங்க
வேண்டும் ; அந்த வங்கிகள் நடை போட வேண்டும் ; அங்கே
ஏற்படும் எஸ்டாபிளிஷ்மென்ட் சார்ஜஸ்ஸை மீட் அவுட் செய்ய
வேண்டும். இதற்கெல்லாம் அரசு அந்த வங்கிகளைக் காப்
பாற்ற வேண்டும் ; இல்லாவிட்டால் அந்த வங்கிகள் எல்லாம்
அவதியுற வேண்டிய அவசியம் ஏற்படும். இப்படிப்பட்ட
செலவுகள் இருப்பதன் காரணத்தால்தான் இந்த ரூ. 50
கோடியை வைத்து ஈடு செய்ய இயலாது. ரூ. 100 கோடி





என்று இருந்தால்தான் அந்தப் பணிகள் நடைபெற இயலும்.
இல்லாவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம்
சொல்வது போல், ரூ. 50 கோடியோடு நிறுத்திவிட்டால், சில
பல பணிகளை அடுத்த ஜனவரி மாதம் அல்லது, பிப்ரவரி மாதம்
வரை ஒத்திப்போட வேண்டிய நிலைமை வரும். அப்படி ஒத்தி
வைப்பதன் காரணத்தால், வீண் காலதாமதம் ஏற்படும். என்
னைப்பொறுத்த வரையில், ரூ. 50 கோடி அல்லது ரூ. 25 கோடி
யில் நிறுத்தப் பெற வேண்டும் என்றால், இந்தப் பணிகள்
எல்லாம் நடைபெறாமல் போகும். அந்தச் செலவெல்லாம்
செய்து தீர வேண்டுமென்பது அல்ல ; ஆனால், எதிர்பாராமல்
இப்படிச் செய்வதை நாம் ஈடுகட்ட வேண்டிவரும். அப்படி
எதிர்பாராமல் செலவு செய்யும்பொழுது , இப் பொழுது முதல்
துணை மானியக் கோரிக்கைகள் வந்ததுபோன்று, பிப்ரவரியிலே
அடுத்த பட்ஜெட் போடுவதற்கு முன்னால், இரண்டாவது
துணை மானியக் கோரிக்கையும் இந்த அவையின்முன்
வைத்து, எது, எதற்கு செலவழித்தோம் என்று எடுத்துச்
சொல்லி, எல்லோருடைய அனுமதியைப் பெற்றுத்தான் நிறை
வேற்ற வேண்டி வரும். ஆகவே, தேவை, அவசியம், வேறு
வழியில்லை, உடனடியாக காரியங்கள் நிறைவேற வேண்டும்,
பணிகள் நகர வேண்டு மென்பதற்காகத்தான் இது கேட்கப்
படுகிறது. அதுவும் நீடித்த காலத்திற்கு அல்ல. ஜனவரி மாதம்
31 ஆம் தேதி வரைதான் இந்த ரூ. 100 கோடி, அதற்குப்
பிறகு மறுபடியும் இது ரூ. 50 கோடியாக இறங்கி வந்து விட
வேண்டும். ஆகவே, இதை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொ
கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்
னுள்ள கேள்வி :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு
நிதியச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண். 67/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற
வேண்டும்."

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்
றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ளப் பெற்றது.*

*பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்
பெற்று நிறைவேற்றப்பெற்றன.*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட
தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு
நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண். 67/1986) நிறைவேற்றப்பெற வேண்டும்."

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்
வடிவு நிறைவேற்றப் பெற்றது.*

[1986 நவம்பர் 24

(ஏ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனிஅலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 79/1986 ) ** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 79/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 11-00)

(ஐ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) இரண் டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 69/1986) *** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

---

**21—11—1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

***18—11—1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1986 நவம்பர் 24]

***திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு
வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு
வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி
வகைமுறைகள்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை நான்
வன்மையாக எதிர்க்கிறேன். இதனை ஆரம்பத்திலேயே நான்
எதிர்த்து இருக்கிறேன்.

இந்த வேளாண் விளைபொருள் கூட்டுறவுச் சங்கத்தைப்
பொறுத்தவரையில் ஏறத்தாழ 9 ஆண்டுகள் ஆகின்றன என்று
நினைக்கிறேன் ; இன்னும் தேர்தல் நடத்தப்படாமல் இருந்து
கொண்டிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி
கள் இருந்தால் இந்த வேளாண் சந்தைகள் எல்லாம் மிக
நல்ல முறையில் இயங்கும் என்று கருதுகிறேன். மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லாத காரணத்தால் அங்கே
யுள்ள தனி அலுவலர்கள் தங்களுடைய இஷ்டம்போல் செயல்
பட்டுக்கொண்டு இருப்பதை நாம் வணிகர்கள் மூலமாக அறி
கிறோம்.

உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பல ஊர்
களிலே மார்க்கெட்டிங் கமிட்டி கிடையாது. ஆனாலும் மார்க்
கெட்டிங் கமிட்டி செயல்படுவதுபோல் அங்கே செஸ் பார
புத்தகங்களை விற்று அங்கே விற்பனை செய்பவர்கள் செஸ்
வசூல் தரவேண்டும் என்ற கட்டாயத்தை இந்த மார்க்கெட்டிங்
கமிட்டிகள் வற்புறுத்தி வருகின்றன. அதாவது மார்க்கெட்டிங்
கமிட்டியே செயல்படாதபோது அங்கே எதற்காக செஸ் வசூலிக்
கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

மேலும் செஸ் வசூல் செய்யப்படுபவர்களைப் பொறுத்த
வரையில் ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று
டெப்பாசிட் செய்து புத்தகத்தை முன்கூட்டியே வாங்கி வைத்
துக்கொண்டிருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இதெல்
லாம் வணிகர்களுக்கு பெருத்த சிரமமாக இருப்பதாகச்
செய்திகள் வந்திருக்கின்றன.

இந்த மார்க்கெட்டிங் கமிட்டியைச் சேர்ந்த அதிகாரிகள்,
செக் போஸ்டைப் போல, எங்கேயாவது ஒரு இடத்திலே ஜீப்பை
வைத்துக்கொண்டு நிற்கிறார்கள். முறையாக ஃபார்ம்களைப்
பூர்த்தி செய்து கொண்டுவரப்படுகின்ற சரக்குகளை கூடத் தடுத்து
இது விவசாயச் சரக்கு அல்ல என்று சொல்லி தொந்தரவு
கொடுக்கிற நிலைமை இருக்கிறது. அதாவது விவசாயிகளைப்
பொறுத்தவரையில் அவர்கள் தங்களுடைய விளைபொருட்களை
விற்பனைக் கிடங்கிற்குக் கொண்டுசென்று விற்பனை செய்வதற்
காகக் கொடுக்கப்பட்ட அத்தாட்சியைக் கூட ஏற்றுக்கொள்ளாமல்
என் செஸ் கட்டிய ஃபார்மைக் கொண்டுவரவில்லை என்று
கேட்டு லாரி செட்களிலே 300 ரூபாய் 400 ரூபாய் என்று

அபராதம் விதிக்கிறார்கள். திரும்ப இந்த அபராதத்
தொகையை வாங்குவதற்கு முடியாத சூழ்நிலை இருக்கிறது.
அதாவது அபராதத் தொகை ஒன்றாகவும் அது வந்து சேரும்
இடம் வேறு ஒன்றாகவும் இருக்கிறது. லாரிக்காரர்கள் வணிகர்
களிடம் பணத்தை வாங்கிக்கொண்டுதான் மூட்டையை இறக்கு
றார்கள். அந்த அபராதத் தொகையைத் திரும்பப் பெறு
வதற்கான நடவடிக்கைக்காக நாம் எழுதினால் எந்தவிதமான
பதிலும் கிடைப்பதில்லை என்று சொல்லுகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் தேவைதானா.
மார்கெட்டிங் கமிட்டிற்கு வருகிற சரக்குகளை நீங்கள் விற்றுக்
கொடுத்தாலே நலமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். மார்க்
கெட்டிங் கமிட்டி செயல்படுவதற்கான முயற்சியை எடுங்கள்.
அதை நாங்கள் வரவேற்கிறோம். மார்க்கெட்டிங் கமிட்டி முறை
யாக நடக்க, முறையாகத் தேர்தலை நடத்தி மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்டு வருபவர்கள் வருவதற்கான நிலைமை ஏற்
படுத்துங்கள். ஆனால் மார்க்கெட்டிங் கமிட்டியே இல்லாத
இடங்களில் எல்லாம். மார்க்கெட்டிங் கமிட்டி செயல்படாத
இடங்களில் எல்லாம் செஸ் வசூலித்துத்தான் ஆக வேண்டும்
என்று கண்டிப்பு செய்து தொந்தரவு செய்வது வணிகர்களுக்கு
பெருத்த சிரமமாக இருக்கிறது.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மார்க்
கெட்டிங் கமிட்டியிலே செஸ்க்காகவேண்டி ஒவ்வொரு இனத்திற்கு
50, 25, 40 என்ற லைசன்ஸ் முறை இருக்கிறது. இதைப்
பொறுத்த வரையில் ஒரு இடத்தில் கட்டியதற்கான ரசீதை
வாங்கி வைத்திருந்தாலும் கூட இன்னொரு இடத்தில் 100 மைல்
களுக்கு அந்தப் பக்கம் செல்ல வேண்டி இருந்தால் அங்கேயும்
ஒரு லைசன்ஸ் போட்டுவிடுகிறார்கள். இந்தத் தொகையைத்
திரும்ப வாங்குவதற்குள் போதும் போதும் என்று ஆகி விடு
கிறது. திரும்ப வாங்குவதற்கு ஒரு வருடம் கூட ஆகி விடுகிறது.
இந்த ரசீதை ஸெராக்ஸ் காப்பி எடுத்து அனுப்பி நாங்கள் ஏற்
கெனவே லைசன்ஸ் வாங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்து
அதற்குப் பிறகுதான் அந்தத் தொகையைத் திரும்ப பெற வேண்டி
இருக்கிறது. ஆகவே மார்க்கெட்டிங் கமிட்டி எங்கெங்கு செயல்
படுகிறதோ அங்கே மட்டும் வசூல் செய்தால் போதும். மார்க்
கெட்டிங் கமிட்டி செயல்படாத இடங்களில் ஏன் செஸ் வசூ
லிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த செஸ் வரி விதிப்பிலேயும் அவர்கள் பல முறைகேடுகள்
களைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தேவை
யானவர்களுக்கு செஸ்களைப் போட்டு வசூல் செய்யாமல் இருப்ப
தாகக் கூட கேள்விப் படுகிறோம். இன்னொன்று இந்த செஸ்
வசூலிப்பதில், விற்பனை வரி வசூலித்துக் கொடுப்பதைப் போல
செய்து, முறைக்கேடுகளைச் செய்து கொண்டிருப்பதாகக் கூடத்
தகவல்கள் இருக்கின்றன. விற்பனை வரி வசூல் செய்து அல
சாங்கத்திற்கு கொடுப்பதில் எப்படி பில் கலெக்டர்களை போர



செயற்படுகிறோமோ அப்படி இன்னொரு புறத்திலும் வரி வசூ
லிப்பதாகவும் கவலைப்படுகிறார்கள். அது குறித்து மனு
கொடுத்திருக்கிறார்கள். இவைகளை அரசு பரிவோடு கவனிக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்
பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தால் முறையாக கவனித்து இவை
களையெல்லாம் செய்திருப்பார்கள் என்று கவலையோடு கவனிக்க
வேண்டிய சூழ்நிலையில் அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்
கின்றன.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொறுப்பேற்றிருந்த
முன்னாள் அமைச்சர் அவர்கள், அப்போது இது போலவே சட்டத்
திருத்தத்தைக் கொண்டு வந்து, ஒத்தி வைக்கும்படிக் கேட்ட
போது, அடுத்த சட்ட சபை கூட்டத் தொடர் வரும்போது,
இவைகளுக்கான தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கும் என்று உறுதி
சொன்னார்கள். ஆனால் மறுபடியும் தேர்தல்களை ஒத்தி
வைக்க வேண்டும் என்றுதான் சட்ட முன் வடிவு வந்திருப்பதைப்
பார்க்கும்போது, தேர்தலையே நடத்தாமல் செய்யக்கூடிய
விளைவுகளோ இது என்று தோன்றுகிறது. தேர்தலை நடத்து
வதிலே எந்தவிதமான சிரமமும் உங்களுக்கு இல்லை என்று
சொல்லிக் கொண்டு, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்
தலை உடனே நடத்த வேண்டும். இந்தச் சட்டத்திருத்தத்தை
வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டு, ஜனதா கட்சி சார்பாக
வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, உரையை நிறைவு
செய்கிறேன். வணக்கம்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவையி
னுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இங்கே
கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை இந்திய தேசிய
காங்கிரஸ் கட்சியின் சார்பாக எதிர்த்து ஒரு சில கருத்துக்களை
நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

உள்ளபடியே சில நல்ல காரியங்களைச் செய்கிறபோது,
மிகுந்த நல்ல எண்ணங்களோடும், நல்ல நோக்கங்களோடும்,
நல்ல விளைவுகளை எதிர்பார்த்தும் நாம் காரியங்களைச் செய்
கின்றோம். அது போன்று இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள்
அமைக்கப்பட்ட அன்றைக்கு அது வியாபாரிகளுடைய பிடியி
லிருந்து விவசாயிகளைக் காப்பாற்றி, அவர்களுடைய விளை
பொருள்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்காக கொண்டு வரப்
பட்டது என்பது தான் உண்மை.

ஆனால் ஏட்டிலே இருப்பது எல்லாம், எழுத்திலே இருப்பது
எல்லாம் இன்றைக்கு நடைமுறையில் அப்படியே இருக்கிறதா
என்று கேட்டால், இல்லை. இன்றைக்கு வியாபாரிகளிடத்திலே
ஏமாந்து கொண்டிருக்கிற தமிழக விவசாயிகள் இந்த மார்க்
கெட்டிங் கமிட்டிகளினாலும் ஏமாற்றப்படுகிறார்கள் என்பது
தான் சரித்திரம் காணுகின்ற உண்மையாக இருக்கிறது என்பதை
மிகுந்த வேதனையோடு குறிப்பிட ஆசைப்படுகிறேன்.....

திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள்
பேசும்போது வியாபாரிகளிடம் விவசாயிகள் ஏமாந்துக் கொண்
டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எந்த பகுதியில்
அப்படி நடைபெற்றது? எந்த ஆதாரத்தை வைத்துக்
கொண்டு சொல்லுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.
அத்தோடு அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலேயிருந்து
நீக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் கூறியதிலே
ஒன்றும் தவறாக இல்லை, நீக்குவதற்கு.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ஏமாற்றப்படுவதற்கு
எத்தனையோ உதாரணங்கள் இருக்கின்றன. என்னுடைய
சொந்த கதை ஒன்றையே அவைக்குத் தருவது சாலப் பொருத்த
மாக இருக்கும் என்று கருதுகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏமாற்றுகிறார்
கள் என்று சொல்வதிலே என்ன தப்பு இருக்கிறது? நீங்கள் கூட
அந்த வார்த்தையை அடிக்கடி உபயோகித்திருக்கிறீர்கள். அது
ஒன்றும் அன்-பார்லியமெண்டரி வார்த்தை அல்ல.

திரு. டி.ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.
எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்களுக்குத் தெரிந்த வியாபாரிகளைத்
தவிர, ஏனைய வியாபாரிகளை, உண்மையாகவே ஏமாற்றுகின்ற
வியாபாரிகளைக் குறிப்பிடுகிறேன் என்று வேண்டுமானால்
எடுத்துக் கொள்ளட்டும்.

வியாபாரிகள் ஏமாற்றுகிறார்கள் என்பதற்கு உதாரணம்
சொல்ல வேண்டுமானால் என்னுடைய சொந்த கதை. சோகக்
கதையைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற முறை பருவ மழை
பொய்த்ததன் காரணமாக, பருத்தி மகசூல் மிகவும் கடுமையாக
பாதிக்கப்பட்டிருந்த போது, ஏதோ விளைந்த பருத்தி
களையாவது, அந்த பருத்தி காசு வந்தால் கூட போதும் என்று
சொல்லி, விவசாயிகள் எதிர்பார்த்து வந்த நேரத்தில், நான்
விளைச்சலான மொத்தபருத்திகளில் சொத்தையான பருத்திகளை
யெல்லாம் தனியாக பிரித்து எடுத்து விட்டு, இரண்டையும் தனித்
தனியாக ஒரே இடத்தில் வைத்திருந்தேன். அதைப் பார்ப்பதற்
காக ஒரு வியாபாரி வந்திருந்தபோது, நான் வேறு அலுவல்கள்
அதிகமாக இருந்த காரணத்தால், அவருடன் செல்லாமல் சாவியை
மட்டும் அவரிடம் கொடுத்தனுப்பி, அங்கே வைத்திருக்கிறேன்,
நீங்கள் போய் பாருங்கள் என்று சொன்னேன்.





அவர் சொத்தை பருத்திகளையெல்லாம் எடுந்து நல்லபருத்தி
யின் மேலே போட்டு விட்டு, என்னிடம் வந்து உங்களிடம் இருக்
கும் பருத்தி எல்லாமும் சொத்தை என்று சொன்னார். நான்
உடனே எனக்கிருந்த மற்ற அலுவல்களை எல்லாம் அப்படியே
போட்டு விட்டு, அவருடன் போய்ப் பார்த்தால், நான் தனி
யாக பொறுக்கிவைத்திருந்த சொத்தை பருத்திகளையெல்லாம்
எடுத்து நல்ல பருத்தியின் மீது போட்டு விட்டு, மேலே இருக்கும்
பருத்தியே சொத்தையாக இருக்கிறது, கீழே இருக்கும் பருத்தி
யும் அப்படித்தான் இருக்கும் என்று ஒரு இலக்கணத்தை அவரே
வகுத்து என்னிடம் வந்து சொல்கிறார். நல்லவேளை அவர் அதை
கலக்கிவிடவில்லை. அப்படிக் கலக்கியிருந்தால் மறுபடியும் அதை
பிரிக்க வேண்டிய அதிக வேலை எனக்கு ஆகியிருக்கும். இதை
எதற்காகச் சொல்கிறேன் என்றால் இவ்வாறு பல வகைகளில்
வியாபாரிகள் விவசாயிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்
என்பதற்கு உதாரணமாகச் சொல்லுகிறேன். என்னைப்
போன்றவர்களுக்கே இந்த நிலை என்றால், சாதாரண விவசாயி
களைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டுமா என்று மாண்புமிகு
உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.
வியாபாரிகள் விவசாயிகளை எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள்
என்று பார்த்தால், எடையில் ஏமாற்றுகிறார்கள்.

(முற்பகல் 11-10).

தரத்தில் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே நான்
சொன்னால் கோபப்படுவீர்கள். மகமை என்றுபணத்தை எடுத்துக்
கொள்கிறார்கள் சிலர். இன்னும் சிலர் கோணிக்கு சார்ஜ்,
அதைத் தைப்பதற்கு சார்ஜ் என்று எடுத்துக் கொள்கிறார்கள்.
இப்படி எடுத்தால் காசு, நின்றால் காசு, உட்கார்ந்தால், காசு
என்று எடுத்துக் கொண்டால் கடைசியில் உழுதவன் கணக்குப்
பார்த்தால் என்ன மிஞ்சும் என்ற நிலையில் இருக்கிறார்கள்.
ஏனென்றால் அவர்கள் அன்-ஆர்கனைஸ்ட் செக்டராக இருக்
கிறார்கள் என்பது இந்த நாட்டினுடைய தலையெழுத்து. அவர்
களைக் காப்பாற்றுவதற்காக இந்த மார்க்கெட்டிங் சொசைட்டி
களை ஏற்படுத்தினால், அதுவும் சரியாக இல்லை. தென்
காசிக்கே உங்களை அழைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அடுத்த முறை குற்றாலத்திற்கு வருகிறபோது தென்
காசி மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு வர வேண்டும்.. 10
ஆண்டுகளுக்கு முன்பாக திறக்கப்பட்ட மிகப் பெரிய கட்டடம்.
அதனை நீங்கள் இரண்டு விதத்திற்கு பயன்படுத்தலாம், ஒன்று
ஏதாவது சினிமா தியேட்டருக்கு வாடகைக்கு விடலாம். இல்லை
யென்றால் கல்யாண மண்டபத்திற்கு வாடகைக்கு விடலாம்.
அதன் மூலமாக உங்களுக்கு அதிகப்படியான பணம் வரும். 10
ஆண்டுகளுக்கு முன்னாலே திறக்கப்பட்ட அந்த மார்க்கெட்டிங்
சொசைட்டியிலே திறப்பு விழாவன்று போடப்பட்ட கோலம்
கூட இன்னும் அழியவில்லை. அத்தனை புத்தம் புதியதாக

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1986 நவம்பர் 24

மெருகோடு இன்றைக்கும் அந்த மார்க்கெட்டிங் கமிட்டி இருக்
கிறது. அங்கே அந்த ரோட்டின் வழியாகச் செல்கிற அத்தனை
விவசாயிகளையும் நிறுத்தி மார்க்கெட்டிங் கமிட்டிக்கு கப்பம்
கொடுக்காமல் போக முடியாது என்று சொல்கிற நிலைமை
இருக்கிறது. நண்பர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கும் எனக்கும்
இதிலே உடன்பாடு உண்டு. ஏனென்றால் அவர்கள் பாதிக்கப்
பட்ட வியாபாரி, நான் பாதிக்கப்பட்ட விவசாயியென்ற முறை
யில் சொல்கிறேன். அவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு
வசூலைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே என்னுடைய வேண்டுகோளாக மாண்புமிகு அமைச்
சர் அவர்களுக்கு வைக்கிறேன். இதெல்லாம் நடைமுறையிலே
உங்களுக்குத் தெரியும். ஏனென்றால் எழுந்து பேசுகிற போது
அமைச்சர் அவர்கள் மறுக்கலாம். ஆனால் யதார்த்தமான
உண்மையை நான் பேசிக் கொண்டு இருக்கிறேன். அவர்கள்
அங்கேயிருந்து என்னை ஆசீர்வதிப்பதைப் போல இருப்பதால்
என்னுடைய கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்என்று கருது
கிறேன். இன்றைக்கு நீங்கள் புதிய சட்டத்தைக் கொண்டு வந்து,
சட்டத்திருத்தத்தின் மூலமாக புதிய மாற்றத்தை 'இன்ஜக்ஷன்
ஆப் நியூ பிளட்' என்ற முறையில் செய்வீர்களானால் இந்தச்
சமுதாயம் உங்களுக்கு பெரிதும் கடமைப்பட்டிருக்கும். சட்டம்
கொண்டு வருவதோடு உங்கள் கடமை நின்று விடாமல், கொண்டு
வந்த சட்டத்தை இலக்கணச் சுத்தமாக நீங்கள் அமல்படுத்தி
இந்த மார்க்கெட்டிங் சொசைட்டிகளை சீர் செய்ய வேண்டும்,
அது நாளைக்கு வருவதற்கு வழிகோலாக, வழிகாட்டியாக இன்
றைக்கு உடனடியாகச் தேர்தலை வையுங்கள். உண்மையாகவே
உங்களுக்குத் தெரியும். அதிகாரிகளுடைய ஆட்சிக் காலத்தில்
பஞ்சாயத்துக்கள் எப்படி இருந்தன என்பது அரசியலில் நமக்கு
மாறுப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் பஞ்சாயத்துத்
தலைவர்கள் பஞ்சாயத்து உறுப்பினர்கள் வந்த பிறகு நிலைமைகள்
சீரடைந்திருக்கின்றன என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆக
வேண்டும் தயவு செய்து மார்க்கெட்டிங் கமிட்டியிலே ஸ்பெஷல்
ஆபீசர்கள் இருப்பது என்பதை மாற்றி, உடனடியாக புதிய
சட்டம் வருவதற்கு முன்பாகவே, எக்ஸ்பெரிமெண்டலாக விவ
சாயிகளையும், வியாபாரிகளையும், அந்தக் கமிட்டியில் வைத்து
அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். அதிகாரிகளுடைய ராஜ்யம் தமிழ்நாட்டில் முடிவடைய
வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்
கிறேன்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, 1986-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள்
சந்தைகள் திருத்தச் சட்டத்தை, மாண்புமிகு வேளாண்மைத்
துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கும் இந்தச்
சட்டத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை முன் வைக்க
விரும்புகிறேன். தமிழ் நாட்டிலிருக்கிற விவசாயிகளுடைய விளை



1986 நவம்பர் 24] [திரு. மா. சின்னராசு]

பொருள்களுக்கு, இடைத்தரகர்களுடைய இலாபத்தை குறைத்து
நியாயமான விலையைப் பெற்றுத் தருவதற்கு அமைக்கப்பட்ட
இந்த் விளை பொருள் சந்தைகள் தமிழ்நாடு வேளாண்மைத்
துறையினால் பல காலமாகப் பராமரிக்கப்பட்டு, பல இடங்
களில் இந்த ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கென்று
புதிய கட்டடங்களைக் கட்டி, அதற்கான அமைப்பு முறைகளைச்
சீர்படுத்துகிற முறையில் துறை கடந்த நான்கைந்து ஆண்டு
களாக எடுத்துக் கொண்டு வந்திருக்கின்ற நடவடிக்கைகளை
நான் முதலில் இங்கே வரவேற்கிறேன்.

இந்த ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் கமிட்டியின் கட்டடம்
கட்டுவதற்கு எடுத்துக் கொள்கிற காலதாமதத்தினால் இந்தத்
துறையில் இதற்காக ஒதுக்கப்படுகிற தொகை பல மடங்கு அதிக
மாகி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.
அவசியப்படுகிற இடங்களில், தாலுக்கா மையங்களில் கட்டப்பட
வேண்டிய சந்தைகளுக்கு நில ஆர்ஜித நடவடிக்கைகளில் தாமதம்
ஏற்படுகிற காரணத்தால், பல ஆண்டுகளாக அந்தப் பணி
நிலுவையில் இருக்கிற காரணத்தால், பல மடங்கு கட்டுமானப்
பணிச் செலவு பெருகியிருக்கிறது. இந்தத் தடையை உடனடி
யாகப் போக்குவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். உதாரணத்திற்கு என்னுடைய மாவட்
டத்தில் தொண்டாமுத்தூரிலும், மேட்டுப் பாளையம் தொகுதி
யில் காரமடையிலும் இரண்டு விளை பொருள் சந்தைக் கூடங்
களை கட்ட வேண்டுமென்று செயற்குறிப்பு கிட்டத்தட்ட 10
ஆண்டுகளாக பரிசீலனையில் இருந்து வருகிறது. நில ஆர்ஜிதத்
திற்கு வருவாய்த் துறையில் விலை மதிப்பைக் கேட்கிறபோது,
அவர்கள் போடுகிற மதிப்பிற்கும், விவசாயிகள் மார்க்கெட் நில
வரப்படி எதிர்பார்க்கிற விலைக்கும் இருக்கிற வேறுபாட்டின்
காரணமாக நில ஆர்ஜித நடவடிக்கையை எடுத்துக் கொள்ள
முடியாமல் அந்தச் சந்தைகள் கட்டுகிற பணியும் தடைப்பட்டு
இருக்கிறது. ஆகவே அந்த வாரியம் நில ஆர்ஜிதத்தை
விரைவுப் படுத்த ஓரளவாவது நியாயமான விலையை அந்த நிலச்
சொந்தக்காரர்களுக்கு கொடுத்து, அதன் மூலம் மேலும் கட்டு
மானப் பணிகள் கூடுவதைத் தவிர்க்கிற வகையிலும் இந்தக்
கூடங்களினால் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய நன்மை
களைத் தொடர்ந்து தாமதப்படுத்தாமல் கிடைக்கச் செய்வதற்
கும் நடவடிக்கைகளை விரைவிலே எடுத்துக் கொள்ள வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே அந்த வகையிலே
தொண்டாமுத்தூர் சந்தையை கட்டுகிற பணியையும், விளை
பொருள் சந்தையை கார மடையில் கட்டுகிற பணியையும் இந்த
ஆண்டு எடுத்துக் கொள்வதற்கான தகுந்த நடவடிக்கைகளை
மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த விளைபொருள் அங்காடிகள் மூலம் கமர்சியல்
கிராப் என்று சொல்லப்படுகின்ற பருத்தி, கரும்பு, சர்க்கரை
போன்ற விளைபொருள்கள் மட்டுமே இந்த சந்தையினுடைய

ஆலையில் கொண்டு வரப்படுகிறது. ஆனால் விவசாயிகள்
மிகவும் பாதிக்கப்படுவது சாதாரணமாக காய்கறிகள் உற்பத்தி
செய்கிறவர்களும், தானியப் பயிர்களை உற்பத்தி செய்கிறவர்
களும்தான், ஆகவே எந்தச் சந்தைகளில் எல்லாம் இதுவரை காய்
கறிகளையும், உணவுப் பயிர்களான தானியங்களையும் அந்த
மார்க்கெட்டிங் கமிட்டி ரெகுலேசனுக்குள் கொண்டு வரப்பட
வில்லையோ அங்கெல்லாம் அவைகளைக் கொண்டு
வருவதற்கான முழு நடவடிக்கையை உடனடியாக எடுக்க
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
இந்தச் சந்தைக்குள் கொண்டு வரப்படுகிற பொருட்களின்
விலையைக் கட்டுப்படுத்த விவசாயிளுக்கு நியாய
மான விலையைப் பெற்றுத் தருவதற்காக அமைக்கப்பட்டவை
கள் ஆகும். இவைகள், என்று நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர்
சுட்டிக் காட்டியதைப் போல இடைத்தரகர்கள் வியாபாரிகள்
என்ற பெயரில் விவசாயிகளை ஏமாற்றுவது மட்டுமல்ல, பல
இடங்களில் கொள்ளை நடப்பதைப் போல விவசாயிகளுடைய
விளைபொருள்களை அவர்கள் சொல்கிற விலையிலேயே விற்று
வர வேண்டும் என்ற நிலை இருக்கிறது. உதாரணமாகச்
சொல்ல வேண்டும் என்று சொன்னால், காய்கறிகளை விவசாயி
கள் மார்க்கெட்டுக்குக் கொண்டுவருகிறபோது, அதனுடைய
விளைப் பொருட்களை, கூடைகளாக அல்லது லாரி லோடுகளாக
மார்க்கெட்டில் வைத்து விட வேண்டும். அது வாழையானாலும்
சரி, தக்காளி போன்ற காய்கறியானாலும் சரி, அதற்கு அங்கே
இருக்கிற தரகர் ஒருவர் விலையைப் சொல்வார். அந்த விலைக்
குத்தான், அவர்கள் நிர்ணயிக்கிற விலைக்குத்தான் அந்த விவ
சாயிகள் விற்க வேண்டிய நிலை இருக்கிறது. சில நேரத்தில்
மார்க்கெட்டிலே தக்காளி கிலோ 2½ ரூபாய் என்று இருக்கிற
போது, அங்கே வெளியே விற்கிற விலை 25 ரூபாயாகக் கூட
இருக்கும். ஆகவே கோயம்புத்தூர் மார்க்கெட்டில் மட்டும் 2½
ரூபாய்க்கு வாங்கி 20 ரூபாய்க்கு வெளி மாவட்டங்களுக்கு அனுப்பு
கிற அளவிற்கு பகல் கொள்ளை என்று சொல்கிற அளவிற்கு
அந்த தரகர்களுடைய கொள்ளை தொடர்ந்து நடந்து வருகிறது.
ஆகவே இந்த மார்க்கெட் கமிட்டி, உடனடியாக அழுகுகிற
பொருட்களை, வாழை காய்கறி போன்றவைகளை முறைப்படுத்தி
விற்பதற்கு, தேவையான இடத்தில், அது வாங்கப்படுகிற இடத்
தில், மார்க்கெட் நிலவரத்தை அறிந்து கொள்முதல் செய்து,
கோல்ட் ஸ்டோரேஜ் என்று சொல்லப்படுகிற வகையில், அவை
களைப் பதனிட்டு பாதுகாத்து, அவைகளை வெளி மாவட்டங்
களுக்கோ, அல்லது வெளி மாநிலங்களுக்கோ அனுப்புகிற முறையை
கையாளுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, விவசாயிகள்
அதுவும் கோவை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டு
இருக்கிற விவசாயிகள் சிறிய நிலத்தை வைத்துக் கொண்டு இருப்ப
பவர்கள் இந்தக் காய்கறிகளையும், ஹார்ட்கல்சுரல் கிராப்க்களை
யும், பழவகைகளையும், வெளியே விற்பதற்கான நடைமுறை
களை எளிதாக்கி இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகளை விவசாயி
களுக்கு பயன் உள்ளதாக ஆக்க வேண்டும் என்று நான் பணி
வோடு கேட்டுக்கொள்கிறேன்.



மற்றொன்று, இந்த தனி அதிகாரிகள் இந்த மார்க்கெட்
கமிட்டிகளை நிர்வகித்து வருகிறார்கள். ஆகவே எவ்வளவுதான்
நல்ல அதிகாரிகளாக இருந்தாலும் கூட, முழு அளவு
விவசாயிகளுடைய தேவைகளை விவசாயிகளுடைய
உணர்வுகளை விவசாயிகளுக்கு வேண்டிய அளவு இந்த
விளைபொருள் சந்தைகளை விரிவாக்குவதில் அவர்கள் அக்கறை
செலுத்தி வெற்றி பெற முடியவில்லை. ஆகவே பல்வேறு முக்கிய
பெரிய வாரியங்களுக்கு நான்—அபிசியல்களை சேர்மன்களாகப்
போட்டு இருக்கிறோம். உதாரணத்திற்கு வீட்டு வசதி வாரியம்,
குடிநீர் வாரியம், மற்றும் குடிசை மாற்று வாரியம் போன்ற
மிகப் பெரிய நிர்வாகத்திற்கே நாம் நான்—அபிசியல்ஸ் சேர்மன்
களைப் போட்டு, அதன்மூலம் சரியான முறையில் மக்களுக்கான
பணிகளை நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறோம். அப்படி இருக்
கிறபோது, முழுக்க முழுக்க விவசாயிகளுக்காக, லட்சக்கணக்கான
விவசாயிகளுக்காக நடத்தப்படுகிற விளைபொருள் அங்காடிகள்,
மார்க்கெட்டிங் கமிட்டி, இவைகளை ரெகுலேட் செய்வதற்கும்
விவசாயிகளுக்கு திட்டமிட்டு பயனைச் செய்வதற்கும், விவசாயி
களுடைய குறைகளைத் தெரிந்த, விவசாயம் தெரிந்தவர்கள்
நான்-அபிசியல்ஸ் மெம்பர், அதிகாரப்பற்றற்றவர் என்ற வகையில்
அவசியம் இருக்க வேண்டும். சட்டத்தை திருத்தி, தேர்தலை
நடத்துவது என்பது லட்சக்கணக்கான உறுப்பினர்கள் இருக்கிற
இந்த மார்க்கெட் கமிட்டியிலே சாத்தியக்கூறுகள் இல்லை என்று
நான் கருதுகிறேன் ஆகவே அதுவரைகாத்திராமல், நான்—அபிசியல்
மெம்பர்ஸ் என்று மாவட்ட அளவிலே மார்க்கெட் ரெகுலேட்டட்
கமிட்டியினுடைய சேர்மனாக போடுவதில் தவறு ஏதும் வராது.
அப்படி நான்—அபிசியல்ஸ் தவறு செய்தால், அவர்கள் செய்கிற
தவறுகளை உடனடியாகச் சுட்டிக்காட்டி, அரசு அவர்களை நீக்கு
வதற்கான அதிகாரம்கூட நம்மிடம் இருக்கிறது.

(முற்பகல் 11-20)

ஆகவே இவைகள் எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு
ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு மாவட்டந்தோறும்
நான்-அபிசியல் மெம்பர்களை அதுவும் விவசாயத்தை, விவ
சாயிகளின் கஷ்டங்களை தெரிந்தவர்களைத் தேர்ந்தெடுத்து
அரசு நியமிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொண்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி,
வணக்கம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான்முன்மொழிந்த பிறகு பல
மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரி
வித்து இருக்கிறார்கள். ஆகவே நான் இதில் இருக்கிற பிரச்சினை
களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1986 நவம்பர் 24

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தை
கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 8 ஆம் பிரிவின்
5 ஆம் உட்பிரிவுக்கான வரம்புரையின் ஒன்றாம் கூற்றின்படி
புதுக்கோட்டை சந்தைக் குழுவின் உறுப்பினர்கள் 1978 ஆம்
ஆண்டில் ஒரு ஆண்டு கால அளவுக்கு நியமிக்கப்பட்டார்கள்.
மேற்சொன்ன சந்தைக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரின்
பதவிக்கால அளவும் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது.
அவர்களுடைய பதவிச் கால அளவு 1986 ஆம் ஆண்டு டிசம்பர்
மாதம் 5 ஆம் தேதியன்று முடிவடையவிருக்கிறது.

1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தை
கள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்டத்தின் (தமிழ்
நாடு சட்டம் 33/1978) 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி
சந்தைக் குழுக்களின் அதிகாரங்களைச் செலுத்தி வரவும்,
அலுவல்களை ஆற்றி வரவும், தனி அலுவலர்கள் நியமிக்கப்
பட்டனர். மேற்சொன்ன தனி அலுவலர்களின் பதவிக் கால
அளவும் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்திருக்கின்றது.
கடைசியாக நீட்டிக்கப்பட்ட அவர்களின் பதவிக் கால அளவும்
1986 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் தேதியன்று முடிவடைய
இருக்கிறது.

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள்
சந்தைகள் சட்டத்தை நீத்தறவு செய்து, புதிய சட்டம் ஒன்றினை
இயற்றுவதற்காக, 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை
பொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு சட்ட
மன்றப் பேரவையில் இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்
சட்டமுன்வடிவு சட்டமாக்கப்பட சிறிது காலமாகலாம்.
எனவே, புதுக்கோட்டை விற்பனைக் குழுவின் உறுப்பினர்களின்
பதவிக் கால அளவையும், தனி அலுவலர்களின் பதவிக் கால
அளவையும், 1986 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் தேதிக்கு அப்பால்
மேலும் ஓராண்டுக் கால அளவிற்கு நீட்டிக்க அரசு முடிவு செய்தது
அதன் காரணமாகத்தான் இந்த சட்டமுன்வடிவு இந்த மா-
மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க
கடமைப்பட்டிருக்கிறேன். தனி அலுவலர்களை நீக்கிவிட்டு பொது
வாக மற்றவர்களை போட்டு காரியங்களை நடத்த வேண்டும்
என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஜனதா கட்சித்
தலைவர் திரு ஆறுமுகம் அவர்களும் திரு வேங்கடரமணன் அவர்
களும், திரு. சின்னராசு அவர்களும் பல கருத்துக்களை இங்கே
எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

இந்தக் காலத்தை நீட்டிப்பதற்குக் காரணம் நான் ஏற்கனவே
சொன்னதை போல டிசம்பர் மாதம் 5 ஆம் தேதியோடு அவர்
களுடைய பதவி காலம் முடிகிறது. இது தொடர்ந்து நடைபெற
வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் இந்த மசோதா
கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது தவிர வேறு ஒன்றும்
இதில் இல்லை. இந்த சந்தைக் குழுக்களைப் பொறுத்தவரையில்



1986 நவம்பர் 24] [திரு. க. இராசாராம்]

தமிழகத்தில் மொத்தம் 16 சந்தைக் குழுக்கள் இருக்கின்றன.
இதில் 11 சந்தைக் குழுக்கள் 1978 ஆம் ஆண்டிலிருந்து தனி
அலுவலர்கள் நிர்வாகத்தில் இயங்கி வருகின்றன. இதிலே அவர்
கள் பண வசூல் செய்வது பற்றி எல்லாம் திரு. வேங்கடரமணன்
அவர்கள் சொன்னார்கள். இதிலே மொத்த வசூல் 100க்கு 45
காசு தான் வசூல் செய்கிறார்கள். ஆகவே இது ஒன்றும் அதிக
மான தொகை இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இதில்
தனி அலுவலர்களைப்போட்ட பிறகு நிறைய சரக்குகள் வந்தி
ருக்கின்றன. பொருட்களை வாங்கும் வியாபாரிகள் 100க்கு 45
காசு என்ற முறையில் வாங்கப்பட்டதனுடைய வருமானம் 1977
ஆம் ஆண்டு 259 லட்சமாக இருந்திருக்கிறது. அந்த வருமானம்
தற்போது 455 லட்சமாக உயர்ந்து இருக்கிறது. அதை நான்
சொல்லுவதற்குக் காரணம் முன்னால் வந்த சரக்குகள் 3.3 லட்சம்
டன் வரை வந்தது. இப்போது அது 5.9 லட்சம் டன்னாகப்
பெருகியிருக்கிறது. ஆக இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகளைப்
பொறுத்தவரையில், விவசாயிகள் விரும்புகிற தன்மையில் இருக்
கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

தனி அலுவலர்கள் ஏதாவது தவறு செய்வார்களானால்,
அது எந்த ஊரில், என்ன தவறு நடக்கிறது என்பதை எடுத்துச்
சொன்னால் அதற்கான தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுத்
துக் கொள்ள தயங்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளுக்கு இந்த மார்க்கெட்டிங்
கமிட்டியைப் பொறுத்தவரையில் விளைப் பொருட்களைச்
சரியாக எடை போடுவதும், தரம் பிரிக்கப்பட்டு தரத்திற்கு
ஏற்றவாறு விலை கிடைக்கச் செய்தலும், பொருட்களின் விலை
மறைமுக ஏலத்தில் வியாபாரிகளால் பிரிக்கப்படுவதால் நல்ல
விலை கிடைக்கிறது. இதை எப்படிச் செய்கிறார்கள் என்றால்
அவரவர்கள் சரக்கை பார்த்துவிட்டு வந்து விலையை எழுதி ஒரு
பெட்டியில் போட்டுவிட வேண்டும். அப்படி போட்ட பிறகு
அவைகள் எல்லாவற்றையும் எடுத்துப் பார்த்து யார் நல்ல விலை
தருகிறார்களோ அவர்களுக்கே அந்த சரக்கு அளிக்கப்படுகிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் விவசாயி
களுக்கு நல்ல பலன் தற்போது கிடைத்து வருகிறது என்பதை
நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விற்று,
பிறகு உடனடியாகப் பணம் கிடைக்க அந்தக் குழு ஏற்பாடு
செய்கிறது. இதிலே, இடைத் தரகர்கள் யாரும் கிடையாது.
விவசாயிகளுக்கு அவர்களுடைய பொருட்களை விற்றுக்கொடுப்
பதால், எந்தவிதக் கட்டணமும் வசூலிப்பதில்லை. விளை
பொருள்களைத் தற்காலிகமாக வைக்கக் கிடங்கு வசதி செய்யப்
பட்டிருக்கிறது. நம்முடைய தென்காசி சட்டமன்ற உறுப்பினர்
திரு. வேங்கடரமணன் அவர்கள் சொல்லும்போது, அங்கே
இரண்டு கிடங்குகள் காலியாக இருப்பதாகவும், அங்கே எந்தச்
சரக்கும் கிடையாது, ஒன்று கல்யாணம் பண்ணுவதற்கு விட
வேண்டும் அல்லது ஏதாவது சினிமா கொட்டகைகளுக்கு விட
வேண்டுமென்றும் சொன்னார்கள். அவர்கள் ஊரில் நிறைய

சினிமாக் கொட்டகைகள் உள்ளன. ஆகவே இன்னொரு சினிமா கொட்டகை திறந்தால் நஷ்டத்தில் தான் இயங்கும். அது சரியாக இயங்காது என்பதை நாம் நன்றாக அறிவோம். அது மட்டுமல்ல, அங்கே சரக்கு ஏன் வருவதில்லை என்பதை நான் அதிகாரிகளை வைத்து, ஆய்வு செய்ய இருக்கிறேன். அப்படி அந்த மார்க்கெட்டிங் கமிட்டியிலே ஏதாவது தவறுகள் நடந்தால் அதைத் திருத்துவதற்கும் நான் தக்க நடவடிக்கை எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே இப்போது மொத்தம் 273 விற்பனைக் கிடங்குகள் இயங்கி வருகின்றன. 1974 ஆம் ஆண்டு 140 விற்பனைக் கூடங்கள் தான் இருந்தன. அது தனி அதிகாரிகள் காலத்திலே இவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விற்பனைக் கூடங்களில் 120 விற்பனைக் கூடங்களில் நல்ல வசதிகள் இருக்கின்றன. மத்திய அரசினுடைய மானிய உதவியோடு 89 ஊரகக் கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. இதிலே 75 கிடங்குகள் தற்போது கட்டிமுடிக்கப்பட்டாகி விட்டன.

அடுத்து வேளாண் விளைபொருள் விற்பனை வாரியம். இந்த வாரியம் 70 ஆம் ஆண்டு அரசு அல்லாத ஒரு செயல்முறை ஆணையின் மூலம் தோற்றுவிக்கப்பட்டது. இது ஒரு சட்ட அங்கீகாரமற்ற 'நான்-ஸ்டேச்சூடரி' அமைப்பாகும். அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சட்டமுன்வடிவிற்கு சட்ட வடிவு அங்கீகாரம் கொடுக்கப்படவுள்ளது. இந்த வாரியத்தின் அலுவல் சார்பற்ற தலைவரை அரசு நியமிக்கிறது. தற்போது தலைவராக உள்ளவர் திருமதி தேவகி பாண்டியன் அவர்கள். இவ்வாரியத்திற்கு வேளாண் விற்பனை இயக்குநர் பதவி, பதவி வழிச் செயலாளர் ஆவார். அதில் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் மாநிலக் கிடங்கு நிறுவன மேலாண்மை இயக்குநர், சந்தைக் குழு பிரிவிலுள்ள அனைத்து தனி அதிகாரிகள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் ஒரு பிரதிநிதி, இந்திய அரசின் வேளாண்மை இயக்குநர், ஆலோசகர், இந்திய உணவுக் கழக பிராந்திய மேலாளர் மற்றும் பருத்திக் கழக பிராந்திய மேலாளர் ஆகியோர் இந்த வாரியத்திலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்த வாரியம் தமிழகத்திலே உள்ள பல்வேறு சந்தைக் குழுக்களின் பணிகளை ஒருங்கிணைத்து அரசுக்கும் சந்தைக் குழுக்களுக்கும் ஒரு இணைப்பாக இயங்கி வருகிறது; வேளாண் விளைபொருள் விற்பனை பற்றிய திட்டங்களைத் தயாராக்க உதவுகிறது. மாநில அளவுள்ள விளம்பரம் மற்றும் பிரச்சாரத்தை இதிலுள்ள விளம்பரப் பிரிவு கவனிக்கிறது. இதிலுள்ள சந்தைக் குழு மற்றும் வேளாண்மை விற்பனை இயக்கப் பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இதிலுள்ள பொறியியல் பிரிவு மத்திய அரசு மானிய உதவியுடன் கிடங்குகளைக் கட்டியிருக்கிறது. சந்தைக்குழு இந்நிதியிலிருந்து 5 சத விகிதம் வருமானத்தை இந்த வாரியத்திற்குக் கொடுக்கிறது. தற்போது

வேளாண்மைத் துறையில் சில மாறுதல்களைச் செய்துகொண்டு வருகிறோம் என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு இந்த மசோதாவின் மூலமாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் வேளாண்மைத் துறையின் முன்னேற்றத்தை ஊக்குவிக்க வேளாண்மை இடுபொருள் தட்டின்றி காலத்தில் எல்லா இடங்களிலும் கிடைக்க தமிழக அரசு வழிவகை செய்திருக்கிறது. தரமான வீரிய புதிய ரகங்களில் விதைகள், வேளாண்மைத் துறையின் கீழ் 672 டெப்போக்கள் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன. தென்னங்கன்றுகள், பழமரக் கன்றுகள், காய்கறி விதைகள் இந்த டெப்போக்கள் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன. அதற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 7 லட்சம் டன் தழைச் சத்து, மணிச்சத்து சாம்பல் சத்து போன்ற உரங்கள் தனியார் கடைகள் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் 15,844 விற்பனை நிலையங்கள் மூலமாகவும் வழங்கப்படுகின்றன. பூச்சி மருந்துகள் அரசின் டெப்போக்கள் மூலமாகவும், தனியார் கடைகள் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், 9,351 விற்பனை நிலையங்கள் மூலமாகவும் விநியோகிக்கப்படுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு 9,000 டன் தூவும் மருந்துகளும், 5 லட்சம் லிட்டர் திரவ மருந்துகளும் வேளாண் கடைகள் மூலமாக வழங்கப்படுகின்றன.

அரசு வழங்கும் விதைகள் எல்லாப் பகுதிகளிலும் கிடைத்திட வேண்டுமென்பதற்காக அவற்றை ஊக்கப்படுத்தும் வகையில், பல வழிகளில் விவசாயப் பெருமக்களுக்கு தெரிவிப்பதுடன், வானொலி மூலமாகவும் தெரிவிக்க ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டிருக்கின்றன. மானிய விலையில் லாபமாகவும், சில திட்டங்களில் விதைகள் வழங்கப்படுகின்றன. மானிய விலையில் இனாமாகவும் சில திட்டங்களில் விதைகள் வழங்கப்பட்டுள்ளது. அந்த இடுபொருள் திட்டங்கள் நாம் எதிர்பார்க்கின்ற வகையில் விவசாய மக்களுக்கு சென்றடைவதைக் கண்காணிக்க அவற்றை பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் அல்லது பஞ்சாயத்துத் தலைவர், ஆகியவர்களில் யாராவது ஒருவர் முன்னிலையில்தான் விநியோகிக்க வேண்டுமென்று தற்போது ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 11-30)

மேலும் வேளாண்மைத் திட்டப் பணிகளை பஞ்சாயத்து ஒன்றியங்களின் தகுதிகளை அறிந்து செயலாற்ற பஞ்சாயத்து ஒன்றியக் கூடங்களில் அந்தப் பகுதி வேளாண்மை உதவி இயக்குநர் பயிற்சி வழி தொடர்பு திட்டம், அசிஸ்டெண்ட் டைரெக்டர் ஆப் அக்ரிகல்சர் அவர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று இப்போது ஆணை வழங்கப்பட்டுள்ளது. உரம் பூச்சிம

[திரு. க. இராசாராம்] [1986 நவம்பர் 24

தரத்தை வேளாண்மைத் துறை கண்காணித்து வருகிறது. உரங் களின் தரத்தைக் கண்டறிய 6 ஆய்வுக் கூடங்களும், பூச்சி மருந்து களின் தரத்தைக் கண்டறிய 9 ஆய்வுக் கூடங்களும் நமது மாநிலத் தில் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு சுமார் 10,600 உர மாதிரிகளும், 16,600 பூச்சிமருந்து மாதிரிகளும் பல்வேறு விற்பனை நிலையங்களிலிருந்து எடுக்கப்பட்டு ஆய்வு செய்து அதன் மேல் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எங்காவது தரக்குறைவான உரங்களோ, பூச்சி மருந்துகளோ விற்கப்படுவ தாகத் தெரிந்தால் அதை உடனே வேளாண்மை அலுவலர் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக் கப்படும். இடுபொருள் வழங்குவதின் இன்றைய நிலைமையை நான் அறிக்கையாக சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அந்த வகையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நேரடி யாக பல உதவிகளை இந்த அரசு செயல்படுத்திக் கொண்டு வந்தி ருக்கிறது என்பதையும் நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன். ஆக இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் இது ஓராண்டுக்கால நீட்டிப்பு மசோதா என்பதால் இதை நிறைவேற் றித்தர வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன். வணக்கம்.

திரு. எ.எஸ். ஏ. ஆறுமுகம் ; மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத் திலே நாங்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். அதாவது மார்க்கெட்டிங் கமிட்டி செயல் படாத இடத்திலே 100க்கு 40 பைசா வசூலிப்பதற்கு அதிகாரம் இருக்கிறதா என்பது கேள்வி. மார்க்கெட்டிங் கமிட்டி பொறுத்த வரையில் 100க்கு 40 பைசா வெளியிலே தனியார்கள் வசூல் பண்ணுகிறார்கள். வியாபாரிகள் புத்தகங்களும் கொடுக்கிறார் கள். புத்தகத்தையும் கொடுத்து இதற்கும் சேர்த்து பில் போட் டுக்கொடுக்கிறார்கள். ஆயிரம் ரூபாய், ஐநூறு ரூபாய் டெபாசிட் புத்தகங்களும் கொடுக்கிறார்கள். இவையெல் லாம் சரிதானா? மேலும் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மார்க்கெட்டிங் கமிட்டியிலே விற்கின்ற சரக்குகளுக்கு நல்ல விலை கொடுப்பதாகச் சொன்னார்கள். நான் சொல்லிக்கொள்ள விரும் புவது மார்க்கெட்டிங் கமிட்டியிலே விற்கின்ற சரக்குகளுக்கு உடனடியாக ரூபாய்களைக் கொடுக்க வேண்டும். வாங்குகின்ற வணிகர்கள் தொடர்ந்து பணத்தைச் செலுத்த வேண்டும். அப்படியானால் சரக்கை அவர்கள் கொடுக்கிறார்கள். மற்றும் வணிகச் சந்தையில் வாங்குவதில் 10, 15 தவணை இருக்கிறது. வெளிச் சந்தையில் விற்கின்ற விலையைவிட மார்க்கெட்டிங் கமிட்டி விலை குறைவாக இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏராளமான மார்க்கெட்டிங் கமிட்டிகள் இருக்கின்றன என்பதை ஏற்கெனவே



1986 நவம்பர் 24] [திரு. திரு. க. இராசாராம்]

குறிப்பிட்டேன். சில இடங்களில் விலைகள் ஏறுமாறாக இருக்கக் கூடும். அது அவ்வப்போது இருக்கின்ற மார்க்கெட் நிலவரத்தைப் பொறுத்தது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக்கடமைப்பட்டி ருக்கிறேன். அந்த மார்க்கெட் பகுதிக்கு வருகின்ற சரக்குகளுக்கு வெளியிலே கட்டணம் வசூலிக்கிறார்கள் என்று உறுப்பினர் தெரிவித்தார். எந்த ஊரிலே அப்படி வசூலிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை எனக்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் தரு வார்களானால் அதற்கு தக்க பரிகாரத்தையும், நடவடிக்கையும் நான் ஏடுப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர் கள் நீண்ட நேரம் பதில் சொல்லிவிட்டார்கள். ஒவ்வொருவரும் கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி? சரி கேட்டு முடியுங்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : ** ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கிளாரி பிகேஷன் என்று நினைத்ததையெல்லாம் பேச முடியாது. நீங்கள் பேசினீர்களா ? பேசினால்தான் அதிலே கிளாரிபிகேஷன் கேட்க முடியும். நீங்கள் இரண்டாவது டிபேட் கிரியேட் பண்ண முடியாது. இதை நீக்கி விடுகிறேன். (குறுக்கீடு). கிளாரிபிகேஷனிலே திரும்பத் திரும்பப் பேசிக் கொண் டிருக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்., அமைச் சர் பதில் சொல்வார். (குறுக்கீடு).

திரு. எஸ். சிவராமன் : கேட்பது எதற்கென்றால், விதைக் கப்படுகிற நெல் முளைப்பதில்லை, கடலை முளைப்பதில்லை, கம்பு முளைப்பதில்லை...... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 'பில்' சம் பந்தமாக மட்டும் பேச வேண்டும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக நான் அறிந்து கொள்ள விரும்புவது எல்லாம், 'டெர்மினேஷன் டெஃபிஷியன்ஸி' இருந்தால், அந்த சப்ளை யர் மீது என்ன நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது ? என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன அல்லது அதற்காக ஒரு பீனல் புரொவிஷனை இந்த அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாய இலாகாவிலே விதை, நெல் போன்றவைகளுக்கு எல்லாம் சர்டிபிகேட் கொடுப்பதற்கு ஒரு நிறுவனமே இருக்கிறது. அப்படிப்பட்ட சர்டிபிகேட்

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொடுக்கப்பட்ட விதைகள் முளைக்கவில்லையென்றால், அந்த விதைகள் யாரிடத்தில் வாங்கப்பட்டவை என்ற விவரம் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்க முடியும். திரு. சிவ ராமன் அவர்கள் எல்லாம் முளைக்கவில்லை என்று ஆரம்பித்து விட்டார். தமிழ்நாட்டிலே நிறைய முளைக்கிறது. ** மற்றதெல்லாம் சரியாக இருக்கிறது. அந்த வகையில் இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், இது ஒரு ஆண்டுக் காலத்திற்கு, இருக்கிற குழுக்களுக்கு நீட்டிப்பு கேட்டுத்தான் வந்திருக்கிறதே தவிர வேறல்ல. மற்ற நேரத்தில் இதைப் பற்றிய பிரச்சினை எதுவாக இருந்தாலும் நான் பதில் தரத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மசோதா மீது பேசியவர்களுக்குத்தான் கிளாரிபிகேஷன் கேட்க அனுமதி உண்டு. எல்லோரையும் அனுமதிக்க முடியாது.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு அமைச்சர் அவர் என்னைப் பற்றிச் சொன்னார். அதற்கு நான் விளக்கம் சொல்ல அனுமதிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது 'விளை பொருள் அங்காடிகள் பற்றிய பில். எனவே அது மட்டும் தான் பேச முடியும்.

பேரவை முன்னுள்ள கேள்வி : ''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் மற்றும் தமிழ் நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 69/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேர வையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.





''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தை
சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தை
கள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) இரண்டாம்
திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்
வடிவு எண். 69/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

திரு. எஸ். சிவராமன் : என்னைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது அவைக் குறிப்பிலே இருக்கிறது அதை.............

மாண்புமிகு திரு. க. இராசாராம் : **என்று சொன்ன தையா ? அதை தயவு செய்து நீக்கிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது நீக்கப் படுகிறது.

ஓ. பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 70/1986)@@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேர வையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

@@12-11-1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. சி. பொன்னையன்] [1986 நவம்பர் 24

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 70/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(முற்பகல் 11.40)

ஓ. தமிழ்ப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு**(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 71/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது. 4

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.:

''1986 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 71/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

---

**18-11-1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1986 நவம்பர் 24,

(ஔ) ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப் படுத்தல்) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1986.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப் படுத்தல்) தனியார் கல்லூரிகள் (முறைப் படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு **(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

***திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு துணை சபா நாயகர் அவர்களே, தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) சட்டத்திற்கு மேலும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வரும் இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசுவதற்கு விழைகிறேன்.

தனியார் பள்ளிகளில் இருக்கிற ஆசிரியப் பெருமக்கள் பல்வேறு சூழ்நிலைகள் காரணமாகப் போராட வேண்டிய நிலைமை இருக்கிறது. அரசு ஆசிரியர்களுக்குத் தரப்படும் சில சலுகைகள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகின்றன என்றாலும் மருத்துவச் செலவுக்காகவும், வீட்டு வாடகைக்கும் கொடுக்கப்படும் சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்களே அறிவார்கள்.

தனியார் பள்ளிகளில் இருக்கிற தாளாளர்கள் அந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளத்தை வழங்கும் அதிகாரம் பெற்று இருந்தனர். அதை மாற்றித் தந்தது நம்முடைய தமிழக அரசு. அதற்காக நான் தலைமை அமைச்சர் அவர்களை நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் சம்பளத்தையும்கூட ஆசிரியர்களுக்கு செக் மூலமாக வழங்கினால் அது இன்னமும் சிறப்பாக இருக்கும் என்பதை நான் இங்கே முன்பு பேசும்போதுகூட குறிப்பிட்டேன். எனவே அவ்வாறு செக் மூலமாக ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கும் சூழ்நிலை உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய ஓய்வு அறைகள் சரியாக இருப்பதில்லை. அதோடு அவர்கள் பாடம் நடத்தும் வகுப்பறைகள்கூட 60 அல்லது 70 மாணவர்களைக் கொண்டிருந்தால் சிறப்பாகச் சொல்லிக் கொடுக்க உதவியாக இருக்கும். 100-க்கும் மேற்பட்ட மாணவர்களை மந்தையில் சேர்ப்பதைப்போல் அடைத்து வைத்து குழந்தைகளுக்கு கல்வி புகட்டும் சூழ்நிலைதான் தற்போது இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க அதிகமாக 'வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

**18-11-1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மேலும் தனியார் பள்ளிகளில் கழிப்பறைகள் இல்லை. நல்ல லேபரேட்டரி வசதிகள் இல்லை. நூல் நிலையங்கள் இல்லை என்ற நிலைமைகள் எல்லாம் எங்கும் இருக்கின்றன. எனவே தனியார் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கும்போது இவைகளெல்லாம் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று அரசு கண்காணிக்க வேண்டும். குறிப்பாக விளையாட்டுகளுக்கான இடம்கூட இல்லாத தனியார் பள்ளிகள் பல நடப்பதை நாம் பல இடங்களில் பார்க்கிறோம். இவ்வாறு விளையாடுவதற்கு இடமில்லாமல் நடக்கிற தனியார் பள்ளிகளை முறைப்படுத்துகிற சூழ்நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும். மேலும் புதிது புதிதாக எங்கே பார்த்தாலும் தனியார் பள்ளிகள் முளைத்துக் கொண்டே இருக்கின்றன. அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளி என்ற அறிவிப்பு கொண்ட ஒரு பலகையை மட்டும் அங்கே மாட்டி வைத்து விடுகிறார்கள். இத்தகைய பள்ளிகள் தமிழகம் எங்கும் இருக்கின்றன. உண்மையிலேயே அவைகள் எல்லாம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டவைதானா என்று அதிகாரிகள் யாரும் சென்று கண்காணிப்பதாகத் தெரியவில்லை. மேலும் எங்கே பார்த்தாலும் நாற்றங்கால் பள்ளிகள் முளைத்துவிடுவதால் தாய்மார்களின் புலம்பல் ஒருபக்கம். பணம் எப்படியெல்லாம் பறிக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். தாய் தந்தையர்களின் விழி பிதுங்குகிற அளவுக்கு அவர்களிடம் பணம் வாங்கும் சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் மூலமாகக் கண்காணிக்க வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை)

மேலும் ஆங்கில மோகம் எந்த அளவுக்கு நம்மிடையே வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஆங்கிலம் இருப்பதில் தவறு இல்லை. ஆனால் தனியார் பள்ளிகளில்தான் ஆங்கிலம் நன்கு சொல்லித் தருகிறார்கள் என்று கருதி தாய் தந்தையர்கள் தங்கள் குழந்தைகளை அங்கே கொண்டு போய் சேர்க்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆங்கிலத்தில் பாடம் சொல்லிக் கொடுக்கும் தனியார் பள்ளிகள் பல இருக்கின்றன. அவற்றின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அங்கெல்லாம் ஒரே ஒரு ஆங்கில வகுப்பைத்தான் வைத்திருக்கிறார்கள். இவ்வாறு ஒரே ஒரு வகுப்பு கல்வி இயக்குநரால் தரப்படுகிற காரணத்தால் அந்தப் பள்ளியில் தங்கள் குழந்தைகளைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்று இரவு 1 மணிக்குப் போய் அங்கே படுத்துக் கொண்டிருந்து விண்ணப்பங்களை வாங்கி வரும் தாய் தந்தையர்களைப் பார்க்கிறோம். இவ்வாறு விண்ணப்பத்தை வாங்கி வருவதற்கே கஷ்டப்படுகிற நிலைமை இருக்கிறது. விண்ணப்பங்கள் வாங்குவதற்குப் போராடிய பிறகு இடம் பெறப் போராடுகிறார்கள். ஆகவே தனியார் பள்ளிகளில் இருக்கின்ற ஒரு வகுப்பை இரண்டு வகுப்பாக மாற்றினால் நலமாக இருக்கும். ஆங்கில வகுப்பு ஒரு வகுப்பு என்பதால் பெற்றோர்களை ஆசிரியர்கள் ஏமாற்றுகிறார்கள். ஒரு வகுப்பிலே 150 மாணவர்களைச் சேர்த்துவிடுகிறார்கள். ஒரு வகுப்பிலே 150 மாணவர்களைச் சேர்த்துவிட்டால் ஆங்கில வகுப்பின் ஆசிரியர்கள் எப்படி





பாடம் நடத்த இயலும்? அப்படி நடத்தினாலும் செம்மை பொருந்திய அறிவியலைப்புகுத்த முடியுமா என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆகவே ஆங்கில வகுப்புகளை அதிகமாக ஆக்குவதில் தவறில்லை. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லும் அரசு, ஆங்கில வகுப்புகளை அதிகமாகக் கொடுக்கும் சூழ்நிலையை உருவாக்கினால் நன்று. ஆகவே அதிகமான ஆங்கில வகுப்புகளை உருவாக்கிக் கொடுக்கிற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பள்ளிக்குச் செல்லக்கூடிய மாணவர்களுடைய மனம் பாதிக்கக் கூடிய வகையில் சென்னை மாநகரத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருவொற்றியூர் பகுதிகளிலும் கேவலமான திரைப்பட போஸ்டர்களை ஒட்டியிருக்கிறார்கள். இதனால் குழந்தைகளின் மனம் பாதிக்காதா என்று.. ..

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு): இது கல்வி மானியம் அல்ல. பில். இந்த பில்லையொட்டித்தான் பேசவேண்டும். பொதுவாக கல்வி மானியத்தின்மீது பேசுவதைப் போல மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். பில்லையொட்டித் தான் பேச வேண்டும். பிரைவேட் ரெகுலேஷன் பில்லோடு நிறுத்திவிட வேண்டும்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: பள்ளிகள் செல்லும் குழந்தைகளுடைய உள்ளம் செம்மையாக இருக்கக் கூடிய சூழ்நிலையில் இவற்றை மாற்றியமைக்க வேண்டும். மேலும் தனியார் பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியர்கள் அரசு ஆசிரியர்களாக ஆக்கப்படுகிறபோது அவர்கள் தனியார் பள்ளிகளில் செய்த வேலை நாட்களையும் அரசு கணக்கில் எடுத்துக் கொண்டால் நலமாக இருக்கும். ஏனென்றால் அவர்களுக்கு அந்த சீனியாரிட்டியில் மிகப் பெரிய பதவிகள் வரக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே தனியார் பள்ளிகளில் இருக்கக் கூடிய நல்லாசிரியப் பெருமக்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். அப்போது அவர்களுடைய சீனியாரிட்டியையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

தனியார் பள்ளிகளில் 'அமெனிட்டி பீஸ்' என்று வசூல் செய்கிறார்கள். டி. வி. வாங்க இரண்டு ரூபாய் என்று எல்லா மாணவர்களிடமும் வசூல் செய்கிறார்கள். இப்படி ஒவ்வொரு ஆண்டும் வசூலிக்கிறார்கள். அப்பள்ளியில் இரண்டாயிரம் பேர் இருக்கிறார்கள் என்றால் ஒவ்வொருவரிடமும் இரண்டு ரூபாய் என்றால் நான்காயிரம் வசூல் செய்கிறார்கள். டி. வி. மூன்றாயிரம் ரூபாய்க்குக் கிடைக்கிறது. கலர் டி. வி. என்றாலும் எட்டாயிரம் ரூபாய்க்கு கிடைக்கிறது என்பதால் இப்படி இரண்டாண்டுகளுக்கு வசூல் செய்தால் போதும். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் டி. வி. க்காக என்று வசூலிக்கிறார்கள். நூல் நிலையத்திற்காக வசூல் செய்கிறார்கள்.

ஆனால் நூல் வாங்குவதாகத் தெரியவில்லை. காலண்டருக்கென்று ஒவ்வொரு ஆண்டும் வசூலிக்கிறார்கள் ஆனால் ஒவ்வொரு ஆண்டும் காலண்டர் போடுவதில்லை. இவ்வாறு மிஸ்மேனேஜ்மெண்ட் செய்கிறார்கள். அப்படிப்பட்ட மேனேஜ்மெண்ட் பள்ளிகளைச் சிறப்பாகக் கவனித்து பெற்றோர்கள் வாடுகின்ற சூழ்நிலையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகளில் உள்ள பி.ஈ. சீட்டுகளுக்கு இப்போது அதிகமான விலையைக் கேட்கிறார்கள். தனியார் கல்லூரிகளில் உள்ள இடங்களில் 50 சதவீதம் கோட்டா மானேஜ்மெண்டுக்கென்றும் 50 சதவீதம் கோட்டா அரசாங்கத்திற்கு என்றும் வைத்திருக்கிறார்கள். 'டோட்' (D.O.T.E.) மூலமாகச் செல்லுகிறபோதுகூட அரசாங்க கல்லூரிகளில் நான்கு ஆண்டுகளில் ஏழாயிரம் எட்டாயிரம் என்று வசூலிக்கிறார்கள். தனியார் கல்லூரிகளில் உள்ளவர்கள் இதைவிட அதிகமாக வசூலிக்கிறார்கள். இந்தக் குறைபாடுகளைப் போக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நினைவுபடுத்துகிறேன்.

தனியார் பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியப் பெருமக்களை அரசு எடுக்கிறபோது அந்த ஆசிரியர்களுக்குச் செம்மையான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அரசு எடுக்கிற பல்வேறு தனியார்பள்ளிகளில் நல்ல கட்டிடங்களை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மாதவரம் நகரியத்தில் இலட்சுமிபுரத்தில் உள்ள பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே கட்டடங்கள் இல்லை, நூல் நிலையம் இல்லை. அதிகமான பர்னிச்சர் இல்லை. அவற்றையெல்லாம் கொடுக்க அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டு இந்த மசோதாவின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள் சட்ட முன்வடிவின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு ஜனதா கட்சியின் சார்பாக நன்றி கூறிக்கொண்டு சில கருத்துக்களைக் கூறிக்கொள்கிறேன்.

மக்களுக்கு கல்வி கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. அதை விடுத்து, தனியார் நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் ஒன்று கூடி கல்லூரிகள், பள்ளிகள் நடத்துகிறார்கள் என்றால் அவர்களுக்குள்ள [illegible] ஆர்வத்தை, அவர்கள் செய்யும் பொது மக்கள் பணியை





இந்த நாடு முன்னேற வேண்டும், மக்கள் முன்னேற வேண்டும் என்ற அவர்களுடைய ஆர்வத்தை இந்த அரசு பாராட்ட வேண்டும்.

(முற்பகல் 11-50)

அதை விடுத்து, அவர்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்
கூடிய அளவிலே பல்வேறு சட்டங்களை இந்த அரசு புகுத்திக்
கொண்டு வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்
றால், பள்ளிகள் ஆரம்பிக்க வேண்டுமென்றோ அல்லது கல்லூரி
கள் ஆரம்பிக்க வேண்டுமென்றோ சொன்னால் குறிப்பிட்ட
தொகை 'என்டோமெண்ட்' ஆகக் கட்ட வேண்டும், குறிப்பிட்ட
அளவு ஸ்பேஸ்—இடம்— இருக்க வேண்டும். இன்னின்ன 'பர்
னிச்சர்' வைக்க வேண்டும் என்று அரசின் சட்டம் சொல்கிறது.
ஆனால் அரசு மூலமாக நடத்தப்படும் கல்லூரிகளிலும், பள்ளி
களிலும் அந்த அடிப்படை வசதிகளைச் செய்யவில்லை. இதை
யார் கேட்பது என்று தெரியவில்லை.

அடுத்து, 8ஆம் வகுப்புவரை வைத்திருப்பவர்கள் 10ஆம்
வகுப்பு வரை உயர்த்த வேண்டுமென்று கேட்கும்போது, மக்
களுக்குக் கல்வி புகட்டும் அந்தப் பள்ளி நல்ல முறையிலே, ஆர்வத்
தோடு இருக்கிறதென்று கருதி, உடனே அதற்கு அனுமதி கொடுக்
கலாம். இதைப்போல், 10 வகுப்பு வரை இருக்கும் உயர்நிலைப்
பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு தனியார்
பள்ளித் தாளாளர்கள் அலையோ அலை என்று சென்னைக்கு
பட்ட எடுத்து, வருஷக் கணக்கில் அலைந்து கொண்டிருக்கிறார்
கள். இது தேவைதானா? ஆனால் அவர்களுக்குத் தேவைப்படும்
சமயங்களில் உடனடியாக அனுமதி கொடுப்பதாகச் சொல்லப்
படுகிறது. ஒரு உதாரணம், அருப்புக்கோட்டை இடைத் தேர்தல்,
இன்னும் பல சட்ட திட்டங்கள் தனியார் பள்ளிகளைப் பொறுத்து
இருக்கின்றன. ஒன்றாம் வகுப்பில் 40, 50 பேர்கள் இருக்கலா
மென்னும்போது, 2 பேரை அதிகமாகச் சேர்த்தாலும் தகுதி
இழந்து விடுவீர்கள் என்று ஒரு சட்டம். தாளாளருக்கு அதிகாரம்
இல்லாமல், தலைமை ஆசிரியருக்கு அதிக அதிகாரம் கொடுத்
திருக்கிறார்கள். இப்படி பலவற்றின் மூலமாக தனியார் பள்ளி
நடத்துவதற்குரிய ஆர்வத்தைக் குறைக்கிறார்கள். உதாரணத்
திற்குச் சொல்ல வேண்டுமென்றால், காமராஜர் மாவட்டத்தில்
அரசுக் கல்லூரிகளே கிடையாது. அத்தனையும் தனியார் கல்லூரி
கள், தனியார் பாலிடெக்னிக்குகள் தான் இருக்கின்றன என்
பதைச் சொல்லிக் கொள்கிறேன். பொறியியல் கல்லூரிகூட
தனியார் நடத்துகிறார்கள். அப்படி இருக்கும்போது, அரசுக்கு
கல்வி கொடுக்கும் பணி குறையும்போது, அவர்கள் பிரச்சினை
களை அனுதாபத்தோடு அணுக வேண்டும். மக்களுக்குக் கல்வி
கொடுக்க அவர்கள் இருக்கிறார்கள். அந்த மக்கள் பணி செய்யும்
போது, அவர்களை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 நவம்பர் 24

எனவே சட்டங்களை நிறைவேற்றும்போது தனியார் பள்ளிகள்
தனியார் கல்லூரிகள் குறித்து கடுமையான சட்டங்களை நிறை
வேற்றாமல், அவர்களுக்கு தக்க வாய்ப்புகள் தர வேண்டும்.
அவர்கள் பொது மக்களுக்கு மேலும் தொண்டு செய்ய வாய்ப்பு
தர வேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்கள் இதையெல்லாம்
பரிசீலித்து, தனியார் பள்ளிகளுக்கு மேலும் பல வசதிகளைச்
செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு
நன்றி சொல்லி, என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

*திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள்
(முறைப்படுத்தல்) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்)
1986 ஆம் ஆண்டு திருத்தச் சட்ட முன்வடிவின்மீது ஒரு சில
கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்ததற்கு என்னுடைய
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த
வரையில் தனியார் பள்ளிகளும், கல்லூரிகளும் பல்கி பெருகிக்
கொண்டிருக்கின்ற கால கட்டத்தில் நாம் இருந்துகொண்டிருக்
கிறோம். தனியார் பள்ளிகளும், கல்லூரிகளும் சிறப்பான கல்விப்
பணி செய்து கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க
முடியாது. ஆனால் ஒருசில தனியார் பள்ளிகளிலும், கல்லூரி
களிலும் நடைபெறுகின்ற முறைகேடுகளையும், குறைபாடு
களையும் இந்த அரசின் கவனத்திற்குச் சுட்டிக்காட்டி, அவை
களையப்படுமானால், அவர்கள் செய்யும் புனிதப் பணி மேலும்
சிறப்படையும் என்பதைச் சொல்லி, ஒருசில குறைபாடுகளைச்
சுட்டிக் காட்ட நான் விரும்புகிறேன்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல
என்னுடைய பத்மநாபபுரம் தொகுதிக்கு உட்பட்ட ஒரு தனியார்
பள்ளியில் அண்மைக் காலத்தில், நடைபெற்ற, மனதை வேதனைப்
படுத்தும் ஒரு குறைபாட்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
என்னுடைய பத்மநாபபுரம் தொகுதிக்கு உட்பட்ட தனியார்
பள்ளிகளுள் ஒன்று, மாடத்தட்டுவிளை புனித லாரன்ஸ் மேல்
நிலைப் பள்ளியாகும். அந்தப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்ட
வேண்டுமென்று சொல்லி, அந்தப் பள்ளியிலே பணியாற்றும்
ஆசிரியர்கள் எல்லாம் அவர்களது ஒரு மாத ஊதியத்தை நன்
கொடையாகப் பள்ளி நிர்வாகத்திற்கு வழங்க வேண்டுமென்று
கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பல ஆசிரியர்கள் அதை
மறுத்திருக்கிறார்கள். அப்படி மறுத்த ஆசிரியர்கள் அதை
அக்குவிட்டன்ஸ் ரோலில் கையெழுத்து வாங்கிய பிறகு, நன்
கொடைப் பணம் கொடுத்தால்தான் மாத ஊதியம் தருவோ
மென்று அந்த ஆசிரியர்களிடம் சொல்லப்பட்டு அவர்கள் அந்த
மறுத்து, அந்த மாத ஊதியம் அவர்களுக்குக் கொடுக்காததால்
அவர்கள் அருகிலுள்ள இரணியல் காவல் நிலையத்திற்குச் சென்று
புகார், செய்திருக்கிறார்கள். நான் குறிப்பிட்டுச் சொல்வது
திரு. நாகமுத்து என்ற ஒரு ஆசிரியர் பற்றியது. இரணியல்
காவல் நிலையத்தில் அவர், தன்னிடத்தில் கையெழுத்தும்



1986 நவம்பர் 24] [திரு. வை. பாலச்சந்திரன்]

பெற்ற பிறகும் தனக்கு ஊதியம் தரவில்லை என்று பள்ளி
நிர்வாகம் மீது புகார் செய்து, அந்த காவல் நிலையத்தினர்
விசாரணை நடத்தினார்கள். காவல் துறையினர் குறுக்கிட்டு
அதற்குப் பிறகுதான் அவர்களுக்கு ஊதியம் கொடுத்திருக்கின்
றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப்
பிறகும் ஒவ்வொரு மாதமும் நன்கொடைக்கு வற்புறுத்திக்
கொண்டிருக்கின்றார்கள். நன்கொடை கொடுக்க வேண்டும்
என்று ஆசிரியர்கள் கட்டாயப்படுத்தப்படும் நிலைமை அங்கே
இருந்து கொண்டிருக்கின்றது. அந்த நிலைமைகள் மாற்றப்பட
வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதிக்குட்பட்ட பல்வேறு தனியார் பள்ளி
கள் மிக நல்ல முறையில் நடந்து கொண்டிருந்தாலும், அங்கே
பயில்கின்ற மாணவர்களுக்குத் தேவையான வசதிகள்
அங்கேயில்லை என்ற குறைபாடுகள் இருக்கின்றன.

சில பள்ளிக்கூடங்களில் சில குறிப்பிட்ட பேட்ஜ்கள் அணிந்து
தான் பள்ளிக்கு வரவேண்டும் என்றும் இல்லையென்றால் வகுப்
பறையில் அனுமதிப்பது இல்லை என்றும் நிலைமைகள் இருக்
கின்றன. இது அவர்கள் செய்யும் புனிதமான பணிக்கு களங்கம்
விளைவிப்பதாக இருக்கின்றது என்பதையும் அரசுக்கு சுட்டிக்
காட்டி அமைகிறேன். நன்றி.

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு
வரப்பட்டு இருக்கின்ற இந்த சட்டமுன்வடிவினை வரவேற்று
என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே எடுத்து வைக்க
விரும்புகிறேன். இந்த சட்ட முன்வடிவையொட்டி தனியார்
பள்ளிகள், கல்லூரிகள் நடத்துகின்ற அந்த நிலைமைகளையும்
நாம் பார்க்கிறபோது, 'விட்மேன்' என்பவரின் கதை ஒன்றுதான்
என்னுடைய கவனத்திற்கு வருகின்றது. ஒரு ஆலயத்தின் பணி
களைச் செய்வதற்காக சிற்பங்களைச் செதுக்கிக்கொண்டிருந்த
3 சிற்பிகளைப் பார்த்து ஒருவர் கேட்கிறார். 'ஒருவனைப் பார்த்து
'நீ என்ன செய்கிறாய்' என்று அவனைக் கேட்கின்றபோது 'நான்
கல்லைச் செதுக்கிக் கொண்டிருக்கிறேன்' என்று பதில் சொன்
னான். இரண்டாமவனைக் கேட்கிறபோது 'நான் கூலி 10 ரூபாய்
கிடைக்கும் என்பதற்காக இந்த காரியத்தை நான் செய்கிறேன்'
என்று சொன்னான். மூன்றாமவன் 'நான் இந்த ஆலயத்தை உரு
வாக்குவதற்காக என்னுடைய பணியினை நான் செய்துகொண்டு
இருக்கிறேன்' என்று சொன்னான். எப்படி இந்த சிற்பிகள் மூன்று
பேர்களும் மூன்று கோணங்களிலே தங்களுடைய தொழிலை விமரி
சித்தார்களோ அது போல இன்றைக்கு கல்விக்கு சேவை செய்ய
வருகின்றார்கள். இன்றைக்கு தனியார் பள்ளிகள், தனியார்
கல்லூரிகள் ஆரம்பித்து பல பேர்கள் சேவை மனத்தோடும் சில
பேர் வியாபார நோக்கத்தோடும் இந்த காரியங்களைச் செய்து

[திரு. செ. செம்மலை] [1986 நவம்பர் 24

வருகின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவு கொள்ள
வேண்டும். எனவே, இந்தச் சட்டத்தின் மூலம் அந்தத் தனியார்
பள்ளிகள், கல்லூரிகள் இவைகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு
சில பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்
னாலும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய மேலான
கவனத்திற்கு ஒரு கேள்வியை வைக்க விரும்புகிறேன்.

ஒரு கல்லூரியையோ, ஒரு பள்ளியையோ, அல்லது ஒரு பிரி
வையோ மூடிவிடுகிறோம் என்று நிர்வாகம் நடத்துகின்றவர்கள்,
அதாவது தனியார் முன் வருகின்றபோது 'அந்த பாடத் திட்
டத்தை நாங்கள் வைக்க விரும்பவில்லை' என்று சொல்கின்ற
போது, இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற காரணங்
களுக்கு ஒத்து வரவில்லை என்று நாம் மறுப்போமானால், என்
னுடைய கேள்வி, அப்படி விருப்பம் இல்லாதவர்கள் அந்தக் கல்
லூரியையும் பள்ளியையும் எப்படி நடத்துவார்கள். அப்படி நடத்
துவது விதிமுறைகளுக்கு உட்படவில்லை என்ற காரணம்
காட்டியும் மேலும் அந்தக் கல்லூரியையும் பள்ளியையும் திரும்ப
எடுத்து நடத்த அனுமதிப்போமானால் அவர்கள் எப்படி ஆக்கத்
தோடு, ஊக்கத்தோடு, அல்லது சேவை மனப்பான்மையோடு அந்த
நிறுவனத்தை நடத்துவார்கள் என்பதே என்னுடைய கேள்வி.
எனவே அப்படி அந்த விதிமுறைகளுக்குட்பட்டு ஒத்து வரவில்லை
என்றால் ''நீங்கள் பள்ளியை எடுத்து நடத்தவேண்டும்'' என்று
சொன்னால், அவற்றை ''எந்த வகையிலே திறமையோடு நடத்த
இருக்கிறார்கள், நடத்துவார்கள், நடத்த இந்தச் சட்டம் எப்படி
உறுதுணையாக இருக்கும்'' என்பதைப் பற்றி மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொன்னால் நன்றாக
இருக்கும் என்று இந்த நேரத்தில் கருதுகிறேன்.

அத்தோடு ஒரு சில குறிப்பிட்ட பிரிவுகளுக்கு, பாடங்களுக்கு
மாணவர்கள் சேர்க்கை அதிகமாக இருக்கின்றது என்ற காரணத்
திற்காக அவர்கள் விரும்பாத பாடத் திட்டத்திலே மாணவர்
களைச் சேர வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது இருக்கின்
றது- குறிப்பிட்ட வகுப்பிலே சேர்ப்பதற்கு பணத்தைப் பெறு
கின்ற நிலையும், மாணவர்களை வற்புறுத்தி சில பாடங்க
ளிலே சேர்க்கின்ற நிலைமைகளும் இருக்கின்றன.

(நண்பகல் 12—00)

அதை எந்த வகையிலே இந்தச் சட்டம் கட்டுப்படுத்தப்
போகிறது என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
விளக்க வேண்டும். காரணம் மாணவர்களைச் சேர்க்கிறபோது
இப்படி வற்புறுத்தி சில பிரிவுகளில் சேர்ப்பதற்கு அவர்களிட
மிருந்து பணம் பெறுகிற சூழ்நிலை இருக்கிறது. தனியார்கள்
தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப மாணவர்களைச் சேர்ப்பதற்கு
நாம் அனுமதிக்கின்ற நிலை நீடிக்கும் வரை இப்படிப்பட்ட தவறு
கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கும். ஆகவே, இப்படிப்
பட்ட நிலையில் மாணவர்களைச் சேர்க்கின்றபோது கல்வி



1986 நவம்பர் 24] [திரு. செ. செம்மலை]

இலாகாவினுடைய கட்டுப்பாடு இதில் எந்த அளவுக்கு இருக்க
வேண்டும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.
கல்வித் துறைக்கு இதில்கட்டுப்பாடு விதிக்கின்ற நிலை இல்லையே
என்கிற நிலை ஒருவேளை இருந்தால்கூட தனியார் துறையிலே
மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது கல்வித் துறையிலுள்ள
உயர் அதிகாரி கூட இருந்துகொண்டு தேர்ந்தெடுக்கிற ஒரு
நிலையையாவது உருவாக்க வேண்டும். இன்னொன்றையும் இந்த
நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கி
றேன். இன்றைக்கு எங்கள் தொகுதியில் கூட ஒரு தனியார்
பள்ளியில் பணியாற்றுகின்ற ஒரு தமிழ் ஆசிரியருக்கு நியாயமாகக்
கொடுக்க வேண்டிய பதவி உயர்வைக் கொடுக்காமல் கடந்த 4
ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வருகிறது. பதவி உயர்வை கொடுக்க
வேண்டுமென்று இயக்குநர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.
நீதிமன்றத்திலும் அவர்களுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்
பட்டிருக்கிறது. இருந்தாலும் விடாப்பிடியாக அந்தத் தமிழ்
ஆசிரியருக்கு பதவி உயர்வு கொடுக்கக்கூடாது என்கிற கருத்தில்
உறுதியாக இருக்கிறார்கள். ஏற்கனவே இயக்குநர் அலுவலகம்
நேரடியாக ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற
நிலையை எடுத்து இப்படிப்பட்ட நிர்வாகங்களின் உரிமையைப்
பறித்தது என்றாலும் கூட அவர்கள் ஆசிரியர்களின் உரிமையை
மறுக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட தனியார் நிர்வா
கங்களை எல்லாம் எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதைப்
பற்றி புதிதாக பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்
அவர்கள், மிகவும் திறமை படைத்தவர்கள். எங்கெங்கு சந்து
பொந்து சட்டத்தில் இருக்கிறதோ அதை எல்லாம் கண்டு
பிடித்து அடைத்து, தவறு செய்கின்ற தனியார் நிர்வாகங்களை
கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டும். இதை எல்லாம் மனதிலே
கொண்டு, இச்சட்டத்தை கொண்டு வருகிற நேரத்தில், சில குறிப்
பிட்ட பிரச்சினைகளையும் மனதிலே கொண்டு இந்தப் பிரச்சினை
கள் குறித்து சில கட்டுப்பாடுகளை அவசியம் விதிக்க வேண்டு
மென்று சொல்லி இச்சட்டமுன்வடிவை வரவேற்று, வாய்ப்புக்
கொடுத்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்
கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) தனியார்
கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவின்
நோக்கம் என்ன என்பது குறித்து முதற்கண் நான் தெளிவு
படுத்த விரும்புகிறேன். தனியார் பள்ளிகளுடைய சட்ட விதிகளை
பொறுத்தவரையில் ஏற்கனவே அவை இயற்றப்பட்டு
உச்ச நீதிமன்றத்திலே தற்போது நிலுவையில் இருக்கின்றன.

அடுத்து, தனியார் பள்ளிகள், கல்லூரிகளைப் பொறுத்த
வரையில் ஏற்கனவே இருக்கின்ற வகுப்புகளை அவர்கள்
எடுத்து விடுவார்களேயானால், அங்கே பணியாற்றிக் கொண்
டிருக்கின்ற ஆசிரியர்களுக்கும், படித்துக்கொண்டிருக்கின்ற மாண
வர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டு விடக் கூடாது என்ற நோக்கத்தில்

தான் ''காம்பிடென்ட் அதாரிட்டி'' என்று சொல்லக்கூடிய அரசு அதிகாரியிடம் முறைப்படி அனுமதி வாங்கி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் என்னென்ன பரிகாரம், மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாக்கிய பிறகுதான் அவர்கள் அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் இச்சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்த வகையில் இச்சட்ட முன் வடிவு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பாதுகாப்புத் தர வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி அவர்கள் பேசுகிறபோது தனியார் பள்ளிகளை ஒரு புறம் கட்டுப்படுத்த வேண்டுமென்று கூறினார்கள். இன்னொருபுறம் இதற்கு தொடர்பு இல்லையென்றாலும் கூட போஸ்டர்கள் ஒட்டுவது குறித்து இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்றும் கேட்டார்கள். போஸ்டர்கள், ஆபாச சினிமா சுவரொட்டிகள், பிற ஆபாச சுவரொட்டிகள், வார ஆபாச ஏடுகள், ஃபார்ட்னைட் ஆபாச ஏடுகள். மன்த்லி ஏடுகள் இவைகளில் ஆபாச படங்கள் வந்தாலும் கூட அவற்றின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் பேசுகிறபோது சில தனியார் பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றை வேண்டுமென்றே பாதிப்புக்கு உள்ளாக்கக்கூடாது என்று சொன்னார்கள். அரசின் நோக்கம் யாரையும் பாதிப்புக்கு உள்ளாக்குவது அல்ல. ஏற்கனவே தனியார் பள்ளிகளில் சில ஏற்பாடுகளைச் செய்யும் போது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மாற்றுப் பரிகாரம் செய்யத் தவறி விடுவதால் கடந்த கால பாதிப்புக்களை மனதிலே கொண்டு இச்சட்ட திருத்தம் இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் பேசும் பொழுது ஒன்றைச் சொன்னார்கள். அவர் இப்படி, காம்பிடென்ட் அத்தாரிட்டி என்று சொல்லக்கூடிய அதிகாரிகள் அனுமதி வழங்க மறுத்தால் அவர்களுடைய நிலை என்ன என்பதைச் சொன்னார்கள். அனுமதி வழங்குவதற்கு என்றே, guidelires are being prescribed அந்த கைட்லைன்ஸ்க்கு உட்பட்டுத்தான் அவர்கள் அந்த வகுப்புகளை நீக்க வேண்டும் அல்லது வேறு வகுப்புகளைக் கொண்டு வர வேண்டுமென்ற கைட்லைன்ஸ் இருக்கின்றன. ஏற்கனவே அந்தந்தப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் பொது நியதிகள் என்று இருக்கின்றன. அந்தப் பொது நியதிகளுக்கு உட்பட்டுத்தான் அவர்கள் வகுப்புகளை வைக்க வேண்டும். அப்படி நீக்குகின்றபொழுது மாற்றுப் பரிகாரத்திற்கும், guidelines that are going to be prescribed under the rules என்று இதிலே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அந்த



கைட்லைன்ஸ்க்கு உட்பட்டுத்தான் அவர்கள் அதைச் செயல்படுத்தவேண்டும். மாணவர்களைக் கட்டாயப்படுத்தி சில வகுப்புகளில் சேர்ப்பதாகச் சொன்னார்கள். ஒரு வேளை குறிப்பிட்ட சில வகுப்புகளுக்கு, there being heavy demand—மாணவர்களுடைய ஆர்வம் அதிகம் இருக்கலாம். பெற்றோர்கள் அதை விரும்பக்கூடிய சூழ்நிலைகள் இருக்கலாம். எந்தவொரு பிரிவுக்கு அதிகமான மாணவர்களுடைய விருப்பம் இருக்கிறதோ அந்தப் பிரிவுகள் துவக்கப்படுகின்றபொழுது அந்தக் குறையினைக் களைய முடியும் என்று கருதுகிறேன். இந்த விளக்கத்துடன் இந்தச் சட்டமுன்வடிவினை அவை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : 1986 ஆம் ஆண்டு '' தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்), தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் [illegible]ப் பெற்றது.

பிரிவுகள் 2. முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''1986 ஆம் ஆண்டுதமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்), தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1986) நிறைவேற்றப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1986 நவம்பர் 24

3. அரசியலமைப்புச் சட்டப்பிரிவை எரித்தோர் உறுப்பினர்கள் தகுதியை இழத்தல்—பேரவைத் தலைவர் தீர்ப்பு (தொடர்ச்சி).

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றம் சுமுகமான சூழ் நிலையிலேயும் ஆரோக்கியமான அரசியல் அடிப்படையிலேயும் நடக்கவேண்டுமென்று நமக்கெல்லாம் மெத்த ஆர்வம் உண்டு. அப்படித்தான் நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்தச் சூழ் நிலை நீடிக்க வேண்டுமென்ற அடிப்படையில் நான் ஒரு கருத்தை உங்களுக்குச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். இந்த அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் அவர்களுடைய அரசியல் கட்சி செய்த தீர்மானத்தின் அடிப்படையில் அரசியல் சாசனத்தின் ஒரு பிரிவைத் தனியாக அச்சிட்டு அந்தப் படிவத்தைத் தீயிட்டுக் கொளுத்தியது சம்பந்தமாக இந்த அவையில் இரண்டு நாட்களுக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு மாண்புமிகு சபையினுடைய முன்னவர் அவர்கள் அது நீதிமன்றத்திற்கு இப்பொழுது சென்றிருக்கக்கூடிய காரணத்தால் அதனுடைய தீர்ப்பு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று காலை எழுப் பினார்கள். இன்றைக்கு ஒரு உறுப்பினர் எரித்ததாக எனக்குத் தகவல் வந்தது. காலையில் எழுப்பினார்கள். அது தொடர் பாகத்தான்....

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** நான் இந்தச் சபையிலே இந்தப் பிரச்சினை நடந்து முடிந்த பிறகுதான் உள்ளே நுழைந் திருக்கக்கூடிய காரணத்தால், நான் இருந்து கேட்ட அந்த விஷ யத்தை நான் மரியாதையோடு நினைவூட்டி, நீதிமன்றத்தி னுடைய தீர்ப்பு வரும் வரை நாம் காத்திருந்து முடிவெடுக்கலாம் என்று முன்னவர் சொல்ல, தாங்களும் அந்த அடிப்படையிலே சில கருத்துரைகள் வழங்கி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச் சினையை அன்றைக்குக் கிளப்பினார்கள். அவை முன்னவர் பதில் அளித்தார். பதில் அளிக்கின்ற நேரத்தில் அங்கே, கிரிமினல் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தீர்ப்பை எதிர் பார்க்கலாம் என்று சொன்னார்கள். அதோடு விட்டு விட்டேன் என்னைப் பொறுத்தவரையில். இது நான் திடீரென்று எடுத்த முடிவு அல்ல; திடீரென்று வழங்கிய தீர்ப்பு அல்ல. இரண்டு மூன்று நாட்களாக I have given active consideration I have given a good deal of thought over it. இப்படி வந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறதே, ஏமு சட்ட மன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள், அரசியல்



1986 நவம்பர் 24]

சட்டத்தால் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த உறுப் பினர்கள், அரசியல் சட்டத்தால் மக்கள் உரிமை கிடைக்கப் பெற்று மக்களின் சார்பில் இங்கே வரக்கூடியவர்கள் அரசியல் சட்டத்தை இப்படிச் செய்கிறார்களே என்று நானே எண்ணிப் பார்த்து, நானே தன்னிச்சையாக எடுத்த முடிவுதான், நானே அளித்த தீர்ப்புதான்.

(பிற்பகல் 12-10.]

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** நீங்கள் எடுத்த முடிவு பற்றியோ சொன்ன தீர்ப்பு பற்றியோ நான் கேள்வி கேட்க விரும்பவில்லை. அரசியல் சாசனத்தின் எழுத்தை மாத்திர மல்ல; அரசியல் சாசனத்தினுடைய உணர்வையும் காப்பாற்ற வேண்டுமென்ற அக்கறை நம் அனைவருக்கும் உண்டு. ஆனாலும் கூட நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வரும்வரை.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நானே விளக்கிவிடுகிறேன். நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற வழக்கு, சட்டத்தை மீறியதற் கான வழக்கு; சட்டத்தை எரித்தது சம்பந்தமான கிரிமினல் வழக்கு. அதில் வரக்கூடிய முடிவு, எந்தவகையான தண்டனை வழங்குவார்கள் என்கிற தன்மைபற்றி நான் குறிப்பிட வில்லை. இங்கே நான் அளித்த தீர்ப்பு உறுப்பினர்கள் அளித்திருக்கிற பிரமாண வாக்குமூலத்தை மீறியது பற்றியதாகும். நீதி மன்றத்தின் தீர்ப்பு வருகின்ற நிலையில் இதற்காக நாம் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நீதிமன்றத்தில் கிரிமினல் வழக்கை போலீசார் தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வழக்கை முன்வைத்து இங்கே தீர்ப்பு வழங்க வேண்டிய அவசியம் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் இந்த அவை, இந்த மன்றம் அர சியல் சாசனத்திற்கு உட்பட்டு செயல்பட வேண்டும்; அரசியல் சட்டத்தை மதிக்க வேண்டும். இதிலே வேறு பிரச்சினைக்கு இடமில்லை.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** நான் தீர்ப்பைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. நான் விரும்புவது ஒரு சுமுகமான சூழ்நிலையை * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இறுதியில் குறிப்பிட்ட வார்த்தைகள் வேண்டாம். அவை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப் படுகின்றன. அரசியல் சட்டத்தை நான் பாதுகாக்க வேண்டும். அதற்கு நீங்கள் எல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அரசியல் சட்டத்தின்படி வரக்கூடிய உறுப்பினர்கள், அரசியல் சட்டத்தில் நம்பிக்கை வைத்து வரக்கூடிய உறுப்பினர்கள் அந்த அரசியல் சட்டத்தைப்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பாதுகாக்க வேண்டும். சாதாரண மக்கள் செய்கிறார்கள் என்றால் அது வேறு. அரசியல் சட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே இருக்கிற சலுகைகள், உரிமைகள் (பிரிவிலேஜஸ்), எல்லாவற்றையும் 'என்ஜாய்' பண்ணுகிறவர்கள் அந்தச் சட்டத்தை எரிப்பது சரியல்ல; முறையும் அல்ல.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, தீவிரமாக தாங்கள் அளித்த தீர்ப்பை தாங்கள் மறுபரிசீலனை செய்வதற்கு ஏதாவது வழி இருந்தால், அன்பு கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் தீர்ப்பை மறு பரிசீலனை செய்வதற்கு இடமே இல்லை. எல்லோருடைய ஒப்புதலுடன் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு ஆண்ட நாள் ஆண்டு மாண்ட செந்தமிழ்ப் பாண்டிய மன்னன் மீண்டும் வந்தது போன்ற தோற்றமும் அதே பாண்டியனுடைய பெயரை வைத்துக் கொண்டிருக்கிறவருமான சபாநாயகர் அவர்களே, உங்களுடைய தலைமையிலே மிகச் சிறப்பான நிகழ்ச்சிகள் கடந்த சில நாட்களாக நடந்து கொண்டிருப்பதை நாம் பார்த்தோம். பாபு ஜெகஜீவன்ராம் அவர்களுடைய இரங்கல் தீர்மானம் தொடங்கி அவர் எடுத்து வைத்த தேசிய மொழிகள், தாய் மொழிக் கொள்கைகளின் தன்மையைத் தாங்கள் சொன்னபோது உங்களுடைய உணர்வுகளை மிகச் சிறப்பாக எடுத்து வைத்தீர்கள்.

மறுநாளே இந்திய அரசியல் அமைப்பும், இந்திய தேசிய ஒருமைப்பாடும், இந்தியாவில் இருக்கிற தாய் மொழிகளும் என்றும் சிறப்படைய வேண்டும்; சிறப்பிக்க வேண்டும் என்று சூளுரைத்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை இங்கே உங்களுடைய முன்னாலே நாங்கள் எல்லாம் வரவேற்று, ஒரு சிலரைத் தவிர, மற்ற அனைத்து பெருமக்களும் வரவேற்றுப் பேசியதை, எதிர்த்தவர்கள் கூட பல நல்ல தன்மைகளைச் சுட்டிக்காட்டிப் பேசியதை நீங்கள் இங்கே பார்த்தீர்கள்.

அதற்குப் பின்னாலே பலரைப் பற்றிய அல்லது சிலரைப் பற்றிய ஒரு ஒழுங்குப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் எழுப்ப, அதற்கு நீங்கள் விடையும் பதிலும் தீர்ப்புமாகச் சொல்கின்ற நேரத்திலே மி

வேதனையோடு இந்தச் செயலைச் செய்கிறேன் என்றுதான் நீங்கள் சொன்னீர்கள். எனவே உங்கள் உணர்வு எந்த அள வுக்கு துன்பக் கடலிலே மூழ்கி, தவித்து, திகைத்தது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது.

''பைந்தமிழால் வைதாரையும் வாழவைப்பேன்'' என்று சொன்ன அந்த பரம்பரையில் வந்த நமது பேரவைத் தலைவர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே என்னென்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை தினமும் பார்த்துக்கொண் டிருக்கிறோம். நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், எங்களுக்கு வேதனை வருகிறபோது எல் லாம் நீங்கள் துடைத்திட துடித்தெழுந்து வருகிறீர்கள். நீங் களே ஒரு வேதனையான காரியத்தைச் செய்து இருக் கிறேன் என்று சொல்லும்போது நாங்கள் அதிலே பங்கு கொள்ள வேண்டாமா? சாதனையை ஒருவர் படைத்தாலும் கூட அந்த சாதனையை மேலும் முறியடிப்பது உண்டு. அதைப் போல நீங்கள் எழுதிய தீர்ப்பை இன்னொருவர் மாற்ற வேண்டுமென்றோ, நாங்களே உங்கள் கருத்தை மாற்றவேண்டு மென்றோ கூறவில்லை. நீங்கள் எழுதிய தீர்ப்பை தெரிவிக் கின்ற நேரத்திலே மிக வேதனையோடு சொன்னீர்கள். அந்த, உங்களுடைய வேதனையோடு அனைவருடைய வேதனை யையும் தீர்க்க வழி இருக்கின்ற ஒரு வகையிலே உங்கள் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுபரிசீலனைக்கே இதில் இடமில்லை. திடீரென்று எழுதப்பட்ட திர்ப்பு அல்ல இது. ஏழு சட்டமன்ற உறுப்பினர்கள் அறிவித்து, பத்திரிகை களில் எல்லாம் அறிவித்து, கட்சியின் மூலம் செயற்குழுவில் தீர்மானம் போட்டு அறிவித்து, நாள்தோறும் பொது இடத்தில் அரசியல் சட்டத்தை கொளுத்திக்கொண்டிருப்பவர்களை, எப்படி அனுமதித்து விவாதத்திலே ஈடுபடுத்த முடியும் ?

நான் அரசியல் சட்டத்தின் சார்பாகத்தான் தேர்ந்தெடுக் கப்பட்டு இருக்கிறேன். அரசியல் சட்டத்தை நிலைநாட்டு வதற்காகத்தான் இந்தச் சபாநாயகர் பதவியிலே நீங்கள் எல் லாம் என்னைத் தேர்ந்தெடுத்து அமர்த்தியிருக்கிறீர்கள். இந்த அரசியல் சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பில்தான் நான் என்னுடைய பொறுப்பை நிறைவேற்றி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே மறுபரி சீலனைக்கு இடம் இல்லை.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(அஅ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு.
1986.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன்:

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம்)திருத்த
சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு
எண் 68/1986 *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மதுவிலக்கு மூன்றாம் திருத்த சட்ட
முன்வடிவின் கீழ் பேசுகின்ற ஒரு வாய்ப்பைப் பெற்றமைக்காக
உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். காரணம், நம்
முடைய தமிழ் நாட்டினுடைய தலைமை அமைச்சர் பொன்
மனச் செம்மல் மாண்புமிகு திரு. எம். ஜி. ஆர். அவர்கள் இங்கே
மதுவிலக்கிலே சிறப்பான மூடுவிழா புரட்சியைச் செய்திருக்கி
றார்கள். இந்தப் புரட்சியின் கீழ் இங்கே ஓர் உரிமத்தின் மூல
மாகக்கூட தமிழக மக்களின் கையிலே எரி சாராய வாடை வீசக்
கூடாது என்பதற்காக—கள்ளுக்கடைகளையும், சாராயக் கடை
களையும் நீக்கியிருக்கிறார்கள். தமிழக மக்கள் எல்லோரும்
மகிழ்கின்ற இந்த நன்னாளில் உரிமம் மூலம் நடத்தப்படுகிற
கடைகளில் ஏற்படுகிற சிக்கல்களுக்காக இங்கே சட்ட முன்
வடிவை வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவின்
மீது சில பிரச்சினைகளைப் பேசுகிறபோது ஒன்றைத் தெரிவித்
துக் கொள்கிறேன். கள்ளத்தனமாக சாராயங்கள் காய்ச்சப்
பட்டு அவை உரிமம் பெறுகிற கடைகளின் மூலம் விற்கப்படு
கிற சூழ்நிலைகள் பல்வேறிடங்களில் இருப்பதாக முன்பு கூட
தகவல்கள் வந்திருக்கின்றன.

அந்த அடிப்படையில் யாராவது தவறுகள் செய்தால் அந்தத்
தவறுகளின் மீது நடவடிக்கை எடுக்க நமது அரசு முன்வருமா?
அப்படி நடவடிக்கை எடுக்கிறபோது அவற்றின் மீது எந்தவித
மான பிரச்சினைகள் வந்தாலும் அவற்றை எல்லாம் தீர்க்கிற
முறையிலே இருக்க வேண்டும். இந்த எரி சாராயம் கள்ளத்
தனமாக விற்கப்படுகிற காட்சியை மாற்றுகிற வகையில் நிலை
மையை உருவாக்க வேண்டும். எனவே உரிமம் மூலமாக

---

* 17—11—1986-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசி
தழில் வெளியிடப்பெற்றுள்ளது.





நடத்தப்படுகிற கடைகளிலும் போலித்தனமான சாராயத்தை
வைத்து விற்கிற சூழ்நிலை உருவாகும். அப்படி உருவாகவிடா
மல் நம்முடைய சட்டமானது வேகமாகச் செயல்படவேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டத்தைக் காக்கின்றவர்கள் சில நேரங்களில் அந்தச்
சட்டத்தில் கொட்டமடிக்கின்ற சூழ்நிலையை உருவாக்கிவிடு
கிறார்கள். அப்படி உருவாக்குகிறபோது அந்த எரி சாராயம்
தயாரிக்கின்ற தன்மையை வன்மையாகக் கண்டிக்கின்ற சூழ்
நிலை உருவாக வேண்டும். இந்தச் சட்டம் கொண்டுவருகின்ற
நிலைமையில் அப்படி தண்டிக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற
வகையில் இந்தச் சட்ட முன்வடிவிலே நான் வலியுறுத்த விரும்பு
கிறேன்.

இதிலே கட்டப்பட்டிருக்கிற டெப்பாசிட் கூட பறிமுதல்
செய்யப்படலாம் தவறுகள் செய்தால் மேலும் அபராதங்கள்
விதிக்கலாம் என்று விதிமுறைகள் இருந்தாலும் கூட அவர்கள்
கொள்ளை இலாபம் அடித்துவிடுகிறார்களே, அதை நாம்
எப்படிப் பறிமுதல் செய்வது என்ற உணர்வை உருவாக்கி அடிக்
கடி கண்காணித்து எரி சாராயம் தயாரிக்கின்ற ஊழலை ஒழிக்
கின்ற தன்மையை உருவாக்கவேண்டும். உரிமம் பெற்று நடை
பெறுகிற கடைகளில் ஏற்படுகிற நிலைமைகளைக் களைந்து
எறிய அரசு முன்வரவேண்டும்; மாண்புமிகு அமைச்சர் அவர்
களும் முன்வரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்
கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கள்ளையும், சாராயத்தை
யும் ஒழித்தால்தான் தமிழகத்தில் செம்மையான சூழ்நிலையை
உருவாக்க முடியும். உணர்வின் காரணமாக அன்பின் காரணமாக
நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஜனவரியில் புத்
தாண்டு வருகிறபோது இந்த உரிமம் பெற்று நடத்தப்படுகிற
கடைகள் ஒரு வரையறைக்குட்பட்டு செயல்பட வேண்டும். அப்
படிச் செயல்படுவதற்கு அதிகாரிகளும், ஆயத்தீர்வை ஆணை
யாளர்களும் மற்றவர்களும் உறுதுணையாக இருந்து செயல்
படவேண்டும் என்று இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக
நினைவுபடுத்தி என்னுடைய கருத்தை நிறைவு செய்கிறேன்.
நன்றி, வணக்கம்.

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும்
மின்துறை அமைச்சர் அவர்களால் இங்கே அறிமுகம் செய்யப்
பட்டு இருக்கின்ற 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு
மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவின் மீது ஒருசில கருத்துக்
களைச் சொல்வதற்காக நான் நின்றுகொண்டிருக்கிறேன்.

1987-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து தமிழகத்தில் கள்ளுக்கடைகளையும், சாராயக்கடைகளையும் மூடுவதாக அறிவிக்கப்பட்டது. அப்படி கள்ளுக்கடைகளையும், சாராயக்கடைகளையும் மூடுகிறபோது அதோடு சேர்த்து எல்லா மதுக்கடைகளையும் மூட வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை நான் இந்து முன்னணியின் சார்பாக முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஆறாக இன்றைக்கு கள்ளச் சாராயம் வடிந்து கொண்டு இருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அனுமதி பெற்ற மதுவாக இருந்தாலும் அல்லது அனுமதி பெறாத மதுவாக இருந்தாலும் இவைகளை எல்லாம் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இன்றைக்கு கடை திறந்து வியாபாரம் செய்கிற ஒரு சூழ்நிலையை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட கடைகள் திறக்கப்பட்டு அங்கு மதுபானங்கள் விற்கப்படுகின்ற அந்த நிலைமையின் காரணமாக, நம்முடைய இளைய தலைமுறை இன்றைக்கு தடுமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறது என்பதை நாம் கண்கூடாகக் கண்டு கொண்டு இருக்கிறோம்.

தாலியை இழந்த தாய்மார்களும், பூவை இழந்த பருவ மங்கையரும் இன்றைக்கு தமிழகத்திலே, இந்த மதுக்கடைகளினாலே நாள் ஒரு மேனியும் பொழுதொரு எண்ணிக்கையுமாக கூடிக் கொண்டே இருக்கிற அந்த நிலைமையையும் நாம் கண்டு கொண்டிருக்கிறோம். அந்த நிலைமையில் நாம் இன்றைக்கு இந்த மது விலக்குச் சட்டத்திலே சில திருத்தங்களோடு இங்கே கொண்டு வந்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அந்த திருத்தங்களைப் பார்க்கிற போது எனக்கு ஏற்படுகிற சந்தேகத்தை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். புதியதாக கொண்டு வரவிருக்கிற 13-A Liquor, etc., liable to confiscation என்ற அதிலே இரண்டாவது பிரிவு any liquor lawfully imported, exported, transported, manufactured, held in possession or sold along with, or in addition to, any liquor liable to confiscation under this section; என்று சொல்லிவிட்டு, 3-வது பிரிவில் any receptacle, package or covering in which anything liable to confiscation under clause (1) or clause (2) is found, and the other contents if any, of such receptacle or package or covering and any animal, cart, vessel or other conveyance used for carrying the same; என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதிலே கார்ட்டுகள் என்று சொல்லப்படுகிற கட்டை வண்டிகளை ஓட்டி ஓட்டியே வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிற அந்த ஏழை மக்களை எல்லாம் நம்முடைய மதுவிலக்கு காவல்





பிரிவைச் சார்ந்தவர்கள் துன்புறுத்துகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதே போல இன்னொன்றையும் பார்க்கிற போது அந்தப் பொருள்கள் எல்லாம் கைப்பற்றப் படலாம் என்று சொல்கிற போது, அப்படிக் கைப்பற்றுகிற சூழ்நிலையை உருவாக்குகிறது இந்தச் சட்டம், மது சம்பந்தமான குற்றங்களை அவர்கள் செய்திருந்தார்கள் என்ற நிலையில், அந்த நிலையில் சொல்லப்பட்டிருக்கிறது Any offence relating to liquor. ஆகவே 4 (1) ஜே. பிரிவு மது அருந்துவதை தடை செய்கிறது. ஆகவே மது அருந்துவது என்பதுகூட குற்றம் தான். That is also an offence relating to liquor. ஆகவே ஒருவன் மது அருந்தி இருந்தால், அந்த மது அருந்திய குற்றத்தைசெய்தவன் என்பதற்காக, இப்படிப்பட்ட பொருள்களை—சில பொருள்களை குறிப்பிட்டு—கைப்பற்றப்படலாம் என்று இந்தச் சட்டத்தின் விதிகளில் இடம் இருப்பது ஒரு குழப்பமான சூழ்நிலையை உருவாக்கும் என்று நான் கருதுகிறேன். அந்தக் குழப்பமான சூழ்நிலை என்ன என்பதை இங்கே நான் கோடிட்டுக் காட்டி விளக்கிச் சொல்வதற்கு நேரம் இல்லை. ஆனால் குழப்பமான சூழ்நிலை உருவாக வாய்ப்பும் எதுவும் அதிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே இதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டு, நாடெல்லாம் ஆறாக ஓடுகின்ற மதுவை, இந்த நாட்டில் அறவே இல்லாத சூழ்நிலையை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் உருவாக்கித் தரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பாரதி அவர்களும், திரு. பாலச்சந்திரன் அவர்களும் நம்முடைய அரசு கொண்டு வந்த இந்த திருத்தச் சட்டத்தை ஆதரித்தே பேசியிருக்கிறார்கள். மூலை முடுக்குகளில் எல்லாம் கள்ளச் சாராயம் ஓடுகிறது என்று பேச்சுக்காக சொல்லியிருக்கிறார்களே தவிர, அப்படி ஆறாகவும் ஓடாது, குடத்திலே சின்ன குவளை இருந்தால் கூட இந்த அரசு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உரிமை பெற்று ஏலத்திலே அதிகம் கேட்டு மதுவை விற்கிற கடைகளில் கள்ளச் சாராயத்தை கலந்து விற்கிற போது அந்தச் சாராயத்தையே கைப்பற்றுவதற்கும், சாராயம் வைத்து இருக்கிற பண்டங்கள் போன்றவற்றை கைப்பற்றுவதற்கும் தான் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது தான் 13 எ. அதில் உள்ள பிரிவு (3), அதில் அந்த உரிமைதாரர் அவருடைய விருப்பப்படி அல்லது அவர் எதிர்பார்ப்பதற்கு விரோதமாக யாராலோ இப்படிச் செய்யப்படுகிறது என்கிற சூழ்நிலை ஏற்படுகிறபோதுதான், அவருக்கு பாதுகாப்பாகக் கொடுத்திருக்கிறோம்.

அந்த விதி (3)-இல் ''மேற்படி குறிப்பிட்ட எந்தக் குற்றமும் புரிந்தவரின் சொத்தாக இல்லாது இருக்கும் போது, அதன் உரிமைதாரரால் அத்தகைய குற்றம் செய்யப்படுகிறது, அல்லது பெரும்பாலும் செய்யப்படக் கூடும் என்று நம்புவதற்கு காரணம் ஏதும் கண்டிருக்கவில்லையானால், அது பறிமுதல் செய்யப்படுதல் ஆகாது என்று'' இருக்கிறதே தவிர அது ஒரு பக்கம் விதியை முடுக்கிவிட்டு, இன்னொரு பக்கம் விதியை தளர்த்துவது போல் ஆகாது என்று கூறிக் கொள்கிறேன். ஏற்கனவே உள்ள சந்து பொந்துகளில் தவறு புரிபவர்கள் தப்பி ஓடக் கூடாது என்பதற்காக இவைகளில் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திருத்தத்தின் மூலம் கள்ளச் சாராயத்தை எந்த உருவத்திலும் விற்கக் கூடாது, எடுத்துச் செல்லக் கூடாது என்ற நிலை உருவாகும். 1—1—1987 முதல் மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பியது போல கள், சாராயம் நாடு முழுவதும் விற்காமல் இருக்கிற சூழ்நிலை உருவாகுமென்று கூறி இந்தச் சட்ட முன் வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். இந்த கடை லைசென்ஸ் வாங்கிய அத்தனை பேரும் சொத்து ஜாமீன், பேங்கில் பேலன்ஸ் வைத்து அதற்கான ஆதாரத்தைக் காட்டித்தான் லைசென்ஸ் எடுக்கிறார்கள். அப்படியிருக்கிறபோது அவர்களுக்கு சொத்து இல்லை என்பதற்கான சான்சஸ் இல்லை. அவர்களுக்கு சொத்து இருக்கிறது. சொத்து இருக்கிறதென்ற அடிப்படையில் தான் ஏலத்தில் உட்காருகிறார்கள். இரண்டாவது, ஏலம் எடுத்தவர்கள் தவறு செய்தால் தண்டிப்பதற்கு இந்தச் சட்டத்தில் இடம் இருக்கிறது. ஏலம் எடுக்காமல் பல கடைகளை சென்னை நகரில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் கூட அப்படி கடைகள் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு தனிப்பட்ட முறையில் கொண்டு வந்திருக்கிறேன். பல கடைகளை ஏலத்தில் எடுத்தவர்கள் நஷ்டத்தில் போய்க் கொண்டிருக்கிறார்கள். கடையே ஏலம் எடுக்காமல் இருப்பவர்கள் இன்றைக்கு எல்லோரையும் சரிக்கட்டிக் கொண்டு மிகப் பெரிய வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். இது குறித்து அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிளைக் கடைகளை குறிப்பிடுகிறார்கள் என்று எண்ணுகிறேன். அப்படி கிளைக் கடைகளாக இல்லாமல், தனிக் கடைகள் அதிகாரபூர்வமாக இல்லாமல் வைத்து, அதையும் இந்த அரசாங்கம்





கண்டுபிடித்து கடுமையான நடவடிக்கைக்கு ஆட்படுத்தி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியிலேயே நடந்த பல உதாரணங்களை அவருக்கு நான் சொல்ல முடியுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி : ''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 68/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 68/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஆஆ) பத்திரப் பதிவுச் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 74/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

---

*18—11—1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1986 நவம்பர் 24

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பத்திரப்
பதிவுச் சட்டத்தில் கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்தத்தை
காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக, இது மக்களுக்கு நன்மை
பயக்கிற நல்ல சட்டமென்று கூறி இரு கரம் கூப்பி வரவேற்
கிறேன். இதனை நான் வரவேற்கிறேன் என்று கூறுகிற போது
அதற்கான காரணங்களையும் தனியாகச் சொல்வதை விட 1985
ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் ஐந்தாம் தேதி இந்த மாமன்றத்
தில் பத்திரப் பதிவுத் துறை சம்பந்தமாக நடந்த விவாதத்தின்
போது நான் பேசிய ஒரு சில கருத்துக்களை, மன்றத்தின் குறிப்பு
களிலிருந்து எடுத்துரைக்க விரும்புகிறேன்.

''பக்கம் 120—அடுத்தபடியாக இன்றைக்கு சிவில் கோர்ட்
ஜட்ஜ்மெண்ட்கள் பற்றி நாம் அறிவோம். கடன் பெற்றதற்
காக அல்லது வேறு காரியங்களுக்காக கோர்ட் மூலம் சொத்தை
அட்டாச்மெண்ட் செய்வார்கள்.

(பிற்பகல் 12–30)

ஜட்ஜ்மென்ட் கொடுப்பதற்கு முன்னால் அட்டாச்மென்ட்
பிபோர் ஜட்ஜ்மென்ட் கொடுப்பார்கள். அட்டாச்மென்டாக
இருந்தாலும், அட்டாச்மென்ட் பிபோர் ஜட்ஜ்மென்டாக
இருந்தாலும் சப்-ரிஜிஸ்திரார் ஆபீசில் வில்லங்க சர்டிபிகேட்
வாங்கும்போது அதிலே துலங்குவதில்லை. ஆகவே ஏதாவது
ஒரு குறைந்த கட்டணத்தைப் பெற்றுக் கொண்டாவது, ஜட்ஜ்
மென்ட் கொடுத்த அன்றைக்கே அது சப்-ரிஜிஸ்திரார் ஆபீசில்
பதிவு செய்யப்படவேண்டும். அதைப்போன்று அந்த அட்டாச்
மென்ட் விலக்கிக் கொள்ளப்பட்டால் விலக்கிக் கொள்ளப்பட்ட
உடனேயும் சப்-ரெஜிஸ்திரார் ஆபீசில் பதிவு செய்யப்பட வேண்
டும் என்று என்னுடைய எளிய யோசனையைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அதன் மூலமாக பல வழக்குகளை தடுக்க முடி
யும். உதாரணமாக சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மென்டில் அட்டாச்
மென்ட் செய்தால் உடனே அவர்கள் சம்பந்தப்பட்ட சார்பதி
வாளர் அலுவலகத்திற்கு தகவல் அனுப்பிவிடுவார்கள். அங்கே
அது பதிவு செய்யப்படுகிறது. அதனால் வில்லங்க சர்டிபிகேட்
டின் மூலம் அது துலங்கிவிடுகிறது. அதைப்போன்று சிவில்
கோர்ட்டில் அட்டாச்மென்ட் செய்தாலும் சப்-ரெஜிஸ்திரார்
ஆபீசுக்கு தகவல் அனுப்பி, பதிவு செய்து, வில்லங்க சர்டிபிகேட்
டில் துலங்க ஏற்பாடு செய்கின்ற வகையில் சட்டத் திருத்தம்
கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்
என்று அன்றைக்கு இந்த அவையிலே நான் பேசிய கருத்துக்கள்
இன்றைக்கு இங்கே சட்டத்தினுடைய வடிவமாக பெற்று இருப்
பதைக் கண்டு நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்னும் சொல்லப்போனால் அண்ணாவினுடைய வழியிலே
நடக்கின்ற அரசு என்று சொல்லுகிற இந்த அரசு '' மாற்றாந்
தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு ' என்ற அண்ணாவி



1986 நவம்பர் 24] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

னுடைய கருத்தை ஏற்று, இன்றைக்கு இதைச் சட்டத் திருத்த
மாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்களிடத்திலே ஒரே ஒரு
கேள்வியை மட்டும் நான் எழுப்ப ஆசைப்படுகிறேன். உள்ள
படியே, இந்தக் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டு, இன்றைக்கு
சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால்
அந்தப் பெருமையிலே உங்களோடு என்னையும் இணைத்துக்
கொள்வதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன் என்று
சொல்லிக் கொண்டு இன்றைக்கு காலையிலை கேள்வி பதில்
சமயத்திலே நடந்த ஒரு கருத்தை மீண்டும் இங்கே வலியுறுத்தி
விட்டு அமரலாம் என்று நான் ஆசைப்படுகிறேன்.

இந்தச் சட்ட திருத்தமானது மக்களுக்கு நன்மை பயக்கிற
திட்டம். வில்லங்க சர்டிபிகேட்டிலே தெரியாமல் இருக்கிற கார
ணத்தாலே, கோர்ட் வழக்கிலே இருக்கிற ஒரு சொத்தை வாங்கி
விட்டு, மீண்டும் வில்லங்கம் ஏற்பட்டு அதனால் அவதிப்பட்டவர்
களை நான் பார்த்து பரிதாபப்பட்டதன் காரணமாகத்தான்
நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கருத்தை இந்த
மன்றத்திலே சொன்னேன். அன்றைக்கே மற்றொரு கருத்தை
யும் நான் சொல்லியிருக்கிறேன். வங்கியிலே வாங்கப்படுகிற
கடன்களுக்கு ' டெபாசிட் ஆப் டைட்டில் டீட்ஸ் ' என்று
சொல்லி இங்கிலிஷில் '' மார்ட்கேஜ் '' என்று சொல்லப்படுகிற
அந்த மார்ட்கேஜிலே வெறும் பத்திரங்களை மட்டும் கொடுத்து
விட்டு, வங்கியினுடைய புத்தகங்களில் கையெழுத்து போட்டு,
அதை ஈடாக வைத்து, அந்தச் சொத்தை ஈடாக வைத்து,
நாம் கடனை வாங்கிக் கொண்டு இருக்கிறோம். இந்த ' டெபா
சிட் ஆப் டைட்டில் டீட்ஸ் ' என்று ஒரு காலத்திலே மாவட்டத்தி
னுடைய தலைநகரத்திலே மட்டும் இருந்தது. ஆனால் இன்
றைக்கு இந்த ' டெபாசிட் ஆப் டைட்டில் டீட்ஸ்' ஐ மத்திய
அரசு தாலுக்கா தலை நகரத்திற்கு விஸ்தரித்து இருக்கின்ற
காரணத்தாலே, உதாரணமாக தென்காசியிலே இருக்கிற தேசிய
வங்கியிலே பத்திரத்தை வைத்து நாம் கடன் வாங்கி விடலாம்.
அவ்வாறு கடன் வாங்குகின்ற சில புத்திசாலிகள் என்ன செய்
கிறார்கள் என்று சொன்னால், இந்தச் சொத்தை மற்றவர்கள்
இடத்திலே விற்றுவிடுகிறார்கள்.

அப்படி விற்கிறபோது, என்ன சொல்கிறார்கள் என்றால்,
அசல் பத்திரத்தை நான் தொலைத்துவிட்டேன், ஆகவே அசல்
பத்திரம் என்னிடத்திலே இல்லை, வேண்டுமானால் வில்லங்
கத்தை எடுத்து போட்டுப் பார், அதிலே எந்த வில்லங்கமாவது
இருந்தால் நீங்கள் வாங்க வேண்டாம் என்று சொல்கிறார்கள்.
ஆனால் வில்லங்கத்தை எடுத்துப் பார்க்கிறபோது, அதிலே
' டெபாசிட் ஆப் டைட்டில் டீட்ஸ் ' துலங்குவது இல்லை.
ஆகவே பத்திரம் தொலைந்துவிட்டது என்று சொல்வதை சாதா
ரணமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்து என்று சொல்லி,
சாதாரண மக்கள், வங்கியிலே கடன் வாங்கி இருப்பார் என்று
அறிந்துக் கொள்ளாத நிலைமையில் இந்தச் சொத்துக்களை

வாங்கிவிடுகிறார்கள். ஆகவே இந்த அவையிலே இன்றைக்கு நான் சொல்கிற கருத்து என்னவென்றால் இன்றைக்கு சிவில் கோர்ட்டிலே வருகின்ற தீர்ப்புகளை, அங்கே நீங்கள் தீர்ப்பாக அந்த புக் ஒன்றிலே எழுதி வைக்கவேண்டும். சப்-ரெஜிஸ்திரரார் எழுதி வைக்க வேண்டும். அதற்கு ஒரு குறைந்த கட்டணத்தைச் செலுத்தினால் போதும், அல்லது அதை இனாமாக செய்தால் நல்லதுதான். ஏன் என்றால், நாட்டிலே பல வழக்குகள் தடுக்கப் படுகிற ஒரு நல்ல காரியம். ஆகவே அதற்கு கட்டணம் என்று கூட தேவையில்லை.

அதைப்போல, ஒரு வங்கி மேனேஜர் ஒரு சொத்தைப் பொறுத்த 'டெபாசிட் ஆப் டைட்டில் டீட்ஸ்'லே கடன் கொடுக்கிறார் என்று சொன்னால் இன்றைக்கு 'ஹைப்போதிகேசன்' என்று சொன்னால் ஒரு கார் வாங்குகிறோம் அல்லது மோட்டார் சைக்கிள் வாங்குகிறோம், வங்கியிலோ அல்லது தனியார் இடத்திலோ கடன் வாங்கினால் அந்தத் தனியார் மோட்டார் சைக்கிள் இன்ஸ்பெக்டர் அல்லது ரோடு டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டிக்கு, இவர் என்னிடத்திலே இந்த வண்டியை வாங்குவதற்கு கடன் வாங்குகிறார் என்று சொன்னால், ஒரு ஹைபோதிகேசன் என்ட்ரி என்று போட்டுக் கொள்கிறார்கள். அந்தக் கார் அல்லது மோட்டார் சைக்கிள் இன்னொருவருக்கு விற்கிறபோது அந்த ஹைப்போதிகேசன் என்ட்ரியை அடிக்காமல் விற்க முடியாது. அதேபோல் இந்த 'டெபாசிட் ஆப் டைட்டில் டீடை' வங்கியினுடைய நலத்திற்காகவும், ஏமாளிகளாக இருக்கிற ஒரு சில மக்களுடைய நன்மைக்காகவும், நீங்கள் அடுத்த சட்ட திருத்தத்தைக்கொண்டு வந்து, இந்த 'டெபாசிட் ஆப் டைட்டில் டீட்ஸ்-ஐ, வங்கி மேனேஜர் அல்லது தனியார்கள் கடன் வாங்குகின்றபோது, அதற்கான ஆதாரங்களை சப்-ரெஜிஸ்திரரார் ஆபீசிலே செலுத்துவார்களானால், உடனடியாக அதற்கான என்ட்ரிகளை அந்த புக்கிலே போட வேண்டும். அந்த வில்லங்கத்திலே அதை துலங்கச் செய்ய வேண்டும் என்று ஒரு சிறந்த ஆலோசனையை சொன்னபோது அமைச்சர் அவர்கள் நான் அதைப் பரிசீலிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து நீங்கள் இதைக் கவனித்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி நான் முடித்துக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே, இன்றைக்கு தென்காசியிலே டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்திரரார் ஆபீஸ் ஒன்று வந்திருக்கிறது. அதற்கு அதிகமாக வாடகையைக் கொடுத்து, அது ஒரு கட்டிடத்திலே இன்றைக்கு இயங்கிக் கொண்டு இருக்கிறது. அது ஊருக்கு ஒதுக்குப்புறத்திலே இருக்கிறது. இதனால் மக்கள் அல்லல்படுகிறார்கள். நல்ல வருவாய் வருகின்ற ஒரு துறையாக இந்தப் பத்திரப் பதிவுத் துறை இருக்கிற காரணத்தாலே உடனடியாக அரசினுடைய—சொந்தச் செலவிலே—இன்றைக்கு ஒரு இடத்தைக்கூட நான் சொல்லியிருக்கிறேன்—அந்த





இடத்திலே கட்டிடத்தைக் கட்டி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு சிறந்த திட்டம், மக்களை வழக்கிலே இருந்து காப்பாற்றுகின்ற ஒரு சிறந்த திட்டம் என்று சொல்லி, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். ஜப்தி செய்கிறது அல்லது ஜப்தி செய்வதை ரத்து செய்கிறது கோர்ட் மூலமாக என்று ஒரு நிறைவேற்றம் வருகிறபோது அதை அந்தப் பகுதியில் உள்ள சார் பதிவாளருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று இருப்பது நல்ல ஒரு திட்டம்.

அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. வேங்கடரமணன் அவர்கள் சொல்லியது போல் வங்கிகளிலோ அல்லது தனியார்களிடமோ லைசன்ஸ் பெற்றவர்கள் பத்திரத்தை வைத்துக் கொண்டு அதற்கான பணம் கொடுப்பவர்கள் இந்த காரணத்திற்காக பணத்தைக் கொடுத்து இருக்கிறார்கள் என்ற பத்திரத்தை வைத்து இருப்பவர்கள் அதையும் சார் பதிவாளர் அலுவலகத்திற்குந் தெரிவிக்க வேண்டும் என்ற சட்டத்தையும் கொண்டு வந்தால் மிகவும் நன்றாக இருக்கும். அது போக இன்னும் ஒன்றை இந்த பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் பத்திரப் பதிவுத் துறையில் நீங்கள் வாங்குவது ரூபாய்க்கு 12 சதவீதம் பத்திரம் வாங்கச் சொல்லுகிறீர்கள். மற்றபடி பத்திரம் எழுதுவது, பதிவு பீஸ், வாபஸ் பீஸ் இப்படி பல்வேறு பீஸ்களை போட்டு அதாவது அந்த காலத்து மன்னர்கள் 6-ல் ஒரு பங்கை வாங்கியதாக நமது சரித்திரம் கூறுகிறது, அப்படி சொல்கிறார்கள். அதைப் போலவே 6-ல் ஒரு பங்கு வரை சொத்து வாங்குகிறபோது நீங்கள் வாங்கிவிடுகிறீர்கள். இதை நீங்கள் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 6-ல் ஒரு பங்கு தொகை செலுத்தித்தான் வாங்க வேண்டுமா? உங்களுக்கு அதில் அவ்வளவு வருமானம் தேவையா? உதாரணமாக விற்பனை வரி போன்றவற்றில் 5 சதவீதத்திற்கு மேல் அதிகப்படுவது இல்லை, பொது மக்கள் விற்பனை வரியை பொறுத்தவரையில், மறைமுக விற்பனை வரியாக 10 சதவீதம், 15 சதவீதம் என்று இருந்தாலும் கூட விற்பனை வரி 5 சதவீதத்திற்கு மேல் உங்களால் வாங்க முடியவில்லை.

இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கேரளாவில் 5½ சதவீதம் இந்த பத்திரப் பதிவு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். கன்னியாகுமரிக்கு மதிப்பீட்டுக் குழு சென்றபோது அதன் உறுப்பினராக நான் சென்றபோது அங்கு வந்த கன்னியாகுமரியைச் சேர்ந்த பத்திரப் பதிவாளர்கள் தங்களுடைய குறைகளைச் சொன்னார்கள். கன்னியாகுமரியில் உள்ள ஒரு விளை நிலத்தையும், கேரளாவில் உள்ள ஒரு பனை மரத்தையும் சேர்த்து

வைத்து அங்கே கொண்டு போய் பத்திரத்தை பதிந்து விடுகிறார்
கள் என்று எல்லாம் சொன்னார்கள். பக்கத்தில் இருக்கிற
மாநிலம் 5½ சதவீதம் வாங்குகிறபோது நீங்கள் ஏன் 12 சதவீதம்
வாங்குகிறீர்கள். அதை குறைக்க வேண்டும் என்று இந்த நேரத்
தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே பத்திரத் தாள்கள் கிடைக்கவில்லை. காம
ராஜ் மாவட்டத்தில் விருதுநகர் போன்ற இடங்களில் பத்திரத்
தாள்கள் கிடைக்கவில்லை. பத்திரத் தாள்கள் எப்படியோ
வேறு மாவட்டங்களுக்கு மொத்தமாக இன்டென்ட் போட்டு
வாங்கிச் செல்லப்பட்டு விடுகிறது. விற்பவர்களைச் சரி கட்டி
மொத்தமாக 2 ஆயிரம் 3 ஆயிரம் என்று மாறி மாறி தினசரி
இன்டென்ட் போட்டு பத்திரங்கள் கடத்தப்பட்டு இருக்கின்றன.
குறைந்த விலைப் பத்திரங்கள் கிடைக்கவில்லை. 100 ரூபாய்
பத்திரங்கள், 500 ரூபாய் பத்திரங்கள் கிடைக்கவில்லை. அதே
போல் 2½ ரூபாய் பத்திரத்தை 5 ரூபாய் கொடுத்து வாங்க
வேண்டியிருக்கிறது. இதை எல்லாம் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் சரி பார்க்கவேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த சார் பதிவாளர்களுக்கு
என்ன விசேஷ அதிகாரம் கொடுத்து இருக்கிறீர்கள் என்று எனக்கு
தெரியவில்லை. சார் பதிவாளர்கள் நினைத்தபடி எல்லாம்
செய்கிறார்கள் என்று எனக்கு செய்தி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இப்போது
அவை முன் இருக்கிற சட்டமுன்வடிவு கோர்ட்டில் ஜப்தி செய்
கிறார்கள் என்பது பற்றியது. பில்லைப் படித்துவிட்டுப்
பேசுங்கள். பில்லுக்கு சம்பந்தம் இல்லாமல் இப்படி நீங்கள்
சொல்லுவதற்கு எல்லாம் அமைச்சர் எப்படிப் பதில் சொல்ல
முடியும். (குறுக்கீடு) பில்லினுடைய ஆப்ஜெக்ட் . அண்டு
ரீசன்ஸ்-ஐ படித்துவிட்டு அதற்கு உட்பட்டு பேசுங்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த சார் பதிவாளர்கள் நினைத்த
படி அந்தத் தொகையை உயர்த்தி உயர்த்திச் சொல்லி பேரம்
பேசுகிற நிலைதான் ஏற்படுகிறது. அதையும் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சரி பார்க்கவேண்டும் என்று கேட்டு வாய்ப்
புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

***திரு. வை. பாலச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு, மின்
துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கிற
1986-ஆம் ஆண்டு பத்திரப் பதிவு தமிழ்நாடு திருத்த சட்டத்
தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புத்
தந்து நான் நின்று கொண்டிருக்கிறேன்.

1986 நவம்பர் 24] [திரு. வை. பாலச்சந்திரன்]

மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு
இருக்கின்ற இந்தச் சட்டத் திருத்த முன்வடிவை நான் மனப்
பூர்வமாக வரவேற்கிறேன். அப்படி அதை வரவேற்று விட்டு
நான் அது சார்ந்தது அல்லாத ஒருசில வேண்டுகோள்களை
மட்டும் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

நான் சார்ந்திருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தி
லிருக்கின்ற ஒரு நிலத்தை ஒருவர் வாங்கவேண்டுமென்றால்,
அதை வாங்குவதற்காக அவர் பதிவு செய்கிற அந்த டைட்டில்
டீடை (Title Deed) கன்னியாகுமரி மாவட்டத்திலே பதிவு
செய்வதாக இருந்தால், அதற்கான பதிவுக் கட்டணம் அதிகமாக
இருக்குமென்ற காரணத்திற்காக அண்டை மாநிலமான கேரளா
விற்குச் சென்று அங்கு பதிவு செய்கின்ற நிலைமை கடந்த
5, 6 ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கிறது. ஆக பத்திரப்
பதிவு மூலமாக நம்முடைய மாநிலத்திற்கு வர வேண்டிய,
கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வர வேண்டிய, வருவாயில்
90 சதவிகிதம் குறைந்து போகிறது. ஆக வர வேண்டிய
வருவாயில் குறைந்த பட்சம் 90 சதவிகிதம் நாம் இழந்து,
அதைக் கேரள மாநிலம் கொண்டு போகிறது என்பதை நாம்
கண்டு கொண்டிருக்கிறோம். அதற்கு அடிப்படையான காரணம்,
கேரள மாநிலத்தில் இருக்கிற பதிவுக் கட்டணம் 5 சதவீதமாக
இருக்கின்றபோது, நம் மாநிலத்தில் 12 சதவீதமாக இருந்து
வருகிறது. இப்படி மாநிலத்திற்கு மாநிலம், இந்தப் பதிவுக்
கட்டணம் வேறுபடுகின்ற காரணத்தால், அங்கே இருக்கிறவர்கள்
இங்கே வருவதும், இங்கேயிருந்து அங்கே போவதும் வாடிக்கை
யான சூழ்நிலையாக இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர
வர்கள் சம்பந்தப்பட்ட அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு
வந்து, எல்லா மாநிலங்களிலும் ஒரேயளவில் இந்தப் பதிவுக்
கட்டணம் இருக்கவேண்டுமென்ற முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டுமென்று விரும்புகிறேன். "'Title Deed' is only an
instrument of transfer of property from one person to another"'
வாங்குகிறவன் தனக்கு அதில் என்ன உரிமை கிடைக்கும் என்று
ஆராய்ந்து வாங்கவேண்டுமென்று Purchaser be ware என்ற
அளவில் சட்டம் சொல்கிறது. ஆனால் என்னுடைய மாவட்
டத்தில் ஒரு டைட்டில் டீடைப் பதிவு செய்யவேண்டுமென்று
சொன்னால், அங்கே இருக்கின்ற சார்பதிவாளர் அதை
விலைக்குக் கொடுக்கின்ற வெண்டாருக்கு என்ன உரிமை
அந்தச் சொத்திலே இருக்கிறதென்று ஆராய்ந்து, அவர் பரி
சீலித்து பிறகுதான் அந்தப் பத்திரப் பதிவை ஏற்றுக்கொள்
கிறார். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். It is not the
duty of the Registrar to see whether the Vendor has any right or
interest in the property which is to be sold என்ற நிலைமை
அங்கே வரவேண்டும். 'The Purchaser beware' என்ற

[திரு. வை. பாலச்சந்திரன்] [1986 நவம்பர் 24

தத்துவம் மதிக்கப்பட்டு வாங்குகின்றவன், விற்பதற்கு அந்த வெண்டாருக்கு உரிமை இருக்கிறதா என்று பார்த்து, வாங்கி விட்டுப் போகின்ற நிலைமை வரவேண்டும். அந்த நிலைமை மாறவில்லையென்றால், அங்கே ஒரு பத்திரத்தைப் பதிவு செய்து கொடுப்பதில் பல வாரங்கள், பல மாதங்கள் கூட ஆகின்றன. இப்படி காலதாமதம் ஏற்படுவதனால், ஊழலை ஊக்குவிக்கின்ற, ஊழலைப் பெருக்குகின்ற சூழ்நிலை அங்கே உருவாக்கப்படும். அனாவசியமான கடமைகளில் சார் பதிவாளர் ஈடுபட்டு, காலதாமதத்தை ஏற்படுத்தி ஊழல் செய்கின்ற நிலைமையை ஏற்படுத்தாமல் இருப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் கனிவோடு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கல்குளம் சார்பதிவாளர் அலுவலகம் பல ஆண்டுகளாக தக்கலை என்ற இடத்தில் இருக்கிறது. பணியாளர்களின் எண்ணிக்கையும் அங்கு அதிகரித்து இருக்கிறது. அங்கே வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. ஆனால் பணியாற்றுவதற்குப் போதுமான, தேவையான இடம் அங்கேயில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒரு ஆண்டிற்கு முன்னால் ஒருவரைக் கொன்று, தொங்கவிட்டு
(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதெல்லாம் எப்படி பில்லில் வரும்? ஆப்ஜெக்ட் அண்டு ரீசன்ஸ் படித்துப் பார்த்து பேசுங்கள். ஆப்ஜெக்ட் ஆப் தி பில்லில் பேசுங்கள்.

**திரு. வை. பாலச்சந்திரன் :** அவருடைய பிணத்தை அங்கே தொங்கவிட்டிருந்த காரணத்தால் அவருடைய ஆவி பேயாக அங்கே உலவுகிறது என்று நம்பப்பட்டு அங்கே பெண்கள் வந்து பதிவு செய்வதற்கு பயப்படுகிறார்கள், அச்சப்படுகிறார்கள், அங்கே பேய் உலவுகிறது என்றுசொல்கிறார்கள். எப்படி என்றால் நடிகை ராணி பத்மினி மற்றும் இந்திராவினுடைய ஆவி பேயாக அண்ணா நகர்பகுதியில் உலவுகின்றன என்றெல்லாம் சொல்கிறார்களே, ரிக்ஷாவில் போகிறது, மது கடைகளில் இருக்கிறது என்று தினத்தூது நாளிதழ் போன்ற பத்திரிகைகளில் செய்தி வந்ததே—அதைப் போன்று அங்கேயும் சொல்லப்படுகிறது. அலுவலகத்திற்குள் பேய் இருந்து வருகிறது என்ற வதந்தி சொல்லப்படுகிறது. அங்கே செல்வதற்கு பெண்கள், தாய்மார்கள், சகோதரிகள் அஞ்சுகின்ற சூழ்நிலையிருக்கிறது. அதை மாற்றுவதற்கு அந்த அலுவலகத்தை வேறு ஒரு இடத்திற்கு மாற்றி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வேங்கடரமணன்



1986 நவம்பர் 24] [திரு. வி.வி. சுவாமிநாதன்]

திரு, ஆறுமுகம் திரு. வை. பாலச்சந்திரன் ஆகியோர் வரவேற்றதற்காக, அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் சொன்னதுபோல் வங்கிகளில் டைட்டில் டெபாசிட் செய்யும் போது அவைகளைப் பதிவு செய்தால் நன்றாக இருக்குமென்று சொன்னார்கள். அதைப்பற்றி ஒரு ஆய்வு செய்து பிற்பாடு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதை அவருக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆறுமுகம் அவர்கள் வேறு பல காரியங்களை எல்லாம் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பதிவு செய்வதற்குள்ள கட்டணத்திற்கும் பக்கத்திலே கேரள மாநிலத்திலே பதிவு செய்வதற்குரிய கட்டணத்திற்கும் ஏற்றத்தாழ்வு இருப்பதாகவும், அதனால் பதிவு செய்கிறவர்கள் கேரளாவிற்குப் போவதாகவும் சொன்னார்கள். அதையே வலியுறுத்தி மாண்புமிகு உறுப்பினர் வை. பாலச்சந்திரன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து அரசினுடைய நிலைமை என்ன என்று கேட்டார்கள். நிலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும்பொழுது, அவர் கேரளாவிற்குப் போய் எப்படி பதிவு செய்யமுடியும்? ஆய்ந்து பார்த்து, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு ஆறில் ஒரு பங்கு பழைய காலத்தில் மன்னர்கள் மக்களிடமிருந்து வசூல் பண்ணினார்கள் என்று சொன்னார்கள். அந்தக் காலத்தில் மன்னர்கள் தங்களுக்காகவே அந்தப் பணத்தை செலவழித்தார்கள். இப்பொழுது அரசாங்கம் என்பது பல்வேறு மக்களுடைய அடிப்படை வசதிகளை சில சமயம் சலுகை அளித்து இலவசமாகவும் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, இதை உயர்த்தினாலும் உயர்த்தலாமே தவிர இதைக் குறைக்க முடியாது. ஆனால் கேரளாவில் பத்திரங்கள் தமிழ்நாட்டிலிருந்து பதிவு செய்யப்படுவதை தடுப்பதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். பத்திரங்களும் சில லேபில்களும் கிடைக்காததைப் பற்றிச் சொன்னார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையிலும், இந்தப் பத்திரங்களையும், லேபிள்களையும் அடிக்கின்ற நாசிக் அச்சகத்திற்கு அடிக்கடி முன்கூட்டியே எவ்வளவு தேவை என்று சொல்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்..................
(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள், பில்லிலே சில விளக்கங்கள்தான் கேட்க வேண்டும். அதைத்தான் அனுமதிப்பேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது, கேரளத்தில் எதற்காக பதிவு செய்யப்படுகிறது. அதை நடவடிக்கை

எடுப்போம் என்றார் கேரளத்தில் 5 சதவீதம் இருக்கிறது இங்கு
ஏன் இவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? இன்னும் கூட்டப்
படும் என்று சொல்லியிருக்கிறார், இது சரிதானா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, கூட்டப்படும் என்று சொல்ல
வில்லை. கூட்டப்படவேண்டும் என்று சொன்னாலும் சொல்ல
லாமே தவிர குறைக்கவேண்டும் என்று சொல்வதை ஏற்றுக்
கொள்வதாக இல்லை என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள
கேள்வி : "1986-ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் (தமிழ்நாடு
திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்
வடிவு எண். 74/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற
வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை
வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்
றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை
யின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன்:—

"1986-ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் (தமிழ்நாடு திருத்த)
சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு
எண். 74/1986) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன்
வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### 7. அரசினர் தனித் தீர்மானம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு எற்பளிப்பு

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன்:—

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற
1986 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்தி நான்காவது
திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள,
இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின்
வரம்பு நிபந்தனையின் கீழ்வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை
ஏற்பளிக்கின்றது."





**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் முழுவதுமாக இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக வரவேற்று ஒரு சில கருத்துக்களை கூறி அமரலாம் என்று கருதுகின்றேன். இன்றைக்கு நீதித்துறை தானாகவும், தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும் செயல்படுவதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே அவர்களுடைய சம்பளங்களை உறுதி செய்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பின் காரணமாகத்தான் நீண்ட நாட்களுக்கு முன்னாலே அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தையே திருத்தி, மற்றும் இது போன்று எதிர் காலத்திலே திருத்தங்கள் இல்லாமல் தனிச் சட்டமாக்க வகை செய்வதற்காக, இன்றைக்கு மத்திய அரசு ஒரு முடிவு எடுத்து அதை சட்ட மூலமாக இன்றைக்கு நாமும் நம்முடைய ஆதரவைத் தெரிவிப்பதற்காக நின்று கொண்டு இருக்கின்ற நேரத்திலே ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லலாம் என்று நினைக்கின்றேன். சிறந்த வழக்கறிஞர்கள் தான் சிறந்த நீதிபதிகளாக இருக்கின்றார்கள். ஆனால் சிறந்த வழக்கறிஞர்கள் என்று சொல்லப்படுகின்ற போது, அவர்களே, வருவாயிலும் சிறந்தவர்களாக இருக்கின்ற காரணத்தினாலே நீதிபதிகளாக ஆவதற்குத் தயாராக இல்லாத சூழ்நிலையினாலே, Because it may hit them under the belt என்ற காரணத்தினாலே, சில வழக்கறிஞர்கள் நீதிபதிகளுடைய பதவிக்கு வர ஆசைப்பட்டாலும் கூட, அவர்களே நீதிபதிகளாக தங்களைத் தெரிந்து கொள்ள தயாராக இல்லாததற்கு காரணம் அவர்களுடைய வருவாய் குறைவாக இருப்பதுதான். இதன் காரணமாக சில இடங்களில் நீதிபதிகள் மீது லஞ்சக் குற்றச் சாட்டுகள் எல்லாம் கூட வந்தன.

(பிற்பகல் 12-50)

ஆனால், இன்றைக்கு அவற்றை எல்லாம் தவிர்ப்பதற்காக அவர்களுக்கு சிறப்பான ஊதியத்தை மத்திய அரசு செய்திருக்கிறது. ஒரு நீதிபதி என்பவர், ஒரு வழக்கறிஞரைப் போல, 10 முதல் 5 என்ற கால அளவிலே இல்லாமல், காலையிலும், மாலையிலும் கூட தனி வாழ்க்கை அல்லது புற வாழ்க்கை இல்லாமல், நீதித்துறையில் 'ஆப்டர் ஆபீஸ் அவர்ஸ்' கூட வேலை செய்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே அவர்களுக்குக் கொடுக்கின்ற அந்தக் கூடுதல் வருவாயானது நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியதுதான். சிறந்தவர்களை, சிறப்பானவர்களை, நல்லவர்களை, வல்லவர்களை நீதிபதி பதவிக்கு அழைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு அதன்மூலமாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, இந்த நேரத்திலே நமது தமிழகத்திலே இருக்கின்ற நீதிபதிகளுக்குக்கூட மிகக் குறைவான அளவில் தான் நாம் சம்பளமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சிறப்பாகப் பணியாற்றுகின்ற அவர்களுக்குக் கூட நாம் கருணை உள்ளத்தோடு கூடுதலாக ஒரு சம்பளம் கொடுக் வேண்டும் என்று இந்த வாய்ப்பிலே சொல்லிக்கொள்கிறேன்.

*[திரு டி. ஆர். வேங்கடரமணன்]* *[1986 நவம்பர் 24*

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு சிறிய விளக்கத்தைத் தனியாகக் கேட்டேன். நம்முடைய அமைச்சர்களுக்கு எல்லாம் அரசிலிருந்து ஒரு கார் கொடுக்கப்பட்டு இருப்பது போல், உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு எல்லாம் கார் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள்—இந்தியாவிலேயே, முதல் முறையாக தமிழகத்திலேதான் இரண்டு ஸ்டாஃப் கார் என்று சொல்லி இரண்டு கார்களை நாம் கொடுத்து இருக்கிறோம் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி பாராட்டுகின்றேன். இந்த நேரத்திலே, அமைச்சர்களுக்குக் கொடுப்பது போல், நீதிபதிகளுக்கும் வீடுகள் இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுபோல், அவர்களுக்கும் கார் கொடுத்து அவர்களுடைய வசதிகளையும் நீங்கள் பெருக்க வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

மாவட்ட அளவிலே இருக்கின்ற எஸ். டி. ஜே. எம்., எஸ். எம். அதுபோல, டிஸ்டிரிக்ட் முனிசீப்களுக்குக் கூட—அவர்கள் பஸ்ஸிலே சென்று நெருக்கடியிலே சிக்கித் தவித்து, வழக்குக்கு வருகின்ற வழக்கறிஞர்களும், வழக்குக்கு வருகின்ற வழக்கர்களும், நீதிபதிகளும் ஒரே பஸ்ஸிலே வருவதைப் பார்க்க சகிக்க முடியாத நிலையிருக்கிறது.—ஆகவே, 'டூ வீலர்' வாங்குவதற்காவது அவர்களுக்கு ஒரு லோன் ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு எஸ்.ஐ.க்கு 'டூ வீலர்' ஒன்று கொடுப்பது போல், ஒவ்வொரு நீதித்துறை நடுவர் மன்றத்திற்கும் ஒரு 'டூ வீலர்' கொடுப்பதற்கான ஒரு யோசனையையும் இந்த மன்றத்திலே வைத்து வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பளங்கள் வழங்கும் இந்த தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். நீதிபதிகள், பொது வாழ்வில் இருக்கிறவர்களால் குற்றம் சாட்டப்படாமல் இருப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். இன்னும் கூட அவர்களுக்கு அதிகமாக சம்பளம் கொடுப்பதைப் பற்றி கவலையில்லை. பொது வாழ்வில் இருக்கிறவர்கள் நீதிபதிகளைக் குற்றம் சொல்ல முடியாதபடிக்கு ஒரு நிலை இருக்க வேண்டும்.

இன்னொரு கோரிக்கை. காமராஜ் மாவட்டத்தில் நீதிமன்றம் இன்னமும் அமைக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சம்மதம் தெரிவித்ததாகச் சொல்கிறார்கள். அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கட்டிடங்கள் எல்லாம் வாடகை பேசி தயாராக வைத்துக் கொண்டு இருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்ட நீதிமன்றத்தைத் துவக்கி வைப்பதற்கு வருகை தந்து, அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



*1986 நவம்பர் 24]*

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயரால் மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன் மொழிந்த இந்தத் தீர்மானத்தை இந்து முன்னணிப் பேரியக்கத்தின் சார்பாக வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

> ''நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்ற
> 1986-ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்தி நான்கா
> வது திருத்த) சட்ட முன் வடிவினால் செய்யக் கருதப்
> பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரி
> வின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ் வரும்
> திருத்தங்களுக்கு, இப்பேரவை ஏற்பளிக்கின்றது''.

அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை, 25-11-1986 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-54 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

40. 1972—73-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகம்) அறிக்கையிலுள்ள தமிழ் நாடு மின்சார வாரியம் தொடர்பான குறிப்புரைகளின்மீது பொது நிறுவனங்கள் குழு (1982-83) அளித்த இருபத்து இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற் கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஆறாவது அறிக்கை.

[1986 நவம்பர் 24

41. 1970-71 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்கள் குறித்த பத்திகள் மீதான குழுவின் (1980-81) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள (வணிகத் துறைகள் பற்றிய) பரிந்துரைகளின் மீது அரசு மேற் கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஏழாவது அறிக்கை.

சென்னை 600 008
136499

V211,31 N86
N86.31.1 42

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli- rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

---

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.